
ஸ்ரீ :



ஸ்ரீமதேராமா நுஜாயநம :

ஸ்ரீலோக குரவே நம :

# சுத்தஸம்ப்ரதாயஸாரம்

(உலகளந்தான் பொன்னடியார் மஹாசபை

வெளியீடு)

இயற்றியவர் :


ப்ரபந்ந குல திலகர்


ஸ்ரீ R. பெருமாள் ராமா நுஜதாஸன்

No : 1, காமராஜ் வீதி, இந்திரா நகர்,
முதலியார்பேட்டை - 605 004.
பாண்டிச்சேரி.



1995

ஸ்ரீ :



ஸ்ரீ திருவிக்கிரமஸ்வாமி

திருக்கோவலூர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:



**ஸ்ரீமத் உ. வே. திருவேங்கடராமாநுஜாசாரியர்**

**திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர்**

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மடம்
நெ.16 சன்னதி வீதி
திருக்கோவலூர் - 605 757

# மங்களாசாஸனம்

ச்ரிய:பதியான எம்பெருமான் சேதனர்கள் கடைத்தேறும் பொருட்டு வெளியிட்ட சாஸ்த்திரங்கள் இரண்டு வகை. அவை விசிஷ்ட வேஷ விஷயமென்றும், நிஷ்க்ருஷ்ட வேஷ விஷய மென்றும் இரண்டு பிரிவினை உடையது. விசிஷ்டவேஷ விஷயமான (தேஹத்தோடு கூடியிருக்கும் ஆத்ம விஷயமான) சாஸ்த்திரத்தைக் காட்டிலும் நிஷ்க்ருஷ்ட வேஷ விஷயமான் (தேஹத்தைத் தள்ளி வடிக்கட்டிய ஆத்ம ஸ்வரூபத்துக்கு விஷயமான) - (விசேஷ சாஸ்த்ரத்தை ஸ்வேந ரூபேந வெளியிட்ட) சாஸ்த்ரமே மிகவும் உத்க்ருஷ்ட தமமானது. இந்த உத்க்ருஷ்டதமமான சாஸ்த்ரத்தை பூர்வா சார்யர்கள் கையாண்டு நமக்கு சிறந்த வழியைக் காட்டி யுள்ளனர் என்பது பெரியோர் வாக்கு. இதுவே மஹான் களுடைய பரமகிருபைக்குச் சான்றாகும். ஸ்வாமி பிள்ளை லோகாசாரியர் அருளிய அர்த்த பஞ்சகம் மிகவும் விசேஷ மானது, விரிவானது. இந்த கிரந்தத்தை ஒவ்வொரு வரும் ஆசார்யகடாக்ஷம் பெற்று பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டு தங்கள் குடும்பங்களோடு அர்த்த பஞ்சகம் என்ற நூலைப் பெற்று ஜ்ஞான ஜென்மத்தை அடைந்து ஸ்ரீவைஷ்ண வர்களாக வாழ வேண்டியது.

இந்த அர்த்த பஞ்சகத்தோடு கூட கர்மஜ்ஞான பக்திகள் ஸ்வரூப விருத்தம், ப்ரபத்தி ஸ்வரூபம், லக்ஷ்மியின் அநு பாயத்வம், பிராட்டி அணுஸ்வரூபையே என்பதை "சுத்த ஸம்ப்ரதாயஸாரம்" என்னும் பெயரில் இவ்வரிய கிரந்தத்தை பாண்டிச்சேரி முதலியார்பேட்டை ஸ்ரீமான் R. பெருமாள்

ராமாநுஜதாஸரவர்கள் தத்வஹித புருஷார்த்தங்களை விளக்கும் முகத்தாலே மிக சுருக்கமும் விரிவும் இல்லாமல் பூர்வாசாரியர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பண்டிதர்களுக்கும், மற்றையோர்க்கும் நல்விருந்தாகும்படி அமைத்து நூல் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் மடத்துத் திருவடி ஸம்பந்தம் பெற்றவர். மேன்மேலும் அவர்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு ரஹஸ்ய கிரந்தங்களை வெளியிட்டுத் தொண்டாற்றும்படியாக மங்களாசாஸனம் செய்கின்றோம்.

பொலிக! பொலிக! பொலிக!

வேணும்

தி. ஸ்ரீநிவாஸ ராமாநுஜாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவிஷ்ணுசித்தகுரவே நம:

"வித்யா விசாரத", " திவ்யார்த்த ரத்னநிதி"

ஸ்ரீ உ.வே. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமிகள்
(ஸுதர்சனர்)

# முன்னுரை

எம்பெருமானாருக்குப் பின் அவருடைய சிஷ்யப்ர சிஷ்யர்கள் ரஹஸ்யத்ரய விவரணத்திலும், திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களிலும் தத்வஹித புருஷார்த்த விஷயங்களில் அருளிச் செய்து வந்த சில விஷயங்களில் ஸ்ரீவேதாந்த தேசிகர் காலத்தில் சில கருத்து வேற்றுமைகள் வெளிப்பட்டன.

*(1)* தத்வ விஷயமான கருத்து வேற்றுமை :- பிராட்டி ஜீவகோடியா, ஈச்வரகோடியா என்னும் கருத்து வேற்றுமை. இதில் ஐந்து விதமான பக்ஷங்கள் உள்ளனவென்றும், முதல் நான்கு பக்ஷங்களில் ஈச்வர கோடியா, ஜீவகோடியா முதலான விவாதங்களிருந்த போதிலும், எம்பெருமானே முக்யேச்வ ரனாவான் என்று கூறிவிட்டு, "இருவருடைய இச்சையாலும் பிராட்டி சேஷபூதையாகவும், பெருமான் சேஷியாகவுமி ருக்கிறானாகையாலே இருவரும் முக்யேச்வரர்களே என்னும் ஐந்தாவது பக்ஷத்தைச் சிலருடைய பக்ஷமாக ஸ்ரீதேசிகன் சது: ச்லோகீபாஷ்யத்தில் காட்டினார். இதில் தாத்பர்ய சந்த்ரிகை யின் தொடக்கத்திலும், மற்றும் பலவிடங்களிலும் ஐந்தாவது பக்ஷத்தை தேசிகன் மறுத்திருப்பதையும், பிராட்டிக்கு விபுத்-வம், உபாயத்வம், முதலான பெருமைகளைப் பலவிடங்களில் கூறியிருப்பதையும் காணும்போது, அவர், "பெருமானைப் போலே பிராட்டி உபயவிபூதி சேஷியாகையாலே ஈச்வர கோடியே. ஆயினும், அவனுக்கு சரீரமாய், சேஷபூதையாகை யாலே முக்யேச்வரன் எம்பெருமானே; இரு ஈச்வரரில்லை" என்னும் நாலாவது பக்ஷத்தையே அவர்கைக் கொண்டிருந்தார் என விளங்குகிறது இதுபற்றி "விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம் -

வித்வான்களின் மநஸாக்ஷியைக் குறித்துச் சில கேள்விகள்" என்னும் கட்டுரையில் நாம் விளக்கியுள்ளோம்.

(2) ஹித புருஷார்த்த விஷயமான கருத்து வேற்றுமை:- "ஜீவனுக்கு ஒவ்வொரு செயலிலும் முதல் முயற்சியின்போது எம்பெருமான் தனக்கு வைஷம்ய நைர்க்ருண்யங்கள் (பக்ஷ பாதம், கருணையின்மை) வாராமைக்காக ஸ்வாதந்திரியம் அளித்திருக்கிறான். அதைப் பயன்படுத்தி மோக்ஷத்திற்கு பக்தி முதலான உபாயங்களை அனுஷ்டிப்பது ஜீவனுடைய அத்யந்த பரதந்திரஸ்வரூபத்தோடு முரண்பட்டது. அத்தகைய மோ-க்ஷோபாயங்களால் கைவல்ய மோக்ஷம், ஸவார்த்த மோக்ஷம், ஆகிய ஸ்வரூபத்திற்குத் தகாத மோக்ஷங்களே விளையும்" என்று முற்பட்ட ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றினார்கள். ஸ்ரீதேசிகன் "ஜீவனுக்கு முதல் முயற்சியில் ஸ்வாதந்திரியம் இல்லாமையாலே உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்த மல்ல ; ஆகையால் பக்தி ப்ரபத்திகளுக்கு ஒரே விதமான மோக்ஷமே பலன். கைவல்யம் மோக்ஷம் அல்ல" என்று தம்க்ரந்தங்களில் ஸாதித்துள்ளார். இதை நமது கீதா வ்யாக்யானத்தில் விரிவாக விளக்கியு ள்ளோம்.

இதைப் புரிந்து கொள்ளாமல் சிலர் "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸங்க்ரஹம்" என்னும் நூலில் பிற்பகுதியில் ஸத்ஸ ம்ப்ரதாய விவேகம் என்னும் கண்டன நூலை எழுதி தத்வஹித புருஷார்த்தத்தில் ஸம்ப்ரதாய பேதமே இல்லை என்றும் , பிற்பட்டவர்கள் பேதத்தை உண்டாக்கிவிட்டார்கள் என்று எழுதியுள்ளனர். நம்முடைய சித்தோபாய விஜயம், கைவல்ய ஸித்தாஞ்ஜனம் முதலானவற்றில் இந்த சம்ப்ரதாய பேதம் தெளிவாக விளக்கப்பட்டது.

இந்நிலையில் சமீபத்தில் வெளிவந்த "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸங்க்ரஹம்" என்னும் நூலில் மறுபடியும் வெளி-யிட்டு சிலர் அதில் சொல்லப்படும் விதண்டா வாதங் களையே புதுப்பித்திருக்கிறார்கள்.

இந்த 'ஸங்க்ரஹ' நூலிற்கு மறுப்பாகவே பிரகிருதமான "சுத்த ஸம்ப்ரதாயஸாரம்" என்னும் நூலில், நமது அன்பரும், சிறந்த கேள்வி ஞானம் உடையவருமான ஸ்ரீமான் R. பெருமாள்ராமா நுஜதாஸரால் இயற்றப்பெற்று வெளியிடப்

பெறுகிறது. இதில், இவர் முன்னோர் மொழிந்த மொழி களையே பெரும்பாலும் பின்பற்றியிருக்கிறார். பிள்ளை லோகாசாரியர் அருளிய "அர்த்தபஞ்சகம்" என்னும் நூலை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து இந்நூலின் தொடக்க த்தில் இணைத்திருக்கிறார்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயமே வடமொழியும் தமிழ் மொழியும் சேர்ந்துதான் உருப்பெற்றிருக்கிறது. மேலும் ரஹஸ்யத்ரயமான மூன்று மந்திரங்களும் வடமொழியிலேயே அமைந்துள்ளன. இதை அறிய வேண்டுமெனில்; ஓரளவாவது வடமொழி அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அந்த மூன்று மந்திரங்களின் அர்த்தம் புரியும். அம்மூன்று மந்திரங்களின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டால்தான் பகவான், பாகவதர்களின் பெருமையும், அவர்களுக்குக் கைங்க ரியம் செய்யும்போது களையற்ற கைங்கரியத்தை செய்ய இயலும். ஆகவே, தத்வ விஷயமாகவும் ரஹஸ்ய விஷயமாக வும் விவரிக்க வேண்டிய கட்டாயத்தில் நூல் அமைந்தாலே இந்நூல் வடமொழி பாஷையை சிறுபான்மையாகவும், தமிழ்மொழியை பெரும்பான்மையாகவும் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது. பொதுவாக தத்வ விஷயத்திலும் ரஹஸ்ய விஷ யத்திலும் தெளிவு இல்லாதவர்களுக்கு, இந்நூலாசிரியர் கருத்துக்களை ஆழமாகவும், தெளிவாகவும் திறம்பட விளக்கி இருப்பதால் வாசகர்கள் எல்லோருக்கும் பயன்படும் இந்நூல்.

இனியாவது, ஸம்ப்ரதாய நூல் எழுதுகிறவர்கள் கையிலங்கு கனியாகவும், வெள்ளிடை மலையாக விளங்கும் சம்ப்ரதாய பேதத்தை இல்லை செய்து, "ஸங்க்ரஹ" நூலைப் போல விதண்டாவாதங்கள் செய்யாமல், அவரவர் ஸம்ப்ரதாயங்களைப் பின்பற்றி நின்று அமைதியுடன் வாழ்ந்து பிறரையும் வாழவிடுவார்களென நம்புகிறோம்.

*ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்*
*(ஸுதர்சனர்)*
*11-5-95*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

## அண்ணன் திருவடிகளே சரணம்

வித்வான், சாஹித்ய ரத்னம், வேதநெறி வித்தகர், சதுரகவி, அருளிச்செயல் அருளமுதுச் செல்வர், பஞ்சமாம்னாய ரத்னம், கலைமலிந்த சீர் நம்பி, விஷ்ணுபரத்வ ஸ்தாபகதீர சிகாமணி வைஷ்ணவ ஸ்ம்ப்ரதாய ப்ரவர்த்தக ஸம்பந்தர், ஸத்ஸம்ப்ரதாய செங்கட்சீயம்.

R. நரஸிம்மாசாரியர்
*50, மேல உத்திரவீதி, ஸ்ரீரங்கம்,*
*திருச்சி - 620 006*

# மதிப்புரை

ப்ரபந்ந குல திலகரான ஸ்ரீமான் R. பெருமாள் ராமாநுஜம் அமரரோடு ஒரு கோவையாக்க வல்ல அடக்கமும் கேடில் விழுச்செல்வமாகிய கல்வியும் செல்வத்துள் செல்வமாகிய கேள்விச் செல்வமும் நிரம்பப் பெற்றவர். அன்னாருடைய இந்நூல் பூர்வாசார்யர்களுடைய தெளிந்த கருத்து இன்னது என்பதனை, கையிலங்கு நெல்லிக்கனியாக காட்டவல்லது. உபாயாந்தரங்கள் [ஸாத்யோபாயங்கள்] சேதனனுடைய ஸ்வரூபமான பாரதந்த்ர்யத்திற்கு விருத்தங்கள் என்பதையும் ந்யாஸசரணாகதிகளின் பரஸ்பர பேதத்தையும், பிராட்டி சேதனகோடியில் சேர்ந்தவள், அணுவடிவானவள் என்பதை

யும் - பல நூல்களையும் பல பெரியோர்களுடைய கருத்தை யும் பராமர்சித்து நாதமுனி முதலாநம்தேசிகரின் திருவுள்ளம் இவையே என்பதைத் தெளிவாகவும் அசைக்க முடியாதபடியும் நிரூபித்துள்ளது மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாகவும் மனத் துக்கு திருப்தி தருவதாகவும் அமைந்துள்ளது. இவர் பல்லா ண்டு வாழ்ந்து ஸம்ப்ரதாய கைங்கர்யம் சிறப்பாகச் செய்ய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

தாசன்
R. நரஸிம்மன்
*11-5-95*

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாயநம :

டாக்டர்,A.V.ரங்காசார்யர்ஸ்வாமிகள், M.A.M.Lit., Ph.D.,
பேராசிரியர் அண்ணாமலை பல்கலைக் கழகம்
*105*, மேல வீதி, திருச்சித்ர கூடம்,
(சிதம்பரம்)

# மதிப்புரை

'சுத்த ஸம்பிரதாய ஸாரம்' என்னும் இந்நூல் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் வரிசையில் சிறப்பு மிக்க நூலாக அமைந்துள்ளது. இந்நூலை ஆக்கித்துந்துள்ள புதுவை ஸ்ரீமாந் ப்ரபன்ன வித்வான் R. பெருமாள் ராமாநுஜ ஸ்வாமிகள் ஸத்ஸம்ப்ரதாய அனைத்து க்ரந்தங்களையும் நிஷ்க்ருஷ்ட அர்த்தங்களையெல்லாம் முறையாக பல பெரியோர்களிடம் கேட்டு ஆழ்ந்து அனுபவித்து, நெஞ்சில் தேக்கி வைத்துக்கொண்டு, அவ்வப்போது, ஆங்காங்கே தினவடங்கச்சொல்லும் உயர்ந்த அதிகாரியாவர். மேற்படி ஸ்வாமிகள் நமது ஸத்ஸம்பிரதாய ஸாரப்பொருள்களையெல்லாம் ஐயம் திரிபு அற பின்னவரும் கற்றுத் தெளிய வேண்டும் என்ற பரந்த கருணையாலே சுத்த ஸம்பிரதாயஸாரம் என்ற *134* பக்கங்கள் கொண்ட இந்நூலினை ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு வழங்கியது. ஒரு வரப்ரஸாதமாகும்.

இந்நூலினில், முதற்பகுதியில் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஐந்து அர்த்தங்கள். இதனை, பிள்ளை லோகாசாரியர் அருளிச்செய்துள்ள "அர்த்த பஞ்சகம்" என்ற ரஹஸ்யத்தை மிகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து, பக்தி ஸ்வரூப விருத்தம் என்ற நமது ஸம்ப்ரதாய நிலைக்கானபூர்வாசாரியர்கள் அருளிச்செய்துள்ள கருத்துக்களையெல்லாம் மிக அழ்காகவும்,

விரிவாகவும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது ஆசிரியரின் இருஸம்ப்ரதாயங்களின் ஆழ்ந்ததெளிந்த பரந்த ஞானத்தை அறிவிக்கிறது. இதுவரை யாரும் இவ்வளவு கோர்வையாகத் தெரிவிக்காத குறையை இவ்வாசிரியர் ஒருங்கேதொகுத்து அளித்து "பக்தி ஸ்வரூப விருத்தமில்லை, பக்தியும் ப்ரபத்தியை போல் உபாயமாக அநுஷ்டிக்கலாம்" என்ற கலக்க மயக்கங்களையெல்லாம் உள்ளபடி ஆராயப்பட்டு, தக்க ப்ரமாணங்களைக் கொண்டு, பக்தி ஸ்வரூப விருத்தமே என்று நிலைநாட்டப்பட்டுள்ளது மிகவும் போற்றுதலுக்குரியது.

அதேபோன்று ப்ரபத்தியைப்பற்றி இரு ஸம்பிரதாயத் திலுமுள்ள வேறுபாடுகளை - உபாய அநுஷ்டானம், பரஸ மர்ப்பணம், ந்யாசம் - சரணாகதி வேற்றுமை - ப்ரபத்தி ஒரு தடவையா பல தடவையா ஆகியவற்றில் தோன்றியுள்ள மருள்களையெல்லாம் விசதமாக எடுத்துக்காட்டி, உண்மை நிலையினை மிக அழுத்தமாக கூறப்பட்டுள்ளது. இதனை ஆழ்ந்து ஒருமுறை படித்தாலேயே அஜ்ஞான, அந்யதாஜ்ஞான, விபரிதஜ்ஞானத்தால் ஏற்பட்டுள்ள கலக்கங்கள் நீங்கி, த்ருடமான அத்யவஸாயம் ஏற்படும்.

மேலும், பிராட்டிக்கு புருஷகாரத்வமே நிலைநின்ற வேஷம், பிராட்டிக்கு விபுத்வமில்லை, அணுத்வ ஸ்வரூபமே என்ற பூர்வர்கள் காட்டியுள்ள நிலையினை விரிவாகத் தெரிவித்து, மற்றவர்கள் கூறும் மாற்றுக்கருத்து க்களுக்கு விபுலமான மறுப்புக்களை ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புரா ணங்கள், அருளிச்செயல், பூர்வாசார்ய ஸ்ரீசூக்திகளைக் கொண்டு நிருபித்துள்ளதை ஆழ்ந்து நோக்கி அறியத்தக்கது.

ஆக, நமது ஸத்ஸம்பிரதாய கருத்துக்களை எல்லாம் ஒருங்கே திரட்டி, வைணவத்தில் ஈடுபாடுடைய அனைவரும் படித்து தெளியும் படியாக அமைந்த இந்நூல் மிகவும் வரவேற்கத்தக்கது. "சுத்த ஸம்ப்ரதாயஸாரம்" என்ற இவ்வரிய நூலினை கற்றோர்கள் தாம் உகப்பர், கல்விதன்னில் ஆசையு ள்ளோர் பெற்றோம் என உகந்து பின்பு கற்பர். மற்றோர்கள் இந்நூலின் துணைகொண்டு அவ்வப்போது எழும் மந்தமதிகளின் மருள்களை போக்கி சீரிய ஞானத்தை அளிப்பர். இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்துள்ள

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய நூல்களில் இந்நூல் சிறந்த நூலாகும். இதனை வைணவ உலகம் வாங்கிப்படிப்ப தோடல்லாமல் அனைவரையும் வாங்கிப் படிக்கச் செய்வதே நாம் ஆசிரியருக்கு செய்யும் பேருபகார மாகும். சுத்த ஸம்பிரதாய ஸாரம் என்னும் இந்நூல் உள்ளதை உள்ளபடி படம்பிடித்துக் காட்டும்படி ஆக்கித்தந்த பெரியவர் ஸ்ரீமான் ப்ரபன்ன வித்வான் பெருமாள் ராமாநுஜ ஸ்வாமிகட்டு ஸ்ரீவைணவ உலகம் பல்லாண்டு பாடக்கடமைப் பட்டுள்ளது.

பொலிக! பொலிக! பொலிக!

அ.வே. ரங்காசாரி
*17.5.1995.*

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அணிந்துரை

மெய்மை கண்டவர் கூற்றாவது: உலகவர் எய்தியிருக்கும் நிலை, நடுக்கடலில் செல்லுங்கப்பல் பெரும் புயலால் மோதப்பட்டு நீரைமுகந்து கொண்டு அழுந்தும் நிலை போன்றது என்பர். "அநந்தக்லேசம்" (எல்லை காண் பரிய துன்பம்) என்கிறபடியே இத்தகு துன்பத்துக்குக் காரணம் அர்த்த பஞ்சகஜ்ஞானமின்மையேயாம். ஒருவன் அர்த்த பஞ்சகஜ்ஞானத்தைக் கற்றுத் தெளிந்தொழுகினால் எல்லை காண்பரிய இன்பம் எய்துவான் என்பர். இதனால், பெருந் துன்பத்தின் நீங்கிப் பேரின்பமெய்த அர்த்த பஞ்சக ஜ்ஞானம் அத்யாவஸ்யமெனத் தெரிகிறதன்றோ? ஸ்ரீமத் பிள்ளைலோகாசார்யர் தமது பரம க்ருணையால் மணி ப்ரவாள நடையில் இதனை எழுதியுள்ளனர்.

இந்நூலாசிரியர் இந்த அர்த்த பஞ்சக நூலை மணி ப்ரவாள நடையிலுள்ள வடமொழிச் சொற்களுக்கு நேரே ஆந்தனையும் தமிழ்ச் சொற்களைக் கூட்டி சில அரும்பத சொற்களுக்கு அடைப்புக் குறியிட்டு மிகவிரியாமலும், மிகச் சுருங்காமலும் எழுதியுள்ளது மிகவும் பாராட்டுக்குரியது. இதை, சொற்ப ஸம்ப்ரதாய ஜ்ஞானமுடையவர்களும் படித்துத் தெளிய அறிந்து பெரும் பயன் எய்த இயலும். இவற்றை 'சுத்த ஸம்ப்ரதாய ஸாரம்' என்ற நூலின் முகப்பில் இணைத்திருக்கிறார்கள். இந்த நூல் வடமொழிப் பெயரையே தனக்குப் பெயராகத் தாங்கியுள்ளதால் வடமொழி நூலே என்னலாம்படி அமைந்துள்ளது என்பது போதரும்.

நிரஸ்தாதிஸயாஹ்லாதகர ஸுகபாவைக லக்ஷணையான மோக்ஷாநந்தத்துக்கு ஸாதநங்கள் கர்மயோகம், ஜ்ஞாந யோகம், பக்தியோகம் என்பன சாஸ்த்திரங்களாலே அறுதியிடப்பெற்றுள்ளன. சாஸ்த்ரங்களைத் தோற்றுவித்தவன் தானே வருந்தியவனாய் சாஸ்த்ரதாத்பர்யமான ரஹஸ்யங்

களை மெய்யுணர்வைப் பிறப்பிப்பதற்காகக் கொடுத்தருளி-னான். இந்த சாஸ்த்ரங்களையும், தாத்பர்யங்களையும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்யஹ்ருதயத்தில் சுக்ரஹமாகச் சொல்லியருளினார். இந்த கர்மஜ்ஞானபக்திகள் ஸாதநங்கள் என்ற வேஷத்தாலே அஹங்கார மமகாரங்களை யும் மறைமுகமாகத் தோற்றுவிப்பதாகும். ஸாதநாந்தரங்கள் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை நோக்க, அநுகூலமாகத் தோற்று-வது போல காட்டி ப்ரதிகூலத்தையே தோற்றுவித்துவிடும். "யோந்யதா ஸந்த மாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே கிம்தேநக்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்பது கர்மஜ்ஞாந பக்திகள் அஹங்கார மமகாரங்களில் மூட்டி பரமாத்மாவின் சொத்தாகிய தன்னை அபஹரிப்பதாகிய ஆத்மாபஹாரத்தில் மூட்டி ஸர்வபாப மூலமாக்குமென்பதாம்.

இத்தகு விஷமங்களை யானெனதென்னும் செருக்கு ற்றவர்கள் சொல்லித்திரிய இதை நிரஸிப்பதற்கு காடு, மலை, கடல், பாலைவனமெல்லாம் ஓடிப்ரமாணங்களைக் கொண்டு மெய்மையே உணர்த்தியது பாராட்டுக்குரியதாகும்.

பரப்ரம்மத்தின் இலக்கணம் உபயலிங்க விசிஷ்டம். உபயலிங்கமாவது; அகிலஹேய ப்ரத்யநீகம், ஸமஸ்தகல்யாண குணாத் மகத்வம். உபயலிங்க விசிஷ்ட ஹீநமே ப்ரம்மத்வம், விபுத்வம், உபாயத்வம் இத்தன்மைகளை பிராட்டிக்கிருப்பதாக நினைக்கவும் ஏலாது. மேலும் பிராட்டி பகவத் பரதந்த்ரை யாம் ஹேயமுண்டு. சுதந்திரமின்மையாம் குணஹீநமுண்டு. நாரங்களில் பிராட்டியும் ஒன்றானபோது ப்ரம்மத்வம், விபுத்வம், உபாயத்வங்களில்லாத தமதிட்டத்தில் ஏறிட்டால் பிராட்டியே வருந்துவாரே. ஸித்தாந்தத் திறவுகோல் சரீராத்ம பாவமாகும். ஸம்ப்ரதாயத் திறவுகோல் ஈச்வரஸ்வாதந்த ர்யமென்பர். இங்ஙனமிருக்கப்பல வேண்டியதின்றாகுமாம்.

திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர்மடத்து ஆசார் யர்களில் ஒருவரான ஸ்ரீமத் திருவேங்கடராமாநுஜா- சாரியர் திருவடி சம்பந்தியும் பாண்டிச்சேரி முதலியார்பேட்டை இந்திரா நகரிலுள்ள R. பெருமாள் ராமாநுஜதாஸரவர்கள்

இவ்வரிய விஷயத்தைப் பலப்ரமாணங்களையும் பூர்வாசார்யருடைய ஸ்ரீஸூக்திகளையும் எடுத்துக்காட்டி திறம்பட விளக்கம் தந்து ஒருவரும் அசைக்க வொண்ணாதபடி இந்நூலை முடித்திருக்கிறார். இந்நூல் ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோருக்கும் பயனுள்ளதாகுக! என நிறைவு செய்கிறேன்.

ஒப்பம்
ஏந்தூர் சடகோப ராமாநுஜதாஸன்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# நூலாசிரியரின் முன்னுரை

சகல சாஸ்த்திரங்களாலும் மிக முக்கியமாக அறிவிக்கப்படுவது தத்வ ஹித புருஷார்த்தங்களே. இவற்றைச் சுருக்கி ரஹஸ்யத்ரய ரூபமாக ஆதியில் ப்ரவர்த்தித்தவன் ச்ரிய: பதியான எம்பெருமானே ஆவான். பிறகு பெரிய பிராட்டிக்கு இவற்றை உபதேசித்ததாலே இந்த ஸம்ப்ரதாயம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமாக திகழ்கிறது.

அடுத்தப்படியாக சேனை முதலியாருக்கு ரஹஸ்யத்ரய அர்த்த விசேஷங்களை பெரிய பிராட்டியார் உபதேசிக்க அது ஓராண்வழி உபதேசப் பரம்பரையாக சேனை முதலியார் நம்மாழ்வாருக்கும், நம்மாழ்வார் மதுரகவி நாதமுநிகளுக்கும், நாதமுநிகள் உய்யக்கொண்டாருக்கும், உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிக்கும், நம்பிகள் ஆளவந்தாருக்கும், ஆளவந்தார் பெரிய நம்பிகள் தொடக்கமான ஐந்து நம்பிகளுக்கும், அவர்கள் எம்பெருமானாருக்கும் ஓராண்வழியாக உபதேசப் பரம்பரை வந்து கொண்டிருந்தது. ஓராண்(ள்) வழி உபதேசப் பரம்பரை என்பது, ஒருவர் ஒருவருக்குத்தான் ரஹஸ்ய விஷயங்களை உபதேசிப்பது என்ற நிபந்தனை எம்பெருமானாருக்கு முன்பிருந்த ஆசாரியர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்படி ஓராண்வழியாக வரும் உபதேசப் பரம்பரையில் ஆசாரியன் சிஷ்யனுக்கு ஸதஸ்யமாக இல்லாமல் ரஹஸ்யமாகத்தான் ரஹஸ்ய விஷயங்களை உபதேசிப்பார்கள். (இதை எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பிகளிடத்தில் ரஹஸ்யார்த்தம் கேட்பதற்காக 18 தடவை சென்று உபதேசம் பெற்றார் என்பதை குருபரம்பரையில் காணலாம்.) எம்பெருமானாருக்கு முன்பிருந்த பூர்வாசாரியர்கள் கிரந்தங்கள் எழுதும்பொழுது அந்த கிரந்தங்களில் ரஹஸ்ய விஷயத்தை குஹ்யமாக (மறைத்து) வைத்து எழுதுவார்களேயொழிய ஸ்பஸ்டமாக எழுதமாட்டார்கள். மேலும் எம்பெருமானார், ஆளவந்தார், நாதமுனிகள் முதலான ஆசாரியர்கள்

ரஹஸ்யத்ரய விஷயமாக க்ரந்தங்கள் எழுதவில்லை. அதனால் தான் இந்த நவீனர்கள் ஸ்ரீஆளவந்தார், எம்பெருமானார் போன்றவர்களுடைய நூல்களில் உபாய விஷயமாகவும், புருஷார்த்த விஷயமாகவும், அவர்கள் நூல்களை எடுத்துக் காட்டி ச்ருதி ஸ்ம்ருத்தியாதிகளுக்கு விருத்தமாகவும் ஸம்ப்ரதா யத்திற்கும் முரண்பட்ட அர்த்தக்கல்பனை பண்ணுகிறார்கள்.

இந்த ஓராண் வழி உபதேசப் பரம்பரை எம்பெருமா னாரிலிருந்து கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், கூர குலோத்தமதாதர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாள மாமுநிகள் ஈறாக ரஹஸ்யத்ரய உபதேசப் பரம்பரை தொடர் சங்கிலிக்கோப்பாக பிணையுண்டு வந்ததாலே ரஹஸ்ய ப்ரஸ்த் தானத்தில் தெள்ளத் தெளிவான சுத்தஸம்ப்ரதாயார்த்த ங்களை அறிய நமக்கெல்லாம் வாய்ப்புக்கிட்டியுள்ளது. இந்த குருபரம்பரை வழிக்கால் இதர ஸம்ப்ரதாயத்தவர்களுக்கு அமையாமையாலே ஸம்ப்ரதாயத்தில் ஒரே நிலையான அர்த்த ங்களை அறிய வாய்ப்பில்லாமல் போயிற்று.

தத்வத்தையும் ஹிதத்தையும் ப்ரஸங்காத் புருஷார்த் தத்தையும் தெளிவாக விளக்கி ஸங்க்ரஹ நூலில் இருக்கும் விஷயத்திற்கு மறுப்பு நூலாக "சுத்த ஸம்ப்ரதாயஸாரம்" என்ற இந்த கிரந்தமுகமாக அடியேனால் வெளியிடப்படுகிறது. இக்கிரந்தத்தில் ஸ்ரீபிள்ளைலோகாசாரியர் அருளிய அர்த்த பஞ்சகத்தை பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டு ஆரம்ப நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு நினைவில் கொள்ளும் வகை யில் அதிக விரிவில்லாமல் விவரணம் எழுதி அவர்களுக்கு உபயோகப்படும்படி நூலின் முகப்பில் இணைத்துள்ளேன். மற்றும் கர்மஜ்ஞான பக்திகள் ஸ்வரூபவிருத்தம், ப்ரபத்தி ஸ்வரூபம், லக்ஷ்மியின் அநுபாயத்வம், பிராட்டி அணுஸ்வ ரூபையே என்று தலைப்பிடப் பெற்று ப்ரமாணங்களைக் கொண்டும் பூர்வாசாரியர்களுடைய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டும் விவரித்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இன்று ஸ்ரீவைஷ்ணவ மதம் ஆல்போல் தழைத்து வளருவதற்குக் காரணமானவரும், அடியேனுக்கு ஸதாசார் யராக விளங்குபவருமான ஸ்ரீ உ. வே. S. கிருஷ்ணஸ்வாமி

ஐயங்கார் ஸ்வாமிகள் (ஸு்தர்சனர்) அவர்கள். இந்நூலை கடாக்ஷித்து பிழைத்திருத்தம் செய்தருளி முன்னுரை எழுதி உதவினமைக்கு தலையல்லால் கைமாறிலேன். இந்நூலை கடாக்ஷித்து மங்களாசாஸனம் செய்தருளிய திருக்கோவலூர் ஜீயர் அஸ்மதாசாரிய புத்ரரான ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸா சாரியர் ஸ்வாமிகள் அவர்களுக்கும் அடியேனுடைய அஞ்சலி பூர்வகமான க்ருதஜ்ஞயை தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்கு அணிந்துரை அளித்தவரும், அடியேனுக்கு ஹிதப்ரவர்த்தகரும் ஸதாசாரியஸ்தானத்திலிருப்பவருமான ஸ்ரீமாந் ஏந்தூர் சடகோபராமநுஜ ஸ்வாமிகளுக்கும், மற்றும் இந்நூலுக்கு மதிப்புரை அணிந்துரை நல்கிய பெரியோர்களான ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ.வே. R. நரசிம்மாச்சாரிய ஸ்வாமிகளுக்கும், ஸ்ரீ உ.வே. A.V. ரங்காசாரிய ஸ்வாமிகளுக்கும், ஸ்ரீமான் R. எதிராஜ ராமாநுஜ ஸ்வாமிகளுக்கும் அடியேன் க்ருதஜ்ஞா பூர்வகமான தண்ட ப்ரணாமங்களை ஸமர்ப்பித்துஸத்தைப் பெறுகிறேன்.

அல்பஜ்ஞனான அடியேன் எழுதிய இந்நூலில் பிழைகள் கலந்திருக்கலாம். "பிழைப்பராகிலும் தம்மடியார் சொற்பொறுப்பது பெரியோர் கடனன்றே" என்கிறபடி சான்றோர்கள் குற்றங்களைந்து குணங் கொள்ளுமாறு ப்ரார்த்திக்கிறேன்.

**"கற்றோர்கள் தாமுகப்பர் கல்விதன்னில் ஆசையுள்ளோர்**
**பெற்றோமென உகந்து பின்புகற்பர்-மற்றோர்கள்**
**மாச்சரியத்தாலிகழில் வந்ததென் நெஞ்சே இகழ்கை**
**ஆச்சரியமோ தானவர்க்கு".**

தோன்றாத் துணையாயிருந்து இந்நூலை முற்றுவித்த ச்ரிய:பதியை திரிகரணங்களாலும் இறைஞ்சுகிறேன். எழுதுமாறு பணித்து ஊக்குவித்த ஸ்ரீமாந் கோ. ராமஸ்வாமிராமாநுஜ ஸ்வாமி அவர்களுக்கும், இதனை படித்துப் பயன்பெறும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
ஸ்ரீவைஷ்ணவதாஸன்
R. பெருமாள்ராமாநுஜம்.

# பிழைத் திருத்தம்

இப்பிழைகளைமுன்னம் பக்கத்தில் திருத்திக் கொள்வதவசியம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 19 | 15 | விதித்திருக்கிதேயென்னில்? | விதித்திருக்கிறதேயென்னில் |
| 19 | 30 | அரிகாரிகளுக்கே | அதிகாரிகளுக்கே |
| 20 | 6 | தவிர்த்துக் | உணர்ந்து |
| 20 | 12 | பிறர்குரிவனென்று | பிறர்க்குரியவனென்று |
| 21 | 4 | மந-அவபோதநே | மநு-அவபோதநே |
| 49 | 15 | பரார்களாகவும் | பரர்களாகவும் |
| 50 | 34 | விஷ்யமாகக் | விஷயமாகக் |
| 54 | 13 | ‘என்னோடு | ‘என்னோடு சேர்ந்திருப்பதை |
| 55 | 1 | வாரது | வாராது |
| 56 | 30 | அனந்த | ஆனந்த |
| 58 | 16 | ருபமான | ரூபமான |
| 60 | 13 | தேஹவிசிஷ்டவேஷம் | விசிஷ்டவேஷம் |
| 74 | 1 | அவதாரரஹஸ்த்தை | அவதாரரஹஸ்யத்தை |
| 76 | 6 | ஸ்வருபமே | ஸ்வரூபமே |
| 78 | 5 | மிகக்தெளிவு | மிகத் தெளிவு |
| 81 | 21 | பத்ருசகாசத்திலே | பார்த்ருசகாசத்திலே |
| 82 | 11 | பஹிதா | பஹு¬தா |
| 82 | | தலைப்பு - லக்ஷ்மியின் அநுபாயத்வம் | ப்ரபத்திஸ்வரூபம் |
| 84 | 20 | பூர்வாசார்யர் | பூர்வாசார்யர்கள் |
| 85 | 25 | இதற்குமேல்யிவர்கள் | இதற்குமேலிவர்கள் |
| 90 | 21 | ஸமாதனமான | ஸமாதானமான |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 96 | 10 | அவனக்கு | அவனுக்கு |
| 97 | 15 | காருண்யருபயா | காருண்யரூபயா |
| 101 | 32 | ஸத்ஸம்மதமகக்கடவது | ஸத்ஸம்மதமாகக்கடவது |
| 107 | 15 | என்றும | என்றும் |
| 114 | 23 | க்ருர: | க்ரூர: |
| 116 | 25 | விசேஷணமானது | விசேஷணமான |
| 117 | 15 | ராக்ஷிமவ்ய: | ரக்ஷிதவ்ய: |
| 127 | 8 | ஸ்வருபத்துக்கு | ஸ்வரூபத்துக்கு |
| 127 | 24 | ஸ்வருபத்துக்கு | ஸ்வரூபத்துக்கு |
| 129 | 6 | வாழ்ந்துவளுமான | வாழ்ந்தவளுமான |
| 129 | 23 | கற்பிக்கப்ட்ட | கற்பிக்கப்பட்ட |
| 131 | 1 | *(திவாய் 10-10-3)* | *(திருவாய் 10-10-3)* |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீலோககுரவே நம :

# அர்த்தபஞ்சகம்

இவ்வுலகிலுள்ள ஜீவர்கள் அறியவேண்டியது அர்த்தபஞ்சகம்.

"அர்த்தபஞ்சகம்" என்றால் ஐந்துபொருள்களைப்பற்றி அறிதல் அர்த்த பஞ்சகஜ்ஞானம் என்பதாகும். அதாவது, 1. அடையப்படுகின்ற இறைவனைப் பற்றி அறிதல்; (2) அடைகின்றவனான ஆத்மாவைப் (தன்னைப்)பற்றி அறிதல்; (3) இறைவனை அடையும் உபாயத்தைப்பற்றி அறிதல்; (4) அந்த உபாயத்தால் பெறும் பயனைப்பற்றி அறிதல்; (5) (நாம்) இறைவனை அடைய ஒட்டாமல் தடை செய்கின்ற விரோதியைப் பற்றி அறிதல். இவற்றை வேதங்களும், தர்மசாஸ்த்ரங்களும், இதிஹாஸங்களும், புராணங்களும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களும், ஆசார்யர்களின் அருளுரைகளும் கூறுகின்றன.

ஒருவனுக்கு மோக்ஷத்தைஅடைய ஆசையுண்டானால் இந்த அர்த்தபஞ்சக ஜ்ஞானம் (ஐம்பொருள்களின் உண்மையறிவு) உண்டாகவேணும் என்பதை, "ஸம்ஸாரியான சேதநனுக்குத் தத்வஜ்ஞானம் பிறந்து உஜ்ஜீவிக்கும் போது அர்த்த பஞ்சகஜ்ஞானம் உண்டாகவேணும்" என்கிறார் ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர்.

இங்கே, 'ஸம்ஸாரி' என்றால், மெய்யைப்பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் அதாவது; தூணைமகவு என்றும், கானல் நீரைத் தண்ணீர் என்றும் சிப்பியை வெள்ளியென்றும், கயிற்றைப் பாம்பென்றும் இப்படியே ஆத்மாவல்லாத (உயிரல்லாத) தன் உடலையே ஆத்மாவென்றும் மாறுபட்டு அறியும் அறிவிலிக்கு "ஸம்ஸாரி" என்று பெயர். (ஆத்மா, சேதநன், ஜீவன், புருஷன், அக்ஷரம், தேஹி, சித்து என்று வடமொழியில் ஒரு பொருட்கிளவியாய் உயிருக்குப்பெயராகி வரும்). ஆக 'ஸம்ஸாரியான' என்பதற்கு மாறுபட்ட -

பொய்யறிவையுடைய சேதநனுக்கு - ஆத்மாவுக்கு, உண்மையறிவு பிறந்து மோக்ஷம் அடைய வேண்டுமென்றால் அர்த்த பஞ்சக ஜ்ஞானம் (ஐந்து பொருள்களைப்பற்றிய அறிவு) உண்டாகவேண்டுமென்பதாயிற்று.

அந்த ஐந்து பொருள்களின் உண்மை அறிவாவது :- *(1)* ஸ்வஸ்வரூப, *(2)* பரஸ்வரூப, *(3)* புருஷார்த்த ஸ்வரூப, *(4)* உபாய ஸ்வரூப, *(5)* விரோதி ஸ்வரூபங்கள். இவற்றை உள்ளபடி அறிகை. இவற்றில் ஒவ்வொரு விஷயமும் ஐந்துவகையாய் இருக்கும்.

I. ஸ்வஸ்வரூபம் என்பது - தேவர்கள் மனிதர்கள் முதலான பிராணிகளின் உடலில் இயங்கக்கூடிய உயிரான ஆத்ம ஸ்வரூபத்தை ஸ்வஸ்வரூபம் என்கிறது. இந்த ஆத்ம ஸ்வரூபம் தான் ஐந்து வகையாகப்பிரிக்கப்படும். அதாவது ; நித்தியர், முக்தர், பத்தர், கேவலர், முமுக்ஷுக்கள் என்று. இவர்களில்,

1. நித்தியராவார் - ஒரு நாளும் பிறவிஸம்பந்தமாகிற தோஷம் இல்லாதவராய் பகவத் அனுபவகைங்கர்யத்தையே போகமாக உடையவராய், (a) "வானிளவரசு வைகுந்தக் குட்டன் வாசுதேவன்" (பரமபதத்தில் நாராயணனாகிற வாசுதேவன் இளவரசனாகவும் இவர்கள் பேரரசராகவும் இருப்பார்கள்). என்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கு (b) "விண்ணாட்டவர் மூதுவர்" (அந்த விண்ணாடாகிற பரமபதத்தில் இருப்பவர்களாகிய பெரியோர்கள்) என்கிற படியே பட்டம் கட்டுகைக்கு உரியராம்படி மூத்த மந்திரிகளாய், பகவானுடைய நியமனத்தாலே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் பண்ணவல்லவர்களாய், பகவானுடைய பரம், வ்யூகம் முதலான எல்லாநிலைகளிலும் தொடர்ந்து அடிமைசெய்யக்கூடியவர்களாய், (c) "கோயில் கொள் தெய்வங்களான சேனை முதலியார், ஆதிசேஷன், கருடாழ்வார், குமுதன், குமுதாக்ஷன், ஜயவிஜயர் தொடக்கமான நித்திய ஸூரியர்களான அமரர்கள்.

2. முக்தராவார் - பகவானுடைய அருளாலே ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் (உடல் தொடர்பால்) வந்த துக்கமெல்லாம் கழிந்து பகவத்ஸ்வரூப (பகவானுடைய இயல்பான ரூபம்),

(a) பெரியாழ்வார் - திரு - *3-6-3* (b) திருவிருத்தம் - *2*
(c) திருவாய்-*8-6-5*

வடிவு, குணம், செல்வங்களை அனுபவித்து அந்த அனுபவத்தால் வந்த சந்தோஷம் உள்ளடங்காமையாலே அவனை வாயார புகழ்ந்து, (A) "மீட்சியின்றி வைகுந்த" மாநகரத்திலே களித்து ஆநந்திக்கிற முனிவர்கள்.

3. பத்தராவார் - ஐந்து பௌதிகப்பொருள்களால் ஆனதாய் நிலையற்றதாய், சுகதுக்க அனுபவத்துக்குக்கருவியாய், ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்தவுடன் பார்ப்பதற்கும், தொடுவதற்கும் யோக்கியதை இல்லாதபடி அசுத்தத்திற்கு இடமாய், அறிவின்மை, பொய்யான அறிவு, மாறுபட்ட அறிவு இவைகளை உண்டாக்கக்கூடியதான தன்னுடைய உடலையே ஆத்மாவாகவும் (உயிராகவும்), சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் (கேட்டல், உணர்தல், பார்த்தல், சுவைத்தல், முகர்தல்) முதலான விஷய அனுபவத்தால் உண்டான தன்னுடைய உடலை வளர்ப்பதே பயனாகவும், இப்படி ஐம்புலன்களால் உண்டான இன்பத்திற்காக வர்ணாசிரம தர்மங்களை அழியும்படி பண்ணியும், வணங்கத்தகாதவர்களை வணங்கியும், பிற உயிர்களை ஹிம்ஸித்தும், பிறர் மனைவிமார்களையும், பிறர் பொருள்களையும் அபகரித்தும், இந்த வினைப்பயன்களை அனுபவிப்பதற்கு இந்த இருள்தருமாஞாலத்திலே பல பிறவிகளை எடுத்துக் கொண்டு பகவானிடத்தில் வெறுப்புடையவர்களான மக்கள்.

4. கேவலனாவான் - பாலைவனத்திலே அகப்பட்டவன் மிகவும் பசிதாகங்களாலே நலிவுபட்டு, எதை உண்பது எதை உண்ணக்கூடாது என்னும் அறிவு இல்லாதவனாய், தன் உடம்பில் உள்ள தசைகளைபிடுங்கித்தின்று உதிரத்தையும் குடித்து, பசியை போக்கி சந்தோஷம் அடைவதுபோலே, பிறவியாகிற ஸம்ஸாரக்காட்டுதீயாலே சுடப்பட்டவன், பிறவியாகிற ஸம்ஸார துக்கத்தை போக்குவதற்காக சாஸ்த்திரங்களினால் உண்டான அறிவாலே உடல்வேறு உயிர்வேறு என்ற விவேகத்தைப் பண்ணி, இந்த உடல் துக்கத்திற்கு இருப்பிடமாய் இருப்பதாய், எலும்பு, தோல், தசை, இரத்தம், சீழ் முதலான தாழ்ந்த பொருள்களோடு கூடியதாயும் இருப்பதை அறிந்து, ஆத்மா; உடலைக்காட்டிலும் வேறுபட்டதாய் இருபத்தைந்தாவது தத்துவமாய், தனக்குத்தானே பிரகாசிப்பதாய், இயற்கையிலே சுகத்தோடு

(A) திருவாய்-4-10-11

கூடியதாய், என்றும் அழிவில்லாததாய், அப்ராக்ருதமாய், இருக்கிற தன்னுடைய உயிர்நிலையை அறிந்து, முன்புதான்பட்ட பிறப்பு மரணமாகிற துக்கத்தின் கனத்தாலே இப்படிப்பட்ட நம் ஆத்மாவை நாமே அனுபவிக்க வேண்டும் என்று அதிலே இழிந்து (a) "உணர்முழு நல" மான பரமாத்ம விவேகம் பண்ணமாட்டாதே (b) "அமுதவெள்ளத் தானாஞ்சிறப்புவிட்டு" அந்த ஆத்மாவின் அநுபவத்திற்கு வழியானஜ்ஞானயோகத்தில் நிஷ்டை உடையவனாய், அந்தஜ்ஞானயோகம் முடிந்தபிறகு அந்த ஆத்மாநுபவ மாத்திரத்தையே பயனாக அநுபவித்து, பின்பு ஸம்ஸார ஸம்பந்தமும், பரமபதப்ராப்தியும் அற்று ஆத்மா உள்ளவரை சரீரம் அற்றவனாய்க்கொண்டு திரியக்கூடியவனாயிருப்பான்.

5. முமுக்ஷு என்பவன் :-மோக்ஷத்தில் இச்சையுடையவன். இந்த முமுக்ஷுக்களும், உபாஸகராயிருப்பாரும் ப்ரபந்நராயிருப்பாருமாய் இரண்டு வகைப்பட்டவர்கள். இவர்களில் உபாஸகராயிருப்பவர் கர்மயோகம், ஜ்ஞானயோகங்களைத் துணையாகக் கொண்டு பக்தியை உபாயமாகப்பற்றியவர்கள்.

ப்ரபந்நர் :தங்களுடைய முயற்சியான கர்ம, ஜ்ஞான, பக்திகள் பரதந்த்ரமான ஆத்மாவுக்குப் பொருந்தா என்று உணர்ந்து ச்ரிய : பதியையே உபாயமாகக் கொண்ட ப்ரபத்தி நிஷ்டர்கள்.

II பரஸ்வரூபம் என்பது - ஈச்வரஸ்வரூபத்தை;ஈச்வரன் என்பவன், ஸர்வஐச்வர்யத்தையும் (எல்லாச் செல்வங்களையும்) உடையவன் அவனே ஈச்வரன் என்றும், எல்லா சரா சரங்களையும் ஏவுபவன் என்றும், அவற்றை தரிப்பவன் என்றும், அவற்றை ஆளுபவன் என்றும் இப்படி சேதன அசேதனங்களான செல்வத்திற்குக்காரணமாயிருப்பவனே ஈச்வரன் என்ற சப்தத்திற்கு நேரான பொருளாவன் (சிவன், சனி, ராவணேச்வரன் போன்ற அழியக்கூடிய ஜீவர்களைப் போல்) ஒரு காரணம்பற்றி வந்ததல்லாமல் இயற்கையாகவே வந்த இந்த ஈச்வரலக்ஷணம் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயண-னுக்கே உரியதாகும். மற்றவர்க்கு இந்த ஈச்வரத்தன்மை செயற்கையாக வந்ததாகையாலே பொருந்தாது. இப்படிப்பட்ட ஸ்ரீமந்நாராயணனாகிற ஈச்வரஸ்வரூபம்,

(a) திருவாய்-1-1-2 (b) திருவாசிரியம்-2

விபுவாய் (எங்கும் வியாபித்திருப்பதாய்) அதாவது சேதந (உயிர்) அசேதந (உயிரற்ற பொருள்) இவை அனைத்திலும் உள்ளும் புறமும் பரந்து எங்கும் நிறைந்திருப்பதாய் ஜ்ஞானம், ஆநந்தம், அமலத்வம் (தான்தோஷமில்லாததாய், தன்னைச் சார்ந்த வற்றையும் தூய்மைபடுத்துவதாகயிருக்கை) எனப்படும். ஸ்வரூப நிரூபககுணங்களையுடையதாய், (ஈச்வரதத்துவத்தை அறிந்து கொள்வதற்குரிய லக்ஷணமான குணங்கள், ஸ்வரூப நிரூபக குணங்கள்) ஜ்ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் என்னும் நிரூபித ஸ்வரூப லக்ஷணமான குணங்களை யுடையதாய் மற்றும் காருண்ய, வாத்ஸல்ய, ஸ்வாமித்வ, ஸௌசீல்ய, ஸௌலப்யாதி எண்ணற்ற கல்யாண (மங்கள) குணங்களையுடைத்தாயிருக்கும். இப்படிப்பட்ட ஈச்வரனான நாராயணனே ஸகல உலகிற்கும் காரணனாய், எல்லோரையும் ரக்ஷிப்பவனாய், ஸர்வசேஷியாய், (எல்லோருக்கும் தலைவனாய்) எல்லோருக்கும் ஸ்வாமியாய், ச்ரிய : பதியாய், (லக்ஷ்மீநாயகனாய்) ஸகல சேதநங்களுக்கும் ஆதாரமாய், அவற்றை சரீரமாகக் கொண்டவனாய், ஸ்ருஷ்டி (படைத்தல்) ரக்ஷண (காத்தல்) ஸம்ஹார கர்த்தாவாய் (அழித்தலை செய்பவனாய்) போக்தாவாய் (அநுபவிப்பவனாய்) இருப்பான். இப்படிப்பட்ட ஈச்வரன் நித்யவிபூதி (பரமபதம்) ப்ராக்ருதமான லீலாவிபூதி (பூமி முதலான விளையாடுமிடங்கள்) நிர்வாஹத்தின் பொருட்டு ஐந்து நிலைகளில் எழுந்தருளியிருப்பவன். அவை : (1) பரத்வம், (2) வ்யூஹம், (3) விபவம், (4) அந்தர்யாமித்வம், (5) அர்ச்சாவதாரம் என்னும் நிலைகள்.

(1)பரத்வம்:-அந்தமில் பாழான மூலப்ரக்ருதி மண்டலத்துக்கு மேல் விரஜா நதிக்கு அக்கரையில் சுத்த ஸத்வமயமாய் மோக்ஷ பூமியான பரமபதத்தில் பஞ்சசக்திமயனாய் (பரமேஷ்டி, புமாந், விச்வம், நிவ்ருத்தி, ஸர்வம் என்னும் ஐந்துதத்வங்களோடு கூடினவனாய்) ஆதியஞ் சோதியுருவானதிருமேனியையுடையவனாய், திருமாமணி மண்டபத்தில் ஆதிசேஷனாகிய மெத்தையில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவியோடு கூடியவனாய் நித்யமுக்தர்களால் கைங்கர்யம் செய்து அநுபவிக்கப்படுபவனாய் இரண்டுவிதமான

உலகங்களையும் ஆளுபவனாய் பரவாஸுதேவனாய் வீற்றிருக்கும் நிலை.

(2) வியூஹம்:- ஸ்ருஷ்டி, ரக்ஷணம், அழித்தல் முதலான செயல்களைச்செய்வதற்கு எம்பெருமான் ஸங்கர்ஷணர், ப்ரத்யும்நர், அநிருத்தர் என்னும் ரூபங்களாக எழுந்தருளியிருந்து மன்மதன், பிரமன், ருத்ரன், இந்திரன் முதலிய தேவர்களை அநுப்ரவேசம் பண்ணியும்; தேவர்கள் மத்தியில் எம்பெருமான் விஷ்ணுவாய் அவதரித்தும் படைத்தல், காத்தல், அழித்தல் செயல்களையும் செய்துகொண்டு, ஜ்ஞானம், தர்மம், சாஸ்த்ரங்களை வெளியிடுதல்களையும் செய்து கொண்டிருக்கும் நிலைகள். இந்த வியூஹங்களுக்கெல்லாம் மூல மூர்த்தியான வாசுதேவன் எனப்படும் திருப்பாற்கடல் நாதனாய் எழுந்தருளியிருக்கும்நிலை.

(3) விபவம்:-ஸாதுக்களைக்காக்கவும், துஷ்டர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் இவ்வுலகினில் தோன்றும் பகவானுடைய அவதாரங்கள். அவதாரம் என்றால் உயர்ந்தவன் தாழ இறங்கிவருதல் என்று பொருள். இவ்வவதாரங்கள் 36 என்றும் (a) "எந்நின்றயோநியுமாய்ப்பிறந்தாய் இமையோர்தலைவா", என்று எண்ணிக்கையே இல்லையென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். இதிலே பத்து அவதாரங்கள் முக்கியமென்றும், மற்றவை கௌணம் (முக்கியமற்றது) என்றும் கூறுவார்கள். அதிலும் ராமன், கிருஷ்ணன் என்ற இரு அவதாரமே அதிமுக்கியமென்றும் பூர்ணம் என்றும் சொல்லப்படுகிறது.

(4) அந்தர்யாமித்வம்:-இது ஸ்வரூப வ்யாப்தி என்றும், விக்ரஹவ்யாப்தி என்றும் இரண்டு வகைப்படும். இதில், ஸ்வரூப வ்யாப்தியாவது; (b) "**அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண : ஸ்தித :** "(உலகில் காணக்கூடிய எல்லாபொருள்களிலும் உள்ளும்புறமும் வியாபித்திருப்பவன் நாராயணனே) என்றும், (c) "அடியேன் உள்ளான்" என்றும் (d) "எனதாவி" என்றும் (e) "என்னுயிர்" என்றும் சொல்லுகிறபடியே ப்ரஹ்மா முதல் எறும்பு வரை அவர்கள் ஆத்மாவின் உள்ளும் புறமும் வியாபித்து அவற்றை நியமித்து

(a) திருவிருத்தம்-1 (b) தைத்-நாரா-உப (c) திருவாய்-8-8-2
(d) திருவாய்-2-3-4 (e) திருவாய்-9-5-1

நடத்தும் நிலை. விக்ரஹவ்யாப்தியாவது; (a)"போதிற் கமலவன் நெஞ்சம் புகுந்து" என்றும் (b) "அரவிந்த பாவையும் தானும் அகம்படிவந்து புகுந்து" என்றும், (c)"உள்ளு வாருள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறிதி" என்றும் சொல்லுகிறபடியே லக்ஷ்மியோடு கூடினவனாய் கட்டை விரல் அளவுள்ள சிறந்த திருமேனியோடு நம் எல்லோருடைய உடலிலிருக்கும் ஹ்ருதயகமலத்துக்குள்ளே எழுந்தருளி அவரவர்கர்மத்துக்கநுகுணமாகச் செயல்படுதல் செயல் தவிர்தல் முதலானவற்றைக்கண்டு அநுமதியைப்பண்ணிக் கொண்டிருக்கும் நிலை.

(5) அர்ச்சாவதாரம் :- (d) "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்" என்கிறபடியே தனக்கென்று ஓர் உருவமும், ஓர்பெயரும் இல்லாமல் அடியாருகந்த செம்பு, கல், மரம், சுதை, சித்திரம் போன்ற த்ரவ்யங்களின் வடிவே வடிவாகவும் அவர்களிட்ட பெயரே பெயராகவும், எல்லாம் அறிந்தவனாயிருக்கச்செய்தே ஒன்றும் அறியாவதவனைப்போலேயும், ஸர்வசக்தி படைத்தவனாயிருந்தும் சக்திஅற்றவனைப்போலேயும், எல்லாவிருப்பங்களையும் அடையப் பெற்றவனாயிருந்தும் குறைவாளனைப்போலேயும் தான் பிறரால் ரக்ஷிக்கப் படுபவனாயும், ஸொத்து ஸ்வாமி என்ற இந்த பாவங்களை மாற்றிக்கொண்டு எல்லோருடைய கண்ணுக்கும் தெரியும்படி சுலபனாக கோயில்களிலும், வீடுகளிலும் தேசம் காலம் என்ற வரம்பில்லாமல் எல்லா தேசத்திலும் எல்லாக் காலத்திலும் எப்போதும் எழுந்தருளியிருக்கும் நிலை.

III. புருஷார்த்தஸ்வரூபமாவது :- "புருஷேண அர்த்தித: இதி புருஷார்த்த:" (புருஷனாலே அர்த்திக்கப்படுவது (வேண்டப்படுவது) புருஷார்த்தம் (பயன்) ஆகும். அந்தப் புருஷார்த்தம்தான் (அந்தப்பயன்தான்) - தர்மம், அர்த்தம் (பொருள்) , காமம்(இன்பம்), ஆத்மஅநுபவம், பகவதநுபவம் என்று ஐந்தாகும்.

(1) அவற்றுக்குள் தர்மமாவது :-வர்ணாச்ரம தர்மங்களும் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட மக்களை காப்பதற்காக உண்டான ஸத்கர்மங்கள் அதாவது ; யாக, தானதர்மங்களும்.

---

(a) பெரியாழ்-திரு 5-2-8 (b) பெரியாழ்-5-2-10 (c) திருமாலை-34
(d) முதல்திருவந்-44

(2) அர்த்தமாவது: வர்ணாச்ரமத்தை மீறாமல் பகவதாராதநத்தின் பொருட்டும் பித்ரு கார்யங்கள், விருந்தினரை உபசரிப்பதின் பொருட்டும், மனைவி, மக்களை ரக்ஷித்து தான் இன்பம் அநுபவிப்பதற்காகவும்; புண்ணிய காலத்திலும் புண்ணிய தேசத்திலும் தகுந்தவர்களுக்கு தானம் வழங்குவதற்காகவும், பொருள் பணம் முதலானவற்றை நேர்மையான முறையில் சம்பாதித்தல்.

(3) காமமாவது:- இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தை அநுபவித்தல். இம்மையில் ஸுகித்தலாவது தகப்பன், தாய், ரத்நம், பணம், தானியம், ஆடை அணிகலன், அன்னம், பாநம், பிள்ளை, நண்பன், மனைவி, பசுக்கள், வீடு, நிலம், சந்தனம், பூக்கள், தாம்பூலம் முதலான போகப்பொருள்களில் ஐம்புலன் நுகர்ச்சியால் வந்தஸுக அநுபவங்கள். மறுமையில் ஸுகித்தலாவது சொர்க்கம் முதலான உலகத்தில் சென்று, பசி, தாகம், சோகம், மோஹம், கிழத்தன்மை, முதலான அவஸ்தைகள் இல்லாமல், தான் இம்மையில் சம்பாதித்த புண்ணியத்திற்கு ஈடாக அந்த லோகத்தில் அமிர்த பாநம் பண்ணி, தேவமாதர்களோடு அவர்களை ஆலிங்கனம் பண்ணி, ஐம்புலன் நுகர்ச்சியால் வந்த ஸுகஅனுபவம்.

(4) ஆத்மாவின் அநுபவமாவது:- இறப்பு, பிறப்பு, மூப்பு இவைகளில் இருந்து விடுபடுவதற்காக இறைவனை உபாசித்துப்ரக்ருதி சம்பந்தம் கழியப்பெற்று விரஜாநதி ஸ்நாநத்தால் சூக்ஷ்மசரீரத்தையும் கழித்து விரஜாநதிக்கும் பரமபதத்திற்கும் இடையிலிருக்கும் கைவல்ய ஸ்தானத்தை யடைந்து, ஆத்ம தத்வம் உள்ளதனையும் சரீரமற்றவனாய், பகவதநுபவத்தையும் இழந்து தன்னைத்தானே அநுபவித்துக் கொண்டிருத்தல் , இதுவே கைவல்யமோக்ஷமாகும்.

(5) பகவதநுபவமாவது :- நிர்ஹேதுக பகவத் கடாக்ஷத்தாலே ஸத்சங்கம் ஏற்பட்டு ஸம்ஸாரத்தில் விரக்தி பிறந்து, ஆசார்யஸமாச்ரயணம் பண்ணி, ஆசார்யன் மூலமாக பகவானைச் சரணம் புகுந்து அவசியம் அனுபவிக்கக் கூடிய புண்ணியபாபங்கள் கழியப்பெற்று, "இருப்பது, உண்டாவது, வளர்வது, விகாரம் அடைவது, தேய்வது, அழிவது" என்கிறபடியே ஆறுவித விகாரத்தோடு கூடியதாய், மூன்றுவித

தாபத்திற்கு இருப்பிடமானதாய், பகவத் ஸ்வரூபத்தை மறைப்பதாய், பொய் அறிவைத் தோற்றுவிக்கக் கடவதாய், பிறப்பு, இறப்புக்குக் காரணமானதான, ஸ்தூலசரீரத்தை (பருஉடலை) வெறுப்புடன் விட்டு, ஸுஷும்நாநாடியாலே தலையுச்சியைப் பிளந்து கொண்டு புறப்பட்டு, சூக்ஷ்மசரீரத்தோடு (நுண்உடலோடு) வானேறவழி பெற்று, சூரியகிரணங்களையே பற்றுக்கோடாகப்பற்றிக் கொண்டு போய் சூரியமண்டலத்தை துளையிட்டுப்புகுந்து போய் அர்ச்சிஸ்தேவதை தொடங்கி ப்ரஹ்மா பர்யந்தமுள்ள ஆதிவாஹிக புருஷர்கள் ஸத்கரிக்க (நல் உபசாரம் பண்ண) அர்ச்சிராதி மார்கத்தாலே சென்று விரஜையிலே மூழ்கி சூக்ஷ்மசரீரத்தையும் வாஸநாரேணுவையும் கழித்து, சகலதாபங்களும் ஆறும்படி அமாநவனாலே தீண்டப்பட்டு சுத்தசத்துவமாய், ஐந்து உபநிஷத்மயமாய், ஜ்ஞானத்தையும், ஆநந்தத்தையும் உண்டாக்ககூடியதாய், பகவத் அநுபவத்துக்கு உறுப்பாய் (a) "ஒளிகொண்ட சோதியமாய்" இருக்கிற அப்ராக்ருத உடலைப்பெற்று, (b) "முடியுடைவானவர் முறை முறையெதிர்கொள்ள", (நித்யஸூரிகள் வழி நடத்த) என்கிறபடி பேரதிசயத்தை உடைத்தான திருமாமணிமண்டபத்தை அடைந்து, லக்ஷ்மியோடு கூடியவனாய், பூமி நீளாநாயகனாய், சிறந்த திருமேனியை உடையவனாய், (c) "குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச்சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர் உரு"வான ஸ்ரீவைகுண்ட நாதனை நிரந்தர அநுபவம் பண்ணி, நித்ய கைங்கர்யம் பண்ணக்கூடியவனாயிருக்கை. இதுவே புருஷர்களுக்கு உயர்ந்த பயன் என்றும், விலக்ஷணமோக்ஷம் என்றும், பகவதநுபவம் என்றும் கொண்டாடப்படும்.

**IV** உபாயஸ்வரூபமாவது :-

ஒரு பலத்தை அடைவதற்குச் சாதனமாயிருப்பது உபாயம் எனப்படும். இங்குச் சொல்லப்படுகிற உபாயம் பகவானை அடையச் சாதனமாயிருப்பது. அவை; 1. கர்மயோகம், 2. ஜ்ஞானயோகம், 3. பக்தியோகம், 4. ப்ரபத்தியோகம், 5. ஆசார்யாபிமானம் என்று ஐந்து வகை.

---

(a) *திருவாய்-2-3-10* (b) *திருவாய்-10-9-8* (c) *திருவாய்-5-5-10*

*(1)* இவற்றில் கர்மயோகமாவது :-

யாகம், தானம், தவம், த்யாநம், ஸந்த்யாவந்தனம், பஞ்சமஹாயஜ்ஞம் (ஐந்துபெரியயாகங்கள்), அக்நிஹோத்ரம், தீர்த்தயாத்ரை, புண்யதேசவாசம், க்ருச்சரம், சாந்த்ராயணம், புண்யநதிஸ்னானம், வ்ரதம், சாதுர்மாஸ்யம், பலமூலாசநம், சாஸ்த்ராப்யாஸம், திருவாராதநம், ஜபம், தர்ப்பணம் முதலான தர்மாநுஷ்டானத்தால் வந்த சரீரத்தை உலர்த்தி அதனால் பாபம் அழிந்து, அதனாலே இந்த்ரியங்கள் மூலம் ஸஞ்சரிக்கிற தர்மபூதஜ்ஞானத்திற்கு, சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் (முறையே காதாலே கேட்பது சப்தம், உடலாலே தீண்டுவது ஸ்பரிசம், கண்ணால் பார்ப்பது ரூபம், நாவினாலே ருசிப்பது ரஸம், மூக்கினால் முகர்வது கந்தம்) இவைகளை விஷயமாக்காமல் பரமாத்மாவைக்கண்டு அநுபவிப்பதில், ஆசைபிறந்து ; யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், த்யானம், தாரணம், ஸமாதிரூபமான அஷ்டாங்கயோக க்ரமத்திலே யோகாப் யாஸத்தாலே அந்த தர்மபூதஜ்ஞானத்துக்கு ஜீவாத்மாவை விஷயமாக்க வேண்டும். இதுதான் ஜ்ஞான யோகத்துக்கும் துணைபண்ணும்.

*(2)* ஜ்ஞானயோகமாவது :-

இப்படி, கர்மயோகத்தில் சொல்லப்பட்ட அஷ்டாங்கயோகத்தாலே ஆத்மாவை நேராகக்கண்டு அதோடு நின்றுவிடாமல், பரமாத்மாவைக் காணவேண்டுமென்று ஆசையுற்று, ஹ்ருதயகமலம் ஆதித்யமண்டலம் தொடக்கமான இடங்களில் எழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரனை ஜ்ஞானத்திற்கு விஷயமாக்கி, அந்த பெருமாளை சங்கசக்ரகதாதரனாய், பீதாம்பரத்தை அணிந்துள்ளவனாய், கிரீடம் முதல் நூபுரம்வரை திவ்ய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவனாய், லக்ஷ்மியோடு கூடினவனாய் அநுபவித்து, யோகஅப்யா ஸத்தாலே அனுபவகாலத்தைப் பெருக்கி, எப்போதும் அநுபவித்துக் கொண்டிருப்பது. இது பக்தியோகத்துக்கும் துணைபண்ணும்.

(3) பக்தியோகமாவது :-

இப்படிஜ்ஞானயோகத்தில் சொன்னபடி ஸமாதி நிலையிலிருந்து கொண்டு தைலதாராவத் அவிச்ந்ந ஸ்ம்ருதி ஸந்தான ரூபமான (இடைவெளியில்லாத எண்ணெய் ஒழுக்குப் போலே பரமாத்மாவான எம் பெருமான் விஷயத்தில் நினைவுமாறாமல்) மகிழ்ச்சியோடு கூடிய அநுபவமாயிருப்பது. இந்த பக்தியோகத்தின் நிலையை ஆராய்ந்து பார்த்தால் ப்ராரப்த புண்ணியபாப ரூபமான கர்மங்கழிய வேண்டும். அதுவரை ஸாதநத்தையும், பலத்தையும் நினைத்து அதினுடைய சுருக்கத்தை விரிவு அடையும்படி பக்தியோகத்தை வளர்க்க வேண்டும். பலம்விளைவது எம்பெருமான் அ-ருளாலே. கர்மயோகம், ஜ்ஞானயோகத்திற்குத் துணை பண்ணியும், ஜ்ஞானயோகம் பக்தியோகத்திற்குத் துணைபண்ணியும் பரம் பரையாக மோக்ஷஸாதனமாகும். அல்லது தனித்தனியே மோக்ஷஸாதனமாகும் என்றும் சொல்லுவர்கள்.

*(4)* ப்ரபத்தி உபாயமாவது :-

இப்படி கர்மயோகத்தையும், ஜ்ஞானயோகத்தையும் துணைகொண்ட பக்தியோகத்தில் சக்தி இல்லாதவர்க்கும் தகுதியற்றவர்க்கும் செய்வதற்கு எளிமையாயும், இனிமையாயும் விரைவில் பலன் அளிப்பதாயும், ஒரு தடவையே அனுஷ்டிக்க கூடிய இந்த ப்ரபத்தி உபாயம், உபாயஅனுஷ்டானத்திற்கு பிறகு உண்டாகக்கூடிய பகவத்விஷய அனுபவங்கள் எல்லாம் பயனிலே சேரக்கூடியதாகையாலே ஸ்வரூபத்தோடு சேர்ந்ததாய் இருக்கும். இதுதான் ஆர்த்தரூப ப்ரபத்தியென்றும், த்ருப்தரூபப்ரபத்தி என்றும் இரண்டு வகைப்படும்.

(A) ஆர்த்தரூப ப்ரபத்தியாவது :-

காரணம் இன்றிவரும் பகவத்க்ருபை அடியாக சாஸ்த்ர அப்யாஸத்தாலும் ஸதாசார்யோபதேசத்தாலும் உண்மையான ஜ்ஞானம் பிறந்ததினாலே, பகவத் அநுபவத்திற்கு விரோதியானதேஹ ஸம்பந்தமும், இந்த உலகியல் தொடர்பும், இந்த உலகத்தவரோடு சேர்ந்து வாழ்வதும் தனக்குப் பொறுக்க-முடியாமல், பகவதநுபவத்துக்கு வாய்த்ததாய், சிறப்புடைய

சரீரத்தையும், அந்தப் பரமபதத்தையும், அங்கே இருக்கக்கூடிய நித்யமுக்தர்களுடைய திறளில் புகுவதற்கு விரைவு மிகுந்து, "ஒயு மூப்புப் பிறப்பிறப்புப்பிணி வீயுமாறு செய்வான் திருவேங்கடத்தாயன்" *(திருவாய்-3-3-9)* ஆகையாலே, (a) "திருவேங்கடத்தானே! புகலொன்றில்லா அடியேன்" (b) "வேங்கடத்துறைவார்க்கு நம :" என்று பூர்ணப்ரபத்தி பண்ணி, (c) "பல நீ காட்டிப்படுப்பாயோ" (d) "இன்னங்கெடுப்பாயோ" (e) "இக்கரையேறியிளைத்திருந்தேன் (f) "இனி நான் போகலொட்டேன்" என்று தடுத்தும் வளைத்தும் இறைவனை அடையமுற் படுதல் ஆர்த்தரூப ப்ரபத்தியாகும்.

(B) த்ருப்தரூப ப்ரபத்தியாவது :-

இந்த உடலைவிட்டு (நாய், நரிமுதலான) தாழ்ந்த பிராணிகள் உடலை எடுப்பதிலும், சொர்க்கம் நரகம் முதலானவற்றை அடைவதிலும் விரக்தியும், வெறுப்பும், பயமும் பிறந்து இந்த கீழான ஜன்மத்தை அடைவதை தடுப்பதற்காக, பகவானை அடைவதற்கு உறுப்பாக நல்ல ஆசார்ய உபதேச க்ரமத்தாலே உபாயத்தைப்பற்றி விரோதியான செயல்களில் ஈடுபடாதவராய் வேதம் விதித்த வர்ணாச்ரமாநுஷ்டாநமும், பகவத்பாகவதர்களுக்கு கைங்கர்யமும், மனத்தாலும், வாயாலும், உடலாலும் முடிந்தவரை அவர்களுக்கு ஸேவை செய்து, எம்பெருமான் - சேஷியாய் (தலைவனாய்), நியந்தாவாய், எல்லோரையும் (ஏவக்கூடியவனாய்) ஸ்வாமியாய், சரீரியாய், (உயிராய்), வ்யாபகனாய் (எங்கும் பரந்துள்ளவனாய்), தாரகனாய், ரக்ஷகனாய், போக்தாவாய், எல்லாம் அறிந்தவனாய், ஸர்வசக்தியாய், எல்லாவற்றாலும் பூர்ணனாய், எல்லாவிருப்பங்களும் நிறைவேறப்பெற்றவனாயிருக்கிற தன்மையையும்; தான் (ஆத்மா) - அந்த எம்பெருமானுக்கு அடிமையாய், நியமிக்கப்படுபவனாய், சொத்தாய், சரீரமாய், வ்யாபிக்கப்படுபொருளாய், தார்யமாய், (தரிக்கப்படுபவனாய்) ரக்ஷ்யப்பொருளாய், போக்யமாய், அறிவிலியாய், அசக்தனாய், அபூர்ணனாய் (பூர்த்தியில்லாதவனாய்), குறைவாளனாய், இருக்கிற தன்னுடைய நிலையையும், நினைத்துக்கொண்டு (g) "களைவாய் துன்பங்களையா தொழிவாய்களைகண்மற்றிலேன்"

---

(a) *திருவாய்-6-10-10* (b) *திருவாய்-3-3-6* (c) *திருவாய்-6-9-9*
(d) *திருவாய்-6-9-8* (e) பெரியாழ் - *திரு-5-3-7*
(f) *திருவாய்-10-10-7* (g) *திருவாய்-5-8-8*

என்று உபாயத்தில் எல்லாபாரங்களையும் இறைவனிடத்தில் ஸமர்ப்பித்துவிட்டு நிர்பரனாய் (சுமையற்று) இருத்தல் த்ருப்தரூப ப்ரபத்தியாகும்.

(5) ஆசார்ய அபிமாநமாவது:-

மேலே சொல்லப்பட்ட நான்கு உபாயங்களிலும் அநுஷ்டிக்க சக்தியில்லாதவனைக்குறித்து ஸதாசார்யன் இந்த ஜீவாத்மாவின் இழப்பையும், இவனைப் பெற்றால் ஈச்வரனுக்கு உண்டாகக் கூடிய சந்தோஷத்தையும் நினைத்து, தாய்ப்பாலுண்ணும் குழந்தைக்கு வியாதியுண்டானால் அது தன்குறையாக நினைத்து அக்குழந்தைக்காக மருந்துண்ணும் தாயைப்போலே இந்த ஜீவாத்மாவிற்காக ஆசார்யன் ஈச்வரனிடத்தில் சரணாகதியாகிற ப்ரபத்தியநுஷ்டாநம் பண்ணி ரக்ஷிக்கக்கூடிய பரமக்ருபையோடுகூடிய (இப்படிப்பட்ட) ஸதாசார்யன் (நல்லாசார்யன்) அபிமாநத்திலே ஒதுங்கி, (A) "வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டும்" (உசிதமான வழிகளில் ஆசார்யனே நம்மை எம்பெருமானோடு சேர்ப்பிப்பான்) என்று திட நம்பிக்கை (மஹாவிஸ்வாசம்)க்கொண்டு, (B), "குருரேவபரம் ப்ரஹ்ம" (ஆசார்யனே பரப்ரஹ்மமாவான்) (a) "பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்கிற ப்ரமாணங்களில் சொல்லுகிறபடியே ஆசார்யனையே தெய்வமாகக்கொண்டு ஆசார்யன் திருவடிவாரத்தில் ஸர்வ கைங்கர்யங்களையும் செய்து கொண்டு அவன் அபிமாநத்திலே ஒதுங்கி ஆசார்யனிட்ட வழக்காயிருக்கை ஆசார்யாபிமாநம் ஆகும். இதுவே சரமபர்வம் என்றும், சரமோபாயம் என்றும், சொல்லப்படும் (எல்லா உபாயங்களைக்காட்டிலும் தலைசிறந்த மேலான உபாயமாகும்.) ஸ்ரீமதுரகவி ஆழ்வார், ஆண்டாள், வடுகநம்பி முதலானோர் இந்நிஷ்டையுடையவர்கள்.

V. விரோதிஸ்வரூபமாவது:-

ஆத்மா ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த பயனை அடையவொட்டாமல் அதற்குத் தடையாயிருப்பது விரோதிஸ்வரூபம் ஆகும். அவை;

---

(A) *நாச்-திரு1-10-10* (B) வேதம் (a) பெரியாழ் - *திருமொழி - 5-2-8*

(1) ஸ்வரூப விரோதி, (2) பரத்வ விரோதி, (3) புருஷார்த்த விரோதி, (4) உபாயவிரோதி, (5) ப்ராப்தி விரோதியென்று ஐந்து வகைப்படும்.

(1) ஸ்வரூப விரோதியாவது:-

ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதியானவை. அதாவது, தேஹத்தையே ஆத்மாவாக நினைப்பது, ஸ்ரீமந்நாராயணனைத் தவிர்ந்த மற்ற தேவதைகளுக்குத் தன்னை அடிமையாக நினைப்பது, தான் இறைவனுக்கு அடிமையாயிராமல் தனக்குத்தானே ஸ்வாமியென்று இறுமாந்திருத்தல். இவைகள் ஸ்வரூப விரோதிகளாகும்.

(2) பரத்வ விரோதியாவது:-

மற்ற தெய்வங்களை ச்ரிய : பதியான பகவான் நாராயணனைக்காட்டிலும் உயர்வாக நினைப்பது, அவர்களை எம்பெருமானோடு ஸமமாக நினைப்பது, தாழ்ந்த தெய்வங்களிடத்தில் அதற்கும் சக்தியிருக்கிறது என்று நம்புவது, ராமன்கிருஷ்ணன் முதலான எம்பெருமான் அவதாரங்களை வெறும் மனுஷ்யன், விலங்கு என்று தாழ்வாக எண்ணுவது, அர்ச்சாவதாரத்தில் உலோகம், கல், மரம், ஓவியம் என்றும் அர்ச்சைக்குசக்தியில்லையென்றும் நினைக்கையும் முதலானவைகள் பரத்வ விரோதிகளாகும்.

(3) உபாய விரோதியாவது:-

உபாயம் என்று ஈச்வரனுக்குத்தான் பெயர். ஈச்வரனே ஸாக்ஷாத் உபாயம். மற்ற உபாயங்களுக்கும் பலனளிப்பவன் ஈச்வரனே ஆவான். ஆதலால் மற்ற (கர்ம - ஜ்ஞான, பக்தி) உபாயங்கள் சிறந்தவை என்பதும் அவைதானே பலனளிக்கும் என்று நினைப்பது, சரணாகதியாகிற உபாயத்தின் எளிமையைக் கண்டு நம்பிக்கைக் கொள்ளாமலிருத்தல், நாம் பண்ணியிருக்கும் பாபத்தின் மிகுதிகண்டு மோக்ஷத்தில் நம்பிக்கையற்றிருத்தல், அப்படிப்பட்ட தலைசிறந்த மோக்ஷம் நமக்கு கிடைக்குமா? என்று நம்பிக்கையில்லாமல் இருத்தல் முதலியவை உபாயவிரோதிகளாகும்.

(4) புருஷார்த்த விரோதியாவது:-

இவ்வுலகத்திலுள்ள புதல்வர், பூமி, மனைவி, செல்வம், மனை முதலானவைகளை புருஷார்த்தமாக (பயனாக), நினைத்தலும், சுவர்க்கம் முதலான போகங்களைப் புருஷார்த்தமாக நினைத்தலும், பகவானுக்குச் செய்யும் கைங்கர்யத்திலும், அவன் உகந்ததென்று செய்யாமல் தன் உகப்புக்காகச் செய்தலும், ஐம்புலன் நுகர்ச்சியில் அதிகமான ஈடுபாடு முதலானவைகளும் புருஷார்த்த விரோதிகளாகும்.

(5) ப்ராப்தி விரோதியாவது:-

ஜீவாத்மா பரமாத்மாவாகிற எம்பெருமானை அடைவதில் ஏற்படக்கூடிய விரோதிகள். அவையாவன; நாம் என்று கொண்டுள்ள சரீரத்தின் தொடர்பு, கொஞ்சங்கூட அநுதாபமுமில்லாமல் மிகப்பெரியதாய் ஸ்திரமாய் நாம் செய்துள்ள பகவதபசாரம், பாகவதாபசாரம், அஸஹ்யா பசாரம் (பொறுக்க முடியாத தீங்கு) இவைகள் எல்லாவற்றுக்கும் விரோதியென்று பெயராகக் கடவது. அந்நதோஷம் - ஜ்ஞான விரோதியாகக் கடவது. "ஆஹார-சுத்தெள ஸத்வ சுத் தி ": "ஸத் வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் - ஜ்ஞானாத் மோக்ஷம்"(ஸாத்விக ஆஹாரத்தாலே மனம் சுத்தி அடைகிறது ஸத்வ குணத்தாலே ஜ்ஞானம் உண்டாகிறது, ஜ்ஞானத்தாலே மோக்ஷம் உண்டாகிறது). அதாவது, ஜாதிதுஷ்டம், ஆச்ரயதுஷ்டம், நிமித்ததுஷ்டம் என்று சொல்லக்கூடிய மூன்று வகை தோஷங்களும் நாம் உண்ணும் சிலவகையான பதார்த்தங்களுக்கு உண்டு. அவையில்லாமல் ஸாத்விகமான (பதார்த்தங்களையே) ப்ரஸாதத்தையே உண்ணவேண்டும். இல்லையென்றால் தோஷமுள்ள ஆஹாரத்தினால் ஜ்ஞானம் கெட்டு மோக்ஷம் கிட்டாமல் போய்விடும். ஜ்ஞானமில்லாதவன் குருடனைப்போலே, அநுஷ்டாநமில்லாதவன் முடவனைப் போலே என்கிறார்கள் நம்முன்னோர். தேஹாத்மவாதிகள், (நாத்திகர்கள்), இதரதேவதா பக்தர்கள், மோக்ஷம் தவிர்ந்த பயனைவிரும்பக்கூடியவர்கள், வேறு உபாயத்தைக் கைக்கொண்டவர்கள் இவர்களுடைய சகவாசத்தால் (சேர்க்கையால்) பகவநுபவத்துக்கு விரோதம் வரும். அடுத்து,

தன்னைத்தான் அபிமாநிப்பது (மதித்துக் கொள்வது) அஹங்காரம், மமகாரம் என்ற செருக்காகிற பாழுங்கிணற்றிலே தள்ளி ஸ்வரூப நாசத்தைப்பண்ணி (தனக்குத்தானே) தீங்கை விளைவித்துவிடும். இவையே ப்ராப்தி விரோதிகளெனப்படும்.

இப்படி அர்த்த பஞ்சக ஜ்ஞானம் பிறந்து முமுக்ஷுவாய் இவ்வுலகில் வாழ்கிற புருஷனுக்கு மோக்ஷம் உண்டாகும் வரை இவ்வுலகத்தின் இயல்பு தன்னைச் சாராதபடி பொழுது போக்கும்வழி : தன் ஜாதிக்கும் ஆச்ரமத்திற்கும் தகுதியாகவும் வைஷ்ணவலக்ஷணத்திற்கு சேர்ந்ததாகவும் தனத்தை (பொ-ருளை) ஸம்பாதித்து (a) "யதந்ந : புருஷோபவதி ததந்நாஸ் தஸ்ய தேவதா :(எந்த அன்னத்தை புருஷன் உண்கிறானோ அந்த அன்னத்தையே அவன்வழிபடும் தெய்வத்திற்கும் ஆராதனை செய்ய வேண்டும்). என்கிறபடியே ஸகலபதார்த்தங்களையும் பகவானிடத்திலே நிவேதனம் பண்ணி, முடிந்தவரையில் அந்த அன்னத்தை பகவானுடைய அடியார்களுக்கும் நிவேதனம் பண்ணி, தன்தேஹம் தரிப்பதற்காக மட்டுமே ப்ரஸாதப்பட்டு ஜீவிக்க வேண்டும். கொஞ்சம் சிரமப்பட்டாகிலும் தனக்கு தத்வஜ்ஞானத்தை உண்டாக்கின ஆசார்யனுக்குக் கைங்கர்யம் பண்ணி அவர் உகக்கும் படிவாழவேண்டும். பகவான் ஸந்நிதியில் - (b) "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தன்னுடைய தாழ்வைச் சொல்லிக் கொள்ளுதலும், ஆசார்யன் ஸந்நிதியில் - தன்னுடைய அறியாமையை சொல்லிக் கொள்ளுதலும், ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் தன்னுடைய பாரதந்த்ர்யத்தை (தன்னை அவ்வடியார்களுக்கு ஆட்படுத்துகை) அநுஸந்திக்கையும், ஸம்ஸாரிகள் முன்னிலையில் - தனக்கும் அவர்களுக்கு முண்டான வேறுபாடு தோற்றும்படி நினைக்கையும், பரமபதம் சென்று பகவானுக்கு கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று பலத்தில் விரைவும், பகவானே அதற்கு உபாயம் என்பதில் திடநம்பிக்கையும், இதற்கு விரோதியானவற்றில் - பயமும், தேஹத்தில் - வெறுப்பும், பயனை அடைவதில் ஆர்த்தியும் (துடிப்பும்) தன் ஸ்வரூபத்தை எப்போதும் உணர்ந்திருத்தலும், தன்னைரக்ஷித்துக் கொள்வதில் சக்தியில்லாமையும், தனக்கு உத்தேச்யமான பகவத் - பாகவதவிஷயத்தில் கௌரவமும், தனக்கு உபகாரம் செய்பவர்களான - பகவான், பாகவதர், ஆசார்யர்

(a) ராமாயணம்-அயோ (b) திருவாய்-3-3-4

இவர்களிடத்தில் எப்போதும் நன்றி பாராட்டுதலும், அவர்களிடத்தில் - தன்னைக்காட்டிலும் அவர்கள் உயர்ந்தவர்கள் என்கிற எண்ணமும் எப்போதும் ஒருவனுக்கு உண்டாக வேண்டும்.

இப்படி மேலே சொல்லப்பட்ட ரீதியில் ஒருவன் ஜ்ஞான அநுஷ்டாநங்களோடு கூடிவாழப்பெறுபவன் - ஸ்ரீமந்நாராயண னுக்குப் பிராட்டிமாரிலும், நித்ய முக்தரிலும் அதிகமான விருப்பத்திற்குப் பாத்ரமாவான்.

ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

## கர்ம ஜ்ஞான பக்தியாகிற உபாயாந்த்ரங்கள் ஸ்வரூப விருத்தங்கள்

பக்தி ஸ்வரூப விருத்தம் என்பதை மறுத்து, பக்தி ஸ்வரூப விருத்தமில்லை, பக்தியும் ப்ரபத்தியைப்போல் உபாயமாக அநுஷ்டிக்கலாம் என்று சமீபத்தில் வெளியிட்ட "ஸத்ஸம்ப்ரதாய விவேகம்" என்ற நூலில் காணப்பட்டது. இந்த உபாயாந்தரங்களைப்ரமாணங்களைக் கொண்டு உள்ளபடி ஆராயப்பட்டு பக்தி ஸ்வரூப விருத்தமே என்று நிலைநாட்டப்படுகிறது.

இந்த உபாயாந்தரங்களை த்ரி (மூன்று) வர்ணத்தாருக்கே அநுஷ்டிக்க யோக்யதை உண்டு. மற்றையோர்க்கு அநுஷ்டிக்க அதிகாரமில்லை. மூன்று வர்ணத்தாரே அநுஷ்டிக்க யோக்யதையுள்ள இந்த உபாய விசேஷங்களை அநுஷ்டித்தாலும் சீக்ரம் பலம் கொடுக்காது. அநேக ஜந்மங்களுக்குப் பிறகு தான் பலம் கொடுக்கும். ஒரு பிறவியில் பலன் விளையாது. இப்படிப்பட்ட கர்ம, ஜ்ஞான, பக்தியாகிற உபாயங்களை நன்றாகப் பரிசீலனைப் பண்ணி ஆராய்ந்து

பார்ப்போமேயானால், இவைகள் சேதநனுடைய (அறிவை குணமாகயுடைய ஜீவாத்மாவினுடைய) முயற்சியை முன்னிட்டுக் கொண்டிருக்கும். மேலும் இந்த உபாயங்களை செய்து முடித்தாலும் பலன் தானே கொடுக்கும் ஆற்றல் இவைகளுக்கு கிடையாது. ஏன் என்றால்: ஜீவாத்மா செய்யக்கூடிய செயல்கள் அறிவற்றதாகையாலே, க்ஷணத்தில் மறைந்து போகும்! ஜீவன் செய்த செயலை இறைவன் திருவுள்ளத்தில் வைத்திருந்து இன்னான், இன்னவாறு செய்தான்; அவன் செய்த செயலுக்குப் பலன் கொடுக்க வேண்டும் என்று இறைவன் திருவுள்ளமிரங்கி பலன் கொடுப்பதாலே ஜீவன் பலனடைகிறானே தவிர - தானே அந்த பக்தி யோகம் நேரே பலன் கொடுப்பது கிடையாது. அதனால் அந்த உபாயங்கள் உபாசன வேளையில் ஜீவனுடைய முயற்சியை எதிர்பார்த்திருக்கும். பல தசையில் இறைவனை எதிர்பார்த்திருக்கும் ஆகையால் இந்த பக்தியோகம் நேரே பலன் அளிப்பதில்லை. இவற்றையுள்ளபடி ஆராய்ந்தால் உபாய்மாகாது என்று நாம் தெளியலாம்.

இங்கே சரணாகதி கத்ய ப்ரவேசத்தில் ஸ்வாமி பெரிய வாச்சான் பிள்ளை, பக்தியோகலக்ஷணத்தை உள்ளபடி அருளிச்செய்திருக்கும் பங்க்தியை காண்மின் : "அது அதிக்ருதாதிகாரமுமாய், துஷ்கரமுமாய், விளம்ப்ய பலப்ரதமுமாய், ப்ரமாத ஸம்பாவனையுள்ளதுமாய், ஸாத்யமுமாய், ஸ்வரூபாநநுரூபமுமாய், ப்ராப்யத்துக்கு விஸத்ருசமுமாயிருக்கும்" என்று. இதற்கு அர்த்தம் : அது எல்லோருக்கும் அதிகாரமில்லாததாய் சிலருக்கே அதிகாரமுள்ளதாய், செய்வதற்கு அரியதாய், காலங்கடந்து பலன் அளிப்பதாய், அவற்றை கஷ்டப்பட்டு அநுஷ்டித்தாலும் பலன்கிடைப்பதில் தவறுவதற்கு இடமுள்ளதாய், சிரமப்பட்டு சாதிக்கக்கூடியதாய், ஸ்வரூபத்திற்கு (ஆத்மாவின் இயல்பிற்கு) சேராததாய், (கிடைக்கும்) பலனுக்கு ஒப்பாகாததாய் இருக்கும். இங்கே"ஸ்வரூபாநநுரூபமாய்" (ஸ்வரூபத்துக்கு சேராததாய்) என்றிருப்பதாலே. அத்யந்த பரதந்த்ரமான ஆத்ம ஸ்வரூபத்துக்குச் சேராததான இந்த கர்மஜ்ஞான பக்தியாகிற உபாயாந்த்ரங்கள் ஸ்வரூப விருத்தமே என்னத் தட்டில்லை.

ஆனால், "**கர்மணைவ ஹி ஸம்ஸித்தி மாஸ்திதா ஜநகாதய**": (ஸ்ரீகீதை.) (ஜனகன் முதலானோர் கர்மயோகத்தாலேயே ஸித்திபெற்றார்களன்றோ) என்றும், "**ஸர்வம் கர்மாகிலம்.....ஜ்ஞாநே பரிஸ மாப்யதே**". (ஸ்ரீகீதை) (எல்லாக்கருமமும் ஜ்ஞான யோகத்தில் முடிவடைகின்றன), என்றும், "மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீமாம்நமஸ் குரு" (என்னிடத்தில் மனத்தை வைத்தவனாயும், என்னுடைய பக்தனாயும், என்னை ஆராதிப்பவனாயும், என்னை நமஸ்கரிப்பவனாயும் ஆவாய்) என்றும், "**விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத**" (அந்த பரமபுருஷனையே அறிந்து த்யானம் செய்யக் கடவன்) என்றும் "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞான ஸாமாதிபி": (இதிஹாஸசமுச்சயம்) (ஆயிரக் கணக்கான பிறவிகளில் கர்ம ஜ்ஞான பக்தியோகங்களை அநுஷ்டித்தும்) என்று கீதை முதலான சாஸ்த்ரங்களில் இந்த உபாயங்களை விதித்திருக்கிதேயென்னில்? ஆம் விதித்திருக்கிறது. மந்த அதிகாரிகளுக்காக. அதாவது, "கொண்டிப் பசுவுக்கு தடிகட்டி விடுவாரைப் போலே, அஹங்கார மமகாரங்களால் வந்த களிப்பு அற்று ஸ்வரூப ஜ்ஞானம் பிறக்கைக்காக " என்பர். ஸ்ரீபிள்ளைலோகாரியர். "அதாவது, பட்டிமேய்ந்து திரிகிற பசுவுக்கு அடங்கி வசப்படுகைக்காகக் கழுத்திலே தடியைக்கட்டி விடுவாரைப் போலே; அஹங்கார மமகாரவச்யனாய் களித்துத்திரிகிற (நான், எனதென்று இறுமாப்போடே திரிகிற) சேதனனுக்கு சரீரத்தை உலர்த்துதல் முதலிய கர்மானுஷ்டாநத்தாலேயும், இந்திரிய ஜயம் (புலனடக்கம்) முதலான அருந்தேவைகளாலே செறுப்புண்டு அந்த களிப்புப் போய் பகவத் பாரதந்த்ர்யமாகிற (பகவானுக்கு உடைமைப்பொருளாகிற) ஸ்வரூபஜ்ஞானம் (ஆத்மாவின் இயல்பான அறிவு) பிறக்கைக்காக என்கை. என்று, அவ்விடத்தில் மாமுனிகளுடைய திவ்யஸூக்தி காண்க. ஆகையால் மந்த அரிகாரிகளுக்கே கர்ம, ஜ்ஞான, பக்தியாகிற உபாயங்கள் உபாயமாகுமே தவிர, திருமந்த்ரநிஷ்டரானப்ரபந்ந அதிகாரிக்கு ஸ்வரூப விருத்தமே என்றறியலாம். திருமந்த்ரத்தில் நடுவில்பதமான "நமஸ்ஸு", 'ந' என்றும் 'ம': என்றும் இரண்டெழுத்துக்களையுடைய ஒரே பதம். 'ம :' என்பது ஆறாம் உருபேற்று எனக்குரியவன் என்று பொருள்படும். 'ந'

என்று அதை தவிர்த்து 'நம': என்று நான் எனக்குரியவனல்லேன் என்று பொருளாகி, மூன்றாம் பதத்தில் வரும் 'நாராயண' என்று ஸர்வசேஷியான (எல்லார்க்கும் தலைவனான) நாராயணனுக்கே உரியவன் ஜீவாத்மா என்று அர்த்த பலத்தாலே கிடைக்கும் பொருளிது. எப்போது ஜீவாத்மா தனக்குரியவனல்ல என்பதை தவிர்த்துக் கொள்கிறானோ அப்போதே எம்பெருமானுக்குரியவனாகி அவனது ரக்ஷ்யப் பொருளாய் விடுகிறான். என்று நம: பதத்தில் கிடைத்த தெளிவான பொருள். இந்த நம : பதத்திலே அத்யந்த பாரதந்த்ர்யம் சொல்லப்படுகிறது. அதாவது, ப்ரணவத்தில் 'உ' காரத்தாலே ஜீவாத்மா எம்பெருமானுக்குரியவன் பிறர்குரியவனன்று என்றுதான் சொல்லப்பட்டது. தனக்கும் உரியவனன்று என்று சொல்லப்படவில்லை. ஆனால் நம : பதத்தில் ஜீவாத்மா தனக்கும் பிறர்க்கும் உரியவன் அன்று என்று சொல்லப்படுவதாலே அத்யந்த பாரதந்தர்யம் சொல்லப்பட்டது. அத்யந்த பாரதந்த்ரயம் என்றால், பிறர்க்கும் தனக்கும் உரிமையல்லாமல் எம்பெருமானாகிய பரனுக்கே உரிமைப்பட்டிருத்தல். இது எதைப்போலே யென்றால், அசித்தைப்போலே (அறிவற்ற ஜடப்பொருளைப்போலே) எம்பெருமானுக்கு உடமைப் பொருளாய்க்கிடக்க வேணும். அதாவது 'அசித்வத் பரதந்த்ரம்' (அறிவற்ற ஜடப்பொருளைப் போல்) என்பார்கள் நம்பூர்வாசார்யர்கள். "யஸ்ய ஆத்மா சரீரம்" (ஸுபாலோ) யாதொரு பரமாத்மாவிற்கு ஜீவாத்மா சரீரமோ) என்கிறபடி எம்பெருமானுக்கு ஜீவாத்மா சரீர ஸ்தானத்திலிருக்கிறான். சரீர லக்ஷணமாவது: உயிரால் ஏவப்படுவது, தரிக்கப்படுவது, வ்யாபிக்கப்படுவது என்ற இந்த மூன்று லக்ஷணங்களும் நம்முடைய உடலுக்கு உண்டு. அதாவது ஆத்மாவாகிற நாம் இல்லையென்றால் நமது சரீரமும் தரிக்காது, செயல்படாது, நிலைக்காது. அதைப்போல் எம்பெருமான் அநுப்ரவேசம் இல்லையென்றால் அவனுக்கு சரீரமான ஜீவாத்மா, தரிக்காது, ஏவப்படாது, நிலைக்காது. இந்த அர்த்தத்தை ஸ்வாமி நம்மாழ்வார் "நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர், நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்" (திருவாய் - 1-1-6) என்ற பாசுரத்தில் அருளிச்செய்தார். ஆக எம்பெருமானைப் பார்க்கும்போது ஜீவாத்மாவாகிற நாம் அசித்தைப் போல்

(சரீரத்தைப் போலே) இருப்பதாலே அத்யந்த பாரதந்தர்ய முடையவர்களாவோம். ஆனால், "விஜ்ஞானாத்மா புருஷ:" (ப்ரச்நோபநிஷத் - 4.9) (ஜீவன் ஜ்ஞான ஸ்வரூபன்)(அறிவே வடிவானவன்) என்றும், 'மந-அவபோதநே' என்ற தாதுவிலிருந்து, 'ஜ்ஞானமுடையவன் என்று ப்ரமாணங்கள் சொல்லுவதாலே, ஜீவனை எப்படி அறிவற்ற ஜடப்பொ-ருளையொத்தவன் என்று நீங்கள் சொல்லுகிறீரென்னில்? ஜீவன் அறிவில்லாதவன் என்றுயாரும் சொல்லவில்லை ஸ்வாதீந (தனக்குதானே) ப்ரவ்ருத்தி (செயல்படும்தன்மை - நிவ்ருத்தி (செயல்தவிரும் தன்மை) கிடையாதென்று சகல சாஸ்த்ரங்களாலும் சொல்லப்பட்டது. ஆக அசித்வத் பரதந்த்ரனானஜீவாத்மா ஸ்வ ப்ரவ்ருத்தி ரூபமான (தன் முயற்சியையுள்ளிட்டுக் கொண்டிருக்கிற) கர்மஜ்ஞான, பக்திகளால் பரமாத்மாவை அடைவது, மேலே "நம": பதத்தில்காட்டிய அசித்வத் பாரதந்தர்யத்தையுடைய ப்ரபந்ந அதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தமேயென்று அறுதியிடலாம். தத்வம் இப்படியிருக்க சமீப காலத்தில் 'ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸங்க்ரஹம்' என்ற நூலில் சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் யென்பவர் அவர் காலத்தில் எழுதி வெளியிட்ட "ஸத்ஸம்ப்ரதாய விவேகத்தை" வெளியிட்டி-ருக்கிறார்கள். அதில் "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் ஐகமத்யம்". என்று தலைப்பிட்டு அச்சிட்டிருப்தை காணீர்: "ஆபாத சூடமநபாயிநிதர்சநேSஸ்மிந் ஆசாஸ்யமந்யதி ஹநாஸ்தி விபக்ஷஹேதோ:". (ஆதிமுதல் அந்தம் வரையில் குற்றமற்ற இந்த ஸம்ப்ரதாயத்தில் வாதிகளினால் கலக்கக்கூடியது ஒன்றுமில்லை.) என்கிறபடியே ப்ரதிவாதிகள் ஒருவராலும் கலக்க முடியாமல் நன்றாய், இந்த ஸித்தாந்தத்தில் கலியுக ஸ்வபாவத்தால் தங்கள் தங்கள் புத்திபேதத்தினால் அனேக விதமான ஸித்தாந்தங்கள் போலும் பரஸ்பரவிரோதங்களும் - இதரங்கள் கல்பிதங்கள், என்றிவை முதலான ஸந்தேஹங்கள் ஆதுனிக விமர்சகர்களுக்கு உண்டாகின்றன. அப்படி நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் தத்வஸ்திதியில் அர்த்த பேதங்களில்லை யென்றும், நம் பூர்வாசார்யர்கள் அனைவரும் ஏகாபிப்ராயத்தை உடையவர்களென்றும், அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளை பராமர்சிக்கும்போது ஸ்பஷ்டமாகயேற்படும். அதுவும்

பூர்வாசார்யர்கள் குற்றமன்று, அவர்களுடைய கருத்தை அறியாமல் பிற்பட்டவர்கள் அர்த்தம் பண்ணியிருப்பதனால் உண்டானது என்றும்,

"கலிபல கலுஷை : கல்பிதோSர்த்தே விரோத :" என்று அருளிச் செய்திருக்கும் ந்யாயம் இங்கும் துல்யம். இப்படிபேதங்கள் போல் தோற்றுமவற்றையெல்லாம் இங்கு பராமர்சித்தால் காலம் விளம்பிக்கும். ஆதலால் ப்ரதானவிஷயங்கள் மாத்திரம் இப்பொழுது பராமர்சிக்கப் படுகின்றன. இதில் தத்வ விஷயங்கள் மாத்திரம் இப்பொழுது பராமர்சிக்கப்படுகின்றன. இதில் தத்வ விஷயத்திலும் புருஷார்த்த விஷயத்திலும் அதிக வ்யத்யாஸ மில்லாமையினாலும், இருக்கும் ஸ்வல்ப வ்யத்யாஸத்தினால், "இஹைவம் பிக்வசிதம் சேஷு ஸம்சயே'Sபிவிபச்சிதாம் உபயுக்தாம்ச வைசத்யாதுபாய பலஸம்பவ :" (இப்படி இந்த விஷயத்தில் ஏதாவது ஒரு அம்சத்தில் ஸம்சயமிருந்த போதிலும் வித்வான்களுக்கு உபயோகமுள்ள பாகத்தை விசதமாகத் தெரிந்து கொள்வதினால் உபாயமும் பலமும் ஸம்பவிக்கும்". என்று எழுதியிருக்கிறார். இதில், "கலியுக ஸ்வபாவத்தால் தங்கள் தங்கள் புத்திபேதத்தால் பரஸ்பர விரோதங்களும் வித்யாஸங்களுமான ஸம்ப்ரதாயார்த்தகல்பனை செய்பவர்களாகவும், அவைகளுள் ஒன்றே பரமார்த்தம் - இதரங்கள் கல்பிதங்கள், என்றிவை முதலிய ஸந்தேஹங்கள் ஆதுனிக விமர்சகர்களுக்கு உண்டாகின்றன" என்று, 'ஆதுனிகர்' (புதியவர்கள்) என்று தென்னாசார்ய ஸம்பிரதாயத்தை சேர்ந்தவர்களைத் தூஷிக்கிறார். "அதுவும் நம்பூர்வாசார்யர் களனைவரும் ஏக அபிப்ராயத்தை உடையவர்கள், சில இடங்களில் தான் அவர்கள் க்ரந்தங்களில் வ்யத்யாஸங்கள் காணப்படும். அதுவும் பூர்வாசார்யர் களுடைய குற்றமன்று" என்றும், பிற்பட்டவர்கள்தான் அர்த்தவிரோதம் பண்ணியிருக்கிறார்களென்று பிற்பட்டவர்களின்மேல் பழியிடுகிறார். இது எதைப்போலிருக்கிறது என்றால்? ஒருவனுடைய தகப்பனைக் கண்டபடிதிட்டிவிட்டு," அவனைப் பார்த்து நான் இவ்வளவு நேரம் உன் தகப்பனை திட்டினேன் என்றா நினைத்துக் கொண்டாய் இல்லையில்லை. உன்னைத்தான் திட்டினேன்"

என்பது போலிருக்கிறது, அடுத்தப்படியாக "இதில் தத்வ விஷயத்திலும் புருஷார்த்த விஷயத்திலும், அதிக வ்யத்யாஸமில்லாமையினாலும்" என்று எழுதியிருப்பதாலே, "தத்வ விஷயத்திலும் புருஷார்த்த விஷயத்திலும் அதிக வ்யத்யாசமில்லை ஸ்வல்பவித்யாஸ மேயிருக்கிறது". என்று இவரே ஒப்புக்கொண்டு பூர்வாசார்யர்கள் அனைவரும் தத்வவிஷயத்தில் ஏக அபிப்ராயர்கள் என்று எழுதுவதிலிருந்து முன்னுக்குப்பின் முரணாகிறது என்று இவர் எழுதும் வ்யாஸத்திலிருந்தே தெரிகிறது.

அடுத்து, "பக்தி ஸ்வரூப விருத்தமன்று" என்று மகுடமிட்டெழுதுகிறார். அவை வருமாறு :"சாஸ்த்திரங்களில் புருஷார்த்தத்தை அடைவதற்கு ஸாதனமாக விதிக்கப்பட்ட உபாயவிசேஷங்களில் அபிப்ராய பேதங்களிருப்பனபோல் சிலர் ப்ரமிக்கிறார்கள். விசாரிக்கப் புகுந்தால் நிலைநிற்காது எங்ஙனெயென்னில் :- பக்தியோகமாவது, அதை அநுஷ்டிக்க சக்தி இல்லாதவனுக்கு ப்ரபத்தி மோக்ஷோபாயமென்று ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்யர்களின் நிஷ்கர்ஷம்" என்று எழுதுகிறார். இவர் கருத்துப்படி பார்த்தால் பக்தியோகம் அநுஷ்டிக்க சக்தியில்லாதவனுக்கு ப்ரபத்தியென்கிறார். அப்போது ஸ்வாமி நம்மாழ்வார், அவருடைய சிஷ்யர் நாதமுநிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் இவர்களுக்கு அஜ்ஞானமும், அசக்தியுமுண்டோ: பின்னை ஏன் ப்ரபந்நர்களாக இருந்தார்கள்? 'இல்லையில்லை' அவர்கள் பக்திநிஷ்டர் என்கிறீர்களா? அப்படியென்றால்?" ப்ரபந்ந ஜனகூடஸ்தர்" என்று போற்றப்படும் நம்மாழ்வாரை, பக்திநிஷ்டராகக் கொள்ள வேண்டி வரும். மேலும், பகவத் விஷயம் ஈட்டில் முதல் திருவாய் மொழிமுதல் பாசுரவ்யாக்யானத்தில், "ஆழ்வார்பக்தி நிஷ்டரோ, ப்ரபத்திநிஷ்டரோ" என்று, கேள்வி கேட்டுக்கொண்டு, 'ஆழ்வார் ப்ரபந்நர்' என்று, எம்பார் அருளிய சாமாதானமும் காணப்படுகிறது. ஆகையால், ஏற்கனவே சொன்னபடி நம : பதத்தில் சொல்லப்பட்ட ஸ்வரூபஜ்ஞானத்தையுடையவனுக்கு பக்தி ஸ்வரூப விருத்தமென்றும், அந்த விசேஷ ஸ்வரூபஜ்ஞான மில்லாதவர்க்கே பக்தியோகம் உபாயம் என்று கொண்டால்

தான் பொருந்தும். இல்லையென்றால், ப்ரபந்நனும் அந்த பக்தி யோகத்தை அநுஷ்டிக்கலாம் என்றால் "சணற்கயிறு கண்ட ப்ரம்ஹாஸ்த்ரம் போலே"....... என்றும், (1) "பக்தியோகத்தை விசேஷித்து 'ஸ்வரூபவிருத்தம்' என்றவர்களுக்கு - அதிகாரி விசேஷ ஸ்வரூப விரோதத்திலே தாத்பர்யம். அதாவது, ப்ரபந்நனான அதிகாரிக்கு விசேஷஸ்வரூப விரோதத்திலே தாத்பர்யம்" என்பதாலே தேசிகனுள்ளிட்ட ஆசார்யர்களும் 'பக்தி' அதிகாரி பேதத்தாலே ப்ரபந்ந அதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தம் என்று தெள்ளத் தெளிவாகக் காட்டியிருப்பதால் "பக்தி ஸ்வரூபவிருத்தமன்று" என்று இவர் மகுடமிட்டு எழுதுவது பிறரை வஞ்சிப்பதே ஆகும். அதற்குமேலே ஸ்ரீவசனபூஷண சூத்ரத்தையெடுத்து, "ப்ராபகாந்த்ர பரித்யாகத்துக்கு அஜ்ஞான அசக்திகளன்று ஸ்வரூப விரோதமே ப்ரதான ஹேது" என்றருளிச் செய்யப்பட்டிருப்பதைக் கொண்டு "சிலர் ஆபாத ப்ரதீதியினால் பக்திஸ்வரூபவிருத்தமென்று ப்ரமிப்பர்கள்" என்று எழுதுகிறார். இங்கே யார்ப்ரமிக்கிறார்கள்? என்று அதிகாரிஸ்வரூபத்தை ஆராய்ந்தால் தெரியும் : அதாவது, ஸ்வப்ரவ்ருத்தி இல்லாதவனாய் (தன் நன்மைக்கான தன் முயற்சியில்லாதவனாய்) அஹங்கார மமகாரமில்லாதவனாய், அத்யந்த பரதந்த்ரநிஷ்டையுடையவனாய், திருமந்த்ரத்தில் நம : பதார்த்தத்தை அறிந்தவனாயிருக்கும் ப்ரபத்தி அதிகாரிக்கு பக்தி ஸ்வரூப விருத்தமே என்பதை, "ஸ்வர்க்க காமோயஜேத" என்கிறபடி ஸ்வர்க்கத்தில் இச்சையுடையவன் அநுஷ்டிக்கும் உபாயம் பக்திநிஷ்டனுக்கு ஸ்வரூபவிருத்தம் என்றும், ஐச்வர்யத்தில் இச்சையுடையவன் அனுஷ்டிக்கும் உபாயம் ஸ்வர்க்க காமனுக்கு ஸ்வரூபவிருத்தமென்றும், அப்படியே, கொலை களவு செய்து ஜீவிக்கும் பஞ்சமஹாபாதகன் அபிசார கர்மத்தை உபாயமாக அநுஷ்டிக்கிற அநுஷ்டானம் ஐச்வர்யகாமனுக்கு ஸ்வரூப விருத்தம் என்றும் இப்படியே சேதனனுடைய அஹங்காரகர்பமானதன் முயற்சியை உள்ளிட்டிருக்கிற கர்மஜ்ஞான பக்திகள், தன் முயற்சி யற்றிருக்கிற ப்ரபந்ந அதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தம் என்பது தன்னடையே விளங்கும்.

---

(1) பரமபதஸோபானம்-ப்ரஸாதந பர்வம்

இப்படி அதிகாரி விசேஷத்தாலே மற்றவன் அநுஷ்டிக்கும் கர்மம் அடுத்தவனுக்கு விரோதமாகும். அதைத்தான் தேசிகனும் பரமபத ஸோபானத்தில் ப்ரஸாத நபர்வத்தில் "பக்தி அதிகாரி விசேஷத்தாலே ஸ்வரூபவிருத்தம்" என்று, அநுவாதம் பண்ணிச் சொல்லியிருக்கிறார். இப்படி அவருடைய பரமாசார்யருடைய ஸூக்திகளுக்கே சரிவர அர்த்தம் புரியாமல் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸ்ரீ ஸூக்திகளை அங்கொன்றும் இங்கொன்றும் எடுத்து விபரீத அர்த்தகல்பனை பண்ணுவது ஏன்தான்? என்று புரியவில்லை. ஆகையால், "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு அஜ்ஞான அசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதானஹேது" என்று ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் ஸ்ரீவசன பூஷணத்திலருளியது; ஆகிஞ்சன்யமும், அநந்ய கதித்வமுடைய ப்ரபந்ந அதிகாரிக்கு பக்தி ஸ்வரூப விருத்தமே என்பதைக்காட்டும். இதை நடுநிலை நின்று ஆராயாமல் "பக்தி ஸ்வரூப விருத்தமன்று" என்று எழுதியிருக்கிறார்.

ஈட்டில் முதற்பத்து, முதல் திருவாய்மொழி முதற்பாட்டில் "மயர்வற" இத்யாதி........பக்தி ரூபாபன்ன ஜ்ஞானத்தைத் தந்தான்". என்று ஈட்டை உதாரணம் காட்டுகிறார். இங்கே பக்திரூபாபன்னஜ்ஞானமாவது - பக்தி நிலையடைந்த ஜ்ஞானத்தை - அன்புருவான ஜ்ஞானத்தைக் கொடுத்தான் என்றுதான் பொருள்படுமே தவிர, வேதாந்தங்களில் உபாஸன மாகச் சொல்லப்பட்ட ஸாதனபக்தியை ஆழ்வாருக்குக் கொடுத்தான் என்று தேறாது. இல்லையென்றால் அபசூத்ராதி கரணந்யாயம் ஸித்திக்கும். ஆகவே ஒரு தகப்பனுக்குப் பிள்ளையின்பால் இருக்கும் அன்பு, தாய்க்குக் குழந்தையின் பாலிருக்கும் அன்பு, ஒரு தலைவிக்குத் தலைவனிடத்திலிருக்கும் அன்பு எவ்வித அன்போ அந்த அன்பு நிலையடைந்த அறிவைத்தான் ஆழ்வாருக்கு எம்பெருமான் அருளினான் என்கிறார் ஈட்டில். இது புரியாமல், ஸாதன பக்தியை எம்பெருமான் ஆழ்வாருக்குத்தந்ததுபோல் எழுதுகிறார். ஆக, எம்பெருமான் ஆழ்வாருக்குத்தந்தது, ஸாத்ய பக்தியைத்தான் ஸாதனபக்தி அன்று.

மேலும், "வீடுமின் முற்றவும்" ப்ரவேசத்தில், "தான் பெற்றது; பக்திரூபாபன்ன ஜ்ஞானமாயிருந்தது" என்றும் "மாலைநண்ணி"ப்ரவேசத்தில், "எல்லோரும் ஒத்து அவனை ஆச்ரயியுங்கோள். ஆச்ரயிக்குமிடத்தில் அவன் திருவடிகளிலே பக்தியை பண்ணுங்கோள்" என்றும், 'சார்வே தவநெறி' ப்ரவேசத்தில், "இனித்தான் இவர்வழியே போய் இவருடைய பேறே பேறாக நினைத்திருந்த ஸ்ரீ பாஷ்யகாரரும் ப்ரபத்தியைப் பண்ணி பின்னை பக்தி தொடங்கி ப்ரார்த்தித்தாரிறே. அந்த ப்ராப்யத்துக்கு ப்ராபகமாக வேதாந்தங்களில் பக்தியென்றும், ப்ரபத்தியென்றும் இரண்டு உபாயங்களை விதித்தது" என்றும், இப்படியே அர்த்த பஞ்சகம் முதலிய ரஹஸ்யங்களிலும் பக்தியை உபாயமாக அருளிச் செய்திருப்பதினால் ஸ்வரூப விருத்தமென்ன வொண்ணாது" என்றும் எழுதியிருக்கிறார்.

இங்கொன்றும் அங்கொன்றுமாக இவரெடுத்த ஈட்டு ஸூக்திகளை முழுமையாக அப்படியே கொடுக்கிறேன். பத்தாம் பத்து நான்காம் திருவாய்மொழி சார்வேதவநெறி - ப்ரவேசம்'. "முதல் திருவாய்மொழியிலே, தத்வவிஷயமாகச் சொல்ல வேண்டுவதெல்லாம் சொல்லியற்றது; இனி அத்தத்வந்தானே ப்ராப்யமாயிருக்குமிறே. அந்த ப்ராப்ய வேஷத்தையும் ப்ராப்தி பலமான கைங்கர்யத்தையும், "படமுடையரவிற் பள்ளி பயின்றவன்" என்றும் "கடைத்தலைசீய்க்கப் பெற்றால்" என்றும் அநுஸந்தித்தார் - கெடுமிடரிலே; அந்தப்ராப்யம் அப்போதே கைபுகுரப் பெறாமையாலும் நெடுநாள் படப்பிரிந்து போந்த வாஸனையாலும் வெருவி இவர் அவஸந்நராக, இவர்க்கு ப்ராஸங்கிகமாகப் பிறந்த அவஸாதத்தை அநுஸந்தித்து அவனும் ஆச்வஸிப்பிக்க ஆச்வஸ்தராய் நின்றார் 'வேய்மருதோளிணை'யிலே ஆக, முதல் திருவாய் மொழியிலே - தத்த்வவிஷயமாகச் சொல்ல வேண்டுவதெல்லாம் சொல்லி, அவ்வஸ்துதானே ப்ராப்யமாயிருக்கையாலே அந்தப்ராப்யத்தைப் பெறுகைக்கு உபாயமான பக்தியோகத்தை வீடுமின் முற்றத்தாலே சொல்லி, அந்த பக்திமான்களுக்கு அவன் ஸுலபனாயிருக்கும் என்று அவன் ஸௌலப்யத்தை பத்துடையடியவரிலே சொல்லி, ஆக, வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தின படியைச்

சொல்லி, அத்திருவாய் மொழிகளில் பக்தி வர்த்தகமாகச் சொன்ன குணங்களைப் பராமர்சியா நின்று கொண்டு, தாம் தம்முடைய பேற்றுக்கு உபாயமாக முதல் திருவாய் மொழியிற் சொன்ன ப்ரபத்தியோடே தலைக்கட்டுகிறார் இதில்.

"இவ்விரண்டு கோடியும் இவர்க்கு உண்டாயிருக்கச் செய்தேயும், தம்முடைய பேற்றுக்கு உடலாக இவர் நினைத்திருப்பது ப்ரபத்தியையிறே. முதல் திருவாய் மொழியிலே ப்ரபத்திக்கு வாசகமான சப்தமுண்டோ வென்னில், 'அருளினன்' என்றாரிறே. இனித்தான் இவருடைய பக்தி வேதாந்தவிஹிதையான பக்தியல்ல; அது தன்னையே பார்க்குமன்று அப சூத்ராதிகரணந்யாயம் ப்ரஸங்கிக்கும் அதுதான் இவ்வாழ்வாருடைய ப்ரபாவத்தாலே கூடாதோ வென்னில்; அது இவருடைய உக்திகளோடு விரோதிக்கும். 'அருளினன்' என்கிற இப்புடைகளிலேயிறே இவருடைய உக்திகள். 'உபயபரிகர்மிஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக பக்தியோகைகலப்ய :' என்ற ஜ்ஞாநகர்மங்களாலே ஸம்ஸ்க்ருதாந்த : கரணனுக்குப்பிறக்குமதிறே பக்தியாகிறது ; அந்த ஜ்ஞாநகர்மங்களினுடைய ஸ்த்தாநே பகவத்ப்ரஸாதமாய், அதுக்கு அநந்தரமான பரபக்தி தொடங்கிப் பிறந்ததாயிருக்கும் இவர்க்கு. இனித்தான், இவர் வழியே போய் இவருடைய பேறேபேறாக நினைத்திருந்த பாஷ்யகாரரும், ப்ரபத்தியைப் பண்ணி, பின்னை பக்தி தொடங்கி ப்ரார்த்தித்தாரிறே. அவன் உபாயமானாலும் இவனுக்கு ருசியுண்டாய் ப்ராப்ய ஸித்தியுண்டாக வேணுமே ; இல்லையாகில் புருஷார்த்த மாகாதே ; ப்ராப்யம் இன்னதென்று நிஷ்கர்ஷித்து அந்த ப்ராப்யருசி கண்ணழிவற உடையவனுக்கிறே அவன் ப்ராபகனாவது ; ஆகையாலே அவருடைய பக்திப்ரபத்திகள் விகல்பிக்கலாம்படியிறே இருப்பது. ஆக வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் பிறர்க்கு உபதேசித்த பக்தி தம்முடைய பேற்றுக்கு உடலாயிருந்தபடியைச் சொல்லி, இதுதான் ஸ்வஸாத்யத்தோடே சேர்ந்த படியைச் சொல்லி நிகமிக்கிறார் இதில். இதுஸாத்யத்தோடே சேர்ந்திருப்பது ப்ராப்தியுண்டானாலன்றோ வென்னில்?- ஸாக்ஷாத்கார ரூபமான அநுஸந்தாநமுண்டாக வமையுமிறே இப்போது; குணம் அநுபாவ்யமானால் அந்த குணவிசிஷ்டமாக

இங்கேயிருந்து உபாஸியாநின்றானிறே. ஆக, உபாஸந வேளையிலும் அதிருக்கும் படியை அநுஸந்திக்கத் தட்டில்லையிறே. ஆனால் பின்னைக் கீழுமெல்லாம் இந்த ப்ராப்யாநுஸந்தாநமே யன்றோ பண்ணிப் போந்ததென்னில் ; அவற்றைப் பற்றிப் பிறந்தன சிலரஸவிசேஷங்களைச் சொன்ன இத்தனையிறே அவ்விடங்களில் ; உபக்ரமித்த அர்த்தத்தை யுபஸம்ஹரிக்கை யென்றுமொன்று உண்டே ; அத்தைச் சொல்லுகிறது - இங்கு. இங்ஙனன்றிக்கே, பிள்ளான் ஒருருவிலே 'நீ பசுமேய்க்கப் போகவேண்டா' என்றாள், 'ஆகில் தவிர்ந்தேன்' என்றான்; இவன்தனை ஸுலபனில்லைகிடீர், இவன் பக்திலப்யனென்னுமிடம் நிச்சிதமென்கிறார்' என்று பணித்தான். இன்னமும் முதல் திருவாய்மொழியில் ப்ராப்யத்தை அருளிச்செய்தார்; அந்த ப்ராப்யத்துக்கு ப்ராபகமாக, வேதாந்தங்களில் பக்தியென்றும் ப்ரபத்தியென்றும் இரண்டு உபாயங்களை விதித்தது ; அவையிரண்டிலும், பக்தி த்ரைவர்ணிகாதிகாரம் ; ப்ரபத்தி ஸர்வாதிகாரம் ; அதில் ஸர்வாதிகாரமுமாய் தாம் திருவுள்ளத்தாலே தமக்கு உபாயமாக அங்கீகரித்த ப்ரபத்தியை வீடுமின் முற்றத்திலே அருளிச்செய்தார் ; த்ரைவர்ணி காதிகாரமான பக்தியை, பத்துடையடியவரிலே அருளிச்செய்தார். ஆக, இரண்டு திருவாய் மொழியிலும் அருளிச் செய்த பக்திப்ரபத்திகள் ஸ்வாஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்கிறார் சார்வே தவநெறி, கண்ணன்கழலிணை, இரண்டாலும். அதில், சார்வே தவநெறியாலே ப்ரபத்தி ஸ்வஸாத்யத்தோடே பொருந்தின படியை அருளிச்செய்கிறார். 'சார்வேதவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்' என்று தபச்சப்தத்தாலே ப்ரபத்தியைச் சொல்லுகிறது. * தஸ்மாத் ந்யாஸமேஷாம்தபஸா மதிரிக்தமாஹு:* என்று தபஸ்ஸுக்களில் மிக்க தபஸ்ஸாகச் சொல்லிற்றிறே ப்ரபத்தியை. 'பண்டே பரமன்பணித்த பணிவகையே - கண்டேன் - கமலமலர்ப்பாதம், காண்டலுமே விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்' என்றும், 'இருமைவினைகடிந்திங்கென்னை யாள்கின்றான்' என்றும், 'மாமேகம் சரணம்வ்ரஜ அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்ற அர்த்தத்தை அருளிச் செய்தார்.

ஆளவந்தார் அருளிச் செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பது ; - 'ப்ரபத்திவிஷயமாக வாய்த்து வீடுமின் முற்றவும்' உடையவரும் அப்படியே ப்ரபத்தி விஷயமாக அருளிச் செய்து கொடுபோந்து, பாஷ்யம் அருளிச்செய்தபின்பு, 'ரஹஸ்யோபாயத்தை வெளியிட வொண்ணாது' என்று. வீடுமின் முற்றத்தையும் பக்தி விஷயமாக்கி அருளிச் செய்தார். ஆக, முதல் திருவாய் மொழியில் சொன்ன ப்ராப்ய ஸ்வரூபத்தையும் ப்ராப்திபலமான கைங்கர்யத்தையும், கெடுமிடரிலே 'படமுடையரவிற்பள்ளிபயின்றவன்' என்றும் 'கடைத்தலை சீய்க்கப் பெற்றால்' என்றும் அருளிச்செய்து, அக்கைங்கர்யத்தில் களைபறித்து, 'உன்தன்திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்' என்று உத்தரகண்டத்தில் நமச்சப்தார்த்தத்தை அருளிச்செய்து, கெடுமிடராலும் வேய்மருதோளிணையாலும் முதல் திருவாய்மொழியை நிகமித்து, சார்வேதவநெறியாலும் கண்ணன் கழலிணையாலும் - வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன பக்தி ப்ரபத்திகள் ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்தார்".

இந்த ஈட்டு பங்க்திகளில் சிலமுக்கியமானவற்றை ஆராய்வோம்......... ஆக, "முதல்திருவாய் மொழியிலே, தத்வ விஷயமாகச் சொல்ல வேண்டுவதெல்லாம் சொல்லி அவ்வஸ்துதானே ப்ராப்யமாயிருக்கையாலே அந்த ப்ராப்யத்தைப் பெறுகைக்கு உபாயமான பக்தியோகத்தை வீடுமின்முற்றத்திலே சொல்லி, அந்த பக்திமான்களுக்கு அவன் ஸுலபனாயிருக்கும் என்று அவன் ஸௌலப்யத்தை பத்துடை அடியவரிலே சொல்லி" ஆக, வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லி'; இங்கே, "வீடுமின் முற்றத்தாலே உபாயமான பக்தியோகத்தைச் சொல்லி அந்த பக்திமான்களுக்கு அவன் ஸுலபனாயிருக்கும் படியை பத்துடையடிவரிலே சொல்லப்படுகிறது" என்கையாலே. இங்கு சொல்லப்படுவது ஸாத்ய பக்தியான ப்ரபத்தியே சொல்லப்படுகிறது. இதனாலேயே, 'திருவாய் மொழியே தீர்க்கசரணாகதியென்றும், த்வயவிவரணமென்றும்' நம் பூர்வாசாரியர்கள் அருளிச் செய்வார்கள்.

ஆனாலும், ஸாத்யபக்தியானப்ரபத்தியும், பக்தி யோகமான ஸாதனபக்தி ஆகிற இரண்டும் இவருடைய ப்ரபாவத்தாலே யுண்டானாலும், தம்முடைய பேற்றுக்கு உடலாக இவர் நினைப்பது ப்ரபத்தியையே. ஆக, முதல் திருவாய் மொழியில் சொல்லப்பட்ட ப்ரபத்தியே இந்த சார்வே தவநெறியிலும் தலைக்கட்டப்படுகிறது என்கிறது ஈட்டு ஸ்ரீஸூக்தி. மேலும் இரண்டு தன்மையும் இவருக் குண்டாயிருக்கச்செய்தேயும், தம்முடைய பேற்றுக்கு உபாயமாக இவர் நினைத்திருப்பது ப்ரபத்தியையே அல்லவா, முதல் திருவாய் மொழியில் ப்ரபத்திவாசக சப்தமுண்டோவெனில்? 'அருளினன்' என்றாரல்லவா. இனித்தான் இவருடைய பக்தி வேதாந்தத்தில் விதிக்கப்பட்ட பக்தியல்ல அப்படிப்பார்த்தால் அபசூத்ராதிகரண ந்யாயம் பிரஸிங்கிக்கும். அது இவ்வாழ்வார் ப்ரபாவத்தாலே கூடாதோ என்னில்? அது 'அருளினன்' என்று முன்சொன்னவற்றோடே விரோதிக்கும். ஜ்ஞான கர்மங்களாலே தெளிந்த மனத்தையுடையவனுக்குப் பிறப்ப தல்லவா ஸாதனபக்தி; அந்த ஜ்ஞான கர்மங்களின் இடத்திலே பகவா-னுடைய அருளாய், அதற்குப் பிறகு பரபக்தி தொடங்கி பிறந்ததாயிருக்கும் இவ்வாழ்வார்க்கு. ஆனால், உடையவர் ப்ரபத்திபரமாய் வீடுமின் முற்றத்தை வ்யாக்யாநம் பண்ணி பாஷ்யம் தலைக்கட்டின பிறகு பக்திபரமாய் நிர்வஹித்தார் என்று சொல்லப்படுகிறதேயென்னில்? 'ரஹஸ்யோபாயத்தை வெளியிடவொண்ணாது' என்று வீடுமின் முற்றத்தையும் பக்தி விஷயமாக்கி அருளிச் செய்தார் என்று ஸமாதானம் ஈட்டிலே பண்ணப் பட்டிருக்கிறதாகையால் ஸ்நேஹமாகிற ஸாத்ய பக்தியையே முதல் திருவாய்மொழியீட்டிலே அருளியிருப்பதை நோக்காமல் 'பக்தி' யென்று இவர் அந்த ஸத்ஸம்ப்ர தாயக்ரந்தத்தில் எழுதுகிறார். இது முற்றிலும் பொருந்தாது. அதற்குமேலே "இதி ஸ்தானத்ரயோதித பரபக்தியுக்தம் மாம் குருஷ்வ" என்று கத்யத்தில் பக்தியைப்ரார்த்திக்கிறார் என்று எழுதுகிறார். இந்த வேடிக்கையைப் பாருங்கள்! உடையவர் பெரியபெருமாள் திருவடிகளில் சரணாகதியைப் பண்ணுகிறார். சரணா கதிதர்மமும் பக்தியோக தர்மமும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட தர்மங்கள் என்று எல்லா வித்வான்களுக்கும் தெரிந்தவிஷயம்.

அப்படியிருக்கும் போது உடையவர் சரணாகதியாகிற ப்ரபத்தியை அநுஷ்டிக்கும் போது பக்தியை ப்ரார்த்திக்கிறார் என்கிறார் இவர். உபாயமாகிற சரணாகதியை அநுஷ்டிக்கும் போது ஸாதனபக்தியை யாராகிலும், (ஸ்வரூபத்தை உணர்ந்த மஹான்கள்) ப்ராத்திப்பார்களா? மாறாக ஸ்வயம் ப்ரயோஜனமான பக்தியை - ஸாத்ய பக்தியை அல்லவா ப்ரார்த்திப்பார்கள். இந்த வித்யாசம் கூட தெரியாத இவர்கள் ஒன்றுக்கொன்று முரணாக ஸ்ரீவசனபூஷணமாகிற திவ்யசாஸ்த்ரத்தைக் கண்டிக்க வேணும் என்ற துவேஷமிருப்பதாலே இப்படி ஒன்றுக்கொன்று வித்யாசம் தெரியாமல் கலங்கி எழுதுகிறார்கள்.

அதாவது, "தேஷாம் ஜ்ஞாநீ" என்றும், "உதாரஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ" என்றும் "பஹூநாம் ஜந்மநாம்" என்றும் இந்த மூன்றிடங்களிலும் சொல்லப்பட்ட ஜ்ஞானத்தை யுடையனாம் படி என்னைப் பண்ணியருள வேணும் என்று, இங்கு கைங்கர்யத்துக்கு முன் உண்டாகக்கூடிய ருசிவிசேஷமான பரபக்தி, பரஜ்ஞானம், பரம பக்தியை அபேக்ஷிக்கிறார். "பரபக்தி பரஜ்ஞான பரம பக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ" இவை மூன்றும் எனக்கு யாவதாத்மபாவியாக உண்டாக வேணும் என்கிறார். "இங்கு பரபக்தியாதிகளை அபேக்ஷிக்கிறது, கைங்கர்ய உபகரணதயா அல்லது, நிரபேக்ஷ உபாய ஸ்வீகாரம் பண்ணினவர் ஆகையாலே உபாயதயா-அல்ல" என்று, ஸ்வாமி பெரிய வாச்சான்பிள்ளை அருளிச்செய்யும் அர்த்த விசேஷத்தைக் காலக்ஷேபம் பண்ணாமையால் வந்த விபரீதம்தான் இவர்களிப்படி எழுதுவதற்குக் காரணம்.

அடுத்து ச்ருத ப்ரகாசிகையில், "அத சதுர்த்யர்த்தம் இஷ்டப்ராப்திம் ப்ரார்த்தயதே" என்று பக்தியை இஷ்டமானதாயும் புருஷார்த்தத்தில் சேர்ந்ததாயும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது" என்று எழுதுகிறார். இங்கேயும், த்வயத்தில் "ஆய" சப்தம் நான்காம் வேற்றுமையின் அர்த்தமாகிய இஷ்டப்ராப்தியை கைங்கர்யோபகரணமான பக்தியை ப்ரார்த்திக்கிறார் என்று தான் அர்த்தமே யொழிய ஸாதனரூபமான பக்தியை ப்ரார்த்திப்பதாகப் பொருள்படாது.

"சேமூஷீ பக்தி ரூபா" என்று ஸ்ரீபாஷ்யத்திலும் அருளிச் செய்யப்பட்டது என்கிறார். கத்யத்தோடு சேர்த்துப்பார்க்கும்போது இங்கு ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரார்த்திப்பது பலமான பக்தியொழிய ஸாதன பக்தியல்ல என விளங்கும். ஸாதனமும், புருஷார்த்தமும் நேர் எதிரானவை என்பதே புரியவில்லையே. ஸாத்யபக்தியான ப்ரபத்திக்கும், ஸாதனபக்திக்கும் வித்யாசம் தெரியாதவர்களிவர்கள். அதற்கடுத்து, "பக்திஸ்வாதந்தர்ய கர்பமாகையினால் பாரதந்தரிய விசிஷ்ட ஸ்வரூபத்துக்கு விருத்தம்" என்று வ்யாக்யானம் பண்ணியிருப்பது "ஜ்ஞான ரூபமல்ல" என்கிற பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளோடும் விரோதிக்கிறது" என்று மணவாளமா முநிகளின் வ்யாக்யானத்தை கண்டிக்கிறார். "ஈட்டில்", 'மதிநல மருளினன்' என்பதின் வ்யாக்யானத்தில் 'ஜ்ஞானானுதயம், அந்யதா ஜ்ஞானம், விபரீதஜ்ஞானம் என்கிற இவை வாசனையோடே போம்படியாக, விபரீதஜ்ஞானமாவது ஸ்வதந்தர மாகவும், ஸ்வபோக்யமாகவும் நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞானம்" என்றும், இது மட்டுமல்லாமல் அங்கிருக்கும் அரும்பதவுரையையும் திருஷ்டாந்தங் காட்டியிருக்கிறார். அதாவது, விபரீதஜ்ஞானமாவது*; பகவத்சேஷத்தையே நிரூபகமாகக்கொண்ட ஆத்மா, ஸ்வதந்த்ரமாக தன்னை மாறாடி நினைத்திருக்கும் கேவலன்படி இது. (என்று அந்த அரும்பதவுரைக்குத்திரண்டபொருள்.) அத்தை த்ருஷ்டாந்தப் படுத்தி "பக்தியில் ஸ்வாதந்தர்ய ஜ்ஞானமில்லை என்றேற்படுகிறது," என்று எழுதுகிறார். பக்தியோகத்தில் ஏன் ஸ்வாதந்த்ர்ய ஜ்ஞானமில்லை? அதாவது சேதனன் தன் முயற்சியாலே கர்மஜ்ஞானயோகங்களைத் துணைக்கொண்டு இறைவனைப் பெற முயற்சிப்பது பக்தியோகத்தின் நிலை. இப்படிதன் முயற்சியாலே எம்பெருமானை அடைவதென்பது ஸ்வதந்த்ரமில்லையா? அவனையடையத்தான் முயற்சிப்பது ஸ்வதந்திரத்தின் பால்படாதா? இது ஸ்வாதந்தர்ய ஜ்ஞானமில்லையா: இது புரியாமல் தான் எழுதுகிறார்களா, அல்லது புரிந்தும் புரியாததுபோல் உலகை வஞ்சித்து பாமரர்கள் மயங்குவதற்காக எழுதுகிறார்களா என்று புரியவில்லை.

அதற்குமேல் "ஆத்மேதி தூபகச்சந்திக்ராஹயந்திச" என்கிற ஸூத்ர பாஷ்யத்தில், "பக்தனும் பகவானை தனக்கு அந்தராத்மா என்று உபாஸிக்க வேண்டுமென்று நிஷ்கர்ஷிக்கப்பட்டிருப்பதினால் பக்தியிலும் பரதந்த்ரத்வானுஸந்தானம் ஸித்திக்கிறதாகையினாலே ஸ்வாதந்தர்ய அனுஸந்தான ப்ரஸக்தியில்லை" என்று எழுதுகிறார். அது பொருந்தாது. கேண்மின்: நமக்கும் இவர்களுக்கும் ஆப்ததமரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் பணிக்கும் வார்த்தையை காணீர் ; "மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம் போலே அஹங்கார மிச்ரமான உபாயாந்த்ரம்" (ஸ்ரீவசன பூஷணம்) என்று. இதுக்கர்த்தம் : மதிரா என்றால், கள், பிந்து-துளி, சாதகும்பம் - பொற்குடம். தீர்த்தஸலிலம் - தூயதண்ணீர் ஆக, இதனால் தேர்ந்த பொ-ருளாவது பொற்கலத்திலேயுள்ள தூய தண்ணீர், கலத்தின் தூய்மையும், தனக்குள்ள தூய்மையுமுடையதாயிருக்க, துளிமாத்ரமான கள் கலந்ததினாலே விலக்கப்படுமாறுபோலே, இயல்பாகவே குற்றமில்லாமை முதலானவைகளால் தூயதான ஆன்மாவிலே உள்ளதாய் பகவானையே தனக்கு விஷயமாகக் கொண்டிருப்பதனால் தூய்மையுடைய பக்தியானது தன் முயற்சிமூலமாகக் கொண்ட அஹங்காரத்தின் ஸம்பந்தத்தாலே ஜ்ஞானிகள் அங்கீகரியாதபடி விலக்கப்பட்டதாயிருக்கும் என்பதனை தெரிவிக்கிறார் பிள்ளான். 'நான் செய்கிறேன்' என்ற அஹங்காரத்தோடு கூடிய பக்தியில் ஸ்வதந்த்ரமேயில்லை பரதந்த்ரமிருக்கிறது என்று ஸ்தாபிக்கிறார் இவர்.

மேலும், ஸ்ரீபாஷ்யத்தில் பராயத்தாதிகரணத்தில்; "பராத்து தச்ச்ருதே :" (ப்ரஹ்ம ஸூத் 2-3-40 - (ஜீவனுடைய) அந்த கர்த்ருத்வமோவெனில் பரமாத்மாவாலேயே விளைகிறது; ச்ருதி அப்படிக் கூறுகிற படியால்) என்னும் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்பட்டது. ஜ்ஞாந இச்சை முயற்சிகளின் உற்பத்தியே பரமாத்மாவினாலாகையால் அவனுக்கு அதீநமானதே இந்த 'ஜீவனுடைய கர்த்ருத்வம்' என்று கூறப்பட்டது.

இதற்கு மேல் ஓர் ஆக்ஷேபம் வர, அதற்கு ஸூத்ரகாரரே அடுத்த ஸூத்ரத்தில் பதிலுரைக்கிறார். அந்த ஆக்ஷேபமாவது:- "ஜீவாத்மாவின் கர்த்ருத்வம்" (செயல் புரியுந்தன்மை) பரமாத்மாவிற்கு அதீநமாயிருப்பதால், அந்த ஜீவனைக்குறித்து சாஸ்த்ரங்கள் 'இதைச் செய்', 'அதைச்செய்யாதே' என்னும் விதிநிஷேதங்களை (~~விதிப்பதை~~) செய்வது பொருளற்றதாகும். எவனொருவன் ஸ்வதந்த்ரமாக ஒரு காரியத்தைச் செய்யவல்லவனோ அல்லது ஒரு காரியத்திலிருந்து மீளவல்லவனோ அவனைக்குறித்தே 'செய்' அல்லது 'செய்யாதே என்று விதிப் பதும் தடை செய்வதும் பொருந்தும். இங்கு ஜீவன் பரமாத்மாவால் தூண்டப்பட்டே காரியங்களைச் செய்கிறானாகையாலே அவனைக்குறித்து விதிப்பதுவும், தடை செய்வதுவும் பொருந்தாது. மேலும், பரமாத்மாதானே ஒருவனைத்தவறான காரியங்களைச் செய்யும்படி தூண்டிவிட்டு, அவனிடம் கோபம் கொண்டு அவனைத் தண்டிப்பதும், அந்த பரமாத்மாவே மற்றொ-ருவனைப் புண்ணிய காரியங்களைச் செய்யும் படி தூண்டிவிட்டு அவனிடம் ப்ரீதி கொண்டு அவனுக்கு சுகத்தையளிப்பதும் பக்ஷபாதம், கருணையின்மை முதலான பலதோஷங்களை விளைக்கும். ஆகையால், பரமாத்மாவால் தூண்டிவிடப்பட்டே ஜீவன் காரியங்களைச் செய்கிறான் என்று ஒப்புக்கொள்வது பொருந்தாது" என்பது அவ்வாக்ஷேபம். இந்த ஆக்ஷேபத்திற்கு ஸூத்ரகாரரே அடுத்த ஸூத்ரத்தில் பதிலுரைக்கிறார். "க்ருதப்ரயத்நாபேக்ஷ : து விஹிதப்ரதிஷித்த - அவையர்த்யாதிப்ய : " (ப்ரஹ்ம ஸூ - 2-3-4 - [(எல்லாச்செயல்களிலும்) ஜீவனால் செய்யப்பட்ட (முதல்) முயற்சியை எதிர்பார்த்தே, அம்முயற்சியை அநுமதித்து (பரமாத்மா அக்காரியத்தைச் செய்விக்கிறான்) ; (ஏனெனில்) விதி நிஷேதசாஸ்த்ரங்கள் வீணாகாமலிருக்க வேண்டுகை முதலான காரணங்களால்)] என்பது அந்த ஸூத்ரம். கர்த்ருத்வம் பரமாத்மாதீநமானது என்று கொண்டால், விதிநிஷேத சாஸ்த்ரங்கள் வீணாகும் என்று சொல்லப்பட்ட ஆக்ஷேபத்திற்கு இதில் பரிஹாரம் உரைக்கப்படுகிறது, எல்லாச் செயல்களையும் தொடங்கும்போது, ஜீவன் தன் விருப்பப்படி முதல் க்ஷணத்தில் செய்யும் முயற்சியைப் பரமாத்மா அநுமதிக்காமலும், தடுக்காமலும் உபேக்ஷித்து

நிற்கிறான். இரண்டாவது க்ஷணத்திலிருந்து செய்யும் முயற்சிகளை, முதல் முயற்சிக்கு அனுகுணமாகச் செய்ய அனுமதிப்பதின் மூலம் ஜீவனைக் காரியங்களைச் செய்விக்கிறான். ஏன் இப்படி ஒப்புக்கொள்ளவேண்டும்? எனில் ; முதல் முயற்சியிலும் ஜீவனைக்காரியம் செய்வதற்குப் பரமாத்மாவே தூண்டிவிடுகிறான் என்று ஒப்புக்கொண்டால் 'இதைச் செய், அதைச் செய்' என்று விதிக்கும் சாஸ்த்ரங்களும், 'இதைச் செய்யாதே; அதைச் செய்யாதே' என்று நிஷேதிக்கும் சாஸ்த்ரங்களும் பயனற்றவையாகும். தானே தூண்டிவிட்ட புண்யபாபச் செயல்களைக்குறித்துப் பரமாத்மா தானே (முறையே) ப்ரீதிகோபங்களைக் காட்டுவதும், அதனடியாகப் புண்யம் செய்தவனுக்கு ஸுகத்தையும், பாபம் செய்தவனுக்கு துக்கத்தையும் அளிப்பதும் பொருந்தாமற்போய்விடும், ஆகையால், பரமாத்மாவினால் ஜீவன் காரியங்களைச் செய்விக்கப்படுபவனானாலும், ஜீவன் முதல் முயற்சியில் ஸ்வாதந்த்ர்யம் பெற்றிருக்கையால், அவன் சாஸ்த்ரவிதி நிஷேதங்களுக்கும் தகுதி பெற்றவனாகிறான். ஜீவன் செயல் புரியும்போது (1) உதாஸீநனாய் இருக்கை, (2) அனுமதிப்பவனாயிருக்கை, (3) தூண்டிவிடுபவனாயிருக்கை என்று மூன்று ஆகாரங்கள் பரமாத்மாவுக்கு உண்டு, (1) அவற்றில் ஜீவனுடைய முதல் க்ஷண முயற்சியின்போது பரமாத்மா அதைத் தான் அநுமதிக்காமலும், தடுக்காமலும் ஜீவனை அவன் வழியிலே விட்டு அவன் செய்யும் செயல்களில் உதாஸீநனாயிருக்கிறான். (2) ஜீவன் முதல் க்ஷணத்தில் தன் இஷ்டப்படி ஒரு விதமாகக் காரியத்தைத் தொடங்கியபின், இரண்டாவது க்ஷணம் முதல் அவன் செய்யும் முயற்சிகளைப் பரமன் அநுமதிக்கிறான். இது எதற்காக: எனில்: பரமாத்மாவின் அநுமதியில்லாவிடில் ஜீவனால் தொடர்ந்து காரியத்தைச் செய்ய முடியாதல்லவா; அதற்காக ஒப்புக்கொள்கிறோம், பரமாத்மாவின் அநுமதியில்லாமல் முதல் க்ஷணத்தில்தான் இவன் எப்படிக்கார்யத்தைத் தொடங்க முடியும்? எனில் : விதிநிஷேத சாஸ்த்ரங்கள் வீணாகிவிடுகை முதலான முற்கூறிய தோஷங்கள் ஏற்படமலிருப்பதற்காகப் பரமாத்மாவே ஜீவனுக்கு அந்த ஸ்வாதந்த்ர்யபுத்தியை அளித்து விடுகிறானாகையால் முதல் க்ஷணத்தில் ஜீவன் தானே காரியத்தைத் தொடங்கக் குறையில்லை. அரசன் முதலானார்

தம் இஷ்டப்படி அமைச்சர் முதலானார்க்குச் சில விஷயங்களில் ஸ்வாதந்த்ரியமளிக்க, அதைக் கொண்டு அமைச்சர் முதலானார் தம் இஷ்டப்படி கார்யம் செய்யும்போது அரசனுடைய ஸ்வாதந்த்ர்யத்திற்கும் , அமைச்சருடையபாரதந்த்ரியத்துக்கும் குறையேற்படாததுபோலே, பரமாத்மாவினால் தன் இஷ்டப்படி அளிக்கப்பட்ட ஸ்வாதந்த்ரிய புத்தியைக் கொண்டு ஜீவன் பூர்வகர்மத்தையும் எதிர்பாராமல், வாஸனையையும் எதிர்க்கவல்லவனாய் முதல் முயற்சியைச் செய்யும் போதும் ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்திற்கோ, ஸர்வகாரணத்வத்திற்கோ, கர்மாநுகுண பலப்ரதத்வத்திற்கோ, ஜீவனுடைய பாரதந்தர்யத்திற்கோ எக்குறையும் ஏற்படாது.

(3) "ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதியமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி, ஏஷ ஏவ அஸாது கர்ம காரயதி தம் யமதோ நிநீஷதி" *(கௌஷீதகீ 3-9) (எந்த ஜீவனை இந்தப்ராக்ருத லோகங்களிலிருந்து மேலெடுக்கப் பரமாத்மா விரும்பு கிறானோ, அவனை இவனே நற்கர்மங்களைச் செய்விக்கிறான்; எந்த ஜீவனை இந்தப் பரமாத்மாவே கீழுலகங்களில் தள்ள விரும்புகிறானோ அவனை இவனே பாபகர்மங்களைச் செய்விக்கிறான்)* "ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்திதே" *(கீதை 10-11- என்னை அடைய வழிகாட்டும் புத்தியை நானே அவர்களுக்கு அளிக்கிறேன்).* 'தாநஹம் த்விஷத : க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாம்ய ஜஸ்ரமசுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு *(கீதை 16-19 - என்னை துவேஷிப்பவர்களாய், கொடியவர்களாய், மனிசரில் கடையராய், அமங்களமானவர்களான அவர்களை நானே ஸம்ஸாரகதிகளில், அதிலும் அஸுரப்பிறப்புக்களிலேயே எப்போதும் தள்ளுகிறேன்)* என்று பரமாத்மாவே ஜீவனைப் புண்யபாபகர்மங்களில் தூண்டிவிட்டு, அதற்கனுகுணமான பலன்களை அளிப்பதாகச்சிலச்ருதி ஸ்ம்ருதி வாக்யங்கள் கூறுகின்றதற்குப் பொருளென்ன? எனில் : ஈச்வரனால் முதல் முயற்சியில் அளிக்கப்பட்ட ஸ்வாதந்த்ரியத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு எவர்கள் பரமாத்மாவுக்கு மிகவும் அநுகூலர்களாயிருக்கிறார்களோ, அவர்களை ஈச்வரன் நற்கருமங்களை மேலும் மேலும் செய்யத்தூண்டி அவர்கட்கு நற்கதியளிக்கிறான் என்றும்,

அந்த ஸ்வாதந்த்ரியத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு எவர்கள் பரமாத்மாவுக்கு மிகவும் ப்ரதிகூலர்களாயிருக்கிறார்களோ, அவர்களை அவன் தீய கருமங்களை மேலும் மேலும் செய்யத்தூண்டி அவர்கட்குத் தீயகதிகளை அளிக்கிறான் என்றும் அந்த ச்ருதி ஸ்ம்ருதிகள் கூறுகின்றனவாகையால் இவையும் ஜீவனுடைய முந்திய முதல் முயற்சிகளின் பலனேயாகும். ஆக, இப்படிப் பின் முயற்சிகளில் பரமாத்மா ஜீவனைக் காரியம் செய்ய அநுமதிப்பது முன் முயற்சியின் பலனாகையாலும், முதல் முயற்சியிலே சிலரைத் தூண்டுவது முந்திய முதல் முயற்சிகளின் பலனாகையாலும் எக்குறையுமில்லை. முதல் முயற்சியில் பரமாத்மாவுக்கு காரயித்ருத்வமாகிற (செய்விக்கையாகிற) விசேஷகாரணத்வம் இல்லாவிடிலும்,ஜீவனுக்கு அந்த ஸ்வாதந்தர்யபுத்தியை அளித்தவன் பரமாத்மாவேயாகையால், ஜீவகர்த்ருத்வவிஷயத்தில் ஸாமாந்ய காரணத்வம் இருக்கவே செய்கிறது. ஆகையால், பரமாத்மாவினுடைய ஸர்வகாரணத்வத்துக்கும் குறையேற்படவில்லை. ஆக, ஜீவனுடைய கர்த்ருத்வம் பரமாத்மாதீநமே. இது பராயத்தாதிகரணத்தின் ச்ருதப்ரகாசிகையின் சுருக்கமாகும்.

இனி, இவ்விஷயத்தில் ஸ்ரீவேதாந்த தேசிகருடைய கருத்து முற்றிலும் வேறுபடுகிறது. பராயத்தாதிகரணத்தின் அதிகரணஸாராவளியிலும், (கீதை 18-14, 15) ச்லோகங்களின் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகையிலும் அவர்தம் திருவுள்ளத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதன் சுருக்கம் பின்வருமாறு:- எம்பெருமான் ஜீவனுக்குத் தன் ஸங்கல்பத்தாலே உண்டாக்கப்பட்ட ப்ரவ்ருத்தி சக்திகளையுடைய சரீரேந்த்ரியங்களைச் செயல்படுவதற்குக் கருவிகளாகக் கொடுக்கிறான். எல்லாக் காரியங்களிலும் முயற்சி கொள்வதற்கும் முயற்சியிலிருந்து நீங்குவதற்கும் அநுகுணமாகத்தன் ஸ்வரூபத்தினாலும் ஸங்கல்பத்தினாலும் (பூமியைப்போல) அனைவரையும் தாங்கி நிற்கிறான். சரீரேந்த்ரியங்களை அதிஷ்டித்து நிற்பதற்கும் ஜீவர்களுக்கு சக்தியை அளிக்கிறான். இவர்கள் செயல்படலாம்படி சப்தாதிவிஷயங்களை இவர்களுக்குக் காட்டுகிறான். இவை அனைத்தும் ஜீவனுடைய கர்த்ருத்வத்தை ஒட்டியவையாகவும், எல்லா ப்ரவ்ருத்திநிவ்ருத்திகட்கும் பொதுவாகவுமிருப்ப

வையாகையாலே இவற்றில் ஆக்ஷேபம் எழுவதற்கு இடமில்லை. இதைக்கொண்டே எல்லா ப்ரவ்ருத்திகளிலும் நிவ்ருத்திகளிலும் எம்பெருமான் பொதுவாக உதாஸீனனாக இருக்கிறான் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி எம்பெருமானிடமிருந்து சக்திபெற்ற ஜீவன் செயலைத் தொடங்கும் போது அச்செயலை நிறைவுபடுத்துவதற்காக எம்பெருமான் தொடங்கியதைத் தூண்டுவதாகிற அனுமதி தானத்தைச் செய்கிறான். இதுவும் ஜீவனுடைய கர்த்ருத்வத்தைத் (செய்ல்புரியும் தன்மையைத்) தடுக்காது, மேலும் வலிமை ஊட்டவே செய்யும். அதனால், 'சாஸ்த்ரங்கள் ஜீவனைக் குறித்துச் செய்யும் விதி நிஷேதங்கள் பயனற்றதாகும்' என்னும் சங்கைக்கு இடமில்லை. ஒரே செயலில் கர்த்தாவான ஜீவனுக்குப் பரமாத்மாவாகிற மற்றொரு கர்த்தா உதவி புரிகிறான் என்னும் காரணத்தால் சாஸ்திரங்கள் ஜீவனைக்குறித்து விதி நிஷேதங்களைச் செய்யக்கூடாது என்று கூறுவது பொருந்தாது. ஒருவராகச் செய்யக்கூடாதவையாய், பலராகச்சேர்ந்தே செய்யவேண்டிய தேர்இழுப்பது, பாறை அல்லது மரத்தைத்தள்ளுவது முதலான செயல்களில், உலகில் ஒவ்வொருவரைக்குறித்தும் விதி நிஷேதங்கள் விளைவதையும், அவை பயனுடையவை ஆவதையும் காண்கிறோம். முயற்சியில் சக்தி உடையவனுக்குப் பிறர் அதைத் தடுக்காமல் இருந்தால் ஸ்வாதந்த்ரியம் முதலானவை உள்ளதை இத்தகைய செயல்களில் காண்கிறோம். **"கார்யதே ஹ்யவச : கர்ம ஸர்வ : ப்ரக்ருதிஜைர்குணை :** ( 3-5 (ஒன்றையும் செய்வதில்லை என்று உறுதி பூண்டவனை உள்ளிட்ட) எல்லாப் புருஷரும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் வளரும் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களால் அவ்வவற்றுக்கு உரியசெயலைக் குறித்துத் தம்மையறியாமலே தூண்டப்படுகிறாரல்லவோ) முதலான இடங்களிலும் ஜ்ஞாநம் இச்சை ஆகியவற்றை முன்னிட்டுக் கொண்டே ஜீவன் தூண்டப்படுவதாலும், அந்தந்த ஜீவனுடைய வாஸனை முதலானவற்றுக்கு அநுகுணமாகவே வெவ்வேறு இச்சைகள் விளைகின்றனவாகையாலும் ஜீவனுடைய கர்த்ருத்வம் அசைக்கவொண்ணாதது. அதனாலேயே இந்த ச்லோகங்களில் செயல்களுக்குக் கூறப்படும் ஐந்து காரணங்களில், 'கர்த்தா' என்று பெயரிட்டு அழைப்பதன் மூலம் கர்த்ருத்வத்தைக் கொண்டே ஜீவன் நிரூபிக்கப்படுகிறான். இனி எம்பெருமா-

னுக்கு வைஷம்யநைர்க்ருண்யங்கள் (பக்ஷபாதம், கருணையின்மை) ஏற்படுகிறது என்னும் ஆக்ஷேபத்தை ஆராய்வோம். சரீரேந்த்ரியங்களின் சக்தி ஜ்ஞாநம் இச்சை முதலானவற்றில் ஒருவருக்கொருவர் மிகுந்த வேறுபாடு இருக்கும்படி எம்பெருமான் கொடுப்பது, ஜீவன் தவறு செய்யும்போது தடுக்காமலிருப்பது, அதை அனுமதிப்பது, அதற்கு தண்டனை அளிப்பது முதலானவையும் அநாதி காலமாக வரும் பூர்வகர்மங்களினால் விளைவதாகையாலே, அவை ஈச்வரனுக்கு வைஷம்யநைர்க்ருண்யங்களை விளைக்கமாட்டா. எம்பெருமான் தூண்டுவதாயிருந்தால் இவனைக் குறித்து சாஸ்த்ரங்கள் விதிநிஷேதங்கள் செய்வது பொருந்தாதே எனில்: ஒருவன் யஜ்ஞம் முதலானவற்றைச் செய்யத் தொடங்குகிறான் என்றால் அதற்குக் காரணம் முற்பிறவியில் செய்த புண்ணியம் ஆகும். அப்படிப் புண்யத்தால் யஜ்ஞத்தைத் தொடங்கவேண்டும் என்று அறிந்தே தொடங்க வேண்டியிருப்பதால் சாஸ்த்ரங்கள் வீணாவதில்லை. இப்படி ஒவ்வொரு புண்ணியகாரியத்தையும் எம்பெருமான் தூண்டி ஜீவன் செய்யும் போதும் அதற்குக் காரணம் முந்திய புண்ணியம், அதற்குக் காரணம் முந்திய புண்யம் - இப்படி நிர்வஹித்து விடலாம். முன் பிறவியில் யஜ்ஞாதிகளுக்குக் காரணமான புண்ணியம் செய்ததால் மாத்திரம் யஜ்ஞம் முதலா-னவை நடந்துவிடாதே. சாஸ்த்ரங்களைக் கொண்டுதானே அந்த யஜ்ஞாதிகளைப் பற்றி அறிந்து கொண்டு அவற்றை அநுஷ்டிக்க வேண்டும். பாப விஷயத்திலும் ஒவ்வொரு பாபத்திற்குக் காரணம் முன்செய்த மற்றொரு பாபமே என்று நிர்வஹித்து விடலாம். உலகில் ஜீவர்களுடைய செயல்களெல்லாம் முன்வினையால் ஏற்படுகின்றன என்பதை சார்வாகராயில்லாத எல்லா வைதிகர்களும் சாஸ்த்ரங்களைக் கொண்டு ஒப்புக்கொள்ளுகிறார்கள். அந்த சாஸ்த்ரமே "புண்யபாபங்களால் முன்வினையால் நடப்பது என்றால், அந்தப் புண்யபாபங்களால் விளைந்த ஈச்வரனுடைய ப்ரீதி கோபங்களால் உண்டான ஸங்கல்பத்தால் நடப்பது என்றே பொருள் கொள்ளவேண்டும்" என்று உபதேசிக்கிறது. ஆகையால் இவ்விஷயத்தில் ஈச்வரனுக்கு வைஷம்யநைர்க்ருண்யங்கள் விளையுமே? என்று கேள்வி கேட்பதற்கு இடமேயில்லை. இது எம்பெருமானுக்கு தோஷமும் ஆகாது

என்பதை "வைஷம்யே ஸதிகர்மணாமவிஷம : கிம் நாம குர்யாத் க்ருதீ கிம் வோதாரதயா ததீத வரதோ வாஞ்சந்தி சேத் துர்கதிம்" (பக்ஷபாதமில்லாதவனான ஈச்வரன் அவனவன் செய்த கர்மங்கள் மிகவும் வேறுபட்டிருந்தால் (ஒவ்வொருவனை ஒவ்வொருவிதமாகத் தூண்டாமல்) என்ன செய்ய முடியும்? ஜீவர்கள் தாழ்ந்த கதிகளை விரும்பினால் வண்மைமிக்க வரதனான எம்பெருமான் மிக உயர்ந்த கதிகளை அவர்களுக்கு அளிக்க முடியுமா?) என்று நம்முடைய ஆசார்யரான வாதி ஹம்ஸாம்புவாஹர் (கிடாம்பி அப்புள்ளார்) உரைத்தது இங்கு அனுஸந்திக்கத்தக்கது. ஆக இங்கு இதுவரை சொல்லப் பட்டவை பின்வரும், 'இரண்டு ஸ்லோகங்களில் சுருக்கிக் கூறப்படுகின்றன :-

"தத்ததிஷ்டாத்ருஷ்டமூல சாஸ்த்ர வச்ய தசாந்வயாத்
புநஸ்ததாததாத்ருஷ்டாத்யுத்பத்திருபபத்யதே
புமர்த்த ஸாதநத்வேந ப்ரததே ஸ்வேச்சயா புமாந்
ப்ரவர்த்தேதேதி தாதர்த்யாத் ஸாவகாசாத்ரசோதநா"

(அந்தந்த மதங்களில் ஒப்புக்கொள்ளப்படும் முன்வினைகளினால் சாஸ்த்ரங்களை முன்னிட்டுக் கொண்டு மேலும் மேலும் அது போலவே பின்வினைகள் உண்டாவது பொருந்துகிறது. (அப்படி இருந்தபோதிலும்) புருஷார்த்த ஸாதநமாக சாஸ்த்ரங்களில் காணப்படும் கர்மங்களில் ஜீவன் தன் விருப்பப்படி முயற்சி செய்யலாமாகையாலே சாஸ்த்ரவிதியும் பயனுடையதாகிறது). இதுவரையில் தாத்பர்ய சந்திரிகையில் தேசிகனுடைய கருத்து சுருக்கிக்கூறப்பட்டது.

இனி, அதிகரண ஸாராவளியில் பராயத்தாதிகரணத்தில் இக்கருத்துக்களை விவரித்து தேசிகன் அருளியிருக்கும் ஒரு ச்லோகம் பொருளுடன் கொடுக்கப்படுகின்றது.

**"கர்த்ருத்வம் ஸ்யாத் கதாசித் கரணவதி பரப்ரேரணா நிர்வ்யபேக்ஷம்
நோசேத் தந்நிக்ரஹாத்யம் கதமிதி யதி ந ஸ்வேஷ்டபக்ஷேऽபிஸாம்யாத்
ஸ்வேநாபத் யப்ரவ்ருதம் நஹி புநரபி தத்காரயேயுர் தயார்த்ரா :
தச்சேத் தஸ்ய ஸ்வபாவாதி தரதபி ந கிம் நிஷ்பலோऽதீதபங்க :"**

"ஜீவனிடத்தில் முதல் முயற்சியின்போது தீவினைகளிலோ நல்வினைகளிலோ ஈடுபடுவதாகிற கர்த்ருத்வம் ஈச்வரன் தூண்டாமலே உண்டாவது என்று கொள்ளவேண்டும். 'முதல் முயற்சியிலும் ஈச்வரன் தூண்டுகிறான்' என்றால், அதற்கு ஈச்வரன் நிக்ரஹத்தையோ அநுக்ரஹத்யோ அளிப்பதும் எப்படிப்பொருந்தும்?" என்னும் ஆக்ஷேபம் பொருந்தாது. ஏனெனில் ; இரண்டாவது தொடங்கியுள்ள முயற்சிகளில் எம்பெருமான் தூண்டுகிறான் என்று ஒப்புக்கொள்ளும் உங்கள் பக்ஷத்திலும் இந்த தோஷம் வரும். முதலில் தானே ஒரு தவறான காரியத்தைச் செய்யத் தொடங்கியவனை, கருணையுள்ளவர்கள் எவரும் பிறகு அக்காரியத்தையே செய்யும்படி தூண்டிவிடமாட்டார்கள். "முதல் முயற்சியில் ஒருவன் தவறான காரியத்தைத் தொடங்கின பின்பு அதை அனுஸரித்து அந்தக் கர்மத்திற்குப் பலனாக எம்பெருமான் இரண்டாவது தொடங்கியுள்ள முயற்சிகளைத் தூண்டிவிடுகிறானாகையாலே அவன் கருணையற்றவன் அல்லன் என்று கொள்ளலாமே" எனில் ; முற்பிறவியில் உள்ள ஒரு கடைசி முயற்சிக்குப் பலனாகவே இந்த முதல் முயற்சியில் எம்பெருமான் தூண்டிவிடுகிறானென்று நாங்களும் அதே ஸமாதானத்தைச் சொல்லலாம். "தொடங்கியதை அனுமதித்துக் தூண்டுவதாகிய அநுமந்த்ருத்வம் ஈச்வரனுக்கு, எல்லாக்காரியங்களுக்கும் காரணமாயிருக்கும் இயல்பினால் ஏற்பட்டது என்று கூறுவீர்களானால், அந்த இயல்வினால் அவன் முதல் முயற்சிக்கும் காரணமாகிறான் என்று கொண்டு விடலாமே. இப்படி ஒப்புக் கொள்ளாவிடில், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் சாஸ்த்ரஸாரார்த்தத்தினால் தேறும் எம்பெருமானுடைய ஈச்வரத்வமே இல்லாமல் போய்விடும். மேலும், ஜீவர்களை எம்பெருமான் எல்லாச் செயல்களிலும் உள் நுழைந்து நியமிக்கிறான் என்று கூறும் வேத வாக்யங்களும் வீணாகிவிடும்.) இந்த ஸ்லோகத்திற்கு அடுத்த ஸ்லோகத்தில் "பாஷ்யாதி க்ரந்தலேசோSப்ய வஹிதம நஸாமைதமர்த்யம் பஜேத" (ஸ்ரீபாஷ்யத்திலும் தத்ரோபேக்ஷ்ய" "ததோநுமத்ய"என்று தத்வஸாரத்திலும் முதல் க்ஷணத்தில் எம்பெருமான் உபேக்ஷையுடன் இருக்கிறான் என்றும், இரண்டாவது க்ஷணம் தொடங்கி அனுமதி பண்ணுகிறான் என்றும் சொல்லப்படுவதை நுணுகி ஆராய்ந்து

பார்த்தால் நாம் சொல்லும் அர்த்தத்திலேயே அவற்றுக்கும் கருத்து என்று விளங்கும்) என்று ஸாதித்திருக்கிறார் தேசிகன். அங்கு வ்யாக்யாநம் செய்த தேசிகனுடைய குமாரரான/ நைனாராசார்யர் 'அநாதியாகத் தொடர்ந்து வரும் முயற்சிகளில் முதல் முயற்சி என்பதையே நிரூபிக்க முடியாது' என்று ஸாதித்திருக்கிறார். ஈச்வரன் ஸ்வதந்த்ரனாக இருப்பதால் அவனைக் 'கர்த்தா' என்றும், ஜீவனைச் செய்விக்கிறபடியால் 'காரயிதா' (ப்ரேரகன்) என்றும், ஒரு செயலில் முன்னமே செயல்படத் தொடங்கியவனை மேலும் செயல்படச் செய்வதால் 'அநுமந்தா' என்றும், பயிர்களின் முளைகளுக்குத் தண்ணீர்போல் எல்லாச் செயல்களுக்கும் பொதுவான ஹேதுவாக இருப்பதால் 'உதாஸீனன்' என்றும், எல்லா நிலையிலும் யாவற்றையும் கண்டு நிற்பதால் 'ஸாக்ஷீ' என்றும், அவனவனுடைய கர்மங்களையொட்டி ஒவ்வொரு செயலிலும் உடனிருந்து செய்வித்தலால் 'ஸஹகாரி' என்றும் ஈச்வரன் ஒருவனே சாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிறான், ஆகையால் உதாஸீனத்வத்திற்கும் ப்ரேரகத்வத்திற்கும் முரண்பாடு இல்லை. ஆகையால், எல்லா முயற்சிகளிலும் எம்பெருமான் ஜீவனைத் தூண்டி விடுகிறான் என்று கொள்வதால் எக்குறையும் இல்லை என்பது தேசிகனுடைய திருவுள்ளம்.

இங்கே, நடாதூர் அம்மாள் அருளிச் செய்த தத்வஸாரத்தில், "**ஆதாவீச்வரதத்தயைவ புருஷஸ் ஸ்வாதந்த்ரிய சக்த்யா ஸ்வயம் தத்தத் ஜ்ஞாநசிகீர்ஷணப்ரய தநாந்யுத்பாதயந்வர்த்ததே, தத்ரோபேக்ஷ்ய ததோநுமத்ய விததத் தந்நிரக்ஹாநுக்ரஹௌ தத்தத் கர்மபலம் ப்ரயச்சதிததஸ் ஸர்வஸ்ய பும்ஸோஹரி :** (முதலில் ஜீவனுக்கு ஈச்வரனாலே கொடுக்கப்பட்ட ஸ்வாதந்தரியமாகிற சக்தியாலே, (ஜீவன்) தானே அந்தந்த ஜ்ஞானத்தையும், இச்சையையும், முயற்சிகளையும் உண்டாக்கிக் கொண்டு இருக்கிறான். அவ்விடத்தில் (அசாஸ்த்ரீயங்களில் உதாசீனனாகவும் சாஸ்த்ரீயங்களிலே அநுமதி பண்ணியும், (அவ்வோ விஷயங்களில்) அநுக்ரஹத்தையும் நிக்ரஹத்தையும் பண்ணிக்கொண்டு அவ்வோ கர்மபலத்தையும் எல்லா ஜீவர்களுக்கும் ஸர்வேச்வரன் கொடுக்கும்) என்று

அருளியிருக்கிறார். ஆக, இதுவரையில் ப்ரஹ்மஸூத்ரத்தில் பராயத்தாதி கரணத்தையும், அதன் ஸ்ரீ பாஷ்யத்தையும், அதை விளக்கும் நடாதூர் அம்மாளின் தத்வஸாரச்லோகத்தையும் அவருடைய சிஷ்யரான ச்ருதப்ரகாசிகாசார்யரின் பராயத்தாதிகரண ச்ருதப்ரகாசிகையையும், பார்க்கும்போது ஜீவன் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ப்ரதமப்ரவ்ருத்தி எனப்படும் முதல் முயற்சியில் எம்பெருமான் அவனுக்கு ஸ்வாதந்திரியத்தை அளித்திருக்கிறான் என்பது ஸூத்ரகாரர் பாஷ்யகாரர் முதலிய ஆசார்யர்களின் திருவுள்ளம் என்று விளங்குகிறது. ஆயினும், தாத்பர்ய சந்த்ரிகையில் ஸ்ரீவேதாந்த தேசிகர் தம்முடைய ஆசார்யரான வாதிஹம்ஸாம்புவாஹரை (கிடாம்பி அப்புள்ளாரை) மேற்கோளாகக் காட்டி "ப்ரதமப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஸ்வாதந்திரியம் உண்டு" என்பது சரியல்லவென்றும், பூர்வபூர்வகர்மங்கள் காரணமாக உத்தரோத்தரகர்மங்களை எம்பெருமான் தூண்டிவிடுகிறான் என்று கொண்டே வைஷம்யநைர்க்ருண்ய பரிஹாரம் முதலானவற்றைச் செய்துவிடலாம் என்றும் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். இவ்விஷயத்தில் ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்களிடையே உள்ள இக்கருத்து வேற்றுமையே ஸ்ரீதேசிகனுக்கும் மற்ற ஆசார்யர்களுக்கும் ரஹஸ்யப்ரஸ்தாநத்தில் சில முக்கியமான கருத்து வேற்றுமைகள் விளையவும், அது காரணமாக இரண்டு ஸம்ப்ரதாயங்கள் உருவாகவும் காரணமாயிற்று.

ஆகவே, ப்ரஹ்மஸூத்ரகாரரான வ்யாஸர், ஸ்ரீபாஷ்யகாரர், நடாதூர் அம்மாள், ச்ருதப்ரகாசிகாகாரர் முதலான ஸகல ஆசார்யருக்கும் முரணாகவே தேசிகர் திருவுள்ளம் பற்றியிருப்பதால் அவருடைய கருத்து முற்றிலும் வேறுபடுகிறது. அவர் ஹயக்ரீவ உபாஸகர் ஆகையாலே, அந்த வாஸனை அடியாகவந்த ஸ்வயத்நத்தோடு கூடிய கர்த்ருத்வரூபமான அந்த உபாஸனம் ஸ்வரூப விருத்தம் என்பதை இசையாமல், பக்தி ஸ்வரூப விருத்தமன்று, கைவல்யம் மோக்ஷமாகாது, பிராட்டிக்கும் உபாயத்வமுண்டு, லக்ஷ்மீ விபுஸ்வரூபை, பலத்தில் வித்யாஸமில்லை போன்ற தம் கருத்துக்களை அதிகரணஸாராவளி, கீதாபாஷ்யதாத்பர்ய சந்த்ரிகை, ரஹஸ்யத்ரய ஸாரம் முதலான நூல்களில் எழுதி

யிருக்கிறார். ஸ்ரீராமாநுஜருடைய சிஷ்யப்ரசிஷ்யர்களிடையே ஸம்ப்ரதாய விஷயங்களில் சிலகருத்து வேற்றுமைகள் இருப்பதை இவரே தம் நூல்களில் குறிப்பிடுகிறார். அவர்களுடைய கருத்துக்களைத் தம் கருத்தோடு ஒத்தவையாகச் சில இடங்களில் நயனம் செய்கிறார். அப்படி நயனம் செய்ய இயலாவிடில், தம் கருத்தை வலியுறுத்தி மற்றவருடைய கருத்துக்களை கண்டிக்கிறார். அப்படி கண்டிக்கப் பட்டவர்கள்; முறையே ஸ்ரீபாஷ்யக்காரர், நடாதூர் அம்மாள், ச்ருத ப்ரகாசிகாகாரர், பட்டர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத்திருவீதிப் பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், பெரியவாச்சான் பிள்ளை ஸ்வீகார குமாரர் நாயனாராச்சான்பிள்ளை முதலானவர்கள். ஆகையால் இப்படிப் பட்ட மஹாசார்யர்களையெல்லாம் தம் நூல்களில் கண்டித்து தமக்கென்று நவீன ஸம்ப்ரதாயத்தை தோற்றுவித்தார் அது இப்போது தேசிக-ஸம்ப்ரதாயமாக வளர்ந்து வருகிறது.

இதைத்திருவுள்ளம் பற்றியே எம்பெருமானும் "வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி" (திருவிருத்தம்-96) என்கிறபடியே மோக்ஷவிஷயத்தில் ஸ்வயத்நபரரான தேசிக ஸம்ப்ரதாயத்தவர்களையும் ஸ்வயத்ந நிவ்ருத்தி பரரான தென்னசார்ய ஸம்ப்ரதாயத்தவர்களையும் அவரவர் ருசிபேதத்தையிட்டு வளர்த்து வருகிறானாகையாலே, இந்த இருசாரரையும் ஒன்று சேர்ப்பதும், தேசிகர் சொல்லி விட்டார் என்பதற்காக தென்னாசார்ய ஸ்ரீஸூக்த்திகளை அங்கொன்றும் இங்கொன்றும் எடுத்து கண்டிக்க முற்படுவதும், என்ன ந்யாயம்? அப்படியே வரவரமுநி பக்தர்களை தூஷிப்பதும், மணவாள மாமுநிகள் திருவீதியில் எழுந்தருளினால் சன்னதி கதவுகளை மூடுவதும் அவரிடத்தில் த்வேஷத்தை வளர்ப்பதும், க்ரந்தங்கள் எழுதி கண்டிப்பதும், "ஸ்ரீவைஷ்ணவர்கள்" என்று தங்களை தாங்களே பறை சாற்றிக்கொள்ளுவதும் வளர்ந்து வரும் நாஸ்திக உலகத்தில் எவ்விதத்தில் ந்யாயமாகும்? எனவே இவ்விரு ஸம்ப்ரதாயத்தவர்க்கும் ஸம்ப்ரதாய அடிப்படையில் பேதமிருப்பதாலே, அவரவர் ஸம்ப்ரதாயங்களை அவரவர்

ஆசாரியரிடம் கேட்டு உண்மையைத் தெரிந்து கொண்டு பரஸ்பரம் வேற்றுமையில் ஒற்றுமையுடன் வாழ்வதே சிறக்கும். இதோடு நிற்க.

எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பார்ப்போம். "பலத்வார விரோதமென்றும் சொல்லவொண்ணாது, பலன் மோக்ஷமாகையால்" என்று மோக்ஷபலத்தில் வித்யாசமில்லையென்று எழுதுகிறார். மோக்ஷத்திலும் பலம் வித்யாசப்படும் என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தியைக் கொண்டு தெளியப்ராப்தம். அதாவது திருவாய் *10-9-9*-ம் பாசுரம் "வைகுந்தத்தமரரும் முனிவரும்" குணநிஷ்டரும் கைங்கர்யநிஷ்டரும் என்று இருப்பதாலே பரம பதத்திலும் குணாநுபவம் பண்ணுவாரும் கைங்கர்யம் பண்ணுவாருமாயிருக்கிறார்களென்று ஏற்படுகிறது.மேலும்,

"எம்மா வீட்டுத்திறமும் செப்பம்நின்
செம்மா பாதபற்புத்தலை சேர்த்து.......அம்மா!
அடியேன் வேண்டுவதீதே,
(திருவாய் - *2-9-1*) என்னும் பாசுரத்தின்

ஆறாயிரப்படி ப்ரவேசம், "ஸர்வப்ரகாரவிசிஷ்டமான மோக்ஷத்திலும் திருவடியோட்டை ஸம்பந்தமே உத்தேச்யம் என்று அபேக்ஷிக்கிறார்" என்று. அதாவது, ஸாலோக்ய, ஸாரூப்ய, ஸாமீப்ய, ஸாயுஜ்யம் என்று இந்தப்ரகாரத்தோடே கூடியுள்ள ஸ்ரீவைகுண்டத்திலும் மோக்ஷத்தைக் காட்டிலும் எனக்கு உன் திருவடிகளில் எப்போதும் சேர்ந்திருக்கிற ஸம்பந்தமே - பலனே உத்தேச்யம்-தேவையானது. இதனால் பரமபதத்திலும் அதிகாரிக்கனுகுணமாகப் பயனில் வேறுபாடு உள்ளது என்பதை திருக்குருகைப் பிரான்பிள்ளானும் அருளிச் செய்திருக்கிறார்.

இங்கே ஈடு:- *(எம்மா வீட்டுத்திறமும் செப்பம்)*" எவ்வகையாலும் நன்றானமோக்ஷத்து இடையாட்டமும் செப்போம் - சொல்லோம். *(நின்செம்மாபாதபற்புத்தலை சேர்த்து)* உன்னுடைய *(அகவாய்)*உட்புறம் சிவந்து புறவாய் ச்யாமமாய்........ திருவடிகளை கொண்டுவந்து என்தலையிலே வைக்கவேணும். கொக்கும் படுகண்ணியும் போலே,

உன்திருவடிகளும் என் தலையும் சேரவேணும். (அம்மா) ஸ்வாமியே! (அடியேன்) சேஷபூதன் (வேண்டுவது) இதுவாகில் வேண்டுவது (ஈதே) இதுவே. "நின் செம்மாபாதபற்புத்தலைசேர்த்து - வேண்டுவது ஈதே". (ஈதேயானுன்னைக் கொள்வதெஞ்ஞான்றும்) இந்தபயனையே எப்போதும் கொள்வேன் என்று அடுத்த பாசுரத்திலும் சொல்லபடுவதாலே, மற்றைப் பயனும் உண்டென்று பொருளாற்றலால் ஏற்படவில்லையா? "இந்த திருவாய்மொழியில் ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணப்படுகிறது" என்கிறார்கள் நம்முடையபூர்வர்கள். இங்கே, "கொக்கும் படுகண்ணியும் போலே சேஷீயான தேவரீருடைய திருவடியும் சேஷபூதனான அடியேனுடைய தலையும் எப்போதும் சேர்ந்தேயிருக்கவேணும் என்று சொல்லப்படுவதாலே அந்தரங்க கைங்கர்யம் ஸித்தோபாயநிஷ்டருக்கும் ; பஹிரங்க கைங்கர்யம் ஸாதனப்ரபந்நருக்கும் என்று ஏற்படவில்லையா? அடுத்து, திருப்பாவையில் 29-ம் பாசுரம் "சிற்றஞ்சிறுகாலையில்," மற்றைநங்காமங்கள் மாற்று" அதாவது, நாங்கள் "எங்களுக்கு" என்றிருக்குமதுவும் நீயும் "இவர்களுக்கு" என்றிருக்குமதுவும். "உனக்கே நாம் ஆட்செய்வோம்"- "உனக்கே" என்கிற அவதாரணத்துக்குக்கருத்து - நீ உகந்த அடிமை செய்வோம் ; உனக்கும் எங்களுக்குமாயிருக்கிற இருப்பைத்தவிர்ந்து, "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்னுமாப்போலே நீ உகந்த அடிமையாக வேணும். அஹங்காரகர்ப்பமான அடிமை புருஷார்த்தமாகாது என்று ஸித்தோபாய நிஷ்டரான ப்ரபன்ன அதிகாரிகளுக்கே இப்படிப்பட்ட பரார்த்த அநுபவகைங்கர்ய முண்டு என்றும், ஸாதனாந்த்ர பரருக்கு 'தனக்கு' என்கின்ற எண்ணமுடைய ஸ்வார்த்த அநுபவகைங்கர்யமுண்டு என்றும் நாச்சியாரும் அருளிச்செய்தார். இத்தையடியொற்றி ஸ்ரீ பிள்ளை லோகாசார்யரும் தம் ஸ்ரீவசனபூஷணத்தில், "ஸ்வப்ரயோஜநபரருக்கு உத்தேச்யன் நெஞ்சினால் நினைப்பான் யவனென்கிறவன் ; உபாயம் ஸ்வகீய ஸ்வீகாரம்; உபேயம் ஸ்வார்த்த கைங்கர்யம்", என்கிற 265 - ம் ஸூத்திரத்தில் அருளிச்செய்தார். அங்கே மாமுனிகள் வ்யாக்யானம் காண்மின் :- கர்மாத்யுபாயங்களில் துஷ்கரத்வ புத்தியாலே அவற்றை விட்டு ஸுகரத்வ புத்யா ப்ரபத்தியிலே

இழிந்த ஸ்வப்ரயோஜனபரருக்கு உத்தேச்யன் 'நெஞ்சினால் நினைப்பான்யவன்' என்கிறபடியே அர்ச்சாவதார ஸர்வேச்வரன்; உபாயம் அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் அவனை உபாயமாக நினைத்துத்தான் பற்றினபற்று; உபேயம் தனக்குகப்பாகப் பண்ணும் கைங்கர்யம் என்கிறர்மாமுனிகள். எம்பெருமான் திருவடிகளில் தான் பண்ணிய சரணாகதியையே உபாயமாக நினைத்திருக்கும் ஸாதனப்ர பன்னனும் பல தசையில் ஸ்வபோக்த்ருத்வம் ஆகிற சுயநலம்கலந்தே வருவதால் எம்பெருமானுக்கு கைங்கர்யம் பண்ணும்போது தனக்கின்பம் என்கிற எண்ணத்தோடே பண்ணுகிறான். ஆனால், ஸித்தோபாய நிஷ்டனோ என்னில்? அத்யந்த பாரதந்தர்யத்தையுடைய ஸ்வரூபத்துக்குச்சேர, கைங்கர் யத்தைத் தனக்காகப் பண்ணாமல், அவனுக்கும் தனக்கும் பொதுவாகவும் பண்ணாமல் "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" (திருவாய்-2-9-4) என்கிறபடியே கைங்கர்யத்தை எம்பெருமான் முகமலர்த்திக்காகவே கைங்கர்யம் பண்ணுகிறான். ஸித்தோபாயநிஷ்டன்படி :- அதாவது, கர்மஜ்ஞான, பக்தியாகிற உபாயந்தரங்களை வாசனையோடே மறுவலிடாபடி பூர்ணமாக த்யாஜம் பண்ணி, எம்பெருமான் திருவடிகளில்தான் - பண்ணிய பரஸமர்ப்பனமாகிற சரணாகதியையும் உபாயமாகக் கொள்ளாமல், பேற்றுக்கு உபாயம் 'அவன் திருவருளே' என்கிற மஹாவிச்வாச பூர்வகமான திடசிந்தையுள்ளவனாய், நம : பதத்தில் சொல்லப்பட்ட அத்யந்த பாரதந்தர்யத்தை ஸ்வரூபமாகயுடைய தன் இயல்பையும், சகாயாந்த்ர நிரபேக்ஷமாகிற (ரக்ஷிக்கும் போது வேறு துணையை விரும்பாத) எம் பெருமானுடைய இயல்பையும் அறிந்தவனே முழுமுதல் ஜ்ஞானி, இவனே ஸித் தோபாயநிஷ் டனாவான் .

இனி, கைங்கர்யத்தில் பலபேதம் உண்டு என்பதை பெரியோர்கள் நிரூபித்திருப்பதை இங்கே காண்மின்;- (1) அதாவது, "ஸித்தோபாயநிஷ்டன் பரம புருஷனிடம் ஒப்பற்ற அன்பை உடையவனாயிருக்கிறானாகையால், பரமபுருஷன் தன்னாலேயே மேல் விழுந்து வரிக்கப்படுகிறானாகையால் அவன் பரார்த்த பலனையே (பகவானுக்கு செய்யும் கைங்கர்யத்தையே) அடைகிறான் என்று ஸித்திக்கிறது.

(1) இது ஸுதர்சனத்தில் ஸித்தோபாயவிஜயத்தில் வெளிவந்த விஷயம்.

ஸாதனாந்தர நிஷ்டனோவெனில், தன்னால் அநுஷ்டிக்கப்படும் பக்திமுதலானவற்றில் - தான் விரும்பும் பலத்திற்குஸாதனமாயிருக்கின்றன என்னும் புத்தியையுடையவனாயிருக்கிறானாகையால், பகவானிடம் ஒப்பற்ற அன்பற்றவனாகையால், "வந்தடைந்தவனை ஏற்றுக்கொள்வது" என்னுமுறையிலேயே அவனை எம்பெருமான் ஏற்றுக்கொள்ளுகிறானாகையால் அவன் ஸ்வார்த்த பலத்தையே (தனக்காக என்னும் பயனையே) அடைகிறான் என்று ஸித்திக்கிறது. இவ்விருவிதமான அதிகாரிகளுக்குமுள்ள ருசிபேதத்தாலே தாம் தாம் விரும்பும் பலங்கள் ஸ்வார்த்தமாகவும், பரார்த்தமாகவும் (எம்பெருமானுக்கேயாகவும்) ஆகின்றன. இப்படி அதிகாரிகள் இருவகைப்படுவர் என்பது ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்கரகாசிகையில், பின்வருமாறு அருளிச்செய்யப் பட்டிருக்கிறது;- (ப்ரியதம ஏவஹி வரணீய;-மிக மிகப்ரீதிக்கு விஷயமானவனே வரிக்கத்தக்கவன்.) ப்ரீதிக்கு விஷயமானவன் மாத்திரம் வரிக்கத்தக்கவனாகி விடமாட்டான். வந்தடைந்தவனை ஏற்றுக்கொள்வது என்னும் முறையிலே அவன் ஏற்றுக்கொள்ளத்தக்கவனாக மாத்திரம் ஆகிறான். இத்தகைய அதிகாரியை வேறு படுத்துவதற்காக "ப்ரியதம" (மிகமிகப்ரீதிக்கு விஷயமானவன்) என்கிறார் ஸ்ரீபாஷ்யகாரர் என்பது, "ப்ரியதம ஏவஹிவரணீகளுக்கு ச்ருதப்ரகாசி கையா-கும். இந்த ச்ருதப்ரகாசிகா, க்ரந்தத்திலிருந்து "என்பலனுக்கு ஸாதனமாயிருக்கையால் இச்செயல் எனக்காக ஏற்பட்டது என்னும் புத்தியுடன் ஸாதநாந்தரங்களில் ஈடுபடுகையால், ஸாதநாந்தர நிஷ்டர்களுக்குத் தமக்கான மோக்ஷத்திலேயே ஒப்பற்ற அன்பிருக்கையால், பகவானிடம் ஒப்பற்ற அன்பு இல்லாமையால் பகவானால் இவர்கள் வரிக்கத்தகாதவர்களாகிறார்கள். பெருவள்ளலான எம்பெருமான் வந்தடைந்தஇவர்களிடமும் ப்ரீதியைக்காட்டி ஏற்றுக்கொள்ளுகிறானேயொழிய தானே மேல் விழுந்துவரிப்பதில்லை. தன்னிடம் ஒப்பற்ற ப்ரீதியுடைய அதிகாரிகளையே மேல் விழுந்து வரிப்பானாகையால்" என்னும் கருத்து விளங்குகிறது. ஆகையால், ஸாதநாந்தர நிஷ்டர்கள் விரும்புவதும் (பெறுவ-தும்) "தமக்கு" என்னும் எண்ணங்கலந்த மோக்ஷமே என்னும், ஸித்தோபாயநிஷ்டர்கள் விரும்புவதும் (பெறுவதும்) "உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்னும் எண்ணங்கலந்த மோக்ஷமே என்றும் விளங்குகிறது.

இங்கு சிலர் பின் வருமாறு ஆக்ஷேபிக்கின்றனர்;- மோக்ஷமடைய விரும்புகிறவர்களிலே ஸித்தோபாய நிஷ்டர்களாயிருப்பவர்களுக்குப் பரார்த்த மோக்ஷம் ஸித்திக்கிறது என்றும், ஸாதநாந்தர நிஷ்டர்களாயிருப்பவர்களுக்கு ஸ்வார்த்தமோக்ஷம் கிடைக்கிறதென்றும் பிரித்துச்சொல்லுவது பொருந்தாது என்று. இவ்வாக்ஷேபத்திற்கு நமது ஆசார்யர்கள் பின்வருமாறு ஸமாதாநம் கூறுகிறார்கள்;- முற்கூறப்பட்ட ஸாதநாந்தர நிஷ்டர்ஸித்தோபாய நிஷ்டர் என்னும் அதிகாரிபேதமும், அவர்களுக்கு ஏற்படும் ஸ்வார்த்த பரார்த்தரூப மோக்ஷபேதமும் ப்ராமாணிகமேயாகும். ஸாதநாந்தர நிஷ்டர்களுக்கு பகவானிடம் ஒப்பற்ற ப்ரீதி இல்லையாகையால் பகவானால் வரிக்கத்தக்க ஸித்தோபாய நிஷ்டர்களைக்காட்டிலும் அவர்களுக்கு வேறுபாடு சாஸ்த்ரஸம்மதமேயாகும். மூன்றுவிதமான பாவனைகளோடு கூடியிருக்கையால் ஸ்வார்த்த பரார்களாகவும், அஸுத்தர்களாகவும், உபாஸிக்கத்தகாதவர்களாகவுமிருப்பர்கள் ஸாதநாந்தர நிஷ்டர்கள் - என்று மிகத்தெளிவாக பகவான் பராசரரால் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்"த்ரிவிதா பாவநாபூப விஸ்வமேதந்நிபோத தாம் ! கர்மாக் யாப்ரஹமஸம் ஜ்ஞாசததாசைவோபயாத்மிகா ! கர்மபாவத்மிகா ஹ்யேகா ப்ரஹ்மபாவாத்மிகாSபரா! உபயாத்மிகாததை வாந்யாத்ரிவிதா பாவபாவநா ஸநந்த நாத யோ ப்ரஹ் மபாவபாவநயா யுதா; கர்மபாவநயா சாந்யே தேவாத்யா: ஸ்தாவராவரா: ஹிரண்யகர்பாதிஷு சப்ரஹம்ம கர்மாத்மிகாத்விதா அதிகார போதயுக்தேஷு வித்யதே பாவபாவநா அக்ஷீணேஷுஸமஸ்தேஷுவிசேஷஜ்ஞா நகர்மஸு [ வி.பு.6-7.48.....82 ] (அரசனே! இவ்வுலகம் முழுவதும் மூன்று விதமான பாவனையோடு கூடியது. அதைக் கூறுகிறேன் கேளாய். கர்மபாவனை, ப்ரஹ்மபாவனை, உபயபாவனை என்பதே அம்மூன்றுமாகும். அநுஷ்டிக்கத்தக்கதை விஷயமாகக் கொண்ட பாவனைகள்(மனத்தின் முயற்சிகள்) கர்மத்தை விஷயமாகக் கொண்டதென்றும், உபாஸநத்தை விஷயமாகக்கொண்டதென்றும். இரண்டையும் விஷயமாகக் கொண்டதென்றும் மூன்றுவகைப்படும். ஸநந்தநர்முதலானார் ப்ரஹ்மபாவனை என்னும் உபாஸநாநுஷ்டானத்தோடு கூடியவர்கள். தேவமநுஷ்யதிர்யக் ஸ்தாவரரூபமான மற்ற பலர் கர்ம

பாவனையோடு கூடியவர்கள். ப்ரஹ்மா முதலான அதிகாரிபுருஷர்கள் உபயபாவனையோடு கூடியவர்கள் அநுஷ்டிக்கத்தக்கதை விஷயமாகக் கொண்ட இந்த பாவனைகள் - "தான் விரும்பும் பலனுக்கு இவையிவை ஸாதனங்கள்"என்னும் அதிகாரஜ்ஞானம் உடையவர்களாய், தேஹாத்மாபிமானமும் அதற்கு அடியான எல்லாக் கர்மமும் நீங்கப் பெறாதவர்களுக்கே உள்ளன). என்று கூறப்பட்டது. இந்த ஸ்ரீவிஷ்ணு புராணச்லோகங்களின் பொருள் வேதார்த்த ஸங்க்ரஹச்ருதப்ரகாசிகையில் விரிவாகக் காட்டப்பட்டது ;- "விஸ்வமேதத் (இவ்வுலகனைத்தும்) - த்ரிவிதாபாவநா - மூன்று பாவனைகளோடு கூடியது என்றுபொருள். தாம் - அந்த மூன்றுவிதமான பாவனைகளோடு நிபோத (கேள்) .(கர்மாக்யா) - என்று தொடங்கி மூன்று பாவனையையும் வரம்புகட்டும் பெயர்களாலே காட்டுகிறார். கர்மாக்யா - கர்மபாவனை என்றுபொருள். ஒருபாவனையே கர்மப்ரஹ்மஉபயரூபமான மூன்று பெயர்களை உடையதெனக் கருதாமலிருப்பதற்காக (கர்மபாவாத்மிகா) என்னும் ச்லோகத்தை இடுகிறார். பாவபாவநா - பாவார்த்தா: "கர்மஸப்தாதேப்ய: க்ரியாப்ரதியேத" (பூர்வமீமாம்ஸை 2-1-1) "யஜ" முதலான கர்மவாசிஸப்தங்கள் அநுஷ்டிக்கத்தக்கதைப் பொருளாகக் கொண்டவை; (யஜேத) முதலான பதங்களால் க்ரியை (அபூர்வம்) கல்பிக்கப்படுகிறது) என்னும் வசனத்திலிருந்து பாவஸப்தம் அநுஷ்டிக்கத்தக்கதைக் குறிக்கிறதென விளங்குகிறது. அநுஷ்டிக்கத்தக்கதை விஷயமாகக் கொண்ட மனத்தின் முயற்சியாகிற பாவனை பாவபாவனை எனப்படுகிறது: அது கர்மரூபமான அநுஷ்டிக்கத்தக்கதை விஷயமாகக் கொண்டதாம்போது கர்மபாவனை என்றும். உபாஸநரூபமான அநுஷ்டிக்கத்தக்கதை விஷயமாகக் கொண்டதாம்போது ப்ரஹ்மபாவனை என்றும், கர்மோபாஸனங்களான இரண்டு அநுஷ்டேயங்களையும் விஷயமாகக் கொண்டதாம்போது உபயபாவனை என்றும் மூன்று விதமாகக் கூறப்படுகிறது. (ஸநந்தநாதய : இத்யாதி) ஸநந்த நாதிகள் ப்ரஹ்ம பாவ பாவனையோடு கூடியவர்கள் ; உபாசநரூபமான அநுஷ்டேயத்தை விஷ்யமாகக் கொண்ட பாவனையோடு கூடியவர் என்று பொருள். (இங்கு ப்ரஹ்மஸப்தம் உபாஸநரூபமான ஜ்ஞானத்தைச் சொல்கிறது.

'ஆகமத்தினால் உண்டானதாகவும், விவேகத்தினால் உண்டானதாகவும் ஜ்ஞானம் இருவகையாகக் கூறப்படுகிறது.

'ஆகமங்கள் ஸப்தப்ரஹ்ம மென்றும், விவேகத்தினால் உண்டாகும் உபாஸநஜ்ஞானம் மேலான ப்ரஹ்மமென்றும் கூறப்படுகிறது' *(வி-பு6-5-61)* "இரு ப்ரஹ்மங்கள் (ஜ்ஞானங்கள்) அறியத்தக்கவை? *(வி-பு-6-5-64)* 'இரு வித்யைகள் அறியத்தக்கவை' என்று ஆதர்வணச்ருதி கூறுகிறது. *(வி-பு-6-5-65)* என்னுமிடங்களில் ப்ரஹ்ம சப்தமானது ஜ்ஞானமென்றும், வித்யையென்றும் கூறப்படும் ஆகமத்தாலுண்டாகும் அறிவையும், உபாஸநரூபமான அறிவையும் குறிப்பதாக பகவான் பராசரரால் விவரிக்கப்பட்டுள்ளதன்றோ. "ஸ்தாவராவரா :" என்னுமிடத்தில் ஸ்தாவரசப்தத்தினால் அந்தந்த ஸ்தாவரத்திற்கு அபிமானிதேவதை குறிக்கப்படுகிறது. ஸநந்த நாதிகளுக்கு ஸமாதி விரோதியான எல்லாக் கர்மங்களும் கழிகையால் ஸமாதி பூர்ணமாக நிறைவேறுகையால், எப்போதும் ப்ரஹ்மத்தை அநுஸந்திப்பதிலேயே அவர்கள் ஈடுபட்டிருக்கையால் கர்மநுஷ்டாநத்திற்குப்போது இருக்காது. அங்கியான உபாஸநத்திற்கு விரோதமில்லாத ஸமயத்திலன்றோ அங்கமான கர்மத்தை அநுஷ்டிக்கலாம். இப்படி உபாஸநமே போதுபோக்காயிருக்கையால் ஸநந்தநாதிகள் ப்ரஹ்ம பாவனையோடு கூடியவர்கள் பிரமன் முதலானார் உலகைப்படைப்பது முதலான தொழிலில் ஈடுபட்டிருக்கையால் சில சமயம் கர்மாநுஷ்டானத்திலும், சில சமயம் உபாஸனத்திலும் ஈடுபட்டிருக்கையால் அவர்கள் உபயபாவனையோடு கூடியவர்கள். தேவமநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்களில் மற்றவர்கள் கர்மபாவனையோடு கூடியவர்கள். 'ஸநந்த நாதிகள்', ஹிரண்யகர்ப்பாதிகள், தேவாதிகள் என்ற விடங்களில் ஆதிசப்தத்திற்குப் பொருள் என்ன? ஆதிசப்தத்திற்கு ஸங்கோசமில்லாமையால் முக்தர்களுக்கும் கர்மப்ரஹ்மபாவனைகள் ஏற்படலாமே? என்னும் ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இந்த பாவனைகள் ஏற்பட காரணத்தைக் கூறுகிறார் (அதிகார) என்று தொடங்கி, கர்மத்தை 'நான்' ஈச்வரன் (நிறைவேற்றுபவன்) என அறிகை அதிகாரம் என்பது அதிகார லக்ஷணம்.

தன் பயனுக்கு ஸாதநமாயிருப்பதால் கர்மம் தன்னுடையது என்று அறிவது அதிகாரம் என்று கருத்து. அதிகாரபோதயுக்தேஷு - அதிகாரரூபமான அறிவோடு கூடியிருப்பவர்களிடத்தில்; அநுஷ்டிக்கத் தக்கஸாதனத்தில் தன்னுடையது என்னும் அறிவோடு கூடியிருப்பவர்களிடத்தில் முமுக்ஷுவுக்கு உபாஸனத்தில் தன்னுடையது என்னும் புத்தியும் புபுக்ஷுவுக்குக் கர்மத்தில் தன்னுடையது என்னும் புத்தியும் உள்ளது. அதிகாரம் பற்றிய அறிவு யாருக்கு? என்னச் சொல்லுகிறார் (அக்ஷீணேஷு) என்று தொடங்கி (விசேஷஜ்ஞாநகர்மஸு) - விசேஷஜ்ஞானமாவது - 'நான் தேவன், நான் மனிதன்' முதலான அறிவு. இந்த விசேஷஜ்ஞானமும், அதற்குக் காரணமாக கர்மங்களும் இருக்கும்போது அதிகாரபோதம் ஏற்படும். அதை உடையவர்களுக்கே பாவநாத்ரயம் கூடுமாகையால் முக்தர்களுக்கு அது ஏற்படாது என்று கருத்து" என்பது முற்கூறிய ஸ்ரீவிஷ்ணுபுராண ச்லோகங்களுக்கு ச்ருதப்ரகாசிகாசார்யர் அருளிய விவரணம்.

இதில், முமுக்ஷுவான உபாயாந்தரநிஷ்டனுக்குத் தன்பயனின் ஸாதனமாயிருப்பது என்னும் ஸ்வார்த்ததாபுத்தி (தனக்கென்னும் எண்ணம்) தெளிவாகக் கூறப்படுகையால், தாம் விரும்பும் மோக்ஷ ரூபமான பயனிலேயே ஒப்பற்ற ப்ரீதி அவர்களுக்கு உள்ளதாகையாலும், அதன் பொருட்டே உபாஸநமான ஸாத்யோபாயத்திலும், ஸித்தோபாயமான பகவானிடத்திலும் ப்ரீதி உள்ளதாகையாலும் பகவானிடத்தில் ஒப்பற்ற ப்ரீதி இல்லையாகையாலும் உபாயாந்த்ர நிஷ்டர்களுக்கு பகவானால் வரிக்கத்தக்க பெருமை இல்லை. அவர்கள் விரும்பும் மோக்ஷமும், அவர்களால் அநுஷ்டிக்கப்பட்ட ஸாதனத்தால் ஏற்பட்ட சுயநலமாகிற ஸ்வார்த்ததை கலந்திருக்குமாகையால், பரார்த்த மோக்ஷமாகிற தலைசிறந்த மோக்ஷம் அவர்களுக்குக் கூடாதாகையால் முற்கூறிய அதிகாரி பேதத்தையும் பலபேதத்தையும் ஒப்புக் கொள்வதில் விரோதமில்லை.

ஸித்தோபாயநிஷ்டர்களுக்கோவெனில், "ஆகையால், ஸாக்ஷாத்காரரூபமான நினைவு - நினைக்கப்படுவது மிக இனிதாயிருக்கையால் தானும் எவனுக்கு இனிதாயிருக்கிறதோ,

அவனே பரமாத்மாவால் வரிக்கத்தக்கவனாகிறான்" என்னும் லகுஸித்தாந்த ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்த ரீதியில் பகவானிடம் ஒப்பற்ற ப்ரீதியினாலே தாம் அநுஷ்டிக்கும் பக்தி முதலானவற்றிலும் ஸ்வயம் ப்ரயோஜனம் என்னும் அறிவு இருக்கையால், அவர்களுக்கு பகவானால் வரிக்கத்தக்க பெருமையிருக்கத் தடையில்லை. அவர்களுக்கு கிடைக்கும் மோக்ஷத்திலும் "விசேஷமாக வணங்கிய பலவிதமான ஜீவராசிகளை ரக்ஷிப்பதையே விரதமாகக் கொண்டவனிடத்தில்" (ஸ்ரீபாஷ்யமங்களம்) என்று ஸ்ரீபாஷ்யக்காரர் அருளிச்செய்த ரீதியில் அவனுக்கே ஆயிருக்கை கூடுமாகையால், ஸாதநாந்தர நிஷ்டருக்கும் ஸித்தோபாய நிஷ்டருக்கும் அவர்களுக்கு கிடைக்கும் பலன்களுக்கிடையே இவ்வாறுவேறுபாடு எளிதில் விளக்கத்தக்கதேயாகும். இக்கருத்தினாலேயே ச்ருத ப்ரகாசிகாசாரியர் "தானே வந்தடைந்தவனை ஏற்றுக்கொள்வது ப்ரீதிவிஷயத்வம் என்று அருளிச்செய்தார். இந்த ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தியை ஐஸ்வர்யார்த்தி விஷயமாக கொண்டுவிடலாமே எனக்கூறுவதும் பொருந்தாது. அப்படிக் கொண்டால் 'ப்ரியதம ஏவ வரணீயோபவதி என்றவிடத்தில் 'தமப்' ப்ரத்யயத்தை (Superlative degree) பிரயோகித்திருப்பது பயனற்றதாகும். தரதம ப்ரத்யயங்கள் (Comparative and Superlative degree) மேன்மேலே சிறந்தவற்றைக் குறிக்கின்றனவென்பது அனைவரும் இசைந்த தாகையால், 'ஐஸ்வர்யார்த்திகள், ப்ரியர்கள், ஸாதநாந்தரநிஷ்டர்கள் ப்ரியதரர்கள், ஸித்தோபாய நிஷ்டர்கள் ப்ரியதமர்கள்' என்று ஸ்வரசமாக விளங்குகையால் அந்த ஸூக்தியை ஐஸ்வர்ய கைவல்யார்த்திபரமாக நிர்வஹிப்பது பதஸ்வாரஸ்யத்துக்கு முரண்பட்டதாகும்.

இதற்குமேல், 'ஐஸ்வர்யார்த்திகள் ப்ரியர்கள், கைவல்யார்த்திகள் ப்ரியதரர்கள், பகவதநுபவத்தை விரும்புகிறவர்கள் ப்ரியதமர்கள் - என்று தரதம ப்ரத்யயங்களுக்கு பொருள் கொண்டு விடலாமாகையாலே ஸாதநாந்தர ஸித்தோபாய நிஷ்டர்களுக்கிடையே வேறுபாட்டை அந்தக்ரந்தம் கூறவில்லையென நிர்வஹித்து விடலாமே ; இக்கருத்தினாலேயே 'இவர்கள் அனைவரும்

உதாரர்களே, ஜ்ஞானியோவெனில் எனக்கே ஆத்மாவா யிருப்பவன் என்பது என் ஸித்தாந்தம்' (கீதை 7-18) என்று கூறுவதன் மூலம் ஐஸ்வர்ய கைவல்யார்த்திகள் விஷயத்தில் எம்பெருமான் தன் வண்மையை மாத்திரம் காட்டி, பகவ-துபாஸனத்தை இயல்வாகக்கொண்ட ஜ்ஞானிகளைத் தன் ஆத்மாவைப்போல் இனியவர்களாகக் கூறினான்". என்று கூறுவதும் பொருந்தாது. தனக்குப் பெருமையை விளைக்கும் மோக்ஷத்தை விரும்பி ஸாதநாநுஷ்டாநம் செய்யும் தாழ்வுடையவர்களே ஸாதநாந்தரநிஷ்டர்களாகையால், அவர்களையும் கைவல்யார்த்திகளோடு சேர்த்துத் 'தமப்' ப்ரத்யயத்தினால் வேறுபடுவதாக கொள்வதே உசிதமாகும். ஜ்ஞாநியோவென்னில் :- 'எப்போதும் என்னிடம் சேர்ந்திரு ப்பதையே விரும்புகிறவர்கள்' (கீதை 10-10) 'என்னோடு விரும்புகிறவனன்றோ அவன்' (கீதை 7-18) "(உண்ணும்சோறும் பருகுநீர்... எல்லாம் கண்ணன் முதலான விடங்களில் சொன்னபடி பரம புருஷனிடமே ஒப்பற்ற ப்ரீதியை உடையவனாகையால் வரிக்கத்தக்க ஆத்ம பூதனாகிறா னாகையால் 'உதாரா:" எனப்பட்ட மற்றவர்களோடு சேரமாட்டான்.

ஸித்தோபாய நிஷ்டர்களுக்கு மூல மந்திரத்தால் உண்டான ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞானம் (ஆத்மாவின் நிலையை உள்ளபடி உணரும் அறிவு) உள்ளதாகையால் எப்போதுமே தம்முயற்சி செய்வதோ பொருந்தாதாகையால் பாவநாத்ரயம் (மூன்று பாவனை) அவர்களுக்கு உள்ளதென்று கூறமுடியாது.

ஸாதநாந்தர நிஷ்டருக்கோவெனில் 'என்ப்ரவ்ருத்தி களுக்கு நான் ஈச்வரன்' என்னும் அறிவு இருந்தே தீரவேண்டுமாகையால், பல ஸாதனங்களில் அத்யந்த பாரதந்தர்யத்தை அவர்களிசையமாட்டார்களாகையாலே, முற்கூறிய அதிகாரி வைலக்ஷண்யம் தவிர்க்க முடியாததேயாகும் என்று அயோத்தி ஜீயர் ஸ்வாமி முமுக்ஷுப்படி வ்யாக்யானம் த்வயப்ரகரணத்தில் நிரூபித்திருப்பதையும்.

"தத்க்ரது ந்யாயம் அயோகவ்யவச்சேதகமானாலும் அவிருத்தாம்சத்துக்கு ஸங்க்ரஹம் ஸித்திக்குமல்லது விருத்தாம்

சத்துக்கும் ஸங்க்ரஹம் வாரது. ந்யாய ஸஹஸ்ரத்தாலும் விருத்த பலங்களுக்கு ஸமாவேசம் ஸித்தியாதே. ஆகையால் அநுபவ கைங்கர்யங்களிலே ஸ்வார்த்தத்வே ததபாவங்களுக்குக் கதஞ்சிதபி ஸமாவேசம் கூடாதாகையாலே உபாயாந்தர ஸ்வகீய ஸ்வீகாரநிஷ்டருக்கு ஸ்வார்த்ததா விசிஷ்ட அநுபவகைங்கர்யங்களும் அதிகாரி விசேஷண ப்ரபத்தி நிஷ்டருக்கு ஸ்வார்த்ததாரஹித அநுபவ கைங்கர்யங்களும் பலம் என்று கொள்ளவேணும். அவர்களுக்குப் பல தசையில் ஸ்வார்த்ததை கழியுண்ணும் என்னில், அயோகவ்யவச் சேதஹா நம் ப்ரஸங்கிக்கும் கழியுண்ணாவிடில் ஸ்வார்த்தத்வா பாவம் ஸித்தியாது. ஆகையால் தத்க்ரதுந்யாயத்தாலே அயோக வ்யவச்சேதம் ஆவச்யகமாகையாலே ஸ்வார்த்தத்வ ததபாவாப்யாம் பல வைஷயம்யம் த்ருடம். இவ்வர்த்தம் இந்த மூலஸ்வாரஸ்ய ஸித்தம். (ஸூ 264) வ்யாக்யாநத்திலும் விப்ரதிபத்தி நிபந்தநமான உத்தேஸ் யாதிபேதங்களை என்கிற நிர்தேசத்தாலும் இதுஸித்தம். உத்தே ச்யாதி பேதங்கள் விப்ரதிபத்தி விஷயங்களல்லது வாஸ்தவ பேதமில்லை என்று அர்த்தமெனில்? நிபந்தநசப்த ஸ்வாரஸ்யமில்லை. உத்தேச்யாதி பேதசப்தம் தத்ப்ரதி பத்திபரம் என்னில்? லக்ஷணை ப்ரஸங்கிக்கும். ஆகையால், உத்தேச்ய உபாய பேதத்வத் உபேயே பேதமும் வஸ்துத : என்கை ஸூ சிதம்". என்று (ஸ்ரீ வசநபூஷணம் 267 ஸூ த்ர அரும்பதவுரையில்) திருமழிசை அண்ணாவப்பங்கார் ஸ்வாமி நிரூபித்திரு ப்பதையும் கண்டு கொள்க.

"ஸாதநாந்தர ஸாத்ய மோக்ஷஸ்ய நரக ஹேதுத்வ பாவேSபி............................................ ஆனந்தம்யோ தாரதம்யம் நாஸ்தி "

(ஸாதநாந்தரங்களால் ஸாதிக்கப்படும் மோக்ஷம் நரகத்தையளிக்காவிடினும், அகிஞ்சநாதிகாரிகள் விரும்பும் பரார்த்தாநுபவ கைங்கர்யங்களைக் காட்டிலும் மிகவும் விரும்பத்தகாதவையான ஸ்வார்த்தாநுபவ கைங்கர்யங்களையே விளைக்கும் என்று கருத்து. இவ்வண்ணமாக பலபேதத்துக்கு ப்ரமாணத்தைக் கூறுகிறார்:- (தர்மாந் என்னும் நிஷேத பலத்தாலே) (ஸூ 224 ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸாபாஷ்யம்)

என்று 'உள்ளிப்பூண்டைத் (வெள்ளைப்பூண்டைத்) தின்னலாகாது' என்னும் சாஸ்த்ரநிஷேதம் (சாஸ்த்ரத்தால் தள்ளப்படுபவை) 'உள்ளிப்பூண்டைத் தின்ன இயலாது' என்னும் காரணத்தாலோ 'உள்ளிப்பூண்டைத்தின்பது இனியதல்ல' என்னும் காரணத்தாலோ அதை நிஷேதிப்பதாகக் கொள்ள முடியாது. 'உள்ளிப்பூண்டைத்தின்றால் தமோகுணம் மிகுதியாக ஏற்பட்டு பகவத்விஷயத்தில் ஜ்ஞானக் குறைவு ஆகிற பெரிய நஷ்டம் ஏற்படும் என்னும் காரணத்தாலேயே சாஸ்திரம் அதை நிஷேதிக்கிறது (தடைசெய்கிறது) என்றே கொள்ளவேண்டும். அதுபோல் இங்கும் உபாயாந்தரத்யாகத்தைச் செய்யாவிடில் பெரிய அநிஷ்டங்களான ஸ்வார்த்தாநுபவ கைங்கர்யங்கள் ஏற்பட்டுவிடும் என்னும் கருத்தாலேயே, உபாயாந்தர நிஷேதம் செய்யப்படுகிறதெனக்கொள்ள வேண்டும். "ப்ரஹ்மத்தை உபாஸிப்பவன் கல்யாண குணங்களை அநுபவிக்கிறான்". முதலான உபாஸனவிதிகளில் ஸ்வார்த்தாநுபவமும் சரணாகதிவிதிக்கு த்வயத்தின் உத்ரவாக்யத்தில் பரார்த்த. கைங்கர்யமும் பலமாக கூறப்படுவதை ஆராய்ந்து பலபேதத்தை அறியலாமாயினும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" - என்னும் இந்தநிஷேத வாக்யத்தாலேயே மிகத் தெளிவாக அதை (உபாயாந்தரத்யாகத்தை) அறியலாமாயிருக்கும் போது, 'பல வாக்கியங்களில் உள்ள விதியை ஆராயவேண்டா' என்னும் கருத்தாலே கூறுகிறார் நிஷேத பலத்தாலேயே) என்று.........ஸ்வார்த்தாநுபவம் ஸ்வரூபத்துக்குத்தகாததாகவும், பரார்த்தாநுபவம் ஸ்வரூபத்துக்குத் தக்கதாகயிருந்தபோதிலும். இரண்டுமே மிகமிக இனிதான பரமாத்ம ஸ்வரூபரூபகுண விபூதிகளைப் பற்றியிருக்கையால், இரு அதிகாரிகளுக்கும் ஆனந்தத்தில் ஏற்றத்தாழ்வு கிடையாது) என்று சரமஸ்லோகடிப்பணி ஏழாம்வாதத்திலும், "உபாஸக சரணாகதிமோக்ஷயோ: அனந்த தாரதம்யம் நாஸ்தி................. ஸித்தாந்தி தத்வாத்" (உபாஸகனுக்குக்கிடைக்கும் மோக்ஷத்திற்கும், சரணாகதனுக்குக்கிடைக்கும், மோக்ஷத்திற்கும் ஆனந்தத்தில் ஏற்றத்தாழ்வுயில்லை. முந்தியது ஸ்வார்த்தமாகவும், பிந்தியது பரார்த்தமாகவும் உள்ளது என்பதே அவற்றிற்கிடையே உள்ளவேறுபாடு மாத்வமதத்தில் ஆனந்தத்தில் வேறுபாடு ஒப்புக்கொள்ளப் படுகையாலும்,

நம்மால் அது ஒப்புக் கொள்ளப்படவில்லையாகையாலும் நம்முடைய பலபேதஸித்தாந்தத்தை மாத்வமத ப்ரவேசமாகக்கொள்ள முடியாது) என்று கடிநபத தீபிகையிலும் உள்ள நிரூபணங்களைக் கண்டு கொள்க. "மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு" என்னா நின்றதிறே', என்ற முமுக்ஷுப்படி ஸூத்ரத்தையும், "அவ்விஷய வைலக்ஷண்ய ப்ரயுக்த மாய்வரும் ஸ்வபோக்த்ருத்வ புத்தி அங்கும் விளைகையாலே" என்ற மாமுனிகள் வ்யாக்யாநத்தையும் ஸேவிப் போர்க்கு இது தெளிந்த விஷயம்.

இவ்வளவால் ஸாதநாந்தரநிஷ்டரான பக்திநிஷ்டருக்கும், ஸாதன ப்ரபன்னருக்கும், ஸித்தோபய நிஷ்டரான ப்ரபத்தி நிஷ்டருக்கும் அதிகாரி பேதத்தாலே மோக்ஷத்திலும் பலவேறுபாடு காட்டப்பட்டது "விகல்போS விசிஷ்டபலத்வாத்" என்னும் ஸூத்ரத்தைக் கொண்டு மோக்ஷத்தில் பலத்தில் தாரதம்யம் (வித்யாசம்) கிடையாது என்பார்கள். அந்த ஸூத்ரத்தில் சொன்னது, ஆனந்தத்தில் வித்தியாசம் கிடையாது என்று சொல்ல வந்ததே தவிர பலத்தில் ஏற்றத்தாழ்வை சொல்ல வந்தது அன்று. இங்கு ஒரு த்ருஷ்டாந்தத்தைக் காட்டி விளக்குகிறோம். ஒரு மனிதனுக்கு மூன்று மனைவிகள். ஒருத்தி புருஷனுடைய உகப்புக்காக அவனுக்கு பணிபுரிந்து ஸம்ச்லேஷிக்கிறாள்; இரண்டாமவள் தன் உகப்புக்காக அவனுக்கு பணிபுரிந்து ஸம்ச்லேஷிக்கிறாள் ; மூன்றாமவள் அவனுக்கு பணிபுரிவதில் ஈடுபாடில்லாமல் அவனுடைய அழகு குணங்களில் ஈடுபட்டு அனுபவித்துத்தன் உகப்புக்காக ஸம்ச்லேஷிக்கிறாள். இவர்கள் அனைவர்க்கும் ஸம்ச்லேஷ ஆனந்தம் (கூடிக்களிப்பது) ஒன்றாயிருப்பதில் தட்டில்லை யன்றோ. அதுபோலவே ஸித்தோபாய நிஷ்டர், ஸ்வகத ஸ்வீகார நிஷ்டர், உபாயாந்தரநிஷ்டர் ஆகிய மூவருக்கும் பலத்தின் ஆகாரத்தில் பேதமிருந்தாலும் ஆனந்தத்தின் அளவில் பேதமில்லை என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். தேசிகனுக்கு முற்பட்ட பிள்ளான் நடாதூர் அம்மாள், ச்ருதப்ரகாசிகாசாரியர் முதலான பூர்வாசாரியர்கள், "எம்பெருமான் ஜீவனுக்கு முதல் முயற்சியில் ஸ்வாதந்த்ரியம் கொடுத்திருக்கையாலே அதைப்பயன்படுத்தி தாங்கள் மோக்ஷம் அடைவதற்காக பக்தி

முதலான மோக்ஷஉபாயங்களை அநுஷ்டிப்பது ஜீவனுடைய அத்யந்த பாரதந்த்ர ஸ்வரூபத்திற்கு முரண்பட்டது. அப்படி அநுஷ்டித்து மோக்ஷத்தையே பெற்றாலும் அது தன் ஆநந்தத்திற்கு உறுப்பான ஸ்வார்த்த மோக்ஷமாகவே அமையும். இப்படித் தன் ஆநந்தத்திற்கு உறுப்பாக மோக்ஷத்தைப்பெற நினைக்கும் சிலர் (கைவல்யநிஷ்டர்) எம்பெருமானை எப்போதும் பிரிந்திருக்கும் கைவல்யமோக்ஷத்தை அடைவதற்கும் இந்த மோக்ஷ சாதனங்கள் காரணமாகிவிடும். ஆகையால், "தனக்கேயாக எனைக்கொள்ளு மீதே" 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்னும் அருளிச்செயல்களின்படி மோக்ஷத்திலும் எம்பெருமானுடைய ஆனந்தத்தையே உத்தேச்யமாகக் கொள்ளும் உத்தம ப்ரபந்ந அதிகாரிகளுக்கு மோக்ஷத்திற்காகத்தாம் முயற்சி செய்வதிலிருந்து கைவாங்கி, சாதகம் போல் நாதன் தனதருளே பார்த்திருக்கையே தக்கது. இத்தகையவர்களுக்கே தத்க்ருது ந்யாயத்தின்படி பரார்த்தநுபவ கைங்கர்ய ருபமான தலைசிறந்த மோக்ஷம் கிட்டும். அந்த தத்க்ருது ந்யாயத்தின்படி தம் மோக்ஷாநந்தத்திற்காக உபாய அநுஷ்டாநம் செய்பவர்களுக்கு ஸ்வார்த்த மோக்ஷமே கிட்டும்" என்று திருவுள்ளம் பற்றினார்கள்.

ஹயக்ரீவ உபாசகரான ஸ்ரீதேசிகர், உபாசனம் செய்து ஒரு பயனைப் பெறுவது ஸ்வரூபவிருத்தம் என்று இவர்கள் கூறியது ஏற்கவில்லை. அதனாலேயே அந்த ஆசார்யர்களின் கொள்கைக்கு மூலக்காரணமான ப்ரதம ப்ரவிருத்தியில் ஸ்வாதந்தர்யத்தை அவர் மறுத்திருக்கிறார். ஸ்வரூபவிருத்தமான சாதனங்களை அநுஷ்டிப்பதால் மோக்ஷத்திலே தாழ்ந்த மோக்ஷங்களான கைவ்ல்யமோக்ஷமும் ஸ்வார்த்த மோக்ஷமும் அவர்கள் கூறியிருப்பதை இவர் மறுத்திருக்கிறார். இதனாலேயே நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களுக்கு முரணாக ஆத்ம அநுபவமான கைவல்யத்தை மோக்ஷம் அன்று என்று வலிந்து வாதிடும் நிலை அவருக்கு விளைந்துவிட்டது. ஆக, 'ஜீவனுக்கு ப்ரதமப்ரவிருத்தியில் ஸ்வாதந்த்ர்யம் உண்டாகையாலே அதைப்பயன்படுத்தி அநுஷ்டிக்கப்படும் பக்தி முதலான மோக்ஷ உபாயங்கள் ஸ்வரூபவிருத்தம். அவற்றை அநுஷ்டித்தால் தாழ்ந்த மோக்ஷங்களே கிடைக்கும்' என்பது மற்ற ஆசார்யர்களின்

ஸித்தாந்தம். 'ஜீவனுக்கு ப்ரதம ப்ரவிருத்தியில் ஸ்வாதந்த்ரியம் இல்லையாகையாலே பக்தி ப்ரபத்திகளான மோக்ஷோபாயங்கள் ஸ்வரூப விருத்தமல்ல. இந்த உபாயங்களால் வரும் மோக்ஷத்திலும் ஸ்வார்த்த மோக்ஷம் பரார்த்த மோக்ஷம் என்ற வேறுபாடு இல்லை. கைவல்யம் மோக்ஷமேயல்ல இந்த ப்ரகிருதி மண்டலத்திலநுபவிக்கப்படும் ஓர் ஐச்வர்யமேயாகும் என்பது ஸ்ரீதேசிகர் ஸித்தாந்தம். இந்த விஷயங்களெல்லாம் ஸுதர்சனம் ஆசிரியரான ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமிகள் தம்முடைய சித்தோபாயவிஜயம், கைவல்ய ஸித்தாஞ்சனம், கீதாவ்யாக்யானம் ஆகிற நூல்களில் விரிவாக நிருபிக்கப்பட்டுள்ளது. இதை எதையும் புரிந்து கொள்ளாமல் தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுத்து தங்கள் ஸம்ப்ரதாயத்தையே கூறுகிறது என்று இவர்கள் எழுதுவது ப்ராமாணிகர்களால் ஏற்கத்தக்க தல்ல. ஆக இந்த விஷயம் பலத்தில் வேறுபாடு உண்டு என்பதை பற்றி இடையில் வந்த விஷயத்தை இதோடு நிறுத்தி மேலே தொடர்வோம்.

"இப்படியே வர்ணாச்ரமாதி தர்மங்களை இதிகர்த்தவ்யங்களாக உடையதாகையினால் தேஹாத்ம விவேகம் பிறந்தவனுக்கு ஸ்வரூப விருத்தமல்லவோ? என்றும், பரமைகாந்தித்வ தர்மத்துக்கு விருத்தமல்லவோ? என்றும், ஆசார்யருசி பரிக்ருஹீதமல்லாமையாலே விருத்தமல்லவோ? என்றும் இப்புடைகளில் சொல்லுமதெல்லாம் விசாரிக்கப்புக்கால் நிலைநிற்காது - என்று ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாத்யோபாய சோதனா அதிகாரத்தில் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது" என்று இந்த க்ரந்தகர்த்தா எழுதுகிறார். எது நிலை நிற்காது என்பதை இங்கு காட்டுகிறேன் கேண்மின் : சாஸ்த்ரமென்றும், சாஸ்த்ர தாத்பர்யமென்றும் இரண்டுண்டு நமக்கு, அதில் சாஸ்த்ரமென்பது ; கர்மஜ்ஞான பக்தியாகிற உபாயந்தரங்களை தன்னுட் கொண்டிருக்கும். தாத்பர்யமென்பது திருமந்திரத்தை தன்னுட் கொண்டிருக்கும். சாஸ்த்ரம் சேதநனுடைய தேஹத்தோடு கூடிய வேஷத்திலே நோக்கு. (சாஸ்த்ர) தாத்பர்யமான திருமந்திரம் சேதநனுடைய தேஹத்தோடு கூடியிருக்கும் நிலையை தள்ளி ஆத்ம ஸ்வரூபத்திலே நோக்கு.

"முநிவரையிடுக்கியும் முந்நீர்வண்ணனாயும் வெளியிட்ட சாஸ்த்ரதாத்பர்யங்களுக்கு விசிஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்கள் விஷயம்" என்கிறது ஆசார்ய ஹ்ருதயம் (ஸூத்ரம் 17) அதாவது, "இருள்கள்கடியும் முனிவர்" என்கிற ஸ்மர்த்தாக்களான வ்யாஸாதிருஷிகளை "க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்திநாராயணம் ப்ரபும், கோஹ்யந்ய : புண்டரி காக்ஷாத் மஹா பாரதக்ருத் பவேத்" (அதாவது, வ்யாஸரை ப்ரபுவானநாராயணர் என்றே அறி. அவரைத் தவிர யார் தாமரைக்கண்ணனுடைய சரித்திரத்தை சொல்லும் மஹாபாரதத்தைச் செய்ய முடியும்) என்கிறபடியே தானாகச் சொல்லலாம் படி அந்தர்யாமியாய் எடுத்து நின்று தந்முகேந வெளியிட்ட சாஸ்த்ரத்துக்கு சேதநருடைய தேஹ விசிஷ்டவேஷம் விஷயம். "நரநாரணனாய் உலகத்தற நூல் சிங்காமை விரித்தவன்" என்றும், "வதரியாச்சிரமத் துள்ளானைக் கருங்கடல்முன்னீர் வண்ணனை" என்கிறபடியே ஸ்ரீபதரிகாச்ரமத்திலே ஸ்வேநரூபேன நின்று வெளியிட்ட (சாஸ்த்ர) தாத்பர்யமான திருமந்திரத்துக்குச் சேதநருடைய நிஷ்க்ருஷ்ட வேஷம் (தேஹத்தை தள்ளி ஆத்மஸ்ரூபத்திலே நோக்கு) விஷயம் என்கை. இத்தால் சாஸ்த்ரத்துக்கு தேஹத்திலே நோக்கு, சாஸ்த்ர தாத்பர்யமான திருமந்தரத்திற்கு ஆத்மஸ்வரூபத்திலே நோக்கு என்றதாயித்து" என்று அவ்விடத்தில் ஸ்ரீமணவாளமாமுநிகள் வ்யாக்யானம். ஆக சாஸ்த்ரநிஷ்டரான கர்ம, ஜ்ஞான, பக்தி நிஷ்டரும், சாஸ்த்ர தாத்பர்ய (திருமந்திர) நிஷ்டரான ப்ரபன்னரும் ஆகிய இவ்விருவகைப்பட்ட அதிகாரிகளும் ஒன்றா? ஒருவர் சாஸ்த்ர அதிகாரி, மற்றொருவர் திருமந்த்ர நிஷ்டரான ரஹஸ்யத்ரய அதிகாரி. (ரஹஸ்யத்ரய அதிகாரியென்றது, திருமந்த்ரம் விவரண விவரணி பாவத்தாலே மற்றையிரண்டு ரஹஸ்யமான த்வயம், சரமஸ்லோகத்தையும் சேர்த்துச் சொன்னது) இப்படி மேல்பட்ட நிலையுடைய ரஹஸ்யத்ரய அதிகாரிக்கு உபாயாந்தர நிஷ்டர் அநுஷ்டிக்கும் கர்ம, ஜ்ஞான, பக்தி ; ஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்த ரஹஸ்யத்ரயதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தம் என்பதை சொல்லவும் வேண்டுமோ? இந்த அதிகாரிகளுடைய தாரதம்யத்தை உணர்ந்துதான்; மேற்சொன்ன "வர்ணாச்ரமாதிதர்மங்களை இதிகர்த்தவ்ய தயாயுடையதாகையினால் தேஹாத்ம விவேகம் பிறந்தவனுக்கு

ஸ்வரூப விருத்தமல்லவோ? என்றும்பரமை காந்தித்வ தர்மத்துக்கு விருத்தமல்லவோ? என்ற வார்த்தை நம்பூர்வா-சார்யவ்யாக்யான க்ரந்தத்தில் அவதரித்தது. அதைப்புரிந்து கொள்ளாமல் தேசிகன் ரஹஸ்த்ரய ஸாரத்தில் கண்டித்திருப்பதை மேற்கோளாகக்காட்டி ஆகாச தாண்டவமாடுகிறார்கள் இவர்கள். அவர் (தேசிகர்) பூர்வாசார்ய க்ரந்தங்களில் இருக்கும் விஷயத்திற்கு யோஜனாபேதம் என்ற யுக்தி முகத்தாலே அந்த ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அவர்களை கண்டித்திருப்பது நன்றாக எல்லோருக்கும் தெரியும். ஆனால் 32 - அதிகாரமுள்ள அந்த ரஹஸ்யத்ரய ஸாரம் தவிர்த்த மற்றைய சில்லரை ரஹஸ்யங்களை சேவிப்போர்க்கு, எம்பெருமானார், எம்பார், கூரத்தாழ்வான், பட்டர், நஞ்சியர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர்" முதலான ஆசார்யர்கள் கூறியிருக்கும் விஷயங்களே அவையென்று நன்றாகத் தெரியும். இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் தேசிகன் கண்டித்து விட்டார் என்பதாலேயே இவர்கள் முன்னுக்குப்பின் முரணாக தங்கள் க்ரந்தங்களில் எழுதுகிறார்கள். இவைகளை சற்று உற்று நோக்கிப்பார்த்தால் இவர்கள் எழுதுவது நிலைநிற்காது என்பது நடுநிலையாளர்களுக்குப்புரியும்.

இனி, ப்ரபன்ன பாரிஜாதத்தில் "**உபாயாந்தர நிஷ்டாச்சத்ரோஹோ பாகவதேஷுச, ஸ்ரீ ஸ்ரீசயோக : பரிஜநே நிந்தநாதீநிஸர்வச : பந்த நாநி ப்ரபந்நஸ்து நகுர்யாத் தாத்ருசாந்யபி தேவதாந்தர ஸம்ஸக்தைஸ் ஸங்கம் த்யக் த்வை வ வைஷ்ணவ : உபாயாந்தர ஸம்ஸக்தை : ப்ரபந்நைஸ் ஸஹ ஸம் விசேத்**" இதில், உபாயாந்த்ரநிஷ்டரை தேவதாந்த்ர நிஷ்டரோடு தொடர்பு படுத்தி கூறியிருப்பதால் இந்த உபாயாந்தரபரர் தேவதாந்தர நிஷ்டரோடு சேர்ந்தவர்களாகையால் இவர்கள் ஸித்தோபாயநிஷ்டரான ப்ரபன்னர்களுக்கு ஸேவிக்கத்த காதவர்கள் என்றும் இவர்கள் சகவாசம் மோக்ஷத்திற்கு ப்ரதிபந்தகம் (தடை) ஆகையால் இவர்களோடு உறவருத்துச் சொல்லப்படுவதாலே. ஸித்தோபாய நிஷ்டருடைய ஏற்றத்தையும், உபாயாந்தரபரருடைய தாழ்வையும் தரம்பிரித்தறியலாம்.

மேலும், பகவத் சாஸ்த்ரத்தில் "ஸ்ரீபகவாநுவாச :- ஆசாரப்ரபவோ தர்மோதர்மஸ்ய ப்ரபுரச்யுத : ஆசாரயுக்த ஆசார்யச் சரருபீ ஸதாஹரி : ஆசார்யம் ஆச்ரயேத் தீமாந் ப்ரபத்யா வ்ருத்தஸம்யுதம், ப்ரபத்யா விஷ்ணு ஸாயுஜ்யம் நாலபதே நாத்ரஸம்சய : தஸ்மதாசார்ய சரணம் சரணைகம் ப்ரயச்சதி இதிச்ருத்யா ஸுநிர்ணீதம்.................ஏததாசார நிஷ்டாவை ஸர்வதா கமலாஸந தஸ்மாத்த்வம் ஏதமாசாரம் நித்யம் குருசதுர்முக, மத்ஸாயுஜ்யாதி ஸித்யர்த்தம் ஸர்வபந்த விமுக்தயே, ஏததாசாரநிஷ்டாவாந் ப்ரபந்ந உத்தமஏவச, ஸ்ரீமத்ஸேநேசவத் ஸர்வே மத்ப்ரியாஸ்து பராவர : "என்று, ப்ரபத்தியை அங்கமாகவுடைய பக்திநிஷ்டரிலும், ப்ரபந்நர்களே முக்யர் என்பதை பகவானுடைய திருமுக பாசுரங்களே கூறும். இங்கு ஒரு த்ருஷ்டாந்தம் காண்மின் : ஓர் பேரரசன் பூமிப்பரப்படங்களும் தன் சக்தியாலே ஒரு குடைக்கீழ் நின்று ஆளும்படி தானே ஸ்வதந்த்ரனாய் நிர்வாஹம் பண்ணிவருகிறான். அவனுடைய பிள்ளைகளுக்கு போக்யம், (அநுபவிக்கப்படும் பொருள்) போகத்தை அநுபவிக்கும் கருவி, போகாநுபவம் பண்ணுமிடங்களில் ஒன்றாலும் குறைவுபடாமலிருக்கச் செய்தேயும், அந்த பிள்ளைகளில் சிலர் தகப்பனான அந்த பேரரசன் முன்னிலையிலே தாங்களே தங்களுடைய ஸ்வாதந்த்ரயம் தோன்றும்படி தங்களுடைய சக்தியாலே அரசாள வேண்டுமென்று ஆசையாலே அப்பேரரசனை ப்ரார்த்தித்து, அவன் அநுமதியாலே சில பகுதிகளை ராஜ்யபரிபாலனம் பண்ணித்தாங்களும் ஜீவித்து, தங்களாலே சம்பாதிக்கப்பட்ட பொருள்க்ளாலே அப்பேரரசனுக்குக்கொடுத்து உகப்பையுண்டு பண்ணினதாக நினைத்தி ருப்பது ப்போலே ; அந்தப்பேரரசன் பிள்ளைகளில் இன்னும் சிலர், அப்பேரரசனை எப்போதும் பிரியாமல் தங்களுடைய சக்தி ஸ்வாதந்த்ர்யங்களை போட்டுவிட்டு பிதுரார்ஜிதமாய் தாய ப்ரப்தமான (தந்தைமூலம் வந்ததான) அந்தப் பொருள்களை அப்பேரச-னுக்கு பரதந்த்ரமாய் ஜீவித்து அவனையுகப்பிக்குமதுவே தங்களுக்கு பரமப்ரயோஜன மாயிருக்கும். இப்படி பரதந்த்ரர்களாய் தன் அதீனத்திலிருக்கும் பிள்ளைகளிட த்திலிருக்கும் மிகுந்த சந்தோஷம் அந்த பேரரசனுக்கிருக் கிறாப்போலே ஸ்வதந்த்ரரான பிள்ளைகளிடத்தில் அப்பேரரசனுக்கு பேரன்பு உண்டாகாது என்பதை சொல்லவும் வேண்டுமா? பூமியிலுண்டான தனம் தானியம் ஆபரணங்கள் முதலான செல்வங்களெல்லாம் தன்னதீனமாம்

படி பேராற்றலுள்ள அரசனுக்கு பிள்ளைகள் தேடிக் கொடுக்க வேண்டியது ஒன்றுமில்லாமையாலே, தங்களுடைய ஸ்வாதந்த்ர்யாதிகளை விட்டு, அவனுக்கு பரதந்த்ரராயிருக்கு மதுவே அந்த பேரரசனுக்கு மிகவும் உகப்பாயிருக்குமா போலேயாயிற்று, ச்ரிய: பதியாய் உபயவிபூதி நாதனாயிருக்கிற ஸர்வே ச்வரனுக்கு அத்யந்த ப்ரீதியுண்டாவதும் ஆகையால், இந்த அத்யந்த பாரதந்தர்ய ஸ்வரூபத்தையுடைய ப்ரபத்திநிஷ்டரை சிஷ்டர்களிலே சிறந்தவர்களாக சொல்லப்படுமதுவே விவேகபலம்.

ச்ருதி ஸ்ம்ருதிகளிலும் இந்த ப்ரபத்திதர்மத்தையே அதிகமாக சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. எங்ஙனே யென்னில்? "ந்யாஸ இதிப்ரஹ்மா ப்ரஹ்மாஹிபர: பரோஹி, ப்ரஹ்மா, தாநிவா ஏதாந்யபராணி தபாம்ஸி ந்யாஸ ஏவாத்யரேசயத்" *(தை-நா-49,50) (சரணாகதி சிறந்த தர்மம்' என்று ப்ரஹ்மா கூறினார், ப்ரஹ்மா சிறந்தவரன்றோ; அதனால் ஸத்யம், தவம் முதலான மற்ற பதினோரு ஸாதனங்களைக் காட்டிலும் சரணாகதியே சிறந்தது)* என்றும் "தஸ்மாந் ந்யாஸ மேஷாம் தபஸாமதி ரிக்த மாஹு:" *(தை-நா 24-50) (ஆகையால் சத்யம் முதலான ஸாதனங்களைக்காட்டிலும் இந்த சரணாகதியே மேலானதாகச் சொல்லுகிறார்கள்.)* இப்படி வேதவேதாந்த ப்ரதிபாத்யனான ச்ரிய: பதிதானே ப்ரபன்னரை; ப்ரபத்தியை அங்கமாகவுடைய பக்தியுபாயாந்தர நிஷ்டரிலும் முக்யராகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறது. கீழே "ப்ரபந்ந உத்தம ஏவச" என்றருளிச் செய்திருக்குமத்தாலே ப்ரஸித்தமல்லவா. ஆக ச்ரிய: பதியான பகவான்தானும் பக்தியுபாயாந்தர நிஷ்டரைக் காட்டிலும் ப்ரபந்ந அதிகாரியை சிறப்பிப்பதாலே பக்தி ஸ்வரூபவிருத்த மென்பதும் ஸித்தோபாயமான ப்ரபத்தியே ஸ்வரூபாநுரூப மென்பதும் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

இன்னமும், "ப்ராபகாந்த்ர பரித்யாகத்துக்கும் அஜ்ஞான அசக்திகளன்று ஸ்வரூப விரோதமே ப்ரதா நஹேது"(ஸ்ரீவசன பூஷணம்) என்பதை புரிந்து கொள்ளாமல், அந்த சூத்ரத்திலிருக்கும் 'அஜ்ஞான, அசக்தி' சப்தத்துக்கு, சரீரமூலமாகவரும் அஜ்ஞானத்தையும், அசக்தியையும் பார்த்து, "பக்தியோகம் அநுஷ்டிக்க சக்தியில்லாதவன் ப்ரபத்தியை அனுஷ்டிக்கலாம் என்று ப்ரபத்தியை சரீரப்ரயுக்த

அசக்தாதிகாரமாகவும், பக்தியைத்தத் அநுகுண சக்தாதிகாரமாகவும் புத்திபண்ணி இவர்கள் எழுதுவதெல்லாம் ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்ட பகவதுபதேச விருத்தங்களாகும்.

எங்ஙனேயென்னில்? "தஸ்மாத்த்வமேதம் ஆசாரம் நித்யம் குருசதுர்முக" (பாஞ்சராத்ரம்) என்று சொல்லப்பட்டதாலே விவேகிகள் கண்டு கொள்வது. "ஸர்வேஷாமவ்யய : பிதா", (ஸர்வேச்வரனான பகவானே இயற்கையான தந்தை) என்றும், "பிதா மாதச மாதவ :" (தாயும் தகப்பனும் லக்ஷ்மீ நாதனே) என்றும், "பிதாச்சரக்ஷகச் சேஷீ" (சேதநர்களுக்கு பிதாவும், ரக்ஷகனும், தலைவனும் அந்த எம்பெருமானே) இத்யாதிகளில், ப்ரிய ஹிதபரனாய் ஸர்வவித பந்துவு மாயிருக்கும் ச்ரிய : பதியான ஸர்வேச்வரன் சக்த அசக்த வித்யாசமில்லாமல் அனைவர்க்கும் ப்ரபத்தியைத்தானே உபதேசித்தருளுகையாலே மேலேசொன்ன பேரரசனுக்கும், அவன் பிள்ளைகளுக்கும் உண்டான த்ருஷ்டாந்தத்தாலே, சக்திசப்தத்திற்கு அசித்வத் பரதந்த்ர ஸ்வரூபஜ்ஞான விருத்தமான ஸ்வாதந்தர்யமே அர்த்தமென்று ப்ரமாண பரதந்த்ரர்கள் தெளிந்திருக்கும்மத்தனை "பக்தியிலசக்தன்" இத்யாதி வசன பூஷணசூத்ரத்திற்கும் இப்படியே நிர்ணயம், ஆனால், தர்சனஸ்தாபகரான ஸ்வாமி ஸ்ரீராமாநுஜர் ஸாதன பக்தியை உபாயமாக ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்வான் என்னென்னில்? அதில் அவருக்கு திருவுள்ளமில்லையென்பது அவர் அருளிச்செய்தகத்யத்தில் நன்றாக காணலாம்.அதாவது, பகவானுக்கு ஸ்வரூபம், ரூபம், குணம், செல்வம் இவைகள் கிடையாது என்று வாதிட்ட பிறசமயங்களையும், வேதத்திற்கு அவப்பொருள்கூறும் சமயங்களையும் வேத முதலான சாஸ்த்ர ப்ரமாணங்களைக் கொண்டு ஸ்தாபிக்கவும், அந்த சமைய வாதிகளை கண்டிக்கவும் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச்செய்தார். "ஆஹுர் வேதாநமாநம்" என்றும் புண்யாம்போஜவிகாஸய பாபத்த்வாந்த க்ஷயாச" இத்யாதிகளில் அந்தந்த மதங்கள் கண்டிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம், பிறகு ஸாதன பக்தியில் சிரத்தையுள்ள அதிகாரியைக்குறித்து, கர்மத்தையும் ஜ்ஞானத்தையும் அங்கமாகவுடைய பக்தியுபாயத்தை மோக்ஷ ஸாதனமாக அருளிச்செய்தார். அதோடில்லாமல், இந்த ஸாதனபக்தி அசித்வத் பரதந்த்ர ஆத்மஸ்வரூபத்துக்கு விருத்தம் என்பதை உணர்த்துகைக்கு தன்னுடைய ஸித்தாந்தமான ப்ரபத்தியையும் "நாநாசப்தாதிபேதாத்" என்கிறவிடத்தில் உபதேச கம்யமாம்படி ப்ரபன்னர்க்கு உணர்த்தி அந்த

அதிகாரி த்வயத்துக்கும் (இருவருக்கும்) மறைமுகமாக புரிந்து கொள்ளும்படி **"தஸ்ய வசீகரணம் தச்சரணாகதிரேவ"** (ஸ்ரீபாஷ்யம். ஆநுமாநிக அதிகரணம்) என்று ப்ரபத்தியை ப்ரஸித்திப்படுத்தருளிச் செய்ததற்கு கருத்து; பக்தியுபாயா திகாரிக்கநுகுணமாக சொல்லுகிற சேஷத்வத்தை சரணாகதி சப்தத்ததாலே சொன்னது, தம்முடைய ஸித்தாந்தமான சரணாகதியை நம்மவற்கு உணர்த்தவேண்டு மென்பதாலே. ஆகையால் தான் தம்முடைய திருவுள்ளத்தை பின்செல்லுகிற ச்ருதப்ரகாசிகா ஆசார்யரும், **"தச்சரணாகதி:"** என்பதற்கு, **"தச் சேஷத்வ அநுஸந்தாநம்"** என்று அருளிச்செய்தது. இனி தன்னுடைய மதமான ப்ரபத்தியையும் ஸாதன பக்தியைப்போலே விரிவாக அந்த ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்யாமல் விட்டதற்கு காரணம் என்னவெனில்? அப்படிச்செய்தால் ஸாதன பக்தியில் ச்ரத்தையுள்ள அதிகாரிக்கு, அந்த ஸாதன பக்தியில் சிரத்தையில்லாமல் போய்விடும் என்பதற்காகவும், அவ்வாறு ப்ரபத்தியை விரிவாக அருளிச்செய்யாமல் விடுத்தார், தம்முடைய திருவடிகளையே தஞ்சமாக நம்பியிருக்கிற ஸாத்வீகரிடத்தில் உண்டான பரமக்ருபையாலும், தம்முடைய செல்லாமையாலும் தாம் உகந்ததான ஸித்தோபாயமான ப்ரபத்தியை கத்யத்தில் எல்லோரும் அறியும்படி வெளியிட்டருளினார். ஆகையால் **"ப்ரபதந ஸமயே நிஷ்டிதாந்"** என்பது தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளனைவருக்கும் அஸாதாரண நிரூபகமாகும்.

இங்கே, ஸ்வாமிபெரியவாச்சான்பிள்ளை **"ஸ்ரீவைகுண்ட கத்ய"** ப்ரவேசத்தில் அருளிச்செய்யும் நேர்த்தியை அப்படியே கொடுத்திருக்கிறேன் காண்பீர்; "பாஷ்யகாரர் தம் திருவுள்ளக்கருத்தில் அறுதியிட்ட அர்த்தம் பனைநிழற்போலே தம்மொருவரளவிலே பர்ய வஸியாதே கல்பக தருச்சாயை போலே பரோபகாரார்த்தமாக உபாய உபேயங்களை அநுஷ்டிப்பான் என்று பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார் ஸ்ரீவைகுண்ட கத்யத்திலே. பெரியகத்யத்தில், ஸாமாந்ய (பொதுவாக) பகவத்விஷயமாக அவரை நோக்கி ஸ்வப்ரார்த் தனையாக (தம்ப்ரார்த்தனையாக) அருளிச் செய்தார்.

ஸ்ரீரங்ககத்யத்தில், ஸௌலப்யத்துக்கு எல்லைநிலமான பெரியபெருமாள் விஷயமாக அவரை நோக்கி ஸ்வ(தன்) ப்ரார்த்தனையாக அருளிச்செய்தார்." என்றும், "ஸ்ரீபாஷ்யத்தில் லோகத்தில் துராசாரம் உபாய மென்பார், தேவதாந்தரோபாஸனம் உபாயம் என்பார், தேவதையொழியவே கேவலகர்மம் உபாயமென்பார், கேவலம்ஞானம் உபாயம் என்பார், கர்மஜ்ஞான ஸமுச்சயம் உபாய மென்பாராய்க் கொண்டு வேதவாக்யங்களை விகல்பிக்கிற (குழப்புகிற) பாஹ்ய (புறமதம்) குத்ருஷ்டிகளை (வேதத்திற்கு அவப்பொருள் கூறும்) நிரஸிக்கைக்காக, "நீங்கள் சொல்லுகிற படியல்ல, யுத்திகளிருந்தபடியாலும், ப்ரமாணந்தரங்கள் (வேறுப்ரமாணங்கள்) இருந்த படியாலும், கர்மஜ்ஞான ஸஹக்ருதையான பக்தியே உபாயம் என்று சொல்லுகிற இதுவே பொருள்" என்று ஸாதிக்க வேண்டுகையாலே, ப்ரபத்தியும் உள்ளே ஸூசிதமாய்க் கிடக்கச்செய்தேயும், (ஸாதன) பக்தியிலே நோக்காக உபபாதித்தருளினார்.

இவ்வளவாலே துச்சகையான பக்தியை உபாயமென்று ப்ரமித்து மந்தமதிகள் பயப்படாமைக்காக, இப்படிப்பட்ட பக்திஸித்திக்கும் புருஷார்த்த சரம மான உபாயம் ப்ரபத்தியே என்னுமிடத்தை உபபாதித்ருளினார் பெரியகத்யத்திலே. பக்தி ஸாத்குண்யத்துக்கும் (ஸ்வயம்ப்ரயோஜனமான பக்தி உண்டாவதற்கும்) ப்ரபத்தியே வேண்டுமென்று ப்ரபத்திவைபவம் சொன்ன இவ்வளவாலே ப்ரபத்தி அங்கமாய், பக்திதானே ஸ்வந்த்ரோபாயமோ என்னும் அதிசங்கை பிறவாமைக்காக, ஸூசகமாய், (எளிமையாய்) ஸ்வரூபாநு ரூபமாய், இதரநிரபேக்ஷமாய், ஸ்வதந்த்ரமான ப்ரபத்தியே உபாயமென்னுமிடத்தை வெளியிட்டார் ஸ்ரீரங்ககத்தியத்திலே. இனி, ஸ்ரீவைகுண்டகத்யத்தில் இப்படி உபாயநிஷ்கர்ஷம் பிறந்த பின்பு, இவ்வுபாயப்ராப்யமான தேசவிசேஷ வைபவத்தையும்............... என்று உபாய அம்சத்தை ஸங்குசிதமாக (சுருக்கமாக) அநுவதித்து, உபேயாம்ஸத்தை பரக்க அருளிச்செய்து தலைக்கட்டுகிறார்" என்று ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்திருப்பதை-நோக்கினால், ப்ரபத்தியே சிறந்ததாகவும், பக்தியோகம் தாழ்ந்ததாகவும் ஸ்ரீபாஷ்யகாரருக்கும் திருவுள்ளம் என்பதைத்தெள்ளத் தெளியலாம். மேலும் வைகுண்ட கத்ய

முதல் சூர்ணையில், **"தத்பதாம்புஜத்வய ப்ரபத்தே : அந்யந்நமேகல்ப கோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந :"** (அந்த கைங்கர்யத்தைப் பெறுவதற்கு கல்பகோடி ஆயிரங்காலமானாலும் அப்பெருமானுடைய இரண்டு திருவடித்தாமரைகளையே நம்பியிருப்பதைக் காட்டிலும் வேறொன்று எனக்கு உபாயமாக இல்லையென்று அறுதியிட்டவனாய்) என்று அருளியிருப்பதாலே ப்ரபத்தியே தாம் விரும்பியது. பக்தி, ஸ்வரூபவிருத்தம் என எம்பெருமானார் திருவுள்ளம் இதுவே என்று அறியலாம்.

இங்கே, பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யான ஸ்ரீஸூக்தி காண்மின் ; (கல்பகோடி ஸஹஸ்ரேணாபி) ஒட்டடையை ஆயிரம் நாள் நீரிலேயிட்டு வைத்தாலும் முளையாதாப்போலே காலதத்வ முள்ளதனையும் திரிந்தாலும் அதிகாரமுண்டாகமாட்டாது. (ஸாதநமஸ்தி) இத்தைக்கீழே கூட்டினாப்போலே, அதாவது, 'அந்யத் நமே' என்பதை 'அஸ்தி' சப்தத்தோடே 'நமேஅஸ்தி' என்று கூட்டினாப்போலே, இங்கேயும் (ஸாதநம் 'ந'ாஸ்தி) 'ந'-காரத்தைக் கூட்டவேணுமென்கிறார். எல்லாம் செய்தாலும் க்ருத ப்ராயச்சித்தமாமத்தனை போக்கி, அபிமதலாபத்தை ஸாதித்து தரமாட்டாது. (ஸாதநம் நாஸ்தி) என்றால் ஸ்வரஸமாகத் தோற்றுவது ஸாதனமில்லையென்றிறே. அங்ஙனல்ல (ஸாதநம் ந பவதி) எனக்கு ஸாதநம் ஆகமாட்டாது என்றபடி. (இதிமந்வாந :) இப்ரகாரத்தில் அறுதியிட்டு. (மந்வாந :) இந்நினைவு உருவ நடக்கவேணுமென்கிறது வர்த்தமானத்தாலே என்கிறார் ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை. **"கல்ப கோடி ஸஹஸ்ரேணாபி"** என்கிறவிடத்தில் கல்பகோடி ஆயிரங்காலம் அந்த பக்தியோகத்தை செய்தாலும் அதிகாரமாகமாட்டாது என்றும், எத்தனை ஜன்மம் எடுத்து அதை அநுஷ்டித்தாலும் ப்ராய சித்தம் செய்ததாகுமேயொழிய பலமளிக்காது என்பதாலே இந்த பக்தியோகத்துக்கு ஏன் இந்த நிபந்தனை? என்றும், ப்ரபத்திக்கு எல்லோரும் அதிகாரிகள் என்றும், ஒரே ஜன்மத்தில் பலங்கொடுக்கும் என்றும் செய்வதற்கும் சுலபமானது என்றுமிருப்பதாலே இந்த வித்யாசத்தை தெரிந்து சிந்திக்க வேண்டாமா? அந்த பக்தியோகம் சேதனனுடைய முயற்சியாலே ஸாதிப்பதாலே நாம் செய்தோம் என்று அஹங்கார

த்தோடே கூடிக்கொண்டிருக்கையாலே எம்பெருமான் அந்த சேதனனுடைய அஹங்காரம் கழிவதற்காக பலகாலம் சிரமப்படுத்தி அநுஷ்டிக்கச் செய்வித்தும் கடைசிவரையிலும் ஸ்வயத்ந மாகிற அஹங்காரத்தோடு கூடிய முயற்சிமாறவில்லை யென்றால்"என்பேற்றுக்கு நான் முயலுகிறேன்" என்ற எண்ண முடைய அவனுக்கு அப்போது ஸ்வார்த்தரூபமான (தனக்கின்பம் என்னும்) மோக்ஷத்தையருளுகிறான். ஆனால், ப்ரபத்திநிஷ்டன் மூலமந்த்ரத்திலுள்ள 'நம:' பதத்தை அறிந்து "நம்பேற்றுக்கு நாம் முயற்சிசெய்வது, அத்யந்த பாரதந்த்ர ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞானத்தையுடைய நம் இயல்புக்குத் தகாது" என்று தன் முயற்சியினின்றும் கைவாங்கி எம்பெருமான் அருளையே பார்த்திருக்கிறான். ஆகையால், இவனுக்கு பரார்த்தரூபமான மோக்ஷம் எளிதில் கிட்டுகிறது. பொதுவாக ஸாதனபக்தி சேதனனுடைய முயற்சியாலே பெறக்கூடியது. ப்ரபத்தி எம்பெருமான் அருளாலே பெறக்கூடியது. அந்த பக்தி சேதனனுக்கு தலைப்பாரம் ; ப்ரபத்தி எம்பெருமானுக்கு தலைப்பாரம். இந்த ஏற்றத்தாழ்வை கண்டாலே அறிவாளி களுக்கு எது சிறந்தது? என்பது புலப்படும்.

ஸ்ரீ ஆளவந்தாரும், "**நதர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ, நபக்திமாம் த்வச்சரணாரவிந்தே, அகிஞ்சநோऽநந்யகதிர் சரண்ய, த்வத்பாதமூலம் ஸரணம் ப்ரபத்யே**" (சரணமடையத் தகுந்த எம்பிரானே! (அடியேன்) கர்மயோகத்தில் நிலைநின்ற வனல்லேன் ; ஆத்மஜ்ஞானமும் (ஜ்ஞானயோகம்) உடையவ-னல்லேன்; உன்திருவடித்தாமரைகளில் பக்தியை உடையவ-னல்லேன். ஒரு உபாயமற்றவனும், வேறு புகலற்றவனுமான அடியேன், உன்திருவடித்தாமரைகளையே உபாயமாக நிச்சயிக்கிறேன்) என்று அருளியிருப்பதாலே, ஸ்ரீ ஆளவந்தாரும் கர்ம, ஜ்ஞான, பக்தியோகம் என்கிற உபாயாந்த்ரம் தனக்கில்லையென்கிறார். இங்கே, ஆளவந்தார் தமக்கு பக்தியை அநுஷ்டிக்க ஜ்ஞானமில்லையா? சக்தியில்லையா? இருந்தும் ஏன்? இவைகளெல்லாம் எனக்குக் கிடையாது என்கிறார்? 'நம:' பதத்தில் சொல்லப்பட்ட அத்யந்த பாரதந்த்ர ஸ்வரூபத்தை உணர்ந்த வராகையாலே இவையெல்லாம் ஆத்மஸ்வரூபத்துக்கு விருத்தம் என்றுதான் எம்பெருமான் திருவடிகளில் விழுகிறார் தம் ஸ்தோத்ரரத்னத்தில்.

"இல்லையில்லை இவருக்கு பக்தியோகம் உண்டு, நைச்சியாநுஸந்தானம் பண்ணுகிறார்" என்பார்களிவர்கள். அப்போது நைச்சியாநுஸந்தானமென்றால், பொய் சொல்லுகிறார் என்று அர்த்தமாகாதா? பொய் பகவத் விஷயத்தில் பலிக்குமா? "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதாலே, உபாயாந்தரங்களை வாசனையோடு விட்டவனுக்குத்தான் 'சரணாகதி நிஷ்டையாகிற ப்ரபத்தியில் அதிகாரம். இப்படிப்பட்ட அதிகாரிக்குத்தான் பலம் நிச்சயம். நைச்யம் என்று சொல்லிக் கொண்டு பக்தியை அநுஷ்டித்து ப்ரபத்தியில் கைவைத்தால் மோக்ஷபலன் நிச்சயம் கிடைக்காது. ஆகையால் ஸ்ரீ ஆளவந்தாரும் பக்தியை ஸ்வரூப விருத்தமென்று விடுத்து, ஸ்வரூபத்துக்குச் சேர்ந்ததான ப்ரபத்தியையே அநுஷ்டித்தார் என்று கண்டுகொள்வது.

இதற்குமேல் ஸ்ரீமந்நாத முனிகளும் பக்தியோகத்தை அநுஷ்டித்தார் என்பார்கள் இவர்கள். இதற்கு சமாதானம் கேண்மின் : **"ஸாதநம் பகவத்ப்ராப்தௌ ஸ ஏவேதிஸ்திராமதி : ஸாத்யபக்திஸ் ஸ்ம்ருதா ஸைவ ப்ரபத்திரிதி கீயதே, உபாயோ பக்திரேவேதி தத்ப்ராப் தௌயாது ஸமா மதி : உபாய பக்தி ரேதஸ்யா : பூர்வோக்தைவ கரீயஸீ"** (எம்பெருமானை அடைவதில் அவனே உபாயம் என்னும் உறுதியான நினைவு ஸாத்ய பக்தி எனப்படுகிறது. அதுவே ப்ரபத்தி என்றும் சொல்லப்படுகிறது. 'எம்பெருமானை அடைவதற்கு பக்தியே உபாயம்' என்னும் நினைவு உபாயபக்தி எனப்படுகிறது. இதைக்காட்டிலும் முன்சொன்ன ப்ரபத்தியே சிறந்தது) என்று இந்த ப்ரமாணம் ஸாத்யபக்தி எது என்றும், ஸாதந பக்தி எதுஎன்றும் நமக்கு கண்ணாடிபோல் காட்டித்தருகிறது. ஆகவே ஸ்ரீமந்நாதமுநிகள் போன்ற மஹான்களும் இந்த ஸாத்ய பக்தியாகிற ப்ரபத்தியையே அநுஷ்டித்தார்கள் என்று நடுநிலையாளர்கள் கண்டு கொள்வது. மேலும் ப்ரபந்ந ஜன கூடஸ்தர்களான ஆழ்வார்களும் பக்தி ஸ்வரூப விருத்தமென்பதை "குளித்து மூன்றனலை," "மேம்பொருள்" (திருமாலை) "சிற்றவேண்டா" "நோற்றநோன்பிலேன்" "களைகண்மற்றிலேன்" (திருவாய்) "கறவைகள் பின் சென்று" (திருப்பாவை) என்கிற பாசுரமூலம் அருளிச்செய்துள்ளார்கள். ஆக இதுவரை ச்ருதி ஸ்ம்ருதி,

இதிகாச, புராண, பகவத் சாஸ்த்ரம் ஆழ்வார்கள் அருளிச்செயல், ஆசார்யர்கள் ஸ்ரீ ஸூக்திகளில் உபாயாந் தரமான பக்தி ஸ்வரூப விருத்தமென்று அருளியிருப்பதை ஸாராசார விவேகிகளான சுத்த ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்கள் கண்டுகொள்வது.

## ப்ரபத்தி ஸ்வரூபம்

இந்த ப்ரபத்திஸ்வரூபத்தைப் பற்றி அந்த ஸத்ஸம்ப்ரதாய விவேக க்ரந்தகர்த்தா, "இருகலையாருக்கும் பேதமிருப்பதாகச் சிலர் பிரமிக்கிறார்கள்" என்று, எழுதுகிறார். "அதாவது சிலர் பகவானுடைய அபாரகாருண்யமிருக்க நாம் ஒரு உபாயாநுஷ்டானம் செய்வதென்? என்றும், ஸ்ரீபாஷ்யகாரர் செய்த ப்ரபத்தியினாலேயே நாமெல்லோரும் உத்தீர்ணராவோம் என்றும், இப்புடைகளில் மற்றும் சில ஆக்ஷேபங்களைச் சொல்லி நாம் ப்ரபத்தியை அனுஷ்டிக்க வேண்டியதில்லை என்கிறார்கள்". என்று தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் கருதுவதாகக் கொண்டு எழுதுகிறார் இவர். மேலும் தென்னாசார்யர்களுக்கு பரந்யாஸம் கிடையாது. பரஸமர்ப்பணமும் கிடையாது என்று இவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள் அதை நிரூபிப்போம் :

பரந்யாஸமென்றால்,கோப்த்ருத்வ வரணத்தை உள்ளீடாக உடையதாகையாலே 'நீயே எனக்கு ரக்ஷகனாவாய்' என்று ப்ரார்த்தித்தலே பரந்யாஸமாகும், இதைப்புரிந்து கொள்ளாமல் இவர்கள், "ஆத்மாரக்ஷாபரஸமர்ப்பணம்" என்பதை, 'உன் ஆத்மாவை அவனிடத்தில் கொடுத்து விடவேண்டும்' என்று, அதிப்வ்ருத்தியாகிறகாயிக ரூபமான செயலைச் செய்வதுபோல் இருதயத்திலிருக்கும் ஆத்மாவை பறித்து அவனிடத்தில் கொடுப்பது போன்ற பாவம் (நினைவு) தோற்றும்படி கல்வி அறிவில்லாத பாமரரைப்போல் அர்த்தம் கல்பிக்கிறார்கள். இது எங்கானும் ஸங்கதமாகுமா? இது ஒன்று. இன்னொன்று, பஞ்சஸம்ஸ்காரத்தின்போது இரண்டு தடவை, நான்கு தடவை, எட்டுத்தடவை, பதினெட்டுத்தடவை, நாற்பது தடவை அல்லது தேஹத்தில் சக்தியிருந்தால் ஆசாரியன் போதுமென்று சொல்லும்வரை தண்டால் எடுக்கவேணுமாம்.

இப்படிசெய்தால்தான் பரஸமர்ப்பணமாகும் என்கிறார்கள். இதுவா? இவர்கள் செய்யும் ப்ரபத்தி, பரந்யாஸம், பரஸமர்ப்பணம், சரணாகதி இப்படியா தண்டால் எடுக்கச்சொல்லி சாஸ்த்ரம் விதித்திருக்கிறது? இவர்கள் அநுஷ்டிப்பதுபோல் தென்னாசார்யர்கள் அநுஷ்டிக்கவில்லையென்று, அவர்களுக்கு 'ப்ரபத்தி' கிடையாது, 'சரணாகதி' கிடையாது என்று இத்யாதிகளை அடுக்குகிறார்கள். இவர்கள் இப்படி அநுஷ்டிக்கிற அநுஷ்டாநத்திற்கு இவர்களால் ப்ரமாணம் காட்ட முடியுமா? கேட்டால் ச்ருதிகளிலும் இதிஹாச புராணங்களிலும், மற்றும் ஆழ்வார் அருளிச்செயல், ஆசார்யர்கள் முதலியவற்றிலிருந்து ப்ரகரண அநுகுணமாக ப்ரமாணம் காட்டாமல் ஒருப்ரகரணத்துக்கும் மற்றொரு ப்ரகரணத்துக்கும் வாசிதெரியாமல் முன்னுக்குப்பின் முரணாக எதையாகிலும் காட்டி ஏட்டை நிறப்பி குழப்புவார்களே தவிர யுக்தியோடுகூடிய நேரான அர்த்தத்தை ப்ரமாணமாக காட்டமாட்டார்கள், காட்டவும் தெரியாது இவர்களுக்கு.

இங்கே 'ந்யாஸம்' என்கிற ப்ரபத்தி, 'சரணாகதி' என்கிற ப்ரபத்தி என்று, ப்ரபத்தியிலும் இரண்டு வகையென்று பெரியோர்கள் பணிப்பார்கள். அதில் 'ந்யாஸ வித்யை' என்றப்ரபத்திக்கு உபாயத்திலும் பலத்திலும் வேறுபாடு உண்டு. அதேபோல் 'வரணம்' எனப்படும் 'சரணாகதி'க்கும் உபாயத்திலும் பலத்திலும் வேறுபாடு உண்டு என்பதை பூர்வர்கள் காட்டின வழியை பின்பற்றி இரண்டு ப்ரபத்திக்குண்டான வேறுபாட்டை ஸுதர்சனத்தில் வெளியிட்ட 'ஸித்தோபாயவிஜயம்' என்ற க்ரந்தத்தில். ஸ்ரீ.உ.வே வேளுக்குடி வரதாசார்யஸ்வாமி ஸ்ரீவசன பூஷண மீமாம்ஸா பாஷ்யத்தில் எழுதியுள்ளஸம்ஸ்க்ருதவ்யாக்யனத்திற்கு, தமிழில் எழுதியிருக்கும் ஸாரத்தை அப்படியே இங்கே கொடுக்கிறேன் :

("வரணம்" எனப்படும் (அநுபாய) ப்ரபத்தியான சரணாகதிக்கு 'ந்யாஸம்' எனப்படும் (உபாய) ப்ரபத்தியைக் காட்டிலும் வேறுபாடு நிரூபிக்கப்பட்டு. இவ்வரணமானது உபாயமாகாது என முன்னமே ஸாதிக்கப்பட்டது. இங்கு, இரண்டினுடைய முக்கியமான ஸ்வரூபத்தை நிரூபிப்பதன்

மூலம் இதே விஷயம் காட்டப்படுகிறது. சரணாகதிக்கும், பரந்யாஸத்திற்கும் (பல) ஸம்யோகம், ரூபம், சோதநா (விதி), பெயர் ஆகியவற்றில் பேதமிருப்பதால் இரண்டும் வெவ்வேறென்பது ஸித்தம். "நான் அவனைஎல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்" (கீதாசரமச்லோகம்) என்னும் பரகதஸ்வீகாரம் சரணாகதியின் பலமாயிருப்பதாலும் த்வயத்தின் உத்தரவாக்யத்திற் சொன்ன பரார்த்த கைங்கர்யம் (பரமபதத்தில் இதற்குப்) பலமாயிருப்பதாலும் (ஸ்வார்த்த கைங்கர்யத்தைப் பலமாகக் கொண்ட ந்யாஸத்தைக் காட்டிலும் இதற்குப்) பலபேதம் ஸித்திக்கிறது. பரந்யாஸமான உபாயப்ரபத்தி எம்பெருமானிடம் தன் சுமையை இறக்குவதாகிய உறுதியையே ஸ்வரூபமாகக் கொண்டதாகையாலும் சரணவரணமாகிற அ-நுபாயப்ரபத்தி எம்பெருமானையே உபாயமாக ப்ரார்த்திப்பதை ரூபமாகக் கொண்டதாகையாலும், இரண்டின் ஸ்வரூபமும் வேறுபடுகிறது. பரந்யாஸமும் 'நீயே எனக்கு ரக்ஷகனாவாயாக' என்னும் கோப்த்ருத்வ வரணத்தை உள்ளீடாக உடையதாகையால், அதுவும் ப்ரார்த்திப்பதை ஸ்வரூபமாகக் கொண்டது தானே' எனில் : ந்யாஸத்தில் 'என் சுமையை நீ ஏற்றுக் கொள்ளவேணும்' என்று ப்ரார்த்திக்கப் படுகிறது. சரணாகதியில் 'நீ எனக்குப் பலனையளிப்பாயாக' என்று பிரார்த்திக்கப்படுகிறது. மேலும், ' உன்னிடத்தில் என் பாரம் வைக்கப்பட்டது' என்னும் ப்ரந்யாஸம் ஸ்வாதந்தர்யத்தை உள்ளடக்கியது. 'என் சுமையை நீயே மேல்விழுந்து ஏற்றுக்கொள்ள வேணும்' என்னும் ப்ரார்த்தனையாயிருப்பதால் சரணாகதி பாரதந்தர்யத்தை உள்ளடக்கியது. ந்யாஸத்தில் பரஸமர்ப்பணம் முக்கியம் ; சரணாகதியில் உபாயமாக வரிப்பது முக்கியம் ; சுமையை இறக்குவதாகிற ந்யாஸத்திற்குப் பிராட்டியோடு கூடிய பெருமாள் உத்தேச்யம். சரணாகதியில் பிராட்டிக்கு உபலக்ஷணத்வமாத்ரமே; (உபாயப்ரார்த்தனையில் நேரே அந்வயமில்லை) ந்யாஸம் ப்ரணவத்தை அங்கமாகக் கொண்டதாகையால் (ப்ரணவத்திற்குப் பொருளான ஜகத்காரணத்வம் முதலான) பரத்வகுணங்கள் அதற்கு விஷயம். சரணாகதியில் கரணமந்திரம் த்வயமாகையால், அதில் சொல்லப்படும் ஸௌலப்யம் ஸௌசீல்யம் முதலான நீர்மைக்

குணங்கள் விஷயம். சரணாகதியில் ஜீவாத்மா தனக்குப் புண்ணியமில்லையென்றும், பாபம் உண்டென்றும் அநுஸந்திக்கவேணும், ந்யாஸத்தில் ப்ராதிகூல்யவர்ஜனமும் ஆநுகூல்யஸங்கல்பமும் அங்கமாகையால், பாபத்தை விடுகையும், புண்ணியமுடைமையும் அநுஸந்திக்கத்தக்கது.

"தன் அறிவாலே தேவனுடைய திருவடிகளிலே தன்னை ஸமர்ப்பிப்பதென்பதே ப்ரபத்தியாகும். இது எல்லாப் பாபங்களையும் போக்கும்" என்பது ந்யாஸத்தின் லக்ஷணம். "நான் அபராதங்களுக்கெல்லாம் ஆலயமாயும், கைம்முதலற்றவனாயும் வேறு புகலற்றவனாயும் இருக்கிறேன். நீயே எனக்கு உபாயமாவாயாக' என்று பிரார்த்திக்கும் அறிவே 'சரணாகதியெனப்படும். அது இந்த தேவனிடத்தில் பிரயோகிக்கப்படட்டும்". என்பது சரணாகதியின் லக்ஷணம் ஜிதந்தா ஸ்தோத்ரம் "ஜிதம் தே" என்னும் முதல் ஸ்லோகத்தாலே ந்யாஸமும், "தேவாநாம்" என்னும் இரண்டாவது ஸ்லோகத்தாலே சரணாகதியும் தனியாகச் சொல்லப்பட்டது. ஸ்தோத்ரத்திலும் "நமோ நம :" (21) என்னும் ச்லோகத்தாலே ந்யாஸமும், "ந தர்ம (22) என்னும் ச்லோகத்தாலே சரணவரணமும் தனிப்படுத்திச் சொல்லப்பட்டது. கத்யத்திலும் "த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே" என்று சரணாகதியும், 'நமோऽஸ்து தே' என்று பரஸமர்ப்பணமும் வேறாகக்கூறப்பட்டது ச்ருதிகளிலும் அவற்றுக்கு வேறாகவிதி காணப்படுகிறது. தைத்திரீய உபனிஷத்தில் "ஓம் "என்னும் மந்திரத்தாலே ஆத்மாவைப் (பரமாத்மாவிடம்) ஸமர்ப்பிக்க வேண்டியது" என்று ந்யாஸம் விதிக்கப்பட்டது. ச்வேதாச்வதர உபனிஷத்தில் "முமுக்ஷுவான நான் சரணமடைகிறேன்" என்று சரணாகதி விதிக்கப்பட்டது. அவ்வண்ணமே புருஷ ஸூக்தத்தில் "அபத்நந்புருஷம் பசும்" என்று ந்யாஸமும், "அத்ப்ய : ஸம்பூத :" என்னுமிடத்தில் சரணாகதியும் விதிக்கப்பட்டது. "தஸ்யதீரா :" என்றவிடத்தில் தீர (தீமதாமக்ரேஸர) சப்தத்தாலே, உபாயாந்தரநிஷ்டர்களுக்குள்ள 'ஸம்பந்த ஜ்ஞாநத்தில் நிறைவின்மை' இவனுக்கில்லை என்று கூறுவதன்மூலம் ஸம்பந்தஜ்ஞாநபூர்த்தியே இவனுக்குள்ள அதிகாரத் (தகுதி) என்று காட்டி "யோநிம் பரிஜாநந்தி"

(அவதாரரஹஸ்த்தை நன்கு அறிகிறார்கள்) என்னும் பகுதியாலே அவதார விஷயமாகவும், ஸௌலப்யாதிகுண விஷயமாகவுமிருக்கும் சரணாகதி தெரிவிக்கப்பட்டது. அதற்கு வேண்டிய புருஷகாரமும் "ஹ்ரீச்சலக்ஷ்மீச்ச" என்று காட்டப்பட்டது. பகவத்கீதையிலும், "மந்மநாபவ"(கீதை18-65) என்னும் ச்லோகத்தாலே பரந்யாஸமும், அடுத்த ச்லோகத்திலேயே "ஸர்வதர்மாந்" என்று சரணாகதியும் சொல்லப்பட்டது. லக்ஷ்மீதந்த்ரத்திலும் "உபாயாந்தரங் களையும் அபாயங்களாகிற பாபங்க்ளையும் கைவிட்டவனாய், நடுநிலையை ஏற்றவனாய், என்னையே சரணமடைந்து, இறுதியில் என்னையே அடைகிறான்" ( 17-58) என்று சரணாகதியைக் கூறி, "அதுவே ஆறு அங்கமுடையதாய் உபாயமாவதை என்னிடமிருந்து கேட்பாயாக" ( 17-59) என்று தொடங்கி பரஸமர்ப்பணம் வேறுபடுத்திக் கூறப்பட்டது. அஹிர்புத்ந்யஸம்ஹிதையிலும் அவற்றை வேறுபடுத்திக் கூறியுள்ளது ஸ்தூலபாரதந்த்ர்ய ரூபமாகையாலே ஷடங்க ந்யாஸத்தை ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மபாரதந்த்ர்ய ரூபமாகையாலே சரணாகதி ஸூக்ஷ்மமாகவும் சொல்லப் பட்டது. (எல்லா உபாயாந்தரங்களையும் கைவிடுகை அங்கமாயிருக்கையால் - அப்ரதாநமாகவும், அதை அங்கமாக வுடைத்தாயிருக்கையால் ஸித்தோபாய ஸ்வரூபம் ப்ரதாநமாகவும் கூறப்பட்டது) மற்றும், அயோத்தி ஜீயர் ஸ்வாமி அருளிச் செய்த முமுக்ஷுப்படி த்வயப் ரகரணவ்யாக்யானத்திலும் ஷடங்க சரணாகதிகளுக்கும் பேதம் நிரூபிக்கப்பட்டுள்ளதை பின்வருமாறு கொடுக்கப் பட்டுள்ளது:- "இங்கு சொல்லப்படும் ப்ரபத்தியானது வேதாந்தத்தில் சொல்லப்பட்ட ந்யாஸவித்யை முதலானவற்றைக்காட்டிலும் வேறுபட்டது என்பது ஆசார்யர்களின் திருவுள்ளம். ந்யாஸசரணாகதிகளுக்கு ஸம்யோகம், ரூபம், சோதநா (விதி), ஆக்யா(பெயர்) என்னும் நான்கும் வேறுபடுகின்றன. எப்படியெனில் :- "ஓம் என்று ஆத்மாவை தியானிக்கக்கடவன்" என்பது ந்யாஸத்தைப் பற்றியவிதி. "என் ஒருவனையே உபாயமாக அடைவாய்' "லக்ஷ்மீநாதனையே உபாயமாக வரிப்பாய்" முதலானவை சரணாகதியைப் பற்றியவிதி. இவ்விரு விதிகளும் ஒன்றாகமுடியாது. 'யுஞ்ஜீத' என்று சொல்லப்பட்ட யோக-

மும், 'சரணம் வ்ரஜ', 'உபாயம்' 'வ்ருணு' என்று சொல்லப்பட்ட சரணவரணமும் வெவ்வேறாகும். யோகமாவது தியானம். "ஓம் என்று ஆத்மாவை தியானியுங்கள்" என்று மற்றொரு வாக்கியம் ஓதுகின்றதன்றோ. 'யுஜிர்யோகே' 'யுஜஸமாதௌ' என்னும் தாதுபாடமும் "யோகஸ் ஸந்நஹந - உபாய - த்யாந - ஸங்கதியுக்திஷு" என்னும் நிகண்டுவும் யோகசப்தம் தியானத்தையே 'குறிக்கும் என்று காட்டுகின்றன. உபாயவரணமோவெனில்; உபாயமாகப் பிரார்த்திக்கும் செயலாயிருப்பது. ஆகையால் சோதநா (விதி) பேதத்தாலே ந்யாஸ வரணங்கள் வெவ்வேறுபட்டவை என்பது மறைக்கவொண்ணாதது.

இதற்குமேல் பின்வருமாறு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது :- ந்யாஸம் ஒரு தடவையே செய்யவேண்டியதுஎன்பது அனைவரும் இசைந்தது ; அப்படியிருக்க - பலமுறை அநுஷ்டிக்க வேண்டிய தியானமாக அதை இங்கு எப்படிக்கூறலாம்? என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாதாநமாவது :- ஒரு தடவை செய்யப்படவேண்டும் என விதிக்கப்படுவது பாஞ்சராத்ரசாஸ்திரத்தில் விதிக்கப்படும் ந்யாஸமேயொழிய, "யுஞ்ஜீத" என்று வேதத்தில் விதிக்கப்படும் ந்யாஸவித்யை யன்று. 'யுஜ-ஸமாதௌ' என்னும் தாது பாடபலத்தால் வைதிகந்யாஸவித்யையின் ஸ்வரூபம் பலமுறை அநுஷ்டிக்கப் படும் தியானமே என்று ஸித்திக்கையால், மற்றொரு வசனம் அதை ஒருமுறை அநுஷ்டிக்கப்படுவதாக விதிக்கிறது எனக்கொண்டால் முரண்பாடு ஏற்படும். அன்றிக்கே "சாஸ்த்ரார்த்தமான இந்த ந்யாஸம் ஒரு முறை அநுஷ்டிக்கப் பட்டாலே மனிதனை ஸம்ஸாரத்தினின்றும் தாண்டுவிக்கும். (லக்ஷ்மீதந்த்ரம் 17-92) என்னும் வசனத்தால் ந்யாஸரூபமான சாஸ்த்ரார்த்தமே ஒரு முறை அநுஷ்டிக்கப்படுவதெனக் கூறுகையால், 'யுஞ்ஜீத' என்று விதிக்கப்படும் தியானரூபமான சாஸ்த்ரார்த்தத்திற்கே ஒருமுறை அநுஷ்டிக்கப்படவேண்டும் என்னும் விசேஷம் பாஞ்சராத்ரத்தில் விதிக்கப்படுவதாகக் கொள்ளலாம். ஆக, ந்யாஸவித்யைக்கு ஒருமுறை அநுஷ்டிக்கப் படவேண்டும் என்னும் வசனமிருப்பதால், ஸத்வித்யை முதலான மற்ற வித்யைகளைப்போலே அது ஆயுள்வரையில் திருப்பித் திருப்பி அநுஷ்டிக்கப்படவேண்டும் என்னும்

நிர்ப்பந்தம் தவிர்க்கப்பட்டதாகிறது. சாஸ்த்ரார்த்த ஸ்வரூபத்திலேயே அடங்கியதும், 'யுஞ்ஜீத' என்று உத்பத்தி வாக்யத்திலேயே ஸித்திப்பதுமான த்யாநரூபமாயிருக்கும் தன்மையையும், 'ஒருமுறை அநுஷ்டிக்கப்படவேண்டும்" என்னும் வசநம் தடுக்க முடியாது. அப்படித்தடுத்தால் சாஸ்த்ரார்த்த ஸ்வருபமே அழியுமாகையால், விதிக்கக்கருதிய ஸக்ருத்த்வத்திற்கு ஆஸ்ரயமான ந்யாஸமே ஸித்திக்காமற் போகும். ஆக, ஒரு முறையே அநுஷ்டிக்கப்படும் தியான ரூபமாயிருப்பது ந்யாஸம்என்றும் கொள்ளலாம். மேலும், "ஜீவனை ப்ரஹ்மத்திடம் ந்யஸிக்க வேண்டும்" என்னும் வசனத்தில் 'நீ' என்னும் உபஸர்க்கத்தோடு கூடிய 'அஸ' தாது 'ஸமர்ப்பித்தல்' என்னும் பொருளையே குறிக்குமாகையால், 'உபாயவரணம்' என்னும் பொருள் அதிலிருந்து ஸித்திக்காதாகையால், ந்யாஸ சரணாகதிகளுக்கு வேறுபாடு மறைக்கமுடியாததேயாகும். ஆக, சோதநாபேதம் ஸாதிக்கப்பட்டதாயிற்று.

ந்யாஸ சரணாகதிகளின் ரூபமும் வேறுபடுகிறது. எப்படியெனில் : "ஆத்மாவை தியானிக்கக்கடவன்" என்று ந்யாஸவித்யை ஜீவாத்மாவை முக்கியமாகக் குறித்தாகையாலும், "என்னையே உபாயமாக அடைவாய்" என்று சரணாகதி பரமாத்மாவை முக்கியமாகக் குறித்ததாகையாலும் இரண்டுக்கும் ரூபம் வேறுபட்டதே. மேலும், ந்யாஸ வித்யையில் ஜீவனுக்கு விசேஷணமாக அநுஸந்திக்கப்படும் ப்ரஹ்மத்திற்கு "**ப்ரஹ்மாவிச்வ : கதம : ஸ்வயம்பு : ப்ரஜாபதி: ஸம்வத்ஸர :**" என்று தொடங்கும் வாக்கியத்தில் ஓதப்பட்ட பெரியதாயிருக்கும் தன்மை முதலாக மஹத்வமீறாகவுள்ள பரத்வகுணங்கள் விசேஷணமாக அநுஸந்திக்கத்தக்கவை. சரணாகதியிலோவெனில்,(த்வயத்தில் கூறப்படும்) வாத்ஸல்யம் முதலான எட்டு குணங்களோடு கூடியவனாகப் பரமாத்மா நேரே 'அநுஸந்திக்கத்தக்கவன். "**வஸுரண்யோ விபூரஸி**" என்று ஓதப்பட்ட ஸர்வாதாரமான விபுஸ்வரூபம் ந்யாஸத்திற்கு விஷயம். "**ஸர்வம் பூர்ணம் ஸஹோம்**" என்று த்வயோபனிஷத்தில் ஓதப்பட்ட குணபூர்த்தியுடைய அர்ச்சாவதாரம் சரணாகதிக்கு விஷயம். 'ப்ரஹ்மாத்மா' என்று ஓதப்பட்ட தேவதாந்தர்யாமித்வமும் ந்யாஸத்தில்

அநுஸந்திக்கத்தக்கது. சரணாகதியில் "சரணௌ" என்னும் த்வயபூர்வகண்டபதத்தில் ஸ்ரீபராங்குச பரகால யதிவராதிகளான ஆசார்யர்களோடு கூடியிருக்கை அநுஸந்திக்கத்தக்கது. ந்யாஸத்தில் 'ப்ரஹ்மணே த்வா மஹஸே' என்றவிடத்தில் நாலாம் வேற்றுமைப் பதங்களாலே ப்ரஹ்மத்திற்கு சேஷித்வமும், அவற்றோடு ஒரே வேற்றுமையில் படிக்கப்படும் "ஓமிதி" என்னும் ப்ரணவத்திலுள்ள அகாரத்தினால் ரக்ஷகத்வமும் அநுஸந்திக்கத்தக்கது. சரணாகதியிலோவெனில், 'சரண' சப்தத்தினால் மோக்ஷபல கரணத்வம் அநுஸந்திக்கத்தக்கது. ஆக, ரூபபேதமும் மறைக்கவொண்ணாதது.

அவ்வண்ணமே ந்யாஸசரணாகதிகளின் ஸம்யோகமும் (பலமும்) வேறுபடுகிறது. ந்யாஸவித்யை உபாயாந்தரங்களான முப்பத்திரண்டு வித்யைகளில் ஒன்றாகையால், அதில் ஈடுபடுபவர்களுக்கு அதின் பலத்தின் ஸ்வாமியாயிருக்கையாகிற அதிகாரம் பற்றிய ஜ்ஞானம் ஏற்படுகையால், "சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி" (சாஸ்திரத்தின்பலம் அதைப் பிரயோகிப் பவனுக்கு ஏற்படுகிறது) என்கிற ந்யாயத்தாலே ந்யாஸ வித்யைக்கு ஸ்வார்த்த மோக்ஷமே பலமாகிறது. சரணாகதி உபாயமாகாதாகையால், ஸித்தமான பகவானுக்கே அதில் உபாயத்வமாகையால், சேதனன் உபாயாநுஷ்டாதாவாக ஆகாமையாலும் "பரமபுருஷனால் ரக்ஷிக்கப்படும் இவனுக்குப் பலத்தில் ஸ்வாமித்வமற்றிருக்கை" (லக்ஷ்மீ தந்த்ரம் 17-74) என்கிறபடியே பலஸ்வாம்யமாகிற உபாயாதிகாரம் இவனால் கைவிடப்படுகையாலும், த்வயத்தில் உத்தரகண்டத்தில் நம : சப்தத்தாலே பலனில் பாரதந்த்ர்யமே பிரார்த்திக்கப்படுகையாலும், கேவலபரார்த்த மோக்ஷமே சரணாகதிக்குப் பலமாகையால், ந்யாஸசரணாகதிகளுக்குப் பலனில் இவ்வாறு வாசி உள்ளதையிட்டு ஸம்யோகபேதமும் ஸித்திக்கிறது.

'ந்யாஸ வித்யை' என்று ந்யாஸத்திற்கும், 'சரணாகதி வித்யை' என்று சரணாகதிக்கும் பெயரில் பேதமுள்ளதாகையால் ஆக்யா பேதமும் அவற்றினிடையே உள்ளது. "அதற்கே ந்யாஸம் என்னும் பெயர் அறியப்படுகிறது. அது

முதலில் உபாயமாகிறது" என்று ந்யாஸத்தைப் பற்றியும், "(நீயே உபாயமாவாயாக என்று பிரார்த்திக்கும் அறிவே) சரணாகதியாகிறது ; அது இந்த தேவனிடம் பிரயோகிக்கப்படட்டும்" என்று சரணாகதியைப் பற்றியும் வசனங்களில் இந்த நாமபேதம் மிகக் தெளிவு. ஆக, இவ்வண்ணமாக ந்யாஸ சரணாகதிகளுக்கு ஸம்யோகம், ரூபம், சோதநா, ஆக்யா என்னும் நாலிலும் மிகவும், பேதம், இருக்கும்போது இவை இரண்டும் ஒன்றே என்று சிலர் கூறுவார்களாகில், அதே முறையில் எல்லாக்கர்மங்களும், வித்யைகளும் ஒன்றேயாகி, எல்லாம் ஒன்றோடொன்று கலந்து, எல்லா சாஸ்த்ரார்த்தங்களும் குழம்பிவிடும். ஒன்றோடொன்றுக்கு வேறுபாட்டைக் காட்டுவதாக சப்தாந்தரம் முதலானவற்றை ஒப்புக் கொண்டிருப்பதையும் கைவிட வேண்டிவரும்" ஆகவே, ஷடங்க, சரணாகதிகளுக்கு பேதம் நிரூபிக்கப்பட்டதை முறையே உபாய ப்ரபத்தி, அநுபாய ப்ரபத்திகளுக்குப் பலமே ஸ்வார்த்த, பரார்த்த கைங்கர்யங்கள் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்".

இதிலிருந்து ந்யாஸவித்யையும் சரணாகதியுமாகிற இருவிதமான ப்ரபத்தியும் ஸ்தூல ரூபமாகவும் சூக்ஷ்ம ரூபமாகவும் இருக்கும். அதாவது, ந்யாஸத்தில் :- "**பரப்ரஹ்மணேத்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத**" (தை. நா) (பரப்ரஹ்மமாகிய உன்னைஅடையும் பொருட்டு ஓம் என்ற மந்திரத்தை அநுஸந்தித்து ஆத்மஸமர்ப்பணம் செய்யவும்) என்றும், "**த்வயிமமபர : ந்யஸ்த**" (உன்னிடத்தில் என்பாரம் வைக்கப்பட்டது) என்ற இந்த பரந்யாஸ ரூபமான ந்யாஸ ப்ரபத்தி ஸ்வகதஸ்வீகாரரூபமான ஸ்வாதந்த்ர்யத்தை உள்ளடக்கியது என்றும், ப்ராதிகூல்யவர்ஜனம் முதலான ஆறும் அங்கமாகையால், பாபத்தை விடுகையும், புண்ணியமுடைமையும் அநுஸந்திக்கவேணும் என்றும், "என்சுமையை நீ ஏற்றுக் கொள்ள வேணும்" என்றும், "தன் அறிவாலே தேவனுடைய திருவடிகளில் தன்னை ஸமர்ப்பிப்பதென்பதே ப்ரபத்தியாகும் என்றும் இப்படி ஸ்வஸ்வா தந்த்ர்யத்தை உள்ளடக்கிய இந்த 'ந்யாஸவித்யை' ஸ்தூலரூபமாயிருக்கும் என்று விளக்கப்பட்டது.

சரணாகதியில் :- "மம பரம் ஸ்வீக்ரு" (என் சுமையை நீயே மேல் விழுந்து ஏற்றுக்கொள்ளவேணும்) என்னும் ப்ரார்த்தனாரூபமாகயிருப்பதால் சரணாகதி பாரதந்த்ர்யத்தை உள்ளடக்கியது. "அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" (நான் உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் - சரமச்லோகம்) என்னும் பரகதஸ்வீகார ரூபமான இந்த சரணாகதியாகிற ப்ரபத்தி பாரதந்த்ர்யத்தை உள்ளடக்கியிருக்கிறது. "அஹமஸ்ய அபராதாநாம் ஆலயோSகிஞ்சநோ அகதி : த்வமேவ உபாய பூதோமேபவேதி ப்ரார்த்தநாமதி:-" அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை.(நான்குற்றங்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருக்கிறேன்; என்னை ரக்ஷித்துக் கொள்ள ஒரு உபாயமற்றவனாயிருக்கிறேன்; உன்னையொழிய புகலில்லை ; நீயே எனக்கு உபாயமாவாயாக என்று ப்ரார்த்திக்கும் புத்தியே சரணாகதி எனப்படுகிறது) என்றும், "மாமேகம் சரணம் வ்ரஜ" - (சரமச்லோகம்) (என்னையே உபாயமாக புத்தி பண்ணு) என்றும் "த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே" - ஸ்த்தோத்ர ரத்னம். (உன்னுடைய திருவடித்தாமரைகளையே உபாயமாக நிச்சயிக்கிறேன்) என்றும்; "த்வத்பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே" - கத்யம். (தேவரீருடைய திருவடித்தாமரைகளையே உபாயமாக புத்தி பண்ணுகிறேன்) என்றும் சொல்லியிருப்பதாலே சரணாகதியாகிற இந்த ப்ரபத்தியோகம், சுலபமான அநுஷ்டாநத்தையுடைய ப்ரார்த்தனையை உள்ளடக்கியதாகையாலும், பாரதந்த்ர்ய ரூபமாகையாலும், சரண்யனுடைய அருளையே முக்கியமாகக் கொண்டிருப்பதாலும் ஸூக்ஷ்ம ரூபமாகையாலும்; இதற்கு கரணமந்த்ரம் 'த்வய' மகையாலும் இந்த பரந்யாஸத்திற்கும் சரணாகதிக்குமுள்ள இவ்வேற்றுமைகளையே அறியமாட்டார்கள் இவர்கள். ஆனால், தென்னாசார்யர்களுக்கு பரந்யாஸம் கிடையாது சரணாகதியுமில்லை என்று வாய்கிழிய பிதற்றுவார்கள் தங்கள் குறைபாடுகளை நிவர்த்திக்க முற்படாமல் அடுத்தவர்களை குறை கூறுபவர்களிவர்கள். அந்தோபரிதாபம்! இத்தை, "தாப:புண்ட்ர ததாநாம மந்த்ரோயாக ஞ்ச பஞ்சம : " என்று, ஐந்து ஸம்ஸ்காரங்களில் ஒன்றான மந்த்ர ஸம்ஸ்காரமான 'த்வய'த்தை ஆசாரியன் சிஷ்யனுக்கு உச்சாரணம் பண்ண அத்தைத்திருப்பி அநுச்சாரணம் (சிஷ்யன்) பண்ணும்

முகத்தாலே இவனுக்கு ப்ரபத்திய நுஷ்டாநம் பிறந்துவிடுகிறது. இப்படி இந்த ப்ரபத்தியை ஆசாரியன் மூலமாக ஸூக்ஷ்மரூபமாக பண்ணிவிடுகிற படியால், எம்பெருமானார் பெரிய பெருமாளிடத்தில் கத்ய முகமாக ப்ரபத்தி பண்ணினதுபோல், ஆசாரியரான எம்பெருமானார் அபிமாநத்தைக் குலைத்துக் கொண்டு நாம் தனித்து ஸ்வதந்த்ரமாக பண்ண வேண்டியதில்லை என்று 'ஆசாரிய அபிமாநத்தின் சீர்மையறிந்த பெரியோர்கள் கூறினார்கள். இத்தை உத்தேசித்துத்தான் தென்னாசாரிய ஸம்ப்ரதாயத்தில் உள்ள பெரியவர்கள், "ஸ்ரீபாஷ்யகாரர் செய்த ப்ரபத்தி னாலேயே நாமும் உத்தீர்ணராவோம்' என்று சொன்னதும், "ஸ்ரீபாஷ்ய காரரோடு உண்டான குடல் துவக்காலே நாமும் உத்தீர்ணராவோம்" என்று முதலியாண்டான் அருளிச் செய்ததும். ஸ்வாமி முதலியாண்டான் அருளிச் செய்ததுக்கு கருத்து, "ஆசார்ய அபிமாநமேஉத்தாரகம்" என்கிற சரமபர்வ நிஷ்டையை பற்ற அருளிச் செய்தார். இதுபுரியாமல் இவர்கள், "பாஷ்யகாரர்சம காலத்தில் வாழ்ந்தவர்களுக்குத்தான் அவர் பண்ணிய ப்ரபத்திபலிக்கும் மற்றவர்களுக்குப் பலிக்காது" என்கிறார்களிவர்கள். கேண்மின் : ஒருவன் ஒரு குலத்தில் பிறந்தால் அவனுக்கு பிதா, பிதாமஹன், ப்ரபிதாமஹன் என்ற ஸம்பந்தத்தாலே மூதாதையர் ஆகிவிடுகிறார்கள் அல்லவா. அதனால் அந்த மூவர்க்கும் உத்தேசித்து ஸ்ரார்த்தத்தில் பிண்டதர்ப்பனம் முதலானவைகள் போடும்போது அது பித்ருதேவதைவரை செல்லுகிறதல்லவா. அதேப்போல் இங்கேயும், ஆசாரியன், ப்ராசாரியன், பரமாசாரியன் என்று எம்பெருமானார் வரை சிஷ்யன் பண்ணும் பக்தி, ஸ்துதி ஸமர்ப்பணாதிகள் செல்லுமல்லவா. இதனால் எம்பெரு மானார் குடல்துவக்கு நமக்கெல்லாம் ஏற்படாதா? அதனால் தானே உடையவருடைய உத்தாரக ஆசாரியரான ஸ்வாமி நம்மாழ்வாரும்; "பொய்நின்ற ஞானமும் பொல்லாஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மையினி யாமுறாமை" ......... அடியேன் செய்யும் விண்ணப்பம்" (1) என்கிற முதல் ப்ரபந்தமான முதல் பாசுரத்தில், அருளிச்செய்தார். இங்கு "யா-முறாமை" என்கையாலே, என்னைச்சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் இந்த ப்ரக்ருதி ஸம்பந்தம் ஒழியவேண்டும். இதற்கு ' அடியேன் செய்யும் விண்ணப்பம்' என்று நம்

எல்லோருக்கும் ப்ரபந்த ஜனகூடஸ்தரான ஆழ்வாரும் ப்ரார்த்திக்கவில்லையா? ஏன் ப்ரார்த்தித்தார்? சிந்திக்க வேண்டாமா? "புகழ்மலிந்த பாமன்னுமாறன், அடிபணிந்து உய்ந்தவன் பல்கலையோர் தாம்மன்னவந்த இராமநுசன்" என்று, மாறனாகிறநம்மாழ்வாருடைய திருவடித்தாமரைகளை பணிந்து உஜ்ஜீவிக்கப் பெற்றவரான உடையவருக்கும் - நம்மாழ்வாருக்கும் கால வித்யாசம் உண்டல்லவா? பின்னை எப்படி அவரால் இவர் உஜ்ஜீவித்தார்? ஸம்பந்த ஜ்ஞானந்தானே சாதாரண மனிதன் கூட இதை உணர்ந்து கொள்வான். ஆகவே நாம் முன்காட்டிய லோகதிருஷ்டா ந்தத்தையும், வைதிக திருஷ்டாந்தத்தையும் உற்று நோக்கினால் தானே புரிந்து விடும். இதற்கு சிரோந்மணிபட்டமும் வேண்டா, பெரியபாண்டித்வமும் வேண்டா சாதாரணம் படித்தவருக்கே இது புரியும்.

ஆகவே, தனித்து ஸ்வதந்த்ரமாகவே நாம் ப்ரபத்தியை அநுஷ்டித்தால், இதற்குமுன் பிறவிகளில் நாம் செய்த செயல்களை உணர்ந்தால் இந்த ப்ரபத்தியும் அபராத கோடியிலேயாய், "தஸ்மாத்ப்ரணம்ய" என்று, ப்ரபத்தி பண்ணினதற்கே மன்னிப்பு கேட்க வேண்டிவருமென்பதை ஸ்ரீபிள்ளைலோகாசார்யர், "நெடுநாள் அந்யபரையாய்ப் போந்த பார்யை, லஜ்ஜாபயங்களின்றிக்கே, பத்ருசகாசத்திலே நின்று, 'என்னை அங்கீகரிக்க வேணும்' என்று அபேக்ஷிக்குமா போலேயிருப்பது ஒன்றிறே இவன் பண்ணும் ப்ரபத்தி" என்று அருளிச்செய்கிறார். ஸ்ரீவசனபூஷணம் - *148* சூத். இதுக்கர்த்தம், (நெடுங்காலம் கணவனோடு ஒட்டற்று வேறோர் ஆண்மகனை அடைந்தவளாய் தன்னுடைய தண்டனைக்குப் பாத்ரமாய் போந்தவளான ஒரு மனைவியானவள், 'இப்படிப்பட்டநாம்', கணவன் முன்னே கூசாமல் சென்று நிற்கும்படிஎன்?' என்கிற வெட்கமும் இத்துணைக்காலமும் நாம் செய்து திரிந்ததெல்லாம் கண்டிருக்கிறவன் இப்போது வந்து நம்மையிப்படி விரும்புவதே என்று தண்டிக்கில் செய்வதென்? என்ற அச்சமும் இல்லாமல், அவன் முன்னே சென்று நின்று, 'என்னை அங்கீகரிக்க வேண்டும்' என்று கூறுவது போலே இருக்கும் இந்தப்ரபத்தி என்கிறார். அதே உதவாக்கரைப் பெண்ணைப் போலேதானே நாம் சென்ற பிறவிகளில்

இருந்திருப்போம். இதை மறுக்க முடியுமா, மறக்க முடியுமா? அதாவது, "ஓடிஓடிப்பலபிறப்பும் பிறந்து மற்றோர் தெய்வம், பாடியாடிப் பணிந்து பல்படிகால் வழியேறிக் கண்டீர்" என்கிறபடியே திறந்து கிடக்கிற வாசல்கள் தோறும் புகுந்து திரியும் நிஹீன ஜந்துவைப்போலே' தெய்வமல்லாதவற்றைத் தெய்வமென்றும்', 'தாயேதந்தை யென்றும் தாரமேக்கிளை மக்களென்றும்' நமக்குறவல்லாத வரையெல்லாம் உறவினர் என்றும், இப்படிப் பலபிறவிகளில் தோள்மாறி, "மாறிமாறி பலபிறப்பும் பிறந்து" என்கிறபடியே நாம்பிறக்கும் பிறவிகள்தோறும் எம்பெருமானும், "பஹூநிமே" என்றும், "பல்பிறவிப்பெருமானை" "பஹூதா விஜாயதே" (பிறப்பற்ற வனாயிருந்தும் பலபிறவி எடுக்கிறான்) என்கிறபடி ஒக்கப்பிறந்து, "நான்தான் உனக்குஸ்வாமி, எல்லவுறவு முறையும் நானேதான்" என்று எம்பெருமான் நமக்கு உணர்த்தினாலும், 'நீ அல்லை அல்லையென்று அவனை வெறுத்து உதாசீனப்படுத்திவிட்டு, யார் யாரையோ தனக்கு உண்மையான உறவல்லாதவரையெல்லாம் தாய், தந்தை, தாரம், பிள்ளை தெய்வம், நண்பன் என்று அறிவின்மையால் ஜென்மந்தோறும் திரிந்து கொண்டிருக்கிற நம்மை உய்விப்பதற்காக, நாம் செய்த அநீதியையே பற்றாசாகக் கொண்டும், அஜ்ஞாத ஸுக்ருதங்களை கல்பித்து இஜ்ஜென்மத்தில் ஸ்ரீவைஷ்ணவனாக்கியிருக்கிறான். இப்படி பல ஜன்மத்தில் நாம் பண்ணியிருக்கும் அபராதங்களை திருவுள்ளத்தில் கொண்டிருக்கும் எம்பெருமானை இன்று வந்து "என்னை அங்கீகரிக்க வேண்டும்" என்று ஸ்வதந்த்ரமாக நாம் ப்ரபத்திபண்ணினால், ஏற்றுக்கொள்வானோ? ஏற்றுக் கொண்டாலும் கொள்வான் அல்லது விட்டாலும் விட்டு விடுவான். அதனால்தான் நம்பூர்வாசாரியர்கள் ; ஆசாரியனை முன்னிட்டும் பிராட்டியை புருஷகாரமாகக் கொண்டும் அவனை அடையவேண்டும் என்கிறார்கள். ஆகையால், ப்ரபத்தி பண்ணாத ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவருமிலர், ப்ரபத்திபண்ணும் விஷயத்தில்தான் வித்யாசம்.

மேலும், "பக்தியில் அசக்தனுக்கு ப்ரபத்தி;ப்ரபத்தியில் அசத்தனுக்கு இது". 'இது' என்றால் "ஆசாரியாபிமாநம்" என்கிறார் ஸ்ரீவசனபூஷணத்தில் ஸ்ரீபிள்ளைலோகாசார்யர்.

இங்கே 'பக்தியில் அசக்தனுக்கு' என்பதாலே பக்தியை அநுஷ்டிக்க சக்தியில்லாமையாலன்று, ஸ்வரூப விருத்தமாகையாலே அப்படிச் சொன்னார். அதேப்போல் 'ப்ரபத்தியிலசக்தன்' என்பது, ப்ரபத்தி செய்யமுடியாமையால் அன்று. நாம் பண்ணியிருக்கும் அபராதத்தாலே இறைவன் சீறுமென்று விடுத்து, சரமோபாயமான ஆசார்ய அபிமானத்தில் ஒதுங்கி, 'ஆசார்ய அபிமானமே உத்தாரகம்' என்றிருக்கும் சரம பர்வநிஷ்டையை நினைத்து அப்படிச் சொன்னார். (ப்ரதமபர்வம் - இறைவனைப் பற்றுவது. சரமபர்வம் - ஆசாரியனைப் பற்றுவது) ஆகவே இவர்கள் ப்ரபத்திவிஷயமாக ஸ்ரீவசந பூஷணத்திலுள்ள அந்த ஸூத்ரங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்து தாறுமாறாக அர்த்தகல்பனைப் பண்ணாமல் அந்ததிவ்ய சாஸ்த்ரத்தை தென்னாசார்யரிடம் வரியடைவே காலக்ஷேபம் பண்ணினால் தான் இந்த ஸூக்ஷ்ம அர்த்தம் புரியும் இல்லையென்றால் வெரும் ஏட்டை நிறப்பி வீண்வாதங்களைத்தான் இவர்களால் செய்து கொண்டிருக்க முடியும். உண்மை புரியாது. எனவே இந்த ப்ரபத்தி லக்ஷணத்தை நாம் மேலே காட்டியபடி சாஸ்த்ரமூலமாகவும், ஸதாசார்யன் மூலமாகவும் அறிந்திருக்கும் சாராசார விவேகிகளான ப்ரபந்நர்களுக்குத்தான் இவ்வர்த்த விசேஷங்கள் புரியும் என்று அறிவித்து நிற்கிறேன்.

## லக்ஷ்மியின் அநுபாயத்வம்

கீழ்ப்ரபத்தி ஸ்வரூபத்தை நிரூபித்து பின்பு ப்ரபத்தியை அநுஷ்டிக்கும் போது பிராட்டிக்கு உபாயத்வம் உண்டு என்று சிலர் வாதிக்கிறார்கள். அவர்கள் வாதம் நிலைநிற்காது என்பதை ப்ரமாணங்களைக் கொண்டும் பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்தியைக் கொண்டும் நிரூபிப்போம் : "மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறலடிகள்" என்று தொடங்கி, போகவேளையிலே 'கோலமலர்ப் பாவைக்கன்பாகிய என்னன்பே' என்று சொல்லுகையாலே 'ஆச்ரயண வேளையோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யமென்னுமிடம் சொல்லிற்றாயிற்று" என்று, ஈட்டில் மஹாப்ரவேசம் முதல் ச்ரிய: பதியில் அருளியிருப்பதைக்

கொண்டு, பிராட்டிக்கு உபாயத்வமுண்டென்று வாதிடுகிறார் களிவர்கள். இவர்கள் ஈட்டை தான் தோன்றித்தனமாக ஏடுபார்த்துவிட்டுச் சொன்னதின் விளைவுதான் அதின்மஹார்த்தம் புரியாமல் போய்விட்டது. ஒருவன் தான் கஷ்டப்பட்டு சம்பாதித்தால் தான் அந்த பொருளின் அருமை தெரியும். அந்தப்பொருளே களவுமூலமாக லேசாக கிடைத்துவிட்டால், தான் தோன்றித்தனமாக செலவு செய்வான். அதுபோல் இவர்கள் ஈட்டை வாங்கி வைத்துக் கொண்டு, தான் தோன்றித்தனமாக அர்த்தம் கல்பிக்கி றார்கள். அந்த ஈட்டின் அர்த்தம் புரிய வேண்டுமானால் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் ஊற்றமுள்ள மஹான்களிடம் வரிஅடைவே காலக்ஷேபம் கேட்டால் தான் அதின் அர்த்தம் புரியும். அதைவிட்டு தென்னாசார்யஸம்ப்ரதாயத்தில் த்வேஷத்தை வைத்துக் கொண்டு தன் அபிமாநத்தாலே ஏடுபார்த்து படித்துவிட்டு தேசிகஸம்ப்ரதாய கண்ணோட்டத்துடன் அந்த ஈட்டு பங்க்திகளுக்கு அர்த்தம் சொன்னால், இதுபோன்ற விபரீத அர்த்தம் தான்வரும். அது கொண்டு ஏட்டை நிறப்புவதில் ஒருப்ரயோஜனமில்லை.

மேலே இவர்கள் எடுத்துக்காட்டிய ஈட்டுபங்க்திகளுக்கு நம்முடைய பூர்வாசார்யர் அருளிய விளக்கத்தைக் காட்டுகிறேன்; அதாவது, சரணாகதி மந்த்ரத்தைச் சொல்லி எம்பெருமானை ஆச்ரயிக்கும் ஆச்ரயணவேளையில்; அபராதத்தோடுகூடியநாம் எம்பெருமானைநெருங்கும்போது நீரிலே நெருப்புக்கிளருமாப்போலே இறைவன்திருவுள்ளத்தில் சீற்றம் பிறந்தே தீரும். ஆகையால், பிராட்டி நமக்கு மாதாவாகையால் அவளை புருஷகாரமாகக் கொண்டு பற்ற வேண்டும். போக வேளையில் ; நமக்கு எம்பெருமானும் பிராட்டியும், தகப்பனும் தாயுமாயிருப்பதாலே "இளையபெ-ருமாளைப்போலே இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை" என்கிறபடியே, இருவருக்கும் கைங்கர்யம் செய்வதே நமக்குஸ்வரூபமாகையால், ஆச்ரயணவேளையோடு போகவேளையோடு இரண்டிடத்திலும் நமக்கு இருவருமே உத்தேச்யம் என்பதைத்தான் ஈடுதெரிவிக்கிறது. அடுத்து, ஆறாம்பத்து பத்தாந்திருவாய் மொழி பத்தாம் பாட்டு "அகலகில்லேன்" வ்யாக்யானத்தில் ஈட்டில், "இருவருமான சேர்த்தியிலே இறே இவன் அடிமை செய்வது, அச்சேர்த்தி

தன்னையேயிறே இவன் உபாயமாகப் பற்றுகிறதும்........இப்படி உபயமும் விலக்ஷணமான மிதுனம் உத்தேச்யமாக இருக்கிற முமுக்ஷுக்களுக்கு ஒரு குறையுண்டோ, இவர்களைத் தனித்தனியே பற்றினார்க்கு ஸ்வரூபவிநாசமிறே. மிதுனமே உத்தேச்யமென்பார்க்கு ஸ்வரூபோஜ்ஜீவனமிறே" என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியை எடுத்துக்காட்டி நாம்பிராட்டியைவிட்டு பெருமானைமட்டும் பற்றுவதுபோல் காட்டுகிறார்கள் இவர்கள். இதற்கு சமாதானம் : 'இருவருமான சேர்த்தி' என்பது போகவேளையில், பெருமானும் பிராட்டியும் சேர்ந்திருக்கிற நிலையிலே சேதனராகிய நாம் கைங்கர்யம் செய்வதை பலதசையென்றும் ; "அச்சேர்த்தி தன்னையேயிறே இவன் உபாயமாக பற்றுகிறதும்" என்பது, ஆச்ரயண வேளையில் ; அதாவது, நாம் பெருமானை ஆச்ரயிக்கும்போது பிராட்டியை புருஷகாரமாகப்பற்றி ஆச்ரயிப்பது முறையாகையால் இது உபாயதசையென்றும் நம்பூர்வர்கள் நிர்வாஹம்.

'மிதுனமே உத்தேச்யம்' என்று ஈட்டில் சொன்னதற்கு அவ்விடத்தில் அடையவளைந்தான் அரும்பதஉரை : "புருஷகாரத்வ ப்ராப்யத்வங்கள்" அதாவது பிராட்டியை புருஷகாரமாகவும் ப்ராப்யமாகவும், பெருமானை உபாயமாகவும் ப்ராப்யமாகவும் இப்படி இருவரையும் சேர்த்து பற்றுகிற நிலையையே 'மிதுனமே உத்தேச்யம்' என்கிறார் அரும்பதவுரைகாரர். சூர்ப்பணகைப் போலேயும், ராவணனைப்போலேயும் தனித்தனியாக நாம் பற்றுவதுபோல் எழுதுகிறார்கள் இவர்கள். யார் தனித்தனியே பற்றுகிறார்கள் சிந்திக்கவேண்டாமா? இதற்குமேல்யிவர்கள் பிராட்டிக்கு உபாயத்வத்தை கல்பித்து மற்றையத்திருவாய்மொழியிலுள்ள ஈட்டு பங்க்திகள் எல்லாவற்றையும் எடுத்து இவர்களுக்கு சாதகம்போல் இருக்குமென்று ஏட்டை நிறப்பிநுனிப்புல் மேய்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் மூலப்ரமாணங்களைக் கொண்டு நிரூபிப்போம் : அதாவது நமக்கெல்லாம் ப்ரதான ப்ரமாணமாயிருப்பது ச்ருதிஸ்ம்ருத்யாதிகள். அவைகளைக் கொண்டே பிராட்டிக்கு புருஷகாரத்வமேயுள்ளது உபாயத்வமில்லை என்றும், எம்பெருமானுக்கே உபாயத்வம் உள்ளது என்று மூதலிப்போம். முதலில் கடவல்லி உபநிஷத் ப்ரஸித்தமான 'த்வய'மந்திரத்தைக் கொண்டு பார்ப்போம்.

"ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே- ஸ்ரீமதே நாராயணாய நம:" (பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ள நாராயணனுடைய இரண்டு திருவடிகளையே உபாயமாகக்கொண்டு பற்றுகிறேன். பெரிய பிராட்டியா-ரோடே கூடியிருந்துள்ள நாராயணனுக்கு களையற்ற கைங்கர்யம் செய்யப்பெறவேணும்) என்று பொழிப்புரை. இந்த பூர்வ வாக்கியத்திலுள்ள 'சரணௌ' என்கிற த்விவசனப்ர யோகம், பண்ணியிருப்பதாலே (த்விவசனம் - இருமை) நாராயணனுடைய இரண்டு திருவடிகளையென்று தான் இங்கு அர்த்தம் கொள்ள வேண்டும். 'த்விவசனம்' இரண்டிற்கு மேல் மற்றொன்று ஸஹிக்காதாகையாலே, இப்படியில்லாமல் பிராட்டியினுடைய திருவடிகளையும் (நான்காக) சேர்த்து உபாயமாகக் கொள்ள வேணும் என்றால் அப்போது 'சரண :' என்று ஜாத்யேக வசனமாகக் கொண்டு (ஜாதியொருமையாகக் கொண்டு) அவளுக்கும் உபாயத்வம் கொள்ளலாம். அப்படியில்லையேயிங்கு. மேலும் 'சரணாந் :' என்று பஹுவசனப்ரயோகம் (பன்மையில்ப்ரயோகம்) பண்ணி யிருந்தால், பிராட்டி திருவடிகளையும் சேர்த்து அவளுக்கும் உபாயத்வம் கொள்ளலாம். அப்படியில்லாமல் 'சரணௌ' என்றிருப்பதாலே விசேஷணபூதையான பிராட்டிக்கு உபாயத்வமில்லை என்று அந்த 'த்வய' உபநிஷத்தே நமக்கு இலக்கணத்தோடு போதிப்பதாலே, இந்த உபநிஷத் மந்த்ரமே நமக்குத்திடமான ப்ரமாணம். இப்படியல்லாமல் தம்முடைய வித்வத்வதாலே கண்டபடி (சங்கரனைப்போல்) அர்த்தம் கொண்டால், எம்பெருமானைக்குறித்து பிராட்டி அத்யந்த பாரதந்தர்ய ஸ்வரூபமுடையவளாகையாலே அவளுக்கு உபாயத்வம் இஷ்டமில்லாமலும், நிரங்குசஸ்வாதந்த்ரியத்தை யுடையவனும், ஸஹாயாந்தர நிரபேக்ஷபூதனுமான எம்பெ-ருமானுக்கு அநபிமதத்வமும் (வெறுப்பு) உண்டாகும்.

உபாயத்தைச் சொல்லக்கூடிய பூர்வவாக்யத்திலே :- வாத்ஸல்யாதி குணங்களையும், ஜ்ஞான சக்தியாதி குணங்களையும், விக்ரஹத்தையும் (பெருமானுடைய திருமேனியையும்), பிராட்டியையும் உபாய விசேஷணமாகச் சொல்லுகையாலே, இவளுக்கும் பகவானுடைய ஜ்ஞான சக்தியாதி குணங்களுக்குப்போலே உபாயத்வம் ஸித்திக்கிறதே

யென்னில்? வாத்ஸல்யாதி குணங்கள் ஆச்ரயண ஸௌகர்யா பாதகங்களாயும் ; ஜ்ஞானசக்தியாதிகள் ஆச்ரிதகார்யா பாதகங்களாயும், அவனுடைய விக்ரஹம் சுபாச்ரயமாயும் (த்யாநிப்பதற்கு) உபயோகப்படுமாகையாலே, இவை சரண்யனுடைய இச்சையை அல்லவா அநுஸரித்திருக்கும். அதேப்போல் பிராட்டியும் சரண்யனுடைய இச்சையை அநுசரித்தவளாகையாலே இவளுக்கு புருஷகாரத்வமே நியதமாயிருக்கும் என்று த்வயத்தில் நம் ஆசார்யர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். மேலும் அவனுடைய குண-முதலானவற்றுக்கு உபாயத்வம் உண்டாகிலும், இவளுக்குப் புருஷகாரத்வம் நியதமாயிருக்கும் என்றல்லவா ஆசார்யர்கள் நிர்வஹித்தார்கள். ஆகையால் இவளுக்குப்புருஷகார பாவமே அங்கீகார்யம் என்றதாயிற்று.

பிராட்டிக்கும், பெருமானுடைய குணங்களுக்கும் விசேஷணத்வம் ஸமமாயிருக்க, அவனுடைய வாத்ஸல்யாதி குணங்களுக்கு உபாயத்வம் அங்கீகரித்துப் பிராட்டிக்குப் புருஷகாரத்வம் அங்கீகரிக்கைக்கு காரணமென்னவெனில்? அவனுடைய குணங்கள் கார்யம் செய்வதற்கு உபயோகப்ப-டுவதாகையாலும், இவளுக்குக் கார்ய உபயோகித்வம் இல்லாமையாலும், அவன் குணங்களுக்கு உபாயத்வமும், இவளுக்குப் புருஷகாரத்வமும் அங்கீகரிக்கத்தட்டில்லை. இனி, பிராட்டிக்கு உபாயத்வம் கொள்ளில் உபாய நைரபேக்ஷ்யம் (உபாயம் இன்னொருவர் துணையை விரும்பாது) ஸித்திக்காத-துபோலே, அவனுடைய குணங்களுக்கு உபாயத்வம் கொள்ளில் அந்த நிரபேக்ஷ்யஹானி வாராதோ? என்னில் : எம்பெருமா-னுடைய அந்த குணங்கள் அவன் புத்தியை விட்டு செயல்படாது. எனவே தன் குணங்கள் மூலமாக குணியாகிறதான் செயல்படும்போது நிரபேக்ஷ்யத்வத்திற்கு ஹானி (குற்றம்) வாராது. ஆனால், த்ரவ்யத்தைப்போலே அவனுக்கு விசேஷணமாயுள்ள பிராட்டிக்கு அவன்புத்தியை விட்டுச் செயல்பட யோக்யதை உண்டாகையாலே, அந்த வழியாலே உபாயநைரபேக்ஷ்யம் ஜீவிக்காதல்லவா, ஆகையால்தான் - உபாயாநுஷ்டான ப்ரகாசகமான பூர்வவாக்யத்திலே, "பலநிறமுடைய பசுவின் சொந்தக்காரனை அழைத்துவா" என்கிற விடத்திற்போலே பிராட்டிக்கு உப

லக்ஷணத்வமும், உபேய ப்ரார்த்தநா ப்ரகாசகமான உத்தரவாக்யத்தில் "கைத்தடி வைத்திருப்பவனை அழைத்து வா" என்கிற விடத்திற்போலே பிராட்டிக்கு விசேஷணத்வமும் நிர்ணயித்து அனுஸந்தித்ததும். இரண்டிடத்திலும் சப்தம் ஒத்திருக்கையாலே, ஒரே ப்ரகாரமாக இரண்டு இடத்திலும் நிர்வாஹம் பண்ணப்ராப்தமாயிருக்க, ஓரிடத்தில் உபலக்ஷணத்வமும், மற்றொரிடத்தில் விசேஷணத்வமும் என்றிப்படி வேறுபடுத்தி அறிவதற்கு கருத்தென்? என்னில்: இரண்டுவாக்யத்திலும் விசேஷ்யத்தைச் சொல்லும் சப்தங்கள் ஸமானமாயிருக்கச் செய்தேயும், "அர்த்தாத் ப்ரகரணா ல்லிங்காத் ஔசித்யாத் அர்த்த நிர்ணய :" (அர்த்தம், ப்ரகரணம், அடையாளம், ஔசித்யம் ஆகியவற்றைக் கொண்டு சொற்களுக்குப்பொருளை நிர்ணயிக்க வேண்டும்) என்கிற ந்யாயத்தாலே, பூர்வவாக்யம் உபாயப்ரகரணமாகையாலே வாத்ஸல்யாதி குணவிசிஷ்டன் உபாயமென்றும், உபேய ப்ரகரணமான உத்தரவாக்யத்தில் ஸர்வசேஷியான வஸ்துவே உபேய மென்றும் பிரித்து அர்த்தநிர்ணம் பண்ணினாப் போலே, விசேஷண ப்ரதிபாதக சப்தங்கள் இரண்டிடத்திலும் ஸமானமாயிருந்ததேயாகிலும், உபாய ப்ரகரணத்தில் பகவதுபாயத்வ நிரபேக்ஷ்யத்வம் ஸித்திப்பதற்காக பிராட்டிக்கு புருஷகாரத்வம் கொள்ளுகை உசிதமாகையாலும், உபேய ப்ரகரணத்தில் மிதுந விஷய கைங்கர்யமே ஸ்வரூபத்திற்கு சேர்ந்ததாகையாலும், பிராட்டிக்கு விசேஷணத்வம் கொள்ளுகை உசிதம் என்கிற இவ்வர்த்த ஸ்வாரஸ்யத்தைப் பற்ற இப்படிப் பிரித்து அர்த்தங்கொள்ளத்தட்டில்லை.

பிதாவுக்கு ஹிதபரத்வம் (புத்ரன் முன்னேரவழியை உண்டுபண்ணுதல்) சிறப்பு விதியாகவும், ப்ரியபரத்வம் (இனியதை செய்தல்) மாதா பிதா ஆகியயிருவருக்கும் பொது விதியாகவும் உலகத்தில் காண்கிறதல்லவா. தாய்க்கு ப்ரஜாஹிதபரத்வம் பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்கு இழுக்க ல்லவா. மேலும், பூர்வவாக்யத்தில் சொன்ன விசேஷ்யப்ரா தாந்யத்தாலே சொன்ன த்விவசனம் பத்னீவிசேஷணத்துக்கும் ஸமானம் என்னில் : அப்போதும் ப்ராதாந்யம் விசேஷ்யத்து க்கேயர்ய், விசேஷணத்துக்கு அப்ராதாந்யமாகையாலே புருஷகார பாவமே ஸித்திக்கும் அல்லவா. இருவரும்

தனித்தனியே உபாயமென்னுமது "லக்ஷ்மீவிசிஷ்டம் உபாயம்" என்கிறதோடு சேராது. விசிஷ்டம் உபாயமென்று அங்கீகரித்து இவளுக்கும் பலப்ரதத்வம் சொல்லும் போது ஈச்வரனுக்குப் பலப்ரதாநத்திற்குக் காரணமான ஜ்ஞான சக்த்யாதிகள் இல்லாமலொழிய வேண்டும். ஜ்ஞானசக்திகள் உண்டு என்னில்? அப்போது யாரையும் எதிர்ப்பார்க்காமல் தானே மோக்ஷமளிக்க ஸமர்த்தன் அல்லவா இறைவன்? எம்பெருமான் மோக்ஷமளிக்கக் காரணமான ஜ்ஞான சக்த்யாதிகளை பிராட்டி கூடவிருந்து உண்டாக்குகிறாளென்னில்? அப்போது அவனுடைய ஜ்ஞான சக்தியாதி குணங்கள் இடையில் ஏற்பட்டதாய், அக்குணங்களுக்கு ஸ்வாபாவிகத்வமில்லாமல் (இயற்கையாயிருக்கை) போய்விடும். ஸ்வாதந்த்ர்யத்தால் மறைக்கப்பட்ட வாத்ஸல்யாதிகளை ப்ரகாசிக்கச் செய்கிறாப்போலே மறைக்கப்பட்ட ஜ்ஞாநசக்திகளை பிரகாசிக்கச் செய்கிறாள்யென்னில்? அவற்றுக்கு ஸ்வாதந்த்ர்யம் போலே, இவற்றுக்கு (ஜ்ஞான சக்திக்கு) மறையும் ஸ்வபாவமில்லையே உண்டென்றால் "ஞானமஃதே கொண்டு எல்லாக் கருமங்களும்செய்" (திருவாய்-3-10-8) என்கிறபடியே ஜ்ஞானங்கொண்டு சோம்பாதே நிரந்தரஸ்ருஷ்டி பண்ணக்கூடாதல்லவா. எந்தவிதத்திலாவது பிராட்டிக்கு உபாயத்திலந்வயம் சொல்லில் "சீதோபவ" (ராமா-சுந்தரகாண்டம்) (ஓ அக்கினியே அநுமன்வாலைச்சுடாதே) என்று சொல்லவல்ல திவ்யசக்தி தன்னிடத்திலிருக்கவும் தன்னுடைய பதிபாரதந்த்ர்யத்திற்கு இழுக்குவராமல் "அந்தராத்மா சமேசுத்த :" (ஏ அநுமனே என் மனம் என்னைநானே ரக்ஷிக்க முயற்சியாகிற அசுத்தியற்றிருக்கிறது) என்று பிராட்டி தன்னை ரக்ஷித்துக் கொள்ள தன் முயற்சியாகிற அசுத்தி எனக்கில்லை என்றும், "தஸ்மிம் ஸ்ச பஹவோகுணா :" (அவனிடம் ஜ்ஞாந சக்தியாகிற) குணங்கள் பலவுள்ளன) என்று உபாயபூர்த்திக்கு அடியான குணபூர்த்தி அந்த எம்பெருமானுக்கே உள்ளதென்றும் தெளிவாகக்காட்டி "தத்தஸ்ய ஸத்ருஸம் பவேத்" (என்னை ரக்ஷிப்பது அவருக்கே தகுந்ததாகும்) என்று தன்னை ரக்ஷித்துக் கொள்ள அவளுக்கு சக்தியிருந்தும் அதைகைவிட்டு தன்னுடைய ஸ்வரூபத்திற்குச் சேர்ந்ததான பாரதந்த்ர்ய அனுஸந்தானமாக 'அவனே ரக்ஷகம்' என்கிற நிரபேக்ஷாபாய த்வத்தைப் பார்த்திருக்கும் படியான இவள் பரிசுத்த மனத்திற்கு அது சேராதல்லவா.

இனி, ச்ரிய:பதியே உபாயமென்று அங்கீகரிக்க வேண்டுமாகையாலே நிரூப்ய ஸ்வரூபத்துக்குச் சொன்ன உபாயத்வம் நிரூபகஸ்வரூபத்துக்கும் தன்னடையே வாராதோயென்னில்? ஸ்வரூப நிரூபகத்வேந நிரூப்ய நிரூபகங்களுக்கு விட முடியாத ஸம்பந்தம் உண்டேயாகிலும், உபாயவரணதசையில் ஸ்வரூப நிரூபகங்களான ஜ்ஞான ஆனந்தங்கள் உபயோகமில்லாமையாலே நிரூபகமாத்ரமே நிற்கிறாப்போலே பகவத்ஸ்வரூபநிரூபகமான லக்ஷ்மீஸ்வரூபமும், காரணதசையில் போலே உபாயதசையில் தன்னால் கொள்வதொரு ப்ரயோஜனமில்லாமையாலே, தத்ஸ்வரூபநிரூபகத்வமாத்தரத்திலே அந்வயித்து, அந்த அஸாதாரணோபாயத்வத்தில் அந்வயியா மலிருக்கையாலே, நிரூபகமான அவளுடைய ஸ்வரூபத்துக்கு உபாயத்வம் வராதல்லவா. மேலும், உபாய விசேஷணமான குணவிக்ரஹங்களுக்கு ஸௌகர்யாபாதகத்தாலும், கார்யாபாதகத்தாலும் சுபாஸ்ரயத்தாலும், கார்யபேதமுண்டாகிறாப்போலே, அவனுக்கு விசேஷணபூதையான பிராட்டிக்கும், உபாயதசையில் உபாயத்வரஹிதமாகப் (உபாயத்வமில்லாமல்) புருஷகாரத்வரூப கார்யபேத முண்டாகத் தட்டில்லை. ஆகஇப்படிப்பட்ட மதிநுட்பம் வாய்ந்த நுண்ணிய விஷயத்தில் கூர்மையான அறிவுள்ளவர்களுக்கே மேலே காட்டிய ஆக்ஷேபஸமாதனமான இவ்விஷயம் புரியும்.

இனி, "**ஸர்வகாமப்ரதாம் ரம்யாம் ஸம்ஸாரார்ணவ தாரிணீம், க்ஷிப்ரப்ரஸாதிநீம்தேவீம் சரண்யாம் சிந்தயேதிதி**" - ஸ்வாயம்புவம். (எல்லா இஷ்டங்களையும் தருபவளும், அழகியவளும், ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவிப்பவளும், விரைவில் அருள் செய்பவளுமான பிராட்டியை இவ் வண்ணமாக சரணமடையத் தகுந்தவளாக நினைக்கக்கடவன்) என்றும், "**ஆத்ம வித்யாச தேவித்வம் விமுக்தி பலதாயிநீ**" (வி.பு.1-9-20) (தேவியே! நீயே ஆத்ம ஜ்ஞானத்தைக் கொடுப்பவளாயும், முக்திபலத்தைக் கொடுப்பதையே இயல்பாக உடையவளாகிறாய்) என்றும், "**ஸக்ருத்விபதாஸர்வர்த்தி ஸமுத்ர பரிசோஷிணீ, பவபங்காபஹாரிணீ, பரநிர்வாணதாயநீ**" - ஸ்ரீஸஹஸ்ரநாம. (அஸ்தமிக்காத சோதிபோலே பிரகாசிப்பவள்; எல்லா துக்கஸாகரத்தையும்

வற்றச்செய்பவள்; ஸம்ஸாரமாகிய தாழ்வை போக்குபவள்; மேலான மோக்ஷத்தையளிப்பவள்) என்றும். இத்யாதிப்ரமாணங்கள் இவளுடைய உபாயத்வத்தைச் சொல்லிற்றேயாகிலும், அவை பெருமானுடைய இச்சையை அனுஸரித்து அநுமதிக்கப்பட்டது. பெருமானுக்கு உபாயத்வமும், பிராட்டிக்கு புருஷகாரத்வமே நிலைநின்றது என்றால் அதற்குப் பிரமாணம் எங்கேயென்னில்? **"ஆகிஞ்சந்யைக சரணா : கேசித் பாக்யாதிகா : புந : மத் பதாம்போருஹத் வந்த்வம் ப்ரபத்ய ப்ரீத மாநஸா : லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநந, மத்க்ஷமாம் ப்ராப்ய ஸ்நேச, ப்ரப்யம் ப்ரபாகமேவ மாம் லப்த்வா, க்ருதார்தா : ப்ராப்ஸ்யந்தே மாமேவ அநந்யமாநஸா:** - (விஷ்வக் ஸேநஸம்ஹிதை). அழகிய முகத்தையுடைய ஸேநாபதியே! ஒரு கைம்முதலும் அற்றிருக்கையையே பற்றாசாகக் கொண்ட சில பாக்யம் மிக்கவர்களோவென்னில், எனது இரண்டு திருவடித்தாமரைகளையே அன்புடன் கூடிய மனத்தராய் சரணடைந்து, லக்ஷ்மீ தேவியைப் புருஷகாரமாகப்பற்றி, என்பொறுமைக்கு இலக்காகி, உபேயமாயிருக்கிற என்னையே உபாயமாகக்கொண்டு செய்யவேண்டியதைச் செய்தவர்களாய், வேறொன்றிலும் நெஞ்சு செல்லப் பெறாதவர்களாய் என்னையே அடைவார்கள்). த்வயத்தில் பூர்வவாக்யத்தில் சொன்ன 'சரணௌ' என்றத்விவசனம் (இருமை) இங்கேயும், "மத்பதாம்போருஹத்வந்தவம்" (எனது இரண்டு திருவடிமலர்) என்கிறபதப்ரயோகம் எம்பெருமான் தன்வாயாலே அருளிச் செய்திருப்பதை நடுநிலையாளர் குறிக்கொள்ள வேண்டும். **"அஹம் மத்ப்ராப்தி உபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதி : ஸ்வயம் லக்ஷ்மீ புருஷகாரேண வல்லபா ப்ராப்தியோகிநீ, ஏதஸ்யாச்ச விசேஷோயம் நிகமாந்தே ஷு சப்த்யதே"** - பாஞ்சராத்ரம். (லக்ஷ்மீபதியான நானே என்னையடைய உபாயமாவேன். என் பிரியையான லக்ஷ்மீயானவள் புருஷகாரத்தினால் என்னை அடைய உதவி புரிகிறாள். (புருஷகாரத்வமாகிற) இப்பெருமை இவளுக்கு வேதாந்தங்களில் சொல்லப்படுகிறது) இவ்விடத்தில் **"ஸாக்ஷாத் லக்ஷ்மீபதிஸ்வம் உபாயம்"** என்னுமிடத்தில் விசேஷணத்தாலே பிராட்டிக்கு உபாயத்வம் கொண்டால் "ஜகந்நாதம் ப்ரபத்யேத்" என்றவிடத்தில் அவனுக்கு விசேஷணமான ஜகத்துக்கும்

உபாயத்வம் கொள்ள வேண்டிவரும். ஆகையால் பெருமா-னுக்கே உபாயத்வம் கொள்ள வேண்டும். **"மத் ப்ராப்திம் ப்ரதி ஜந்துநாம் ஸம்ஸாரே பததாமத : லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமருஷிபி : மமாபிச மதம் ஹ்யேதாந் நாந்யதா லக்ஷணம் பவேத்"** - *(பாஞ்சராத்ரம்.)* (ஸம்ஸாரத்தில் கீழே விழுகின்ற ஜந்துக்களுக்கு என்னை அடையும் விஷயத்தில் லக்ஷ்மீதேவியானள் பரமரிஷிகளாலே புருஷகாரத்வத்தில் வரம்புகட்டப்பட்டிருக்கிறாள். எனக்கும் இதுவே இஷ்டம். வேறான *(உபாயத்வமாகிற)* லக்ஷணம் அவளுக்கு இல்லை.)

இந்த ப்ரமாணத்திற்கு முன்பு எடுத்த ப்ரமாணங்களில் உடன்பாட்டாலே எம்பெருமானுக்கு உபாயத்வமும் பிராட்டிக்கு புருஷகாரத்வமும் நிலை நின்ற லக்ஷணம் காட்டப்பட்டது. "மத்ப்ராப்திம்" என்ற இந்த ப்ரமானத்தில் **"நாந்யதாலக்ஷணம் பவேத்"** என்று எதிர்மறையாலே பிராட்டிக்கு புருஷகாரத்வம் தவிறவேறு லக்ஷணம் கிடையாது என்று ஸாதிப்பதாலே, உடன்பாட்டிலும் எதிர் மறையாலே சொன்னதால் அர்த்தத்திற்குப்ரபலத்வம் உண்டு என்று, இலக்கணம் அறிந்த சான்றோர்கள் கூறுவார்கள். எனவே, பெ-ருமானே இந்த ப்ரமாணமுகத்தாலே, பிராட்டிக்கு புருஷகாரத்வம் தான் லக்ஷணம் வேறு லக்ஷணம் கிடையாது என்று சொன்னதாலே, வேறுப்ரமாணங்களில் அவளுக்கும் பெ-ருமானுக்கும் உபாயத்வம் உண்டு என்று பொதுப்படையாக சொல்லியிருந்தாலும் . அவளுக்கு லக்ஷணத்தை விதிக்கின்ற இந்த ப்ரமாணத்தைக் கொண்டே ஒருங்கவிடவேண்டும். இல்லையென்றால், **"நாந்யதா லக்ஷணம் பவேத்"** என்று சொல்லக்கூடிய இவற்றோடு முரண்படும். ஆக கீழ்ப்ரமாணங்களில் பிராட்டிக்கு புருஷகாரத்வமும், பெருமா-னுக்கு உபாயத்வமும் லக்ஷணம் என அறிந்தோம். இனிவரும் இரண்டு ப்ரமாணங்களிலும், பிராட்டியின் புருஷகாரத்வமும் இல்லாமலே பெருமான் சிற்சில சமையங்களில் ஜீவர்களுக்கு மோக்ஷமருளுகிறான் என்பதை பார்ப்போம். அதாவது, **"நாஸௌ புருஷகாரேண ந சாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வ இச்சைவாஹம் ப்ரேக்ஷ்யே கஞ்சித் கதாசந"** - *(லக்ஷ்மீ தந்த்ரம்).* - (நான் சிலருக்கு முக்தி கொடுக்கும் பொழுது, புருஷகாரத்தையோ அல்லது வேறு எந்த காரணத்தையும்

எதிர்ப்பார்க்காமல் கேவலம் என் இச்சையாலே அருளுகிறேன்) என்றும், "நிர்ஹேதுக கடாக்ஷணமதீயேந மஹாமதே, ஆசார்ய விஷயீகாராத் ப்ராப்நு வந்திபராம் கதிம்". - (விஷ்வக்சேந ஸம்ஹிதை). (பேரறிவாளரே! எந்த காரணமுமில்லாமலேயே என்னுடைய அருளாலே சிலரை ஆசாரியன் விஷயத்துக்கிலக்காக்கி அவ்வழியாலே (என்னுடைய) மேலான கதியை அருளுகிறேன்). ஆக, மேலே காட்டிய இந்த இரண்டு ப்ரமாணங்களிலும் புருஷகாரத்வமில்லாமலே கேவலம் தன்னுடையக்ருபையே காரணமாகக் கொண்டு சில அதிகாரிகளுக்கு காரியம் செய்கிறான் என்றால் அவனுடையதிருவுள்ளம் என்ன? என்பதை புரிந்து கொள்ளலாம். உபாயத்வம் என்பது : அநிஷ்ட நிவாரண பூர்வமாக இஷ்டப்ராப்தியைத் தருதல். இதுபுருஷோத் தமத்வத்தால் வந்த நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தின் கார்யமல்லவா! பாரதந்த்ர்யஸ்வரூபத்தையுடையவளாய், நாரீணாமுத்தமையான பிராட்டிக்கு இது எப்படிப் பொருந்தும்? சிந்திக்க வேண்டாமா? இங்கே, திவ்ய ப்ரபந்த தனியனுக்கு வ்யாக்யாநம் அருளிச் செய்தவராய், ஸகல சாஸ்த்திரங்களிலும் நிபுணராய், ஸ்ரீமத் பிள்ளைலோகம் ஜீயரால் 'ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்' என்ற நூலில் ஸித்தோபாய விவேகம் என்ற மூன்றாம் விவேகத்தில் பிராட்டிக்கு உபாயத்வமில்லை என்பதைப் பற்றி ஆக்ஷேப ஸமாதான முறையில் அருளிச் செய்திருக்கிறார் அதை அப்படியே இங்கு கொடுக்கிறேன் :

"ஆனால், 'அஹம்மத்ப்ராப்தி உபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதிஸ் ஸ்வயம்' என்று உபாயத்வம் தத்விசிஷ்டமாயிருக்க (அவனோடு சேர்ந்திருக்க) அது அகலும் படி எங்ஙனேயென்னில்? "ஸாக்ஷாத் லக்ஷ்மீபதிஸ் ஸ்வயம்" என்னுமிடத்தில் விசேஷணத்தாலே அத்திருவுக்கும் உபாயத்வம் ப்ரஸக்தமாம் போது லக்ஷ்மிபதி த்வத்துக்கும் உபாயத்வம் ப்ரஸங்கிக்கும். அப்படியே "ஜகந்நாதம் ப்ரபத்யேத" என்னுமிடத்திலும் தத்விசேஷணமான ஜகத்துக்கும் உபாயத்வம் சொல்ல வேண்டிவரும். இப்படி அதிப்ரஸங்க பஹுத்வம் ப்ராப்தமாம். "ஜகத்ஸர்வம் சரீரந்தே" இத்யாதிப்படியே தச்சரீரியான அவனுக்குண்டான ஜகத்விசேஷணத்தை, "லம்ப கர்ணமாநய, சித்ரகும் ஆநய"

இத்தியாதிகளைப்போலே பிரிக்க வொண்ணாமையாலே, அதிப்ரஸங்க ப்ராப்தியுண்டாகக் குறையில்லை. ஆகையால், "அஹம் மத் ப்ராப்தி உபாயோவை" என்னுமதுக்கு "லக்ஷ்மீபதிரஹம், ஸ்வயம், ஸாக்ஷாத் - மம ப்ராப்தி உபாயம், வைப்ரஸித்த : வல்லபா லக்ஷ்மீ: புருஷகாரேண ப்ராப்தியோகிநி, ஏதஸ்யாச்ச" என்னுமத்தாலே, "மம உபாயத்வம்ச விசேஷத : (எனக்கு உபாயத்வம் சிறப்பாகவும்) "ஏதஸ்யா : புருஷகாரம்ச விசேஷத :" (அவளுக்கு புருஷகாரம் சிறப்பாகவும் (சொல்லப்பட்டது) என்று இப்படியே இவ்விருவருக்கும் உண்டான அசாதாரண லக்ஷணங்களைச் சொல்லுமதுவே ஸ்வரஸம். இங்ஙனன்றிக்கே அவ்விருவருக்கும் உபாயத்வம் ஸமமாக்கிப் பிராட்டிக்கு புருஷகாரத்வம் விசேஷமென்று சொல்லுமது "நாந்யதாலக்ஷணம் பவேத்" என்கிற தது உபாயத்வ கண்டந வசநத்தோடே விரோதிக்கும்.

இனி மந்த்ர ரத்ந பூர்வகண்டத்தில் மதுப்ரத்யயத்தால் நித்யயுக்தையான லக்ஷ்மீவைசிஷ்ட்ய ப்ரதீதி ப்ரயுக்தமான விசிஷ்ட சரண்யத்வ ப்ரதீதியால் வருமுபாயத்வமும் கீழ்ச் சொன்னபடியே அவள்புருஷகாரத்தாலே உபயுக்தையாகையா-லே நிரஸ்தம். ஆனால், பூர்வகண்டத்தில் மதுப்ரத்யயத்தாலே பிராட்டிக்குண்டான உபாயத்வத்தை இல்லை செய்யும்போது உத்தர கண்டத்தில் மதுப்ரத்ய யத்தாலே. அவளுக்குண்டான ப்ராப்யத்வமுமில்லையாகக் கடவதென்னில் ; அந்த உபாயத்வ நிர்ணய ஸ்தலத்திலுண்டான அஸாதாரண வ்யவஸ்தா வசநரூப பாதக பஹுத்வம்போலே, தத்ப்ராப்ய நிர்ணய, ஸ்தலத்திலொரு பாதகமும் இல்லாமையாலே உத்ர கண்டத்திலே ப்ராப்யத்வத்துக்கு ஒரு குறையு மில்லையிறே. இனி இந்த பூர்வோத்ர வாக்ய உக்தங்களான உபாயோபேயத்வ அநுஸந்தானத்திலுண்டான தெளிவாவது சாஸ்த்ர வச்யராயிருப்பார்க்குண்டான மங்கள சூத்ர தாரண அந்வித பாணிக்ரஹனம் போலே, பூர்வ வாக்யத்தில் ப்ராபகத்வமும், அநந்தரம் தத்பத்நீ ப்ரியார்யாநு மதியாலுண்டான தத்க்ருஹ நிர்வஹணம் போலே உத்தர வாக்யத்தில் ப்ராப்யத்வமும் என்று இப்படி இந்திராதிபதி சரணார விந்தைக சரணரான விவேகிகள் கண்டு கொள்வது.

இன்னமும், அந்த லக்ஷ்மீ வைசிஷ்ட்ய ப்ரதீதி (மேல் நோக்காலே) பிராட்டிக்கும் உபாயத்வம் உண்டாகச் சொல்லலாம் என்னும் போது, விசேஷ்ய பூதனான ஸர்வேச்வரனுக்குண்டான ஜகத் காரணத்வமும் தந்நிகரண உத்கிரணாதிகளும் தத்விசேஷண பூதையான பிராட்டிக்கு முண்டென்று சொல்ல வேண்டி வரும். அதுக்கு ஸம்மதிக்கும் மவர்களுக்கு (1)"நதத் ஸமச்ச அப்யதிகச்சத்ருச்யதே" இத்யாதி ச்ருதி விருத்தமான ஈச்வரத்வித்வம் உண்டென்னும்மதுவும் ஸம்மதமாக் கடவதத்தனை. (2) "புவநபவநஸ்தித்யபாயைகஹே தோர்லக்ஷ்மீபர் து :" என்னுமத்தாலே ஜகத்ஸ்ருஷ்டியா திகளும் அவளுக்குண்டென்னு மது அவிவேக மாமாப் போலேயாயிற்று பூர்வகண்டத்தில் மதுப்பாலே உபாயத்வமுண் டென்று மதுவும். ஆகையாலே, பரமவைதிகோத்தம ஸஜ்ஜன ஸம்மத மான நிர்ணயம் - லக்ஷ்மீ பதிக்கு உபாயத்வமும், லக்ஷ்மீக்கு புருஷகாரத்வமுமேயுள்ளது என்று தெளிந்திருக்கையாயிற்று விவேகபலம். இப்படியிருக்கிற ஸத்ஸம்ப்ரதாய அர்த்தங்களை ஸத்குரு உபதேசத்தாலுணர்ந்து உபதேசிக்கையன்றிக்கே, தன்னெஞ்சில் தோற்றுமது கொண்டு ப்ரமித்து (3) "ஸ்ரீமச் சப்தத்தில் சொல்லுகிற பத்நீஸம்பந்தத்தில் வரும் கலக்கங்களுக்கு திங்மாத்ரத்தாலே பரிஹாரங் காட்டுகிறோம்" என்று (ரஹஸ்ய த்ரயஸாரத்தில்) எழுதுமதுதானே கலக்கத்தின் மிகுதியாகக் கடவது.

இன்னமும், பூர்வகண்டத்தில் "சரணௌ" என்கிறத் விவசநத்தாலே ஈச்வரனுக்கே உபாயத்வமுள்ளது ; பிராட்டிக்கு உபாயத்வமில்லை, உண்டாகில் சரணாந் என்றிருக்க வேணும், அப்படியிராமையாலே அவளுக்கு உபாயத்வமில்லை என்னுமவர்களைக் குறித்து, (4) "சரணா விதி நிர்தேச : பத்நீவைசிஷ்ட்ய பாதக :, இதி மந்தைரிதம்ப்ரோக்த்தம் ஸ்ரீமச் சப்த விரோதத :, ஸப்தஸ்வரஸத : ப்ராப்தம் வைசிஷ்ட்யம் ப்ரதமம் : ச்ருதம், விசேஷ்ய சரணத்வித்வம் நஹிபாதிதுமர்ஹதி, சரணாகதி வக்தவ்யமிதி, யச்ச, ப்ரஸஞ்ஜிதம், க்ரந்தஜ் ஞைரபஹாஸ் யந்தத் பதி ப்ராதாந்ய தோந்வயாத், நஸம் ராஜி பத்நீகே ஸந்தித்விதீய : உக்தி ஸாஹஸம் " என்றிப்படியே எழுதுவது விசேஷப்ரமாணஜ்ஞானமில்லாமையாலத்தனை. அந்தலக்ஷ்மீ விசிஷ்டனான ஸர்வேச்வரன்தானே, (5) "அஹம்

---

(1) ச்வேதாச்வர-உப (2) பாகவதம் (3) ரஹஸ்யத்ரய ஸாரம்
(4) ரஹஸ்யத்ரய ஸாரம் (5) பாஞ்சராத்ரம்.

மத் ப்ராப்தி உபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீபதிஸ்ஸ்வயம், லக்ஷ்மீ : புருஷ காரேணவல்லபாப்ராப்தியோகிநீ ஏதஸ்யாச்ச விசேஷோயம் நிகமாந்தேஷு சப்த்யதே" மம உபாயத்வஞ்ச ஏதஸ்யா : புருஷகாரத்வஞ்ச" என்று இப்படி விசேஷித்திருக்கு மது வேதாந்த நிர்ணயமென்கின்ற ஸ்ரீச ஸ்ரீஸூக்திகளோடே விரோதிக்கும் படி பிராட்டிக்கு உபாயத்வம் உண்டென்னுமது மந்தக்ருதமும், வேதாந்தஜ்ஞானாதிகளாலே அபஹாஸ்ய ம்மாகக் (பரிகஸிக்கக்) கடவதத்தனை. (1) " பதிப்ராதாந்ய தோந்வயாத்" என்னுமத்தாலே ச்ரீமானான நாராயணனே ப்ரதாநமென்னுமதுவும் அவனக்கு விசேஷண பூதையாய் நித்ய அநபாயிநியான பெரிய பிராட்டியார் அப்ரதானை யென்னுமதுவும் ஸுஸ்பஷ்டமாகையாலே, அப்ரதானையான பிராட்டியும் ஈச்வரனைப்போலே உபாயபூதையாகலா மென்னுவர்தாமே க்ரந்தஜ்ஞரபஹாஸ்யராகக் கடவரென்று வித்வஜ்ஜனங்கள் கண்டு கொள்வது.

காதாசித்க மானபிறவியிலும் இவள் அப்ரதானை யென்னுமது, (A)"மாம்நயேத்யதி காகுத் ஸ்தஸ், தத்தஸ்ய ஸத்ரு ஸம்பவேத்" என்றும் "க்ஷிப்ரம் மாம் ப்ராப்ஸயதே பதி :" என்று இத்யாதிகளாலே ஸித்தமிறே. அந்த பூர்வ கண்டத்தில் த்வி வசநமின்றிக்கே ஏகவசநமாயிருந்தால், அது ஜாத்யேக வசநமாய் அத்தாலே இருவருக்கும் உபாயத்வமுண் டென்னலாம், அப்படியிராமல் அந்த உபாயத்வ நிர்ணய வாக்யத்திலே, "சரணௌ" என்றிருக்குமத்தாலே விசேஷண பூதையான பிராட்டிக்கு உபாயத்வமில்லை. அவ்விசேஷண விசிஷ்டனான ஸர்வேச்வரனுக்கே உபாயத்வமுள்ளதென்று நிர்ணயித்தவிடம் ச்ருத்யந் விதமாகையாலே, இந்த உபாயநிர்ணய ஸ்தலத்துக்கு அநுரூபமான ப்ரமாணங்களிலே த்விவசநம் அநுக்த ஸம ப்ராதாந்ய த்யோதகமாய் பஹுத்வ ஸஹமுமாயிருக்கும் என்னுமதுக்கு ஸம்மதி த்ருஷ்டாந்த மெடுத்தால் அது ஸத்ஸம் மதமாயிருக்கும் ; இங்ஙனன்றிக்கே, (B) "அநந்யாஹி மயாஸீதா பாஸ்கரேணப்ரபாயதா," "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபாயதா". என்று இத்யாதிகளான அவ்விருவருடைய வாக்யங்களாலும் பிராட்டிக்கு உபாயத்வ பஞ்சகமான (இல்லாமையான) பாரதந்த்ர்யமே ஸித்தம். அந்த திவ்ய தம்பதிகளிருவரும் ஏக

---

(1) ரஹஸ்யத்ரய ஸாரம் (A) ராமா - ஸுந்தர
(B) ராமா - ஸுந்தர

வ்யக்தி யென்னலாம்படியான அந்யோந்ய பாரதந்த்ர்யம் தத் ஸ்வரூப ப்ரணயித்வ அநுரூபமென்று ச்ருதி ஸ்ம்ருத்யாதி ஸச் சாஸ்த்ரஸித்தம். இப்படியிருக்கும் அந்த லக்ஷ்மீ விசிஷ்ட வஸ்துவுக்கு அநநுரூபமான ஸபத்நீகனான ஸம்ராட் த்ருஷ்டாந்தத்தைச் சொன்னவதுதானே க்ரந்தஜ்ஞைரப ஹாஸ்ய மாகக்கடவது.

இப்படி ஸத்ஸம்மதமான பின்பு, ஸ்ரீக்கு புருஷகார த்வமும் ஸ்ரீசனுக்கு (பிராட்டியோடு கூடியிருந்தவனுக்கு) உபாயத்வமும் ஸுப்ரதிஷ்டிதமாகையாலே ஸித்தோ பாய பூதனான ஈச்வரனுக்கு "அக்கால்கட்டு அகலு" மாபோலே, அவனுக்கு "கழுத்துக்கட்டியானதிருக்கொடிபுகல்" என்னு மதுவும் அகலுகைக்கு ஒரு குறையும் இல்லையாயிற்று.

ஆனால், இன்னமும் அவனைப்போலே பிராட்டியும் உபாயபூதையாகலாம் என்னுமதுக்கு ப்ரமாண பஹுத்வ முண்டென்னுமது (A)"லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷிகேசோ தேவ்யா காருண்ய ரூபயாரக்ஷகஸ் ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தே பிசகீயதே" என்கிறபடியே ஸ பத்நீகனாய்க் கொண்டு ஸர்வரக்ஷகயஜ்ஞதீக்ஷிதனான ஸர்வேச்வரனுக்கு ஸ்ரீமச் சப்தத்தில் சொல்லுகிற பத்நீ ஸம்பந்தத்தில் வரும் கலக்கங்களுக்கு" என்று தொடங்கி, "உபாயோபேய பரமான வாக்யத்வயத்தாலும் ச்ருதமான இவ்விசேஷணத்தினுடைய உபயோகப்ரகாரத்தை, (B) "வேரி மாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே," (C)"நின்திருவருளும் நின்பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில்சீத்து" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தார் என்றும், (D)"அலமேஷா பரித்ராத்தும் ராக்ஷஸ்யோ மஹதோபயாத்" "அலமேஷா பரித்ராத்தும் ராகவாத் ராக்ஷஸீகணம்" என்று வால்மிகி பகவான் சரணாகதி ஸாரமான ஆதிகாவ்யத்தில் நிபந்தித்தான் என்றும் (1)"ஸம்ஸார அர்ணவதாரிணீம்" என்ற ஹிரண்யகர்ப காச்யபாதிகளும் சொன்னார்கள். என்றும், (2)"வாச: பரம்ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந்நியத : ஸ்ரீயம்" என்று ஸ்ரீசௌநகபகவான் விதித்தான். என்றும், "ஆத்ம வித்யாச தேவித்வம் விமுக்தி பலதாயிநீ" என்று வஸிஷ்டப் புலஸ்த்யவரப்ரஸாத லப்த பரதேவதா பாரமார்த்தய ஜ்ஞான-

(A) லக்ஷ்மீதந்த்ரம் (B) திருவாய்-4-5-11 (C) திருவாய்-9-2-11
(D) ராமா - யுத்த (1) ஸ்வாயம்புவம் (2) சௌநக-ஸம்ஹிதை

முடைய ஸ்ரீபராசர ப்ரஹ்மருஷி அருளிச்செய்தான்" என்றும், "ச்ரிய : பதிதானும், "யாமாலம்ப்ய ஸுகேநேமாம் துஸ்தரம் ஹிருணோததிம், நிஸ்தரந்த்ய சிரேணைவ வ்யக்தி த்யாநபராயண :" என்ற ஸ்ரீஸாத் வதத்திலே ச்ரிய : பதி ரூபத்யாநத்திலே அருளிச்செய்தான்" என்றும், ஆளவந்தாரும், "ஜகத் ஸமஸ்தம்யயதபாங்க ஸம்ச்ரயம்," "ச்ரேயோநஹ்யரவிந்தலோசந மந : காந்தா ப்ரஸாதாத்ருதே ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்தவ ஸுந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்" என்றும் அருளிச் செய்தார்" கூரத்தாழ்வானும், (3)"ஸ்வஸ்தி ச்ரீர்திசதாத சேஷஜகதாம் ஸர்கோப ஸர்கஸ்தி தீஸ்ஸ்வர்கம் துர்கதி, மாபவர்கிக, பதம் ஸர்வஞ்ச குர்வந்ஹரி : யஸ்யா வீக்ஷ்யமுகம் ததிங்கித பராதீநோ விதத் தேகிலம் க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸ தாஸ்யாத்ஐக ரஸ்யாத்தயா" என்று ஸங்கிரஹித்த அர்த்தத்தை, (4)"தேவித்வந்மஹி மாவதிர்ந ஹரிணாநாபித்வயாஜ்ஞாயதே" என்று தொடங்கி விஸ்தரிக்கிறார் என்றும், பட்டரும் (5)"ஐஸ்வர்ய மக்ஷரகதிம் பரமம் பதம் வாகஸ்மைசித ஞ்ஜலிபரம் வஹதேவி தீர்ய, அஸ்மைநகிஞ்சிதுசிதம் க்ருதமித்யாதாம் பத்வம் லஜ்ஜஸே கதய கோயமுதார பாவ :" என்று ச்ருதியில் உதாரசப்தத்துக்கு வ்யாக்யானம் பண்ணினார் என்றும், ஸ்ரீஸுக்த பாஷ்யத்திலே பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களை எல்லாம் உபபாதித்தார்" என்றும், "விசிஷ்டம் உபேயமாமாபோலே விசிஷ்டம் உபாயமாகக் குறையில்லை" என்றும், (6) "ஸ்வத : ச்ரீஸ்த்வம் விஷ்ணோஸ் ஸ்வமஸி' (7)" "அநந்யாராக வேணாஹம்" "அப்ரமேயம் ஹிதத்தேஜ:" ":ச்ரய: ச்ரீ:" இத்யாதிகளாலே அந்யோந்ய ஆதிக்யவஹங்களான விசேஷண விசேஷ்யங்களை நிர்தேசிக்கிறதுக்குக் குறையில்லை" என்றும், "உபயாதிஷ்டாநஞ்சைக சேஷித்வம்" என்று சோமாசி யாண்டான் ஷடர்த்த ஸங்க்ஷேபத்திலே நிஷ்கர்ஷித்தான், என்றும், "எம்பெருமானைச் சொன்ன விடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றாம்" என்று தொடங்கி உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்" என்றும், "பகவத் ரூபத்தில் போலே மாத்ருத் வாத்யுபாதிகமான ப்ரணாமாத் யாசாரங்களுக்குங் குறையில்லை. இப்படி மத்யஸ்த

(3) வி-புராணம் (4) ஸ்ரீஸ்தவம் (5) ஸ்ரீகுணரத்நம் (6) ஸ்ரீஸ்தவம் (7) ராமாயணம்

த்ருஷ்டியாலே ப்ராமாணிக அர்த்தங்கள் தோற்றச்செய்தே பற்றினது விடாதொழியில், (1)"த்ருட பூர்வ ச்ருதோமூர்கோ தர்மாணாமவிசாரத :, விருத்தாநப்ருச்சந் ஸந்தேஹாந் அந்த : ச்வ ப்ரமிவர்சதி அந்யதாமந்தபுத்தீநாம் ப்ரதி பாதிதுராத்மநாம் குதர்க்க ஜ்ஞான த்ருஷ்டிநாம் விக்ராந்தேந்திரியவாஜிநாம்" என்கிற தசையாம்" என்றும் இப்படிரஹஸ்ய த்ரயஸாரத்தில் 23-ஆம் அதிகாரத்தில் லக்ஷ்மீ புருஷகாரத்வமாத்ர வ்யவஸ்தாபகரைக் குறித்து அவளுக்கு உபாயத்வ முண்டு என்னுமத்தை ஸ்ரீசடஜித், யாமுந, யதிவர, கூரேச பட்டார்யாதி தேசிக ஸ்ரீஸூக்திகளாலும் ஸ்ரீவால்மீகி ஸ்ரீசௌநக ஸ்ரீபராசராதி மஹர்ஷிகளுடைய வசனங்களாலும் காட்டிக் கொடுத்து, அவளிடத்திலுபாயத்வத்துக்கிசை யாதாரை, "த்ருட பூர்வோச்ருதோமூர்க : இத்யாதி தூஷண வசநங்களாலே தூஷித்திருக்கச்செய்தே லக்ஷ்மீக்கு புருஷகாரத்வமேயுள்ளது. உபாயத்வமில்லையென்று சொல்லும்படி எங்ஙனேயென்னில்?

அவற்றை ததுபாயத்வ பரங்களாக யோஜித்தது ப்ரமக்ருத மத்தனையேயுள்ளது :- கீழ்ச்சொன்ன, " வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்" "அலமேஷா பரித்ராதும்" "ஸம்ஸாரார்ணவதாரிணீம்" இத்யாதி மஹர்ஷி வசனங்களை யும், "யாமாலம்ப்ய ஸூகேநேமாம் துஸ்தரம் ஹி குணோததிம், நிஸ்தரந்த்ய சிரேணைவ" இத்யாதிகளான பகவத்வசநங்களை யும் கண்டு சிலர் ப்ரமித்து லக்ஷ்மிக்கு உபாயத்வமுண்டாக நிச்சயித்து அநர்த்தப்பட யோக்யதையு ண்டாகையாலே அவர்களுடைய ப்ரமநிவ்ருத்தியர்த்தமாக அந்த லக்ஷ்மீபதியானதானே அவளுக்கு, புருஷகாரத்வமேயுள்ளது உபாயத்வமில்லையென்று நிர்ணயித்து, இந்த நிர்ணயம் வேதாந்தாதி ஸச்சாஸ்த்ரங்களுக்கும் தத் ப்ரதிபாத்யனான எனக்கும் லக்ஷ்மிக்கும், ப்ரமாதாக்களுமாய் மச்சந்தா-நுவர்த்திகளுமான (என்னுடைய சந்தத்தை பின்பற்றுபவரான) ஸேநேச ஸ்ரீசடஜிதாதி நித்யர், முக்தர் முமு க்ஷூக்களுக்கும், ஸ்ரீவால்மீகி, ப்ரமுகரான மஹர்ஷிகளுக்கும் அத்யந்த அபிமதமென்றிப்படி அருளிச் செய்த விது, (2) "மத்ப்ராப்திம் ப்ரதிஜந்தூநாம் ஸம்ஸாரே பத தாமத :, லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமருஷிபி : மமாபிச மதம்

(1) ரஹஸ்யத்ரய ஸாரம் (2) பாஞ்சராத்ரம்

ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத்" (இதி பகவத் வாக்யம்) என்கிற ஸ்ரீ பாஞ்சராத்ர மஹாசாஸ்த்ர உக்தமான அந்த ஸ்ரீ ஸூக்தியாலே ஸுவ்யக்தம்,

இன்னமும், " ஆகிஞ்சந்யைக சரணா : கேசித் பாக்யாதிகா : புந : மத்பதாம் போருஹத் வந்த்வம் ப்ரபத்ய ப்ரீதமாநஸா : லக்ஷ்மீம் புருஷகாரேணவ்ருதவந்தோ வராநந, மத்க்ஷமாம் ப்ராப்ய ஸேநேச ப்ராப்யம் ப்ராபகமேவ மாம்லப்த்வாக்ருதார்தா :" - பாஞ்சராத்ரம். இத்யாதி பகவத் வசநோக்த அநுஷ்டாந அந்வயமுடையவர்களை பாக்கியாதிகர்களாகவும், க்ருதார்த்தராகவும், ப்ரீதமானஸராகவும் அந்த லக்ஷ்மீ பதிதானே அருளிச்செய்யுமத்தாலே, தத்வ்யதிரேகத்தில் (எதிர்த்தட்டில்) கர்பநிர்பாக்யராகவும், ஜநனமரணாதி துக்கிதராகவும், ஸம்ஸார ஸாகர நிமக்நராகவும் இப்படி லக்ஷ்மீக்கு உபாயத்வம் உண்டுஎன்னுவர்களைச் சொல்லுமது ஸுஸ்பஷ்டம். "ஆகிஞ்சந்யைக சரணா" : என்று கீழ்ச் சொன்ன வசநத்தில் "லக்ஷ்மீபுருஷகாரேண" என்றும், "ப்ரப்ய ப்ராபக மேவ மாம் லப்த்வாக்ருதார்த்தா : ப்ராப்ஸ்யந்தே மாமேவ அநந்ய மாநஸா :" என்றும் இத்யாதி அவதாரணங்களாலே தத் விசேஷணபூதையான லக்ஷ்மீக்கு உபாயத்வமும் உண்டென்கிற ப்ரமம் நிரஸ்தம். "மத்பதாம் போருஹத்வந்த்வம் ப்ரபத்ய" என்ற வநந்தரம், "மாமேவ அநந்ய மாநஸா :" என்றருளிச்செய்யுமத்தாலே ஸ்வீகாரத்துக்கு உபாயத்வம் உண்டென்னுமதுவும் அப்படியே நிரஸ்தம்.

(1)"மத் ப்ராப்திம் ப்ரதிஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத: லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமருஷிபி : மமாபிச மதம் ஹ்யேதந்ந அந்யதா லக்ஷணம்பவேத்," "அஹம் மத்ப்ராப்தி உபாயோவை ஸாக்ஷாத் லக்ஷ்மீ பதி : ஸ்வயம் லக்ஷ்மீ : புருஷகாரேணவல்லபா ப்ராப்தியோகிநீ, ஏதஸ்யாச்ச விசேஷோயம் நிகமாந்தேஷு சப்த்யதே," "ஆகிஞ்சந்யைகசரணா :" என்று தொடங்கி, "மாமேவ அநந்ய மாநஸா :" இத்யாதி ப்ரமாண பஹுத்வத்தால் ச்ரிய : பதிதானே லக்ஷ்மிக்கு உபாயத்வமில்லையென்று நிச்சயிக்குமந்த ஸ்ரீபாஞ்சராத்ர மஹாசாஸ்த்ர உக்த பகவத் வசநங்களுக்கு அநுரூபங்களாயேயிருக்குமாயிற்று தத் பக்தராய் தச்சந்தா

(1) பாஞ்சராத்ரம்

நுவர்த்திகளான ஸ்ரீ சடஜித் வால்மீக்யாதி மஹருஷிகளுடைய, "வேரி மாறாத பூமேலிருப்பாள் ஆகையால், "லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா" என்று இத்யாதி ஸ்ரீச, ஸ்ரீஸூக்திகளுக்கு அநுரூபமாகவே "வினைதீர்க்கும்", "பரித்ராதும்" இத்யாதிகளுக்கு அமோக கடகத்வத்திலே தாத்பர்யமென்னுத்தை அறியாமல் அவற்றில் மேலெழுத்தோற்றுகிற அர்த்தமாத்ரத்தைக் கொண்டு லக்ஷ்மீக்கு உபாயத்வமுண்டென்று ப்ரமித்து, அத்தால் அவளுக்கு உபாயாத்வமில்லையென்பாரைக் குறித்து, (1)"த்ருட பூர்வச்ருதோமூர்க : இத்யாதியாலே தூஷித்தது ; லக்ஷ்மிக்கு உபாயத்வமில்லையென்றருளிச் செய்த ச்ரிய : பதியையும், தச்சந்தாநுவர்த்திகளாய், (2)"ருஷிம் ஜுஷாமஹே" என்கிறபடியே பரமருஷிச்ரேஷ்டரான சடஜிதாத்யா சார்யர்களையும், பரமருஷிகளாய் பகவத் பக்தரான ஸ்ரீவால்மீகி ஸ்ரீசௌநக ஸ்ரீபராசராதி மஹர்ஷிகளை யுமாயிற்று.

இப்படி ஸத்ஸம்மதமான பின்பு, இருபத்து மூன்றாம் அதிகாரத்திலே, "த்ருடபூர்வச்ருதோமூர்க :" "அந்யதாமந்த புத்தீநாம் ப்ரதிபத்தி துராத்மநாம்" இத்யாதி தூஷண வசநங்களை எழுதுமவர்களுக்கும் அத்தைக் கண்டு ஆமோதிப்பவர்களுக்கும் ஆத்மநாசபர்யாந்தமான பகவத் பாகவத ஆசார்யதூஷண அபசாரமே பலிக்கும் அத்தனை, ஆகையாலே, "லக்ஷ்மீ : புருஷகாரத்வேநிர்திஷ்டா பரமர்ஷிபி :........ நாந்யதா லக்ஷணம் பவேத்" இத்யாதி ஸ்ரீபாஞ்சராத்ர மஹா சாஸ்த்ரோக்த பகவத் வசனங்களுக்கு அநுரூபமாகவே ஸ்ரீசடஜிதாத்யாசார்யர்களுடையவும் ஸ்ரீவால்மீகி மஹருஷிகளுடையவும், "வினைதீர்க்கும்," "பரித்ராதும்," இத்யாதிவசநங்களுக்கும் அர்த்தநிர்ணயம் பண்ணும் அதுவே விவேக பலம். ஆகையால், "வினைதீர்க்கும்," இத்யாதிகளான அவற்றுக்கு தத்பலாவிநாபூதமான அமோக கடகத்வத்திலேதானே தாத்பர்யம் என்று நிச்சயக்குமதுவே ஸத்ஸம்மதமகக் கடவது.

ஆனால், "நாந்யதாலக்ஷணம்பவேத்" என்கிற சாமான்ய (பொதுவான) ஸப்தமானது "வினைதீர்க்கும்" இத்யாதி

---

(2) சடகோப அஷ்டகம் (1) ரஹஸ்யத்ரய ஸாரம்

ப்ரமாண ப்ரஸித்தமான ததுபாயத்வ லக்ஷணத்துக்கு பாதகமாம்படியெங்ஙனேயென்னில்? ச்ரிய : பதி பண்ணுகிற ஜகஸ்ருஷ்டியாதிகளை லக்ஷ்மியும் பண்ணுவளென்று ஓரிடத்திலும் சொல்லியிருக்கக் காணாமையாலே அவற்றை அவளுக்கு லக்ஷணமாகச் சொல்லவொண்ணாது, **"த்வதாஸ்ரிதாநாம் ஜகத் உத்பவஸ்திதி ப்ரணாசஸம்ஸார விமோசநாதய :"** இத்யாதிகள் பகவதனுமதியாலுண்டாகலாம் என்னுமது அவளுக்கு அஸாதாரண லக்ஷணமாகமாட்டாது ; இனி **"லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா"** இத்யாதிகளாலே புருஷகாரத்வமும், "வினைதீர்க்கும்", "பரித்ராதும்" **"ஸம்ஸாரார்ணவ தாரிணீம்"** இத்யாதிகளில் மேலெழத்தோற்றுகிற உபாயத்வமும், இவையிரண்டுமேயாயிற்று பிராட்டிக்கு லக்ஷணங்களாகச் சொல்ல வேண்டுவது, என்றிப்படி ப்ரஸக்தங்களான இவை இரண்டும் பிராட்டிக்கு லக்ஷணங்களென்று சிலர் ப்ரமிக்கயோக்யதையுண்டாகை யாலே தத் ப்ரமநிவ்ருத்தி அர்த்தமாக விசேஷித்து **"லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா"** என்று புருஷகாரத்வத்தை அவளுக்கு லக்ஷணமாக அங்கீகரித்து, **"நாந்யதாலக்ஷணம் பவேத்"** என்னுமத்தாலே அவளுக்கு உபாயத்வம் லக்ஷணம் அன்றென்று இப்படி இந்த லக்ஷ்மீபதிதானே வ்யவஸ்தை பண்ணியருளுகையாலே அதுக்கது பாதகமாகக் குறையில்லை யாயிற்று.

இனித்தான் உபாயத்வ லக்ஷணமாவது :- ஆச்ரிதனுடைய அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டப்ராப்தியைப் பண்ணிக் கொடுக்குமதுவாயிற்று. இவை இரண்டும் "வினைதீர்க்கும்", "பரித்ராதும்" இத்யாதிகளாலே பிராட்டிக்குமுண்டாகாச் சொல்லியிருந்தது ; அந்த அநிஷ்ட நிவாரணாதிகளை ஸ்வதந்த்ரையாகத்தானே பண்ணுவளோ, ஸர்வேச்வரனுக்கு விண்ணப்பம் செய்து அவனைக்கொண்டு பண்ணுவிப்பளோ என்னில்? தன்னுடைய புருஷகாரத்வ பலத்தாலே அவனைக் கொண்டு பண்ணுவிப்பவள் என்னுமது, **"பிதேவத்வத்ப்ரேயாந்ஜநநி பரிபூர்ணாகசி ஜநேஹிதஸ் ரோதோவ்ருத்த்யா. பவதிசகதாசித் கலுஷதீ :, கிமேதந்நிர்தோஷ : கஇஹ ஜகதீதித்வ முசிதைர் உபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி**

மாதாததஸிந :" (ஸ்ரீகுணரத்நகோஸம்) இத்யாதி (பட்டர்) ஆசார்ய ஸூக்திகளோடே சேர்ந்திருக்கும்; இங்ஙனற்றிக்கே, அவள் தானே ஸ்வதந்தரையாய் அநிஷ்ட நிவாரணம் பண்ணுவள் என்னுமது அவளுடைய உக்தி அநுஷ்டா நங்களோடே விரோதிக்கும். (1)"அஸம்ஸயம் ஹரிஸ்ரேஷ்ட க்ஷிப்ரம்மாம் ப்ராப்ஸ்யதே பதி : அந்தராத்மாசமே ஸூத்தஸ், தஸ்மிம் ஸ்ச பஹவோகுணா :" "மாம்நயேத்யதி காகுத்ஸ்ததத்த ஸ்ய ஸத்ருஸம்பவேத்," (2)"ப்ரதேஹி ஸுபகேஹாரம்யஸ்ய துஷ்டாஸிபாமிநி" இத்யாதிகளோடேதத் ஸ்வாதந்தர்யம் சேராமை ஸித்தம். ஆகையால் ஓரிடத்திலும் ஸ்வ, பர விஷயமான ஸ்வதந்த்ர ரக்ஷணாதிகள் பிராட்டிக்கில்லை யாயிற்று ; ஆகையாலே, "வினைதீர்க்கும்", "பரித்ராதும்" இத்யாதிகளுக்கு தத்பல அவிநாபூதமான அமோக புருஷகாரத்வமே நிலைநின்ற அர்த்தமென்று ப்ரமாண பரதந்த்ரர் கண்டு கொள்வது.

ஆனால், அந்த உபாயத்வ லக்ஷணமான அநிஷ்டநிவாரணமும், இஷ்ட ப்ராப்தியும் பெரிய பிராட்டியார்தாமே பண்ணுவர் என்றென்னுமது ஏதத்தர்சந உத்தாரகரான ஸ்வாமி நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளிலே ஸுப்ரஸித்தம். எங்கனேயென்னில்? "வேரிமாறாத பூமேலிரு ப்பாள் வினைதீர்க்கும்" என்கிற பாட்டின் வ்யாக்யாநத்தில் "நிகமத்தில் இத்திருவாய் மொழி கற்றாரைப் பெரிய பிராட்டியார் தமக்கே பரமாகக்கொண்டு ஸமஸ்த துக்கங்களையும் போக்குவர்" என்றும், "இத்திருவாய்மொழி கற்றார்க்குப் பலங்கொடுப்பாள் பெரியபிராட்டியார் என்கிறது" என்றும், ஸர்வேச்வரன் பலங்கொடுக்கிற தசையில் அவனை விலக்கி "நானே இதுக்கு பலங் கொடுக்க வேணும்" என்றும், "இத்திருவாய் மொழி கற்றாருடைய பகவதநுபவவிரோதியான ஸகலப்ரதி பந்தகங்களையும் போக்கும்" என்றும் இப்படிதத் வ்யாக்யாதாவான ஸ்வாமி நம்பிள்ளைதாமே அருளிச்செய்திரு க்குமத்தாலே பெரிய பிராட்டிக்கும் உபாயத்வமுண்டெ ன்னுமது ஸித்தமாயிருக்க, அத்தை "நாந்யதா லக்ஷணம்பவேத்" என்னுமத்தாலே கழிக்கக்கூடுமோயென்னில்? கூடும்; எங்ஙனே யென்னில்? அந்த

(1) ராமாய-ஸுந்தர (2) ராமாய-யுத்த

"வினைத்தீர்க்கும்" என்கிற பாட்டின் வ்யாக்யாநத்திலே "தனக்கு முன்பே தான்காட்டிக் கொடுத்த ஸம்ஸாரியை விரும்பும் சீலகுணமாயிற்று இதில் சொல்லிற்று" என்கிற வாக்யத்தை உட்கொண்டு விசாரிக்கும்போது, "தான்காட்டிக் கொடுத்த ஸம்ஸாரியை" என்னுமத்தாலே, பெரிய பிராட்டியார் இவர்களுக்கு புருஷகார பூதையாய் முன்னின்று ஸௌசீல்யைக ஸாகரமான ஸர்வேச்வரனைக் கொண்டு அநிஷ்டநிவாராணாதிகளைப் பண்ணுவிப்ப ளென்னுமிதுவே ஸ்வாமி நம்பிள்ளை அருளிச் செய்த தத்வ்யாக்யாநங்களுக்குத் தாத்பர்யம். இங்ஙன் அன்றாகில் ; "லக்ஷ்மீ : புருஷகாரத்வே..........நாந்யதாலக்ஷணம் பவேத்" என்கிற ஸ்ரீஸூக்தியோடே தத் வ்யாக்யாநங்களும் விரோதிக்கும். ஆகையால், "தான்காட்டிக் கொடுத்த ஸம்ஸாரியை" என்னுமத்தால், அவளுக்குப் புருஷகாரத்வமே அஸாதாரண லக்ஷணமென்னுமதுவே நிலைநிற்குமத்தனை.

இன்னமும், தத்வ்யாக்யாநத்தில்; "இதுகற்றார்க்கு இவள் பலங்கொடுக்க வேண்டுவான்யென்யென்னில்?" என்றும் ஸம்ஸாரியை விரும்பும்" என்றும், "ஸர்வேச்வரன் பலங் கொடுக்கும் தசையிலே" என்றும் "இத்திருவாய் மொழி கற்றார்க்கு அந்த:புரத்திலே படியும் நடையும்" என்னுமிவற்றாலே, இவர்களுக்கு விருப்பத்தோடே அவன் பலங்கொடுப்பது பிராட்டினுடைய புருஷகாரத்வ பலத்தைக் கொண்டு என்னுமது அத்யந்தம் ஸூஸ்பஷ்டம். ஆகையாலே, அந்த உபாயக்ருத்யமான இஷ்டப்ராப்தி அநிஷ்ட நிவாரணங்களைப் பிராட்டிக்காகப் பண்ணிக் கொடுப்பவன் ஸர்வோபாயபூதனான ஸர்வேச்வரனே என்றும், தத்ப்ராப்தி பலமான பகவத்குணாநுபவ கைங்கர்யங்களை வர்திப்பித்துக் கொண்டுபோருமவள் பெரிய பிராட்டியாரென்றும் இப்படியே ஆயிற்று "வினைதீர்க்கும்" என்கிற பாட்டில் ஆதி, அந்தங்களான தத்வ்யாக்யாநங்களுக்கு நிலைநின்ற பொருள். "அவனை விலக்கிநானே இதுக்கு பலங்கொடுக்க வேணும்" என்றது, "நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யே நஹேதுநா, கேவலம் ஸ்வேச்சைவஅஹம் ப்ரேக்ஷயே கஞ்சித் கதாசந" (லக்ஷ்மிதந்த்ரம்) என்கிறபடியே தன்னுடைய புருஷகார த்தையும் அபேக்ஷியாத ஸர்வேச்வரன் தன்னுடைய நிர்ஹேதுக

பரமக்ருபையாலே தானே ஒரொரு விஷயங்களிலே இஷ்டப்ராப்தி அநிஷ்டநிவாரணங்களைப் பண்ணிக் கொடுப்பான் என்னுமத்தை அறிந்திருக்குமவளாகையாலே, தன்னுடைய புருஷகாரத்தாலே நித்ய கைங்கர்யத்தை அபேக்ஷித்திருக்கும் ஆழ்வாரிடத்தில் பிராட்டிக்குண்டான ப்ரஸாத அதிசயத்தாலாயிற்று.

ஆகையால், ஸர்வேச்வரன் பலங்கொடுக்கும் தசையில் "அவனைவிலக்கி நானே இதுக்கு பலங்கொடுக்க வேணும்" இத்யாதி வ்யாக்யாந வாக்யங்களுக்குத் தாத்பர்யம். இப்பிரபந்த அநுஸந்தாக்களிடத்திலே, உபாயபூதனான ஸர்வேச்வரனும், புருஷகார பூதையான பிராட்டியும் ஒருவருக்கொருவர் இசலித்து தங்களுடைய உபாயத்வ புருஷகாரத்வங்கள் தோற்றமேல் விழுந்து "அநிஷ்ட நிவாரணாதிகளை நானே பண்ணவேணும், நானே பண்ணவேணும்" என்றிப்படி அவ்விருவருக்குமுண்டான ஆதரா்திசயமத்தனையேயுள்ளது. ஆகையால், "வினைதீர்க்கும்" என்னுமதுக்குத் தீர்ப்பிக்கும் என்று, பிராட்டினுடைய பல அவிநாபூதமான புருஷகாரத்வமே ஆயிற்று போந்தபொருளாவது. "அலர்மேல் மங்கையுறைமார்பா...... உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்றும், "ஜா மாதா தயிதஸ் தவேதிபவதீ ஸம்பந்த த்ருஷ்ட்யா ஹரிம் பஸ்யேம" என்றும் (ஸ்ரீகுணரத்நகோசம்) இத்யாதிப் படியாயிற்று ஆழ்வார்களும் தத்ஸம்பந்திஸம்பந்திகளான நாதயாமுநயதிவராதி ஆசார்யரனைவரும் அருளிச் செய்யும்படி. ஆகையால், ஸ்வாமி நம்பிள்ளைக்குத் தத்புருஷகாரத்வத்திலேதானே திருவுள்ளமாகையாலாயிற்று "வினைதீர்க்கும்" என்கிற பாட்டின் வ்யாக்யாநத்திலே "தான்காட்டிக்கொடுத்த ஸம்ஸாரியை விரும்பும் சீலகுணமாயிற்று இதில் சொல்லிற்று" என்று நிர்ணயித்து அருளிச்செய்ததும் ; ஆகையால் "வினைதீர்க்கும்" என்னுமதுக்கு வினைதீர்ப்பிக்குமென்றே நிச்சயமாகக் கடவது.

ஆனாலும், "வேரிமாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்" என்றிப்படி சப்தம் ஸுப்ரஸித்தமாயிருக்க தீர்ப்பிக்குமென்று சொல்லலாமோவென்னில்? சொல்லலாம் ; எங்ஙனேயென்னில்? திருவாய் மொழிதானே அநிஷ்ட

(1) திருவாய்-8-7-11 (2) திருவாய்-3-2-11

நிவாரணங்களைப் பண்ணுமென்னுமாப்போலேயாயிற்று, "பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்" என்னுமிடமும். (1)"இப்பத்தும் சன்மம்விடத்தேய்ந்தறநோக்கும் தன்கண்கள் சிவந்து" என்றும், (2)"இப்பத்தும் உயிரின்மேல் ஆக்கை ஊனிடையொழிவிக்கும்" என்றும், (3)"இப்பத்தருவினை நீறுசெய்யும்" என்றும், (4) "இப்பத்துங்கெடலில் வீடு செய்யும் கிளர்வார்க்கே" என்றும்,

(5)"இவை பத்தும் திருவடியே யடைவிக்கும்" (6)" இப்பத்தும் வானின் மீதேற்றி யருள் செய்து முடிக்கும் பிறவிமாமாயக் கூத்தினையே" (7)"இப்பத்தும் மேலை வைகுந்தத்திருத்தும் வியந்தே", (8)"இப்பத்தும் ஏறேதரும்" (9)"இப்பத்தும் நோயறுக்கும்" (10)" இப்பத்தடியார்க்கருள் பேறே" (11)"இப்பத்தருளுடையவன்றாள் அணைவிக்கும் முடித்தே" (12)"இப்பத்தும் உடைந்து நோய்களை ஓடுவிக்குமே" (13)"இவை பத்தும் வீடே" என்றும் இத்யாதிகளான ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்குண்டான வ்யாக்யாநங்களைப் போலேயிருக்குமாயிற்று "வினைதீர்க்கும்" என்கிற வ்யாக்யாந வாக்யமும். "இப்பத்துமுடைந்து நோய்களையோடுவிக்கும்" என்கிற பாட்டுக்கு "இத்திருவாய் மொழிதானே இது கற்றவர்களுடைய ப்ராப்திப்ரதி பந்தகங்களை உந்மூலிதமாக்கும்" என்றும், இப்பத்தும் அருளுடையவன் தாள் அணைவிக்கும் முடித்து" என்னுமதுக்கு, "ஸம்ஸார பந்தத்தை வாசனையோடே போக்கித்திருவடிகளோடே சேர்த்துவிடும்" என்றும், இப்படியேயாயிற்று, "இப்பத்தும்சன்மம்விட" இத்யாதிகளுக்கும் இஷ்டப்ராப்தி அநிஷ்ட நிவாரணகர்த்ருத்வமே. அர்த்தமாக தத்வியாக்யாநத்திலிருக்கும்படி. ஆகையால் அவைதானே அது கொடுக்கு மென்றது தத்ப்ரதிபாத்யனான ஸர்வேச்வரனே கொடுப்பன் என்னுமாபோலே, "பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்" என்னுமதுக்கும், புருஷகாரபூதையான அவளுக்காக அவன் கொடுக்குமென்று விவேகிகள் கண்டு கொள்வது.

ஆனால், அவற்றுக்கு சைதந்ய மில்லாமையாலே தத்ப்ரதிபாத்யனான ஸர்வேச்வரனே அவற்றைப் பண்ணித்தருவன் என்று சொல்லலாயிருக்கும், பிராட்டியிடத்திலும்படி

---

*(3) திருவாய் 3-5-11 (4) திருவாய் 2-9-11 (5) திருவாய் 4-9-11*
*(6) ஷடி 8-4-11 (7) ஷடி 8-6-11 (8) ஷடி 9-4-11 (9) ஷடி 9-7-11*
*(10) ஷடி 10-5-11 (11) ஷடி 2-10-11 (12) ஷடி 1-7-11*
*(13) ஷடி 1-1-11*

சொல்லக்கூடுமோ என்னில்? கூடும் ; தன்னுடைய அசித்வத் பாரதந்த்ர்யம், "மாம்நயேத்யதி காகுத்ஸ்த : என்னுமிடத்திலே ஸுஸ்பஷ்டமாகையால் அப்படியே கூடுமென்னக் குறையில்லை. "தேய்ந்தற நோக்கும் தன் கண்கள் சிவந்து" என்னுமித்யாதி ஸ்ரீஸூக்திகளுக்கும் சைதந்ய கார்யங்களான நிக்ரஹ அநுக்ரஹங்களுண்டாகச் சொல்லியிருக்கச் செய்தேயும் தத்பலப்ரதாநசக்தியானது அங்குநில்லாமல் தத்ப்ரதி பாத்யனான ஸர்வேச்வரனிடத்திலே நிலைநிற்குமாபோலே, "வினைதீர்க்கும்" என்னுமிடமும். "வினைதீர்க்கும்" என் மதுக்குக்கீழில் திருவாய் மொழியில் சாத்துப்பாட்டிலே "வல்வினைதீர்க்குங்கண்ணனை" என்று தொடங்கி, "தொல்வினை தீரவெல்லாரும் தொழு தெழவீற்றிப்பார்" என்றும், (1)"நங்கண்ணன் கண்ணல்லது யில்லையோர் கண்ணே" என்றும், (2)"நின்னலாலிலேன்காண்" என்றும், (3)"கண்ணனல்லா லில்லை கண்டீர் சரண்" என்றும,,(4) "தசரதற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே", என்றும், (5)"களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்", என்றும், (6)"செடியார் வினைகள் தீர்மருந்தே" என்றும், (7)"வினையேன் வினைதீர்மருந்தே" என்றும், (8)"நோய்கள் அறுக்கும் மருந்தே" என்றும், (9)"பேச்சிமுலையு ண்டான் கழல்களவையே சரணாகக் கொண்ட" என்றும், (10)"ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்றும், (11)"நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றும் (12)"புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழ்அமர்ந்து புகுந்தேனே" என்றும், (13)"முகில் வண்ணனடியை யடைந்தருள் சூடியுந்தவன்" என்றும், இத்யாதிகளான பகவதேகோபாத்யவ ஸ்ரீஸூக்திகளுக்கு அநுகுணமாகவே, "வினைதீர்க்கும்" என்று ஓர் இடத்திலிருக்கு மதுக்கு, வினைதீர்ப்பிக்கும் என்னுமதுவே அர்த்தமாக நிர்ணயம் பண்ணுமதுவே விவேக பலமாகக்கடவதத்தனை.

ஆகையால், பிரானுக்கு உபாயத்வமும் பிராட்டிக்குப் புருஷகாரத்வமும் இப்படி நிர்ணயிக்குமிது, "லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா பரம ருஷிபி : மமாபி ச மதம்

*(1) திருவாய்-2-2-1 (2) திருவாய்-2-3-7 (3) ஷடி 9-1-10*
*(4) ஷடி 3-6-8 (5) ஷடி 5-8-8 (6) ஷடி 6-10-7 (7) ஷடி 1-5-6*
*(8) ஷடி 9-3-3 (9) ஷடி 5-9-11 (10) ஷடி 5-7-10 (11) ஷடி 5-10-11*
*(12) ஷடி 6-10-10 (13) ஷடி 7-2-11*

ஹ்யேதந்நாந்யதா லக்ஷணம் பவேத்" இத்யாதி பகவத் வசநங்களுக்கு சேர்ந்திருக்கும் என்று ஸதாசார்யாபிமாந நிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் கண்டு கொள்வது.

இனி, "நின்றிருவருளும் பங்கயத்தாள் திருவருளும்" "அலமேஷா பரித்ராதும்" இத்யாதிகளுக்கு புருஷகாரத்வ மேயாயிற்று நிலைநின்றபொருள். எங்ஙனேயென்னில்? "பண்டைநாளாலே நின்றிருவருளும்" என்னுமதுக்கு தத்வ்யாக்யாநத்திலே, "நெடுநாள் கூடப் பண்ணிப்போந்த உன்கடாக்ஷத்தையும்" "பங்கயத்தாள் திருவருளும்" என்னுமதுக்கு "உன்னருளுக்கடியான பெரிய பிராட்டியார் கடாக்ஷத்தையும்" என்றும் ; "என்னடியார் அது செய்யார்" என்னும் உன் கடாக்ஷத்தையும், (2) "நகச்சிந் நாபராத்யதி" என்னுமவள் கடாக்ஷத்தையும்" என்றும், "அவனுடைய பாரதந்த்ர்யம் ப்ரணயித்வ ப்ரயுக்த மன்றோ, நிலைநிற்குமோ? ஸ்வாதந்த்ர்யமேயன்றோ அவனுக்கு ப்ரக்ருதி என்று அஞ்ச வேண்டா, அவளருகேயிருக்க ஸ்வாதந்த்தர்யம் ஜீவியாது; ஆகையிறே முற்கூற்றால் அவள் புருஷகாரமாகப் பற்றுகிறது"என்று இப்படி தத் த்ரமிடோபநிஷத் வ்யாக்யாநத்திலே ஸ்வாமி நம்பிள்ளை தாமே, "பங்கயத்தாள் திருவருளும்" என்னுமதுக்குப் புருஷகாரத்வமே பிராட்டிக்கு லக்ஷணமாக அருளிச் செய்திருக்கவும், அவளுக்கு உபாயத்வமும் அர்த்தமாக நிச்சயிக்குமது த்ராவிடவேதாந்த பரிசீலநமில்லையாமையத்தனையுள்ளது. இனி, (3) "அலமேஷாபரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத்". "அலமேஷாபரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம்" இவையிரண்டும், புருஷகாரத்வத்திலே தானேஸ்வரஸங்கனென்னுமது, "பாபாநாம்வா சுபாநாம் வா" இத்யாதிகளாலே ஸுஸ்பஷ்டம் "த்ராதும்" என்னுமது புருஷகாரத்வ நிபந்தநமான ரக்ஷகத்வத்தைச் சொல்லுமத்தனை. இனி, "ஸம்ஸாரார்ண வதாரிணீம்" என்னுமதுக்கு, "தாரயித்ரீம்" என்று தத்புருஷகாரத்வமே அர்த்தமென்னுமது, "லக்ஷ்மீம் புருஷகாரேணவ்ருத வந்தோவராநந, மாமேகம் சரணம், ப்ராப்யதரேத், "ஸம்ஸாரஸாகரம்," (பாஞ்சராத்ரம்) என்றும், (1)"ஸம்ஸார அர்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம்

(2) ராமா - யுத்த (3) ராமா ஸுந்தர - காண்டம்

விஷ்ணுபோதம் விநாந அந்யத்கிஞ்சிதஸ்தி பராயணம்" என்றும் இத்யாதி ப்ரமாணங்களுக்கு அநுகுணமாயிருக்குமாயிற்று. இனி, (1) "வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந்நியத: ச்ரியம்" என்கிற ப்ரபத்தியும், (2)"பகவந்நாராயண அபிமத" இத்யாரப்ய "ஸ்ரீயம் தேவீம் நித்யாநபாயிநீம்..........அசரண்ய சரண்யாம் அநந்யசரணச்சரண மஹம் ப்ரபத்யே" என்கிறபடியே புருஷகாரத்வக்ருதமாமத்தனை. (3)"பலமதஉபபத்தே :" (4)"ஸகல பலப்ரதோஹிவிஷ்ணு" "இத்யாதிகளாலும் அதுக்கப்படியே பொருள். இனி, (5)"ஆத்ம வித்யாச தேவித்வம் விமுக்தி பலதாயிநீ" (வி. புராணம்) என்னுமதுக்கு, "தாபயித்ரீ" என்றேபொருள் என்னுமது, (A)"மோக்ஷம் இச்சேத் ஜநார்த நாத்" இத்யாதி தத் வ்யவஸ்தா வசநங்களாலே ஸுஸ்பஷ்டம்.

இனி, "யாமாலம்ப்ய" (பாஞ்சராத்ரம்) என்னுமதுக்கு, புருஷகாரமாக அவளைப் பற்றியென்னுமதுவே, செவ்வையென்னுமது, கீழ்ச் சொன்னபடியே "லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருத வந்தே :" என்று தொடங்கி "மாமேவ அநந்ய மாநஸா : என்கிற பகவத் வசநத்தாலே ஸுவ்யக்தம்.

இனி, (6)"ஜகத் ஸமஸ்தம்யத பாங்க ஸம்ச்ரயம்" என்கிற ச்லோகத்தை உட்கொண்டு பராமர்சிக்கும் போது பரம ப்ரணயித்வ ப்ராதாந்யத்தாலேயாய் இருக்கும்படி, "ச்ரியை ஸமஸ்த சித சித்விதாந வ்யஸநம்ஹரே :" (ஸ்ரீகுணரத்நம்) "அங்கீகாரி பிராலோகைஸ்ஸார்தயந்த்யைக்ருதோஞ்ஜலி :" என்கிற ஸ்ரீஸூக்தியாலே அதிவிசதமாகையால் அதுகொண்டு அவளுக்கு உபாயத்வ முண்டு என்னுமது மந்தம்.

இனி, (6)"ச்ரேயயோநஹ் யரவிந்தலோசநமந : காந்தா ப்ரஸாதாத்ருதே ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்த் வஸுந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்" என்னுமதுவும், "ச்ரிய : ச்ரியம்" என்னுமவருடைய ஸ்ரீஸூக்தியாலே தத்தத்மார்கஸ்தருக்கு அந்தந்த பலஸித்தி தத்புருஷகாரத்வ ப்ராதாந்யத்தாலேயாய் இருக்குமென்னுமது, "நஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்தநே ஸமர்த்தேத்ருஸ்யதே கச்சித்தம் விநா புருஷோத்தமம்" "ந ஹி பாலநஸாமர்த்யம் ருதே ஸர்வேச்வரம்

(1) வி.புராணம் (2) சரணாகதி கத்யம் (3) சாரீரக-மீமாம்ஸை
(4) வி.புராணம் (5) வி.புராணம் (A) மத்ஸ்யபுராணம்
(6) சது:ச்லோகம்.

ஹரிம்", (வி-புராணம்), "ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்ய மாணே ஸ்வகர்மபி : ஜீவேது : காகுலே விஷ்ணோ : க்ருபா காப்யுபஜாயதே : (அஹிர்புத்நியஸம்ஹிதை) இத்யாதிகளாலே ப்ரகடிதம்.

இனி, "சேஷஸேஷாசநாதி ஸர்வம் பரிஜநம் பகவதஸ்தத் ததவஸ்தோசித பரிசர்யா யாமாஜ்ஞாபயந்த்யா" என்னுமது, "அஸ்யே சாநா ஜகதோ விஷ்ணுபத்நீ" (ஸ்ரீஸூக்தம்) என்கிற ச்ருதி ப்ரக்ரியையாலே பத்நீத்வ ப்ரயுக்தமான நியமநத்தைச் சொல்லுமத்தனையல்லது உபாயத்வத்தைச் சொல்லமாட்டாது. "ஸப்ராது ஸ்சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந :. ஸீதாமுவாசாதி யசாராகவம்ச மஹாவ்ரதம்," "ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்தமிதம் வசநம் அப்ரவீத்" இத்யாதிப்படியே புருஷகாரபூதையுமாய், கைங்கர்யவர்த்த கையுமான பெரிய பிராட்டியார் அநுமதியை ஸர்வாத்மாக்களும் தத் கைங்கர்யத்திலுண்டாக அபேக்ஷிப்பது ஆவஸ்யக மாகையாலே தந்நியமநத்தை உபாயாந்தர்பூதமாக சொல்லுமது அசித்வத் க்ருதமத்தனை. (அறிவற்ற செயலத்தனை).

இனி, "ஸ்வஸ்தி ஸ்ரீர்தி சதாதசேஷ ஜகதாம் ஸர்கோ பஸர்க ஸ்திதீ : ஸ்வர்கம் துர்கதி மாபவர்கிக பதம் ஸர்வஞ்சகுர்வாந்ஹரி :, யஸ்யா வீக்ஷ்ய முகம் தத் இங்கித பராதீநோ விதத்தேகிலம் க்ரீடேயம் கலு நாந்யதாஸ் யரஸதாஸ்யா தைகரஸ்யாத்தயா" என்று தொடங்கி, "தேவித்வந் மஹிமாவதிர்ந ஹரிணாநாபித்வ யாஜ்ஞாயதே" என்று விஸ்தரிக்கிறார்" என்னுமதுக்கு, "மாம்நயேத்யதி காகுத்ஸ்த:" என்கிறபடியே தத்பரதந்த்ரையாகையாலே "ப்ரதேஹி.......யஸ்ய துஷ்டாஸி" என்றிப்படியே அந்த ஜகந்நாதனுடைய அநுமதியாலாயிற்று ஸகல ஜகத்துக்கும் அவள் நன்மை பண்ணுவதென்றும், அவன்தானும் "க்வசநஹிவிப்ரம ப்ரமிமுகே விநிமஜ்ஜதிதே" என்கிற படியே அவளழகிலே ஆழங்கால் பட்டு தத் (அவளுடைய) ப்ரணயித்வ மடியாக உண்டான தத் பாரதந்த்ர்யத்தாலேயாயிற்று ஜநங்களுக்கு ப்ரிய ஹிதங்களைப் பண்ணுவதென்னுமது "யஸ்யா வீக்ஷ்யமுகம்" என்னுமத்தாலே ஸித்தமென்றும்,

இப்படி ஸமஸ்த ஆத்மாக்களுக்கும் புருஷகார பூதையான அவளுக்கும், உபாயபூதனான அவனுக்கு முண்டான ஸ்வரூப ப்ரணயித்வாநுரூப அந்யோந்ய பாரதந்த்ர்யாதிகளாலே, "த்வந்தேவிநித்ய மபிநந்தயஸே முகுந்தம்," "ப்ரஹர்ஷயந்தம் மஹிஷிம்மஹாபுஜம்' இத்யாதிப்படியே பரஸ்பரமுண்டான நித்ய நிரவத்ய நிரவதிகாநந்த மஹிமாவை அவனுமறியான், தானுமறியாள் என்றிப்படி பொருளாகையாலே, அவற்றாலே அவளுக்கு உபாயத்வஞ்சொல்லுமது ஏதத் தர்சந ஸம்மதமன்று.

இனி, "ஐஸ்வர்ய மக்ஷரகதிம் பரமம் பதம்வா கஸ்மைசித் அஞ்சலி பரம் வஹதே விதீர்ய, அஸ்மைநகிஞ்சி துசிதம், க்ருத மித்யதாம்பத்வம்லஜ்ஜஸே கதய கோயமுதாரபாவ :" என்னுமத்தாலும், யதாதிகாரம் தத் பலங்களைக் கொடுப்பிக்கத்தக்க ததமோகமான கடகத்வமே (சேர்ப்பிப்பதே) சொல்லப்படுகிற தென்னுமது, தரித்ரனாய் க்ஷுத் பிபாசாதி பீடிதனாய் இருப்பானொருவனுக்கு அபேக்ஷிதங்களான அந்நபாநாதிகளை, பரமதாயளுவா யிருப்பானொருவன் தத் தாத்ருத்வ சக்தியை யுடையவனாய் தனக்கு பவ்யனாயிருப்பானொருவனைக் கொண்டு கொடுப்பித்தால், கொடுத்தவனிடத்திலே நிரவதிக ப்ரீதியுண்டாயிருக்கிலும், அவன் கேட்கவே அவற்றைக் கொடுத்தவனைப் பார்த்து, " நீயே கொடுத்தாய்" என்று சொல்லுமந்த உபகார ஸ்ம்ருதிபோலேயாகக் கடவதத்தனை. இங்ஙனன்றிக்கே, அந்த ஐஸ்வர்ய அக்ஷரகதி பரமபதங்களை பிராட்டிதானே கொடுப்பாளென்னுமது "ப்ரதே ஹி ஸுபகேஹாரம்" "நஸம்பதாம் ஸமாஹாரே," மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத்" இத்யாதிகளான தத்வ்யவஸ்தா வசநங்களோடே விரோதிக்கும்.

ஆகையால் கீழ்ச் சொன்னப்படியே தன்னுடைய புருஷகாரபலத்தாலே அவனைக்கொண்டு அவற்றைக் கொடுப்பிப்பவள் என்னுமதுவே ஸத்யம். "த்வம் லஜ்ஜஸே" (ஸ்ரீகுணரத்நம்) என்னுமது "ருணம்ப்ரவ்ருத்தம்யிவமே" (பாரதம்) என்னுமாப்போலேயிருக்கும். அதாவது தங்களைக்குறித்து ஆரேனும் ஒரு அஞ்ஜலி பண்ணினால் அதுக்கு அவர்களபேக்ஷிதங்களையெல்லாம் தலைகட்டும்படி கொடுப்பித்தும், கொடுத்திருக்கசெய்தேயும் "அவன் பண்ணின

அஞ்ஜலிக்கு நாம் என் செய்தோம் என்று திருவுள்ளங்கள் புண்பட்டிருப்பாராயிற்று அவ்விருவரும். அபேக்ஷிதங்களை அர்த்தித்துப் பெற்றவர்களை "உதாரா:" என்னுமது கண்டால், அருகேயிருந்து அபேஷிதங்களை கொடுப்பிக்குமவர்களை "உதாரா:" என்று சொல்லுமது பகவத்ஸம்மதமாகக் குறையில்லை.

இனி, அந்த ஸ்ரீஸூக்த பாஷ்யத்திலும் தத்புருஷகாரத்வமேயாயிற்று நிலைநின்ற பொருள். "விசிஷ்டமுபேயம்" என்னுமதுக்கு பாதகமில்லாமையாலே கூடுமென்னுமது பூர்வமேவோக்தம் ; (முன் சொன்னபடியே) அதுபோலே "விசிஷ்டம் உபாயம்"மாகக் குறையில்லையென்னுமது, "புவநபவந ஸ்தித்யபாயைகஹேதோர் லக்ஷ்மீபர்து:" என்னுமாபோலத்தனையேயுள்ளது ; இங்ஙனன்றிக்கே, அவளுக்கும் உபாயத்வமுண்டென்னுமது, "லக்ஷ்மீ: புருஷகாரத்வே.........நாந்யதாலக்ஷணம்பவேத்" இத்யாதி பாதக வசநங்களாலும், "மாமேவ" "மாமேகம்" இத்யாதி அவதாரணங்களாலும் நிரஸ்தமானபடியும் பூர்வமேவோக்தம். (முன்சொன்னபடியே).

இனி, "(உபய அதிஷ்டாநஞ்சைக சேஷித்வம்)" என்னுமது. கீழ் "புவந பவநஸ்தித்யயபாயைகஹேதோ: லக்ஷ்மீபர்து:" என்னுமிடத்திற்போலேயிருக்குமத்தனை. இனி, "எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றாம் என்று தொடங்கி உடையவர் அருளிச்செய்த வார்த்தையை" இத்யாதிக்கு, "பாஸ்கரேணப்ரபாயதா" இத்யாதி ஸித்தமான தத்அவிநாபாவமே (விட்டு பிரியாமலிருப்பதையே) சொல்லிற்றாமத்தனை. அதனால் தத்புருஷகாரத்வமேத் ருடமாம். இப்படி ஸத்ஸம்மதமான பின்பு, "பகவத்ரூபத்தில் போலே மாத்ருத்வ ஔபாதிகமான ப்ரணாமாத்ய ஆசாரங்கள்" என்னுமிவற்றாலே, பிராட்டிக்கு உபாயத்வமுண்டாக நிச்சயிக்குமது விவேகபலமாக மாட்டாது. ஆகையால் "லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி: மமாபி சமதம் ஹ்யேதந்நாந்யதா லக்ஷணம் பவேத்" இத்யாதிகளுக்குச் சேரும்படி லக்ஷ்மிக்கு உபாயத்வமில்லையென்னுமிது வேயாயிற்று மத்யஸ்தத்ருஷ்டியாலே தோற்றுகிறப்ராமாணிக அர்த்தங்களென்று விவேகிகள் கண்டுகொள்வது.

ஆகையால், "வினைதீர்க்கும்" என்று தொடங்கி "பகவத் ரூபத்திற்போலே மாத்ருத்வ ஔபாதிகமான ப்ரணாமாத்யா சாரங்கள் என்னுமளவாக உண்டான ஸ்ரீசடஜித் வால்மீக் யாதிகளுடைய வசநங்களுக்கு பலாஅவிநாபூதமான (பலத்தோடு சேர்ந்ததான) அமோக புருஷகாரத்வத்தில் தானே தாத்பர்யமாகக் குறையில்லையாயிற்று.

இனி, "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷிகேசோ தேவ்யா காருண்யரூபயா, ரக்ஷகஸ் ஸ்வரூப ஸித்தாந்தே வேதாந்தே பிசகீயதே" என்கிற ஸ்லோகத்திலே பிராட்டியாரோடே கூட ஈச்வரனுக்கு ரக்ஷகத்வஞ் சொல்லியிருக்கும்மதை ஹேதுவாகக் கொண்டு பிராட்டிக்குமுபாயத்வம் உண்டென்னும் போது "ப்ரஹ்மா தக்ஷாதய : கால : ததைவஅகில ஜந்தவ :, விபூதயோ ஹரேர் ஏத : ஜகதஸ் ஸ்ருஷ்டி ஹேதவ :" என்றும், "விஷ்ணுர்மந்வாதய : காலஸ் ஸர்வபூதாநி ச த்விஜ" என்றும், "ருத்ர : கால அந்தகாத்யாச்ச ஸமஸ்தாச் சைவ ஜந்தவ :" இத்யாதி ஸ்ரீவிஷ்ணு புராண வசநங்களிலே சொல்லப் பட்டவர்களெல்லார்க்கும் (பிரமன், சிவன், யமன் முதலிய) தத்ஸ்ருஷ்டியாதிகளில் உபயோகம் சொல்லியிருக்கையாலே அவர்களுக்கும் ஜகத் காரணத்வாதிகளுண்டாகச் சொல்ல வேண்டியிருக்கும்.

இஷ்டாபத்தி : என்ன வொண்ணாதாயிற்று; அதிலே, "ஸ்ருஷ்டிஸ்திதி அந்த கரணீம் ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம், ஸஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவஜநார்த ந :" என்கிற அவதாரண அந்வித விசேஷ ப்ரமாணமானது இதரஸ்வாத ந்தர்யத்தை நிஷேதித்திருக்கையாலே. ஆகையாலே, யேந கேநப்ரகாரேண (எப்படியாகிலும் ஏதாகிலும் ஒரு பிரகாரத்தாலே) ப்ரஹ்மருஷிகளுக்கும் அவற்றிலுபயோகஞ் சொல்லுமாப்போலே பிராட்டிக்கும் புருஷகாரத்வக்ருதமான (சிபாரிசின் செயலான) ரக்ஷணோபயோக முண்டா மத்தனையல்லது, ஸ்வதந்த்ரனான ஸர்வேச்வரனைப்போலே தத்பரதந்த்ரையான பிராட்டியும் ஸாக்ஷாதுபாய பூதையாகலாமென்னுமது, ஏதத்தர்சந ஸத்ஸம்ப்ரதாய அர்த்த அநபிஜ்ஞதை (அறியாமை), யாலத்தனை. யாவனொருவன் வேதாதி ஸகல சாஸ்த்ரஜ்ஞனானாலும் ப்ரஹ்மவித்

அக்ரகண்யரான ஸஜ்ஜனங்களுக்கு ஸம்மதமாக வேதாதி சாஸ்த்ரங்களுக்கு அர்த்த நிர்ணம் பண்ணாமல் தத்வ்ருத்தர்த்தங்களைச் சொல்லுகிறான்; அவனை தத்குலத் தோடே கூடசூத்ரதுல்யனாக இப்படிசாஸ்த்ரஞ்சொல்லும். **"யோதீத்ய விதிவத் விப்ரோவேதார்தாந் நவிசாரயேத் ஸ ஸா ந்வயஸ்சூத்ரஸம : பாத்ரதாம் நப்ரபத்யதே"** இத்யாதி. ஆகையால், **"லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டாநாந்யதாலக்ஷணம்பவேத்"** இத்யாதியான வேததுல்ய ஸ்ரீ பகவத் சாஸ்த்ர அநுகூலமாகவே அர்த்தத்தை விசாரியாமல் பிராட்டிக்கு உபாயத்வத்தைச் சொல்லுமது **"வேதார்த்தாந் ந விசாரயேத்"** என்னுமதுக்கு இலக்காகக் கடவதத்தனை. இன்னமும், லக்ஷ்மிக்கு புருஷகாரத்வமும் லக்ஷ்மீபதிக்கு உபாயத்வமும் சொல்லுமதுவே, **"மமாபிசமதம்"** என்கிற விஷ்ணுவுக்கும் வைஷ்ணவர்களான ப்ரபந்நருக்கும் பகவச் சாஸ்த்ரத்துக்கும் ஸம்மதமாயிருக்க குதர்க்க ஸ்வவாக்பலத்தாலே தத்விபரீதமாக லக்ஷ்மிக்கு உபாயத்வஞ்சொல்லி, அவளுக்கு உபாயத்வமில்லை என்கிற விஷ்ணுவையும், தத்ப்ரவணரான ப்ரபந்நரையும், **"த்ருடபூர்வஸ்ருதோமூர்க:"** இத்யாதியாலே நிந்திக்குமவர்களை, லோகாயதிகராகவும், பகவச் சாஸ்த்ர தூஷகராகவும், சண்டாள ஸத்ருசராகவும் இப்படிசாஸ்த்ரம் சொல்லும் **"வேத சாஸ்த்ரவ்ருத்தேந குதர்கேண ஸ்வ வாக்பலாத், வைஷ்ணவம் ப்ரதிஷேதந்தே தே லோகாயதிகா : ஸ்ம்ருதா : ப்ரபந்நநிந்தகா : க்ருரா : பகவச்சாஸ்த்ர தூஷகா : சண்டாள ஸத்ருசா ஏதே ஸர்வ கர்மஸு ஸர்வதா"** இதிஹாரீத : இப்படி ஸகல சாஸ்த்ர ஸம்மதமாகையாலே, **"லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமருஷிபி : மமா பிசமதம் ஹ்யேதந் நாந்ய தா லக்ஷணம் பவேத்"** என்கிற ஸ்ரீ பகவத்சாஸ்த்ரத்திலுள்ளபடி நிலைநிற்குமதுவே தத்ப்ரீதிகரமாகவும், தத்விபரீத அர்த்தத்தைச் சொல்லுமதுவே தந்நிந்தையாகவும் இப்படி நிச்சயிக்க குறையில்லையாயிற்று.

ஆனால், **"நாந்யதா லக்ஷ்ணம்"** என்னுமத்தாலே தானே பிராட்டிக்கு உபாயத்வமில்லையென்னுமதுவே ஸத்ஸம்மதமாகில், ததநுகுணமாக ஏதத்தர்சநஸ்தரான ஸதாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் உண்டாகவேணுமேயென்னில்?

அவை, அபாரமாக உண்டாயிருக்கும். எங்ஙனேயென்னில்? 'தத்வபூஷண'மென்கிற ப்ரபந்தத்திலே : "காரணவஸ்துவே உபாஸ்யமுமாய் சரண்யமுமாகையாலே இவளுக்கு உபாயபாவத்தில் அந்வயமில்லை, இவளுக்கு உபாயபாவம் உண்டாக ப்ரமாணங்களுண்டேயென்னில்? அது சரண்ய னுடைய இச்சாநுவிதாயியாகக்கடவது". என்றும், மேல் "ப்ரதமபத த்விவசநத்தாலே விக்ரஹாதிகளை நிரஸிக்கிறது, அநந்தர பதத்தாலே உபாயத்வித்வ வாதிகளை நிரஸிக்கிறது" என்றும், இப்படி நாயினாராச்சான்பிள்ளை அருளிச்செய்தார்.

இன்னமும், ரஹஸ்யத்ரய ஸாரத்திலே, ஸ்ரீமாலாதிப வம்ஸ முக்திக மணியான யாமுநாசார்யர் அருளிச்செய்தபடி :- "சரணௌ" என்று த்வி வசநப்ரயோகம் பண்ணுவான் என்யென்னில்? ஏக வசநப்ரயோகம் பண்ணினால் ஜாத்யேக வசநமாய்க்கொண்டு லக்ஷ்மீ விசிஷ்ட உபாயத்தைக் காட்டவுங் கூடுமாகையாலே அத்தை வ்யாவர்த்திக்கிறது த்விவசநப்ர யோகம்" என்றும், "லக்ஷ்மீ குண விக்ரஹங்கள் விசேஷணமாய் அவன் விசேஷ்யமாகையாலே விசேஷ்ய அம்சபூதனான அவனுக்கே ப்ராதாந்யேந கார்யகரத்வம் விசேஷண அம்சமான இவற்றுக்கு தத்அநுவிதாயித்வ மாத்ரமேயாய் இருக்குமாகையா- லே விக்ரஹத்துக்கு சுபாச்ரயத்வம், வாத்ஸல்யாதிகளுக்கு ஆச்ரயண ஸௌகர்யா பாதகத்வம், ஜ்ஞானசக்திகளுக்கு ஆச்ரித கார்யா பாதகத்வம் இதர குணங்களுக்கு தனித்தனியே கார்யபேதம் எப்படியோ? அப்படியே லக்ஷ்மீக்கு புருஷகார த்வமே நிலமாயிருக்கும்" என்று அழகர்புரோஹிதரானயாமுந தேசிகர் அருளிச் செய்தார்.

சதுச்ச்லோகி மூன்றாம் ச்லோக வ்யாக்யாநத்திலே "பிராட்டிக்கு உபாயத்வமில்லை, புருஷகாரத்வமேயு ள்ளது"என்று பெரியவாச்சான்பிள்ளையருளிச் செய்தார். "ஆகில், உபாயபரமான ப்ரமாணங்களும் புருஷகார பரமான ப்ரமாணங்களும் ப்ரபந்தங்களிலே துல்யமாயிருக்க ஏததநுகுணமாக அவற்றையோஜிப்பான் என்? ததநுகுணமாக இவற்றை யோஜித்தால் குறையென்யென்னில்? உபாயபரமான ப்ரமாணங்கள், உபாய அந்வயமாத்ரத்தைச் சொன்ன வித்தனையல்லது புருஷகாரபாவத்தை நிஷேதிக்கவில்லை.

புருஷகார பரங்களான ப்ரமாணங்கள், "புருஷகாரத்வே நிர்திஷ்ட.......ந அந்யதா லக்ஷணம் பவேத்" என்று புருஷகாரத்வத்தையே லக்ஷணமாகச்சொல்லி அந்யதா லக்ஷணமில்லையென்று உபாயத்வத்தை அவளுக்குயில்லை யென்று நிஷேதித்ததிறே ; அந்வயத்திலும், வ்யதிரேகம் (எதிர்மறை) அர்த்த தாட்யத்துக்கு உறுப்பாகையாலே, இதுவே ப்ரபல ப்ரமாணஸித்த மாகையாலும், பகவதபிமத மாகையாலும் ; பிராட்டிக்கும் அத்யந்த அபிமதமாகையாலும், ஸம்ப்ரதாய ஸித்தமாகையாலும், ஏததநுகுணமாக (இவற்றுக்கு அநுகுணமாக) அவற்றை யோஜிக்கத் தட்டில்லை. ததநுகுணமாக இவற்றை யோஜிக்குமிடத்தில் ; ப்ரபல ப்ரமாண விரோதமும், பகவத் அநபிமதத்வமும், லக்ஷ்மீ அநபி மதத்வமும், ஸத்ஸம் ப்ரதாய விரோதமும் ஸம்பவிக்கும். ஆகையால், ஸகலப்ரமாண, ப்ரமாத்ரு பரிக்ருஹீதமான புருஷகாரத்வமே ஸாராஸாரசதுரருக்கு பரிக்ராஹ்யமென்றதாயிற்று.

இன்னமும், "இவளுடைய உபாய பாவத்தை ஸகலப்ரமாணமும் சொல்லிற்றேயாகிலும், லக்ஷ்மீவிசிஷ்டன் உபாயமென்னு மளவில் விசேஷ்யமான அவனிடத்தில் ப்ராதாந்யமும் ஆகக் கடவது. அதாவது - புருஷோத்தமத்தாலே வந்த ஸ்வாதந்த்ர்யத் தாலே அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் பண்ணிக் கொடுப்பான் ஈச்வரனேயாய், அதுகண்டு தானுகந்து அவனைப்பின் செல்லுகை தனக்கு ஸ்வரூபமாயிருக்கை. இனிதனித்து இருவரும் உபாயமாகச் சொல்லுமிடங்கள், பகவானுக்கு அபிமதையாய் அநுரூபையாய் இருக்கிற ப்ராதாந்யத்தாலே, இவள் சொல்லுகிறவற்றை அவன் செய்யுமென்கிற நிச்சயநிபந்தனமாகக் கடவது. "விசேஷண மானது விக்ரஹாதிகளில், சுபாச்ரயத்வத்திலே விக்ரஹத்துக்கு அந்வயமாகிறாப்போலவும், குணங்களில் வாத்ஸல்யாதிகளுக்கு ஆச்ரயணீயத்வத்திலும், ஜ்ஞான சக்தியாதிகளுக்கு கார்யகரத்வத்திலும் அந்வயமாகிறாப்போலவும், இதர குணங்களுக்குத் தனித்தனியே கார்யபேத முண்டானாப் போலவும், லக்ஷ்மிக்கு புருஷகார பாவத்திலே அந்வயமென்று நிஷ்கர்ஷிக்கக் கடவதாயிற்று" என்று இப்படி ரஹஸ்ய அம்ருதத்திலே வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயரருளிச் செய்தார்.

இன்னமும், பரந்த ரஹஸ்யத்திலே பெரியவாச்சான் பிள்ளையருளிச் செய்தருளினபடி - "ஸ்ரீமந் நாராயண சரணௌ" என்று உபாயதயா வக்ஷ்யமாணனான நாராயண-னுக்கு விசேஷணமாக ஸ்ரீமத்தையைச் சொல்லாநின்றால், நாராயணசப்தத்தில் சொல்லுகிற குணவிசேஷங்கள் விசேஷணத்வேந உபாயசரீரத்தில் அந்விதங்களாகிறவோபாதி இவளும் உபாய அவயவமாக ப்ராப்தையுமாய், மாதாபிதாக்கள் இருவரும் சேரவிருந்து ப்ரஜா ஸம்ரக்ஷணம் பண்ணுகை ப்ராப்தமுமாய், அதுக்குமேலே, "வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்" என்று உபாயக்ருத்யமான விரோதி நிவர்த்தகத்வம் இவ்வர்த்தத்திலே நிஷ்டரான நம்மாழ்வார் திருவுள்ளத்தாலுமுண்டாய், ப்ரதேசாந்தரங்களிலும் இவளை புருஷகாரமாக நினைத்துச்சொல்லுகின்றவை உபாய பாவத்திலே அந்வயிப்பிக்கைக்கு யோக்யமுமாய், அதுக்கு மேல், 'அரி : ப்ராணாந்பரித்யஜ்ய ராக்ஷிதவ்ய : என்றுமேல் அநுஷ்டிக்கப் புகுகிற ப்ரபத்திதானே புருஷகார க்ருத்யத்தைச் செய்யவற்றாகையாலும், மாட்டாதாகில் ; இவள் ஸ்வாதந்த்ர்ய த்தையாற்றிச் சேரவிட உபாய பூதனான ஈச்வரன் ரக்ஷிக்க வமைந்திருக்க உபாயாந்விதமான இவனுடை ப்ரபத்தி அநுஷ்டாநம் நிஷ்பலமாம்படியுமாயிருக்க, இவளுக்கு உபாய சரீரத்தில் அந்வயமில்லை........ (மீதியை பரந்தரஹஸ்யத்திலே கண்டு கொள்வது)......... சேஷித்வ தசையிலும் ப்ராப்யத்வ தசையிலும் ஒருமிதுநமே வேண்டி ந வோபாதி உபாயதசையில் ஸ்வேதர ஸகல ஸஹாய அஸஹமாயிருக்கையாலே இவளுக்கு உபாயபாவத்தில் அந்வயமில்லை, புருஷகார பாவத்திலேயாகக் கடவது" என்றும், கத்யத்ரய வ்யாக்யாநத்திலே, "(ஸ்ரீவல்லப) இவ்வால்லப்யம் புருஷகார பாவத்துக்கும் ப்ராப்யதைக்கும் உறுப்பாயிருக்குமிறே" என்றும், "(ஸ்ரீமந்) இப்படியிருக்கிற உன்னையுமர்சித்து புருஷகாரபூதையான பிராட்டியைப் பார்த்து ரக்ஷிக்க வேணும்" என்றும், (ஸ்ரீமதே) என்கிற விடத்தில், "ஸ்வரூபாநுபந்தியான லக்ஷ்மீ ஸம்பந்தம் அநுஸந்தேயம். இத்தால் புருஷகாரபாவஞ்சொல்லிற்று (ஸ்ரீமந்) பூர்வ வ்ருத்தம் பாராதே விஷயீகரிக்கும்படி அருகேயிருந்து சேர்ப்பாருமுண்டே" என்றிப்படி, பெரியவாச்சான்பிள்ளை முதலான ஸ்வாமிகள், ஆழ்வா-ருடைய திவ்ய ப்ரபந்தாநுஸந்தான சீலரான ஸ்ரீவைஷ்ண

வர்களுக்கு ஸ்வஆசார்ய ச்ரேஷ்டர் என்னுமது "**கரீயா நர்த்ததோ குரு :**" (சாந்தோக்யஉபநிஷத்) என்கிறபடியே ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்த வ்யாக்யாநத்தாலே ஸுஸ்பஷ்டம் ஆகையாலே, தத்ஸம்மதமான தத் புருஷ காரத்வமே, அந்தலக்ஷ்மீக்கும் தத்பதிக்கும் ஸ்ரீசடஜித்யாசார் யர்களுக்கும், ஸ்ரீவால்மீக்யாதி பரமருஷி களுக்கும் ஸம்மதமென்னுமது, "**லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா .......... ந அந்யதாலக்ஷணம் பவேத்**" என்கிற ஸ்ரீபாஞ்சராத்ர மஹாசாஸ்த்ரோக்த ஸ்ரீஸூக்தியாலே ஸுவ்யக்தமாய் இருக்கச்செய்தே, அதின்படியே, தத்புருஷகாரத்வ ஸ்தாபகரான ஸ்ரீசடஜிந் நாத யாமுநயதிவர கூரேச, கோவிந்த பட்டார்ய வேதாந்தி லோகாசார்யர்கள், பெரியவாச்சான் பிள்ளை முதலான ஆசார்யர்கள் லக்ஷ்மிக்கு உபாயத்வமில்லை யென்னுமத்தை துரஹங்கார ப்ரயுக்த ஸ்வ வித்யாகர்வத்தாலே ஸஹியாமல் அவர்களைக்குறித்து "**த்ருட பூர்வச்ருதோ மூர்க : தர்மாணாமவிசாரத :**" இத்யாதி தூஷண வசநங்களை எழுதுமத்தாலே, ஸமஸ்த ஆத்மாக்களுக்கும் பித்ரு குர்வாதி ஸகலவித பந்துபூதரான அந்த சடஜிதாத்ய ஆசார்யர்களை, தூஷித்ததாகத்தலைக் கட்டுகையாலே, தத்தூஷகரை பித்ரு மாத்ரு ப்ராத்ரு ஆசார்ய ப்ரஹ்மகாதகராகவும் ; அவர்களுக்கு முடிவில்லாத நரகாநுபவமே ஸித்தமாகவும் இப்படி ச்ருதி சொல்லக்கடவது. சாந்தோக்யே, "**ஸ யதி பிதரம் வா மாதரம் வா ப்ராத்ரும்வா ஸ்வஸாரம் வா ஆசார்யம்வா ப்ராஹ்மணம்வா கிஞ்சித் ப்ருசம் இவ ப்ரத்யாஹதி க்த்வா அஸ்த்வித்யே, வை நமாஹு :**" ப்த்ருஹா வை த்வமஸி - ஆசார்ய ஹாவை த்வமஸி, ப்ராஹ்மணஹாவை த்வமஸி - சூலேநஸமாஸம் வ்யதிதஹேததி" இந்த ச்ருதியில் சொல்லுகிற பித்ருஹா ஆசார்ய ஹா ப்ராஹ்மண ஹாத்வமஸி இத்யாதி மஹா பாதகங்கள். "**த்ருடபூர்வ ச்ருதோ மூர்க :**" என்று தொடங்கி, "**அந்யதா மந்தபுத்தீநாம் ப்ரதிபாதிதுராத்மாநாம்**" என்கிற தத் தூஷணவசநங்களை, புருஷகாரத்வ ஸ்தாபகரான ஆசார்யர்களைக் குறித்து எழுதுவரிடத்திலும் அத்தைக்கண்டு ஆமோதிக்குமவர்களிடத்திலும் குடிகொண்டிருக்கும் ஆகையாலே, "**த்ருட பூர்வ ச்ருதோமூர்க :**" இத்யாதிகளை அந்த அதிகாரத்திலே எழுவரிடத்திலேதானே ததுக்த மூர்க்கத்வ, தர்மாவிசாரத்த்வ, மந்தபுத்தித்வ, துராத்மத்வாதிகள் வஜ்ரலே

பாயிதங்களாக இருக்குமென்று ப்ரமாண பரதந்த்ரராய் அஸூயாதி துர்குண ரஹிதரான ராமாநுஜதர்சநஸ்தர்கள் அனைவரும் கண்டு கொள்வது.

இப்படி ஸ்ரீசடஜிதாசார்யர்களுக்கு அநபிமதமான த-துபாயத்வ விபுத்வங்களைச் சொல்லுமவர்கள் பரமதஸ்தரைப்போலே பரித்யாஜ்யர்களாகக்கடவது. என்று நாயினாராச்சான்பிள்ளை அருளிச் செய்தருளினார். தத்வ ஸங்க்ரஹே லக்ஷ்மீ ஸ்வரூப அணுத்வ ஸ்தாபகப்ரகரணே : "ஏவம் ஆத்மாநம் அணுத்வே கதம் வ்யவஹார :, 'யதாஸர்வகதோ விஷ்ணுஸ்ததைவேயம் த்விஜஉத்தம, இதி ஸ்ரீய:; அத்ராஹ : (நேயமாத்மஸ்வ அந்தர்பூதேதி, கதம் இதமநந்தர் பாவவசநம்) இது (அதிகபாடம்) போக்ய அந்தர் பாவாத், போக்த்ரு அந்தர்பாவாத், ஈச்வர அந்தர்பாவாத், கோடித்ரயாதிரேகாத்வா; நாத்ய :, ஜ்ஞத்வா அஜ்ஞத்வ விரோதாத்; நத்ருதீய: ஈச்வர த்வித்வஅஸம்பவாத்; தயோ : ஸ்வஅஜ்ஞஅவ்யாகாதேந அநீச்வரத்வாபத்தே :; அத ஏவச்ருதம், "ஈசதே தேவஏக :" இதி என்று தொடங்கி, லக்ஷ்மீவிபுத்வ பக்ஷத்தை நிரஸித்து, அதின் முடிவிலே "இவ்வர்த்தங்களை ப்ரமாண ஸித்தமுமன்றியிலே ஸம்ப்ரதாய ஸித்தமும் அன்றியிலே ஸத்தாவத்தும் இல்லாமல் யாவர்சிலர் ரஹஸ்யரூபேண உபதேசித்து ஜகத்தை மோஹிப்பிக்கிறார்கள் அவர்கள், ஸகலவித சித்அசித்விலக்ஷணமாய், நிகிலஜகதேக காரணமாய், நிரஸ்த ஸ்மாப்யதிக ஸமஸ்தவஸ்து ஜாதமாய், நாராயண சப்த வாச்யமான பரப்ரஹ்மமே வேதாந்த வேத்யமென்றும் ப்ரஹ்ம மீமாம்ஸாஸூத்ர ந்யாயத்தாலே அறுதியிடுமவர்களான வேதவித் அக்ரேஸருடைய நினைவை பின்சென்றிருக்கச் கடவரான நம்மாசார்யராலே அங்கீகரிக்கப் படார்களென்று அறுதியிட்டு நம்மாலும் அநாதரிக்கப்படுவது" என்று தத்வ ஸங்க்ரஹத்திலே நாயினாராச்சான்பிள்ளை அருளிச்செய்தருளினார்.

இப்படி ஏதத் தர்சநஸ்தரான ஆசார்யருடைய ஸித்தாந்தத்தின் படியாகவே ஸகல ச்ருதி ஸ்ம்ருதி இதிகாச புராண ஸ்ரீபாஞ்சராத்ராதிகளில் பிராட்டிக்கு உபாயத்வ மில்லையென்னுமது, "லக்ஷ்மீ : புருஷகாரத்வே நிர்திஷ்டா

பரமருஷிபி : மமஅபிசமதம் ஹ்யேதாந் நாந்யதால-க்ஷணம்பவேத் " என்கிற அந்த ஸ்ரீசவசநத்தாலேதானே ஸுப்ர ஸித்தமாயிருக்கையாலே, தத்வசந அநுகுணமாகவே அந்த ச்ருத்யாதிகளுக்கும் அர்த்த நிர்ணம் பண்ணுமதுவே ராமாநுஜதர்ச நஸ்தருக்கு விவேக பலமாகக்கடவதத்தனை"

ஆக, இதுவரை ச்ருதிஸ்ம்ருதி இதிகாச புராணங்களிலும், ஆழ்வார்கள் அருளிச்செயல்களிலும் நாத யாமுந யதிவ ராதிகளான நம்பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்திகளிலிருந்தும் ச்ரிய : பதியான நாராயணனுக்கே உபாயத்வமும், பிராட்டிக்கு உபாயத்வமில்லாமல் புருஷகாரத்வமே நிலைநின்ற வேஷம் என்பதை சாராசார விவேகிகளாய் சுத்த ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்கள் கண்டுகொள்வார்கள் என்று அறிவித்து நிற்கிறேன்.

## பிராட்டிக்கு ஸ்வரூப விபுத்வமில்லை : அணுஸ்வரூபையே

விபுவத்வமென்றால் அறப்பெரியது என்று பொருள். அணுவென்றால் மிகச்சிறியது. ஸ்வரூபமென்பது - ஜீவபரமாத் மாவின் இயல்பான வடிவங்கள். இங்கே லக்ஷ்மீஸ்வரூபத்தை நிரூபிக்குமளவில், ஸ்வரூபவிபுத்வம் கூடாது. எங்ஙனே? என்றால், "போக்தா போக்யம்ப்ரேரிதாரஞ்ச மத்வா ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்" *(ச்வே - 1-12)* (அனுபவிப் பவ்னான ஜீவனுக்கு அந்தர்யாமியாகவும், அனுபவிக்கப்படும் அசித்துக்கு (அறிவற்ற ஜடப்பொருளுக்கு) அந்தர்யாமியாகவும், நியமிப்பவனான தன்னுடைய ஸ்வரூபத்தோடும் கூடியவனாகவும் ஆக இப்படி ப்ரஹ்மம் மூன்று விதமாக சொல்லப்படுகிறது) என்றும்; "க்ஷரம் ப்ரதாந மம்ருதாக்ஷரம் ஹர :. க்ஷராத் மாநௌ ஈச்தே தேவ ஏக :" *(ச்வே-1-10)* (க்ஷரம் என்பது மூலப்ரக்ருதியாகிய ஜடப்பொரு ளாகும் ; அழிவற்றவனாகையாலே போக்தாவான ஜீவனா வான். அசித்தான ஜடப்பொருளையும், அறிபவனான ஜீவனையும் ஒருதேவன் நியமிக்கிறான்) என்றபடி வேதாந்த ஸித்தமான அர்த்தங்கள் நம்முடைய விசிஷ்டாத்வைத தர்சனத்தில் தத்வத்ரயமேயுள்ளது (மூன்று தத்வங்கள் உள்ளன). இவற்றில்

பிராட்டி, "அறிவற்ற ஜடப்பொருளைச்சேர்ந்தவளோ? அறியும் தன்மைபெற்ற ஜீவ தத்வத்தைச் சேர்ந்தவளோ, ஈச்வரதத்வத்தில் சேர்ந்தவளோ? அல்லது இம்மூன்று தத்துவத்துக்கும் மேற்பட்டவளோ?" என்று வேறுபடுத்தி நிரூபிக்குமளவில் அசித்தான ஜடப்பொருள் அறிவற்ற தாகையாலும்;இவள் ஜ்ஞான ஸ்வரூபமுள்ளவ ளாகையாலும், ஜ்ஞத்வ அஜ்ஞத்வ (அறியும் பொருள், அறிவற்ற பொருள்) என்று ஒன்றுக்கொன்று முரண்படுகையாலே, அசித்தான - அறிவற்ற ஜடப்பொருளோடு சேர்ந்தவள் ஆகமாட்டாள். சரி, ஈச்வரனோடு ஒப்பான வளோ? என்னில்?' "ஈசதே தேவ ஏக :" (தேவனான ஒருவனே நியமிப்பவன்) என்றும், "ந தத் ஸமச்சாப்யதி கச்சத்ருச்யதே" (ஸ்வே-6-8) (அவனுக்கு சமமாகவோ, அவனைவிட அதிகமானவர்களோ கிடையாது) என்ற வேதாந்தத்தில் சொல்லப்பட்டதாலே ஈச்வரதத்வத்திலும் சேரமாட்டாள். இவளும் பகவானும் ஒன்று என்று ஐக்யம் சொன்னால், "விஷ்ணு பத்நீ" (விஷ்ணுவிற்கு பத்நீ) என்கிறபடியே, பத்நீபரமான வேதத்தோடும், அவளும் "அவனும் தனித்தனி ஸ்வரூபத்தையுடையவர்கள்" என்ற பேதத்தைச் சொல்லும் வேதத்தோடும் விரோதிக்கும். ஐக்ய பரங்களான வேதாந்தங்கள் (இருவரும் ஒருவரே என்று ஒற்றுமையைச் சொல்லும் வேதபாகங்கள்) அத்யந்த பாரதந்தர்யத்தாலே (பிராட்டி தனக்குரிமையில்லாதவளாய் பெருமானுக்கே உரிமையுடையவளாயிருக்கும் தன்மை) அவிநாபாவ நிபந்தநங்கள். (விட்டு பிரியாத உறவின் நிபந்தனைகள்) பேதப்ரதிபாதகங்கள் (தனித்தனியாக சொல்லுமிடங்கள்) ஸ்வரூபபேதபரங்கள் (அவர்களினுடைய இயல்பான வடிவத்தை தனித்தனியாகச் சொல்லக் கூடிய இடங்கள்) இப்படியல்லாமல் ஈச்வரனைப்போல் பிராட்டியும் ஈச்வரனுக்கு ஸமமென்றால் ஈச்வரத்வித்வம் பிரஸங்கிக்கும் (இரண்டு கடவுளர் என்ற பிரஸங்கம் வரும்) மேலே சொல்லப்பட்ட சித்து, அசித்து, ஈச்வரன் என்ற மூன்று தத்வத்துக்கும் மேற்பட்டவள் என்று எங்கும் ப்ரமாணம் கிடையாது. ஆகையால் பிராட்டியானவள் ஜீவகோடியிலே சேர்ந்தவளாகிறாள்.

ஆனால், "நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ : ஸ்ரீரநபாயிநீ, யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம" (விஷ்ணு-புராணம்)

(ஜகந்மாதாவாய், விஷ்ணுவுக்குச் செல்வமாயிருப்பவளாய், இறையும் அவனைவிட்டு அகலாதவளான இந்த பிராட்டியும் நித்யமானவளே) பிராமணோத்தமரே! எப்படி பகவான் ஸர்வயாபியாயிருக்கிறானோ, அப்படியே இவளும் ஸர்வ வ்யாபீனியாயிருக்கிறாள்) என்கிறபடியே பிராட்டிக்கு விபுத்வம் (மிகப்பெரியதாயிருக்கும் தன்மை) சொல்லப்பட்டிருக்கிறதே என்னில்? அந்த விபுத்வ ப்ரமாணங்கள் ஸ்வரூப விபுத்வத்தைச் சொல்லாமல் விக்ரஹவ்யாப்தியை சொல்லப்பட்டதாகையால் அணுத்வ ப்ரமாணங்களுக்கு பாதகமாகாது. இனி, "காலாதிகளுக்கு விபுத்வம் உண்டாயிருக்கவும் ஈச்வரத்வித்வம் (ஈறிறை) வாராதாப்போலே, லக்ஷ்மீ விபுத்வத்திலும் (லக்ஷ்மீ எங்கும் பரந்திருக்கும் தன்மையிலும்) ஈச்வரத்வித்வம் ப்ரஸங்கியாமையாலே அது விரோதமன்றேயென்னில்? அதற்குச் சமாதானம் : அதாவது கால-முதலானவற்றுக்கு விபுத்வமுண்டாயிருக்கவும் ஈச்வரத்வித்வம் வாராதாப்போலே" என்கிற இந்த த்ருஷ்டாந்தம் சேராது. எங்ஙனே என்னில் ? சைதந்ய அநாதாரத்வே ஸதி விபுத்வம் (அறிவற்ற ஜடப்பொருளாய் பரந்து இருப்பது ). என்றல்லவா காலத்திற்கு லக்ஷணம் சொல்லப்படுகிறது. "சைதந்யாதாரத்வே ஸதி விபுத்வம்" (ஜ்ஞானத்தை ஆதாரமாகக்கொண்டு எங்கு ம் பரந்திருக்கை) என்று ஈச்வரனுக்கு லக்ஷணம் சொல்லப்பட்டது. ஆகையாலே சைதந்ய விசிஷ்டையான (ஜ்ஞானத்தோடு கூடியுள்ள) இவளுக்கு விபுத்வம் கொள்ளில் ஈச்வரத்வித்வம் (ஈறிறை) ப்ரஸங்கிக்கையாலே, இவளுக்கு அணுத்வமே அஸாதாரண லக்ஷணம் என்னதட்டில்லை.

இனி, "யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர :" (உத்தம : புருஷஸ்த்வந்ய :) (ஸ்ரீகீதை-15) (எவனொருவன் மூவுலகங்களிலும் நுழைந்து (க்ஷர, அக்ஷரபுருஷர்களை) தரிப்பவனாகவும், குறைவற்றவனாகவும், நியமிப்பவனாகவும், பரமாத்மா என்று சொல்லப்படுபவனாகவும் விளங்குகிறானோ அந்த புருஷோத்தமன் (முன் சொல்லப்பட்ட இருவிதமான

புருஷர்களைக்காட்டிலும்)வேறுபட்டவன் என்கிற கீதையில் சொல்லப்பட்டபடியே, ஸர்வ வ்யாபகத்வத்தாலும், (எல்லாவற்றையும் சூழ்ந்து பரவியிருப்பதாலும்) ஸர்வநியந்த்ருத்வத்தாலும் (எல்லோரையும் நியமிப்பதாலும்) ஈச்வரனுக்கு ஜீவ அந்யத்வம் (ஜீவர்களைகாட்டிலும் வேறுபட்டதன்மை) ஸாதித்தாப்போலே, "யதா ஸர்வக தோவிஷ்ணுஸ்ததை வேயம் த்விஜ உத்தம" (எப்படி எம்பெருமான் எல்லாவற்றையும் வ்யாபிக்கிறானோ அப்படியே அவளும்) என்றும், "ஈச்வரீம் ஸர்வபூதாநம்" (ஸ்ரீஸூக்தம்) (எல்லா உலகிற்கும் ஈச்வரியானவள்) என்றும், "ஈசநா தேவி புவநஸ்யாதிபத்நீ" (உலகிற்கு ஈச்வரியாகவும், ஸர்வாதிகனுக்கு (எம்பெருமானுக்கு) பத்நியாகவுமிருப்பவள்.) இத்யாதி ப்ரமாண ஸித்தங்களான ஸர்வ வ்யாபகத்வ, நியந்த்ருத்வங்களாலே பிராட்டிக்கு ஜீவகோடியில் சேராதவளென்று ஸாதிக்கலா மல்லவா! என்றால் அதுசேராது. எங்ஙனே என்னில்? ஸ்வரூப விபுத்வத்தாலும் ஸர்வநியந் த்ருத்வத்தாலுமல்லவா ஸர்வேச்வரனுக்கு ஜீவ தத்வத்தில் வே-றுபாட்டை ஸகல ப்ரமாணங்களும்ஸாதித்தது. ஆனால் ஈச்வரனுக்கும் பிராட்டிக்கும் வேறுபாட்டைக் கொள்ளும் போது, அவளுக்கு விக்ரஹவ்யாப்தியும், பெருமானுக்கு ஸ்வரூபவ்யாப்தியும் மேலே காட்டப்பட்ட ப்ரமாணங்களுக்கு பொருளாக வேண்டும். "யதா ஸர்வகதோ விஷ்ணு:" என்றவிடத்தில் விக்ரஹவ்யாப்தியால் (பல திருமேனியாலே) எல்லோரையும் வ்யாபிக்கிறாள் (சூழ்ந்திருக்கிறாள்) என்பதற்கு ப்ரமாணம் எங்கேயென்னில்? "க்ஷீரோதாச்ச்ரீஸ் ஸமுத்பந்நா ச்ரூயதே அம்ருத மந்தநே, ப்ருகோ:க்யாத்யாம் ஸமுத்பந் நேத்யேத தாஹ கதம் பவாந்"(அம்ருதங்கடைந்த காலத்தில் பாற்கடலிருந்து ஸ்ரீதேவியுண்டானதாகச் சொல்லப்படுகிறது. ப்ருகுவிற்கு க்யாதி என்னும் மனைவியிடம் உண்டானதாக தாங்கள் எப்படிச் சொல்லுகிறீர்கள்?) என்றும், 'செழுங்கடலமுதினில் பிறந்தாளென்றும்', ப்ருகு பத்னியான க்யாதினிடத்தில் பிறந்தாளென்றும், பராசரபகவான் உபதேசிக்கக் கேட்ட மைத்ரேய பகவான் "நித்யையான லக்ஷ்மிக்கு உத்பத்தி உண்டானால் நித்யத்வம் கூடும்படி எங்ஙனே?" என்று கேள்விகேட்க,

அதற்குபதிலாக "நித்யை வைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ யதா ஸர்வகதோவிஷ்ணு ஸ்ததை வேயம் த்விஜோத்தம" என்று உபதேசித்தான், அதெங்ஙனே யென்னில்? "நித்யாநாம் நித்யனாய், (நித்யர்களான ஜீவர்களைப்போலே நித்யனாய்), அழியாதவனாய், ஒருகாரணம் பற்றி வருவதல்லாமல் இயற்கையாகவே பிதாவான ஸர்வேச்வரன் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காக எல்லாப் பிறவியிலும் அவதரித்து "தமருகந்ததெவ்வுருவமவ்வுருந் தானே"(முதல் திருவந்தாதி) (அடியார்கள் உகந்தஉருவம் எந்த வுருவமோ அந்த திருமேனியைத்தானும் ஏற்றுக்கொண்டு) என்றும், "உமருகந்து கந்த உருவம் நின்னுருவம்" (திருவாய் மொழி-8-4-1) (உன்னடியார்கள் உகந்த உருவமே உன்னுடைய உருவம்) என்கிறபடி அடியார்கள் உகந்த அந்தந்த திருமேனிகளாலே ஸர்வதேச (எல்லாதேசங்களிலும்), ஸர்வகால (எல்லாக்காலங்களிலும்), ஸர்வாவஸ்தைகளிலும் (எல்லாநிலைகளிலும்), எப்படி எம்பெருமான் எழுந்தருளியி ருக்கிறானோ, பிராட்டியும் அப்படியே, நித்யையாய் (எப்போதுமிருப்பவளாய்), ஜகன்மாதாவாய் (உலகிற்கு தாயாய்), விஷ்ணுவுக்கு ஸம்பத்ரூபையாய் (விஷ்ணுவுக்கு செல்வமாய்), அநபாயிநியாயிருக்கிற (அவனைவிட்டு பிரியாதிருக்கிற) இவளும் மாத்ருத்வ ப்ரயுக்தமான (தாயாம் தன்மையாலுண்டான) வாத்ஸல்யத்தாலே (தோஷத்தையே குணமாகக் கொள்ளும் தன்மையாலே) அவதரித்து அந்த உருவத்திற்குச் சேர்ந்ததான வெவ்வேறு விசேஷமான திருமேனிகளோடும் ஸர்வத்ர (எல்லாவிடத்திலும்) எழுந்தருளியிருப்பாள் ஆகையால், அவள் உற்பத்திகளைச் சொல்லுவது, நித்யத்வத்துக்குக்குற்றமாகாது. கர்மமடியாகப் பிறந்தாலன்றோ குற்றமாகும். பிறரை அநுக்ரஹிப்பதற்காகப் பிறப்பது அவள் அருளின் கார்யமத்தனையென்று, மைத்ரேயருக்குப் பராசர பகவான் பதில் கூறினார்.

இவ்வளவன்றிக்கே, "புநச்ச பத்மாஸம்பூதா ஹ்யாதித்யோ அபூத்யதா ஹரி:, யதாது பார்க்கவோ ராமஸ்ததா ஆஸீத்தரணீ த்வியம், ராகவத்வே அபவத்ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜந்மநி, அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷா அநபாயிநீ, தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ, விஷ்ணோர் தேஹாநுரூபாம் வைகரோத்யேஷா ஆத்மநஸ் தநும்" (விஷ்ணு புராணம்).

(பகவான் ஆதித்யனாய் அவதரித்தபோது பிராட்டி பத்மையானாள்; பரசுராமனானபோது தரணியானாள்; ராகவனானபோது ஸீதையாகவும், க்ருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியாகவுமானாள். மற்ற அவதாரங்களிலும் இவள் பகவானைப் பிரியாதவளாயிருக்கிறாள். அவன் தேவனாயவதரிக்கும்போது இவளும் தேவதேஹமெடுக்கிறாள்; மநுஷ்யனாகும்போது இவளும் மநுஷ்யையாகிறாள். விஷ்ணுவின் தேஹத்திற்குத் தகுந்ததாகத் தன்தேஹத்தை அமைத்துக் கொள்ளுகிறாள் இப்பிராட்டி).

இந்த ப்ரமாணத்திலும், அடுத்துவரும் ப்ரமாணத்திலும் இந்த விக்ரஹவ்யாப்தியே (உருவத்தாலே சூழ்ந்திருப்பது) சொல்லப்படுகிறது. அதெங்ஙனேயென்னில்?

"ஸௌம்யா ஸௌம்யர் ஜகத் ரூபைஸ் த்வயைதத் தேவிபூரிதம்" (விஷ்ணு புராணம்)

(தேவியே! அழகியதும் க்ரூமானதுமான உருவங்களால் இவ்வுலகமானது உன்னால் வியாபிக்கப்பட்டுள்ளது) என்றும்.

"த்வயை தத் விஷ்ணுநா சாம்பு! ஜகத்வ்யாப்தம் சராசரம்" (விஷ்ணு புராணம்) 'தாயே! உன்னாலும் விஷ்ணுவாலும் இவ்வுலகம் வியாபிக்கப்பட்டுள்ளது'. என்கிறதும் விக்ரஹவ்யாப்தி விஷயம். ஆகையாலே இவளுக்கு ஸ்வரூப வ்யாப்தி பரிஹாரேண விக்ரஹவ்யாப்தியே உள்ளதென்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் ஸ்ரீராமாநுஜருடைய பிரிய சிஷ்யர்களில் ஒருவர் எங்களாழ்வான் என்று சொல்லப்படுகிற விஷ்ணு சித்தர் என்பவர். அவர்தம்முடைய விஷ்ணு புராணவ்யாக்யனத்தில் "யதா ஸர்வகதோ விஷ்ணு:" என்னும் ச்லோகத்தை வ்யாக்யானம் செய்யும்போது "பகவான் விபுத்வேந ஸர்வகத:" (பகவான் விபுவாயிருந்து கொண்டு எல்லாவற்றையும் வியாபிக்கிறான்) "அஸ்யாஸ்து (தச்) சக்திவசாத் அணுத்வே அபிதத்ர தத்ர ஸந்நிதாநாத் ஸர்வ கதத்வ முக்தம்" (இவளுக்கோவெனில் - அணுவாயிருந்தபோதிலும் அகடித கட

நா (பொருந்தாதவற்றை தன்சக்தி ஆற்றலால் பொருந்தும்படி செய்வது) சக்திவசத்தால் ஆங்காங்கு வியாபித்திருப்பதால் ஸர்வ வ்யாபித்வம் சொல்லப்பட்டது) என்று அருளிச்செய்திருக்கிறார். ஆகையால் நம் எல்லோ ருக்கும் ஸ்வாமியான ஸ்ரீ பாஷ்யகாரரால் அருளிச் செய்யப் பட்ட அர்த்த விசேஷத்தையே எங்களாழ்வான் தம் விஷ்ணுபுராண வ்யாக்யானத்தில் கையாண்டிருப்பதால் இதுவே பாஷ்யகாரரான ஸ்வாமி எம்பெருமானார் திருவுள்ளம் உகந்த அர்த்தமென்று ஸித்திக்கும். இதை ஒத்துக் கொள்ளவில்லையென்றால் ஸ்ரீ பாஷ்யகாரரையும், அவர் தம்பிரிய சிஷ்யரான எங்களாழ்வானையும் ஒதுக்க வேண்டி வரும். அப்படி ஒதுக்கநேரும்போது ஓராண் வழியில்வந்த குருபரம்பரையில் அந்வயம் அற்றுப்போகும். அப்படியே ராமாநுஜதர்சனத்தில் நின்றும் புறம்பாகி நிற்கும் எளிவரவாகிவிடும். ஜகதாசார்யரென்று ஸ்வாமி எம்பெருமானார்க்குத்தான் ப்ரஸித்தி. மற்றையாருக்கும் ஆசார்யபரம் பரையில் முக்கியத்வமே கிடையாது. "எம்பெருமானார் தர்சன மென்றேயிதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்" என்று உபதேசரத்தினமாலையில் ஸ்வாமி மாமுனிகள் திருவாக்கு. ஆகையால் ஸ்வாமி ரர்மாநுஜரையும் அவர் சிஷ்யரான எங்களாழ்வானையும் அவர்கள் அருளிய தர்சன ஸ்ரீஸூக்திகளை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் நம்பெருமாள் சீற்றத்துக்கு ஆளாகநேரிடும். அதனால் முன்னோர்மொழிந்தவற்றையே பொன்னேபோல் போற்றிமற்று முள்ள ப்ரமாணங்களுக்கும் உள்ளபடியே அர்த்தம் கொள்ளவேணும். பிராட்டி விஷயத்தில் ஸுதர்சனம் ஆசிரியர் ஸ்ரீஸூக்தவ்யாக்யானத்திலும், விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷண த்திலும் தேசிக ஸ்ரீஸூக்தியுள்ளிட்ட எல்லா ப்ரமாணங் களையும் காட்டி, பிராட்டி எம்பெருமானோடு துல்யேச்வரியே என்னும் இந்த நவீனர்களின் கொள்கையை மறுத்திருக்கிறார். இவர்களுடைய மனசாட்சியைக் குறித்துச்சில கேள்விகளையும் கேட்டிருக்கிறார். மனசாட்சியிருந்தால், வசைவுகளில் இறங்காமல் அவற்றுக்கு பதில் சொல்லலாமே. அதை விட்டு சிறுவர்கள் ரப்பர்பாம்பையும், செத்தபாம்பையும் காட்டி பயமுறுத்துவதுபோலே, அடிப்பட்டுப்போன சேட்லூரார் சுவடியை மறுபடி அச்சிடுவதால் பயன் என்ன?

ஆனால், "ஏஷோ அணுராத்மா" (முண்டகம்) (இந்த ஆத்மா அணுபரிமானன்) என்றும், "வாலாக்ரசதபாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச பாகோ" (ச்வே5-9) (நெல்தான்ய நுனியின் நூற்றிலொரு பங்கை நூறு கூறிட்டதில் ஒருபகுதியே ஜீவன்) என்று ஆத்மாக்களுக்கு லக்ஷணமானால், இந்த ஜீவகோடியில் சேர்ந்தவளான. இவள் எப்படி அணுவாயிருந்து மிகப்பெரிய வஸ்துக்களில் எல்லாம் வியாபிக்கமுடியும்? அவ்வாறு வியாபித்தால் ஸ்வருபத்துக்கு சைதில்யம் (விண்டு போகும்நிலை) வருமே. மேலும் ஜீவதத்வம் நிர்விகார ஸ்வரூபமாயிற்றே என்றால் இதற்கு சமாதானம் : அதாவது,

"அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மா குஹாயம் நிஹிதோஸ்ய ஜந்தோ :
தமக்ரதும் பச்யதி வீதசோகோ
தாது : ப்ரஸாதாந் மஹிமா நமீசம் (தை-நல-9-1)

(அணுவைக் காட்டிலும் அணுவாய், மஹத்தைக் காட்டிலும் மஹத்தான பரமாத்மா இந்த ஜீவனுடைய ஹ்ருதயகுஹையிலிருக்கிறான். கர்மபந்த மற்றவனாய், மஹிம சாலியான அப்பரமாத்மாவை அவனருளாலே கண்டு சோகம் நீங்கப்பெறுகிறான் ஜீவன்) இந்த ப்ரமாணத்தில் "மஹதோ மஹீயாந்" (பெரியவற்றுக்கெல்லாம் பெரியனாகவும்) "அணோரணீயாந்" (சிறியவற்றுக்கெல்லாம் மிகவும் சிறிய னாய்) என்கிற ஸர்வேச்வரன்தான் விபுஸ்வரூபனாகயிருந்து (பெரியவனாகயிருந்து) மிகச்சிறிய அணு பதார்த்தங் கள்தோறும் வியாபிக்கும்போது தன் ஸ்வருபத்துக்கு சைதில்யமில்லாமல் (விண்டுவிடாமல்)நிர்விகாரனாயிருந்து கொண்டே தன் அகடித கடனா சக்தியாலே, பரிஸமாப்யவர்த் திக்குமாபோலே, (பூர்ணமாக வியாபிக்கிறாப்போலே) தத்ஸ்வரூபநிரூபக பூதையான (தன்னைக்கொண்டே பெ-ருமானை நிரூபித்துத் தரக்கூடியவளான) இவளும் அணுவாயிருக்கவும் ஈச்வரன்வ்யாபித்து நிற்குமிடமெங்கும், "ஈச்வரீம்" (உலகைநியமிப்பவள்)என்று ச்ருதிப்ரஸித்தமான தன்னுடைய அகடிதகடனா சக்தியாலே வியாபித்து விபுவா யிருக்கை இவ்விடத்தில் கருத்தாகையாலே விரோதமில்லை.

இங்கு ஒரு விசேஷவிஷயம் வெளியிடப்படுகிறது அதாவது ஆசார்ய ஹ்ருதயத்தில், "தேவிமார் பணியா நேர்ப்பட்ட நல்ல கோட்பாடென்னும்படி சக்தியாலே நித்யமாகக்கல்பித்த பத்நீபரிஜ நாதிகளையுடைய ஸத்ய காமன்" (ஆசார்யஹ்ருதயத்தில்-சூ226) என்கிறார் அழகிய மணவாளப்பெருமாள்நாயனார். அதாவது, பெரிய பிராட்டியார் , ஸ்ரீபூமிப்பிராட்டியார், நீளா பிராட்டியார், மற்றும் தனக்கு தொடர்ந்தடிமை செய்யும் நித்ய ஸூரிகளென்ன, தன் கட்டளைச்செல்லும்படியாகயிருக்கும் லோகங்களென்று யிவைகளை, ஸத்யஸங்கல்பனான இறைவன் தன்னிச்சையாலே நித்யமாகக் கல்பிக்கப்பட்டவர்கள் பிராட்டி தொடக்கமானவர்கள் என்கிறார். இப்படி தன்னால் கற்பிக்கப்பட்ட பிராட்டிக்கு ஸ்வரூபவிபுத்வம் கொள்ளுவதோ, (1)"அவனைச் சொல்லுமிடமெல்லாம் அவளையும் சொல்லிற்றாம்" என்று கொள்வதோ, "முக்கியமான ஈச்வரத்வமே பெருமானுக்குப்போலே பிராட்டிக்கு உண்டுஎன்பதோ; "நிரூப்யமான கடத்தைச் சொன்னவிடமெல்லாம் நிரூபகமான கடத்வத்தையும் சொன்னதாக ஆகும் என்று சொல்வது எப்படி பொருந்தும்? (2)"எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றாம்" என்று எம்பெருமானார் அருளிச் செய்ததாகவும் "ததந்தர்பாவாத் த்வாம் ந ப்ருதகபிதத்தே ச்ருதிரபி" (ஸ்ரீகுண-28) (எம்பெருமானோடு சேர்ந்திருக்கையால் வேதம் பிராட்டியாகிற உம்மை தனியாகச் சொல்லவில்லை) என்று பட்டர் அருளியிருக்கையாலும் என்று இந்த இரண்டு ப்ரமாணங்களை த்ருஷ்டாந்தப்படுத்தி பிராட்டிக்கு ஸ்வரூபவிபுத்வம் கூறுகிறார்கள் சிலர் . அவர்கள் கூற்று நிலைநிற்காது எங்ஙனேயென்னில்?"எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொல்லிற்றாம்" என்பதை, எம்பெருமானுக்கு பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்தவம், அர்ச்சையென்று ஐந்துநிலை. இதில் அப்பெருமான் எந்தநிலை கொள்கிறானோ அப்படியே பிராட்டியும், "அகலகில்லேன் இறையுமென்று" என்கிறபடியே அவனைச்சூழ்ந்துநின்று பிரஜைஜயைரக்ஷிக்க தாயும் தகப்பனையும் போலே, அவன் செய்யும் ஜகந்நிர்வாஹங்களில் அவனைத்தூண்டித்துணை புரிகிறாள் என்றே அவ்விடத்திற்கு பொருளாகுமேயொழிய பரமாத்மாவுக்குரிய ஸ்வாதந்தர்யம் பிராட்டிக்கும் உண்டு

(1) ரஹஸ்யத்ரய ஸாரம் (2) ரஹஸ்யத்ரய ஸாரம்

என்று சொல்லப்படவில்லை என்று இவ்விடத்தில் கொள்ள வேண்டும். இல்லையெனில், "தத்தஸ்ய ஸத்ரு சம்பவேத்" என்று தன்னை ரக்ஷித்துக்கொள்ளவும் தனக்கு ஸ்வாதந்தர்யம் இல்லை என்று கூறியவளும் தன் பதிபாரதந்தர்யத்தை நிலை நாட்டுவதற்காக வால்மீகியின் ஆச்ரமத்தில் பலவருடங்கள் பிரிந்து வாழ்ந்துவளுமான பிராட்டிக்கு ஸ்வாதந்தர்யத்தை யேறிடுவது இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்திற்கும், அதற்குப் பிராட்டியின் பாரதந்தர்ய பரமாகவே கருத்துரைத்திருக்கும் பட்டர் முதாலான நம்பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் முரண்பட்டதாக ஆகும். ஆகையால் ஈச்வரத்வம் பெருமானுக்குப்போலே பிராட்டிக்கும் உண்டு என்பது பொருந்தாது. அடுத்து, நிரூப்யமான கடத்தைச்சொன்னவிடமெல்லாம் நிரூபகமான கடத்வத்தையும் சொன்னதாக ஆகும் என்பது உண்மையே; ஆனால், இதுகொண்டு அந்த கடத்திலுள்ள பொன்மயமாயிருக்கை, மஞ்சள் நிறமாகயிருக்கை முதலானவை நிரூபகமான கடத்வத்திற்கும் உண்டு என்று தேறிவிடுமா? ஆக இதையெல்லாம் பார்க்கும்போது பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை இங்குமங்குமாக சிலச்லோகங்களை எடுத்து விபரீத அர்த்த கல்பனைப்பண்ணி க்ரந்தம் எழுதுவதெல்லாம் "ஊமையரோடுசெவிடர்வார்த்தை" (நா-திருமொழி 12-1) என்ற கணக்கிலே ஆகும்.

எனவே தன்னால் நித்யமாகக்கற்பிக்கப்பட்ட பிராட்டிக்கு தன்னைப்போல் ஸ்வரூவிபுத்வம் கொள்ளுவதுஉசிதமன்று. இப்படி ஆசார்யஹ்ருதயத்தில் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச் செய்வதற்கு மூலப்ரமாணம் எங்ஙனெயென்னில்? "நதத்ஸமச்சாப்யதிகச்சத்ருச்யதே". (அவனுக்கு ஒத்தவர்களும், மிக்கவர்களுமில்லை) "பராஸ்ய சக்திர்விவிதைவ ச்ருய தே ஸ்வா பாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" (அவனுக்கு மேலான சக்தி இயற்கையான ஜ்ஞான பலக்ரியைகள் விதவிதமாக ஓதப்படுகின்றன) "தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்மேதி" (தை-ப்ருகு1-1) (அந்த பரப்ரஹ்மத்தையே அறிவாயாக)என்றும், "ஸர்வம் கல்விதம்ப்ரஹ்ம" (இவையெல்லாம் ப்ரஹ்மமன்றோ) என்றும், "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோரூபம் (ஹாரீதஸ்ம்ருதி)

*(அடையத்தகுந்த பரம்பொருளின் தன்மை)*என்றும், "**ஏகமே வஅத்விதீயம்**" *(சாந்-உப-6-2-1) (பரப்ரஹ்மம் ஒன்றுதான் இரண்டு கிடையாது)* என்றும், "ஏகோ ஹவைநாரயண:" *(மஹோபநிஷத்) (நாராயணன் ஒருவனே)* என்றும், "**ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோதேவ ஏகோ நாராயண:**" *(ஸுபாலோ) (எல்லாபூதங்களுக்கும் அந்தராத்மாவாகவும், தோஷமற்றவனாகவும், பரமபதத் திலிருப்பவனாகவுமுள்ளதேவன் நாராயணன் ஒருவனே).* "**ஈசதே தேவ ஏக:**" *(தேவனான ஈசன் ஒருவனே)* என்றும், "**நாராயணபரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண : பர : நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண : பர :** *(தை-நாரா-34) (நாராயணனே பரப்ரஹ்மம் ; நாராயணனே பரதத்வம் நாராயணனே பரஞ்சோதி; நாராயணனே பரமாத்மா)* இத்யாதி ப்ரமாணங்களைத் திருவுள்ளம் பற்றியே அந்த ஆசார்யஹ்ருதய சூத்ரம் அவதரித்தது. இங்கே பரப்ரஹ்மத்வம் பெருமான் நாராயணனுக்கே அஸாதாரண லக்ஷணம் என்றும், பிராட்டிக்கு இந்த பரப்ரஹ்மத்வம் கிடையாது என்று தேசிகனுள்ளிட்ட ஸகல ஆசார்யர்களும் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்கள். எப்போது பரப்ரஹ்மத்வ லக்ஷணமில்லையோ அப்போதே அவள் ஜீவகோடியில் சேர்ந்தவளாகிறாள் என்று தெள்ளத்தெளிவாக விளங்கும்.

மேலும், இதற்குச் சமமாக தென்மொழிவேதமும், "தேறுங்கால்தேவன் ஒருவனே" *(நான்-திரு-2)* "ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயா"*(திருவாய்-2-3-2)* என்றும் "மூவாத்தனிமுதலாய் மூவுலகும் காவலோன்" *(திருவாய்2-8-5)* "அவையுள்தனி முதலம்மான்"*(திருவாய் 1-9-1)* "பரஞ்சோதி நீபரமாய்"*(திருவாய் 3-1-5)*"எம்பரஞ்சோதி கோவிந்தா" *(திருவாய் 3-1-3)* என்றும், "நினைந்தஎல்லாப்பொருள்கட்கும் வித்தாய்" *(திருவாய் 1-5-2)* என்றும் "அமரர் முழுமுதல் ஆகிய ஆதியை"*(திருவாய் 1-7-9)* "திருமகளார் தனிக் கேள்வன்"*(திருவாய் 1-6-9)*என்றும், "தானொருருவே தனி வித்தாய்" *(திருவாய் 1-5-4)* என்றும், "மானேய்நோக்கி மடவாளை மார்வில்கொண்டாய் மாதவா" *(திருவாய்1-5-5)* "**முதல் தனிவித்தேயோ**" *(திருவாய் 10-10-9)* என்றும்,

"நாவிக்கமல முதற்கிழங்கே". (திவாய் 10-10-3) என்றும், "ஊழி முதல்வன்" (திருப்பாவை-4) என்றும்,"வெள்ளத்தரவில் துயிலமர்ந் தவித்தினை" (திருப்பாவை-6) "பெரியாய் உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே" (திருப்பாவை-2) "உள்ளம்துளங்கா நிற்பன் ஊழிமுதல்வா" (பெரியதிருமொழி 11 பத்து) என்றும், "பாம்பினணைப்பள்ளி கொண்டாய் பரஞ்சோதி" (பெரியதிருமொழி11 பத்து-8-7) (இந்த த்ராவிடவேத ப்ரமாணங்களுக்கு பூர்வாசாரியர்கள் உரையைப் பார்க்கவும்) இப்படி த்ராவிட வேதத்திலும் ஸம்ஸ்க்ருத வேதத்திலும் பிராட்டிக்கு பரப்ரஹ்மத்வம் கிடையாது என்று தெள்ளத்தெளிவாக காணலாம். எப்போது அவளுக்கு பரப்ரஹ்ம த்வமில்லையோ அவள் ஈச்வரனுக்கு ஸமமாக மாட்டாள். அவனோடு இவளுக்கு ஸமத்வம் சொன்னால் ஈறிறையைக் கொள்ளவேண்டிவரும். அவ்வாறு கொள்ளும் போது மேலே காட்டிய ப்ரமாணங்களுக்கு விரோதம் ப்ரஸங்கிக்கும். அதோடன்றியில் "ஸகல சேத நாசேதநங்களோடு கூடிய ப்ரஹ்மதத்வம் ஒன்றே" என்று விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாய விரோதமும் வரும். ஆகையால் பிராட்டி ஜீவகோடியில் சேர்ந்தவளே ஆவாள்.

ஆனால், "ஈச்வரீம் ஸர்வபூதானாம்", என்றும், (எல்லாபூதங்களுக்கும் ஈச்வரீ), "ஸ்ரீவாசுதேவ மஹிஷீபும் ப்ரதாந ஈச்வர ஈச்வரீ", (ஸ்ரீவாசுதேவனுடைய பத்நி; சித், அசித், ஈச்வரர்களுக்கு ஈச்வரியாயிருப்பாள்) (லக்ஷ்-ஸஹ-1) இப்படி அவளுக்கு அவனைப்போலவே நியமிக்கக்கூடிய ஆற்றலிருக்கிற தேயென்னில்? "ஈச்வரீம் ஸர்வபூதாநாம்" என்றவிடத்தில் அவனைத் தவிர்த்து, மற்றசேதந அசேதநத்திற்கு ஈச்வரியாயிருக்கிறாள் என்றும், (பும்) என்று சொல்லக்கூடிய ஜீவர்களுக்கும், (ப்ரதாநம்) என்று சொல்லக் கூடிய அறிவற்ற அசேதநத்திற்கும் தலைவியாயிருக்கிறாள். ஈச்வரனை நியமிப்பதாவது அவனுக்கு பத்நீ ஸ்தானத்திலிருப்பதாலும் தன் அன்பினாலே வசீகரித்து அவனையும் ஜகத்ஸ் ருஷ்ட்டியாதிகளில் நியமிக்கிறாள் என்று கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் ஸ்வதந்த்ரமாக நியமிக்கிறாள் என்றால், "தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்" (ஸ்வே 6-7) (ஈச்வரர்களுக்கெல்லாம் மேலான மஹேச்வரனான

அவனை.....)" என்றும், "அந்த: ப்ரவிஷ்டசாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" என்றும், "யஸ்ய ஆத்மா சரீரம் யஸ்யப்ருதிவீசரீரம்" என்று ஈச்வரனுக்கு ஸர்வநியந்த்ருத்வமும், "ஏகஸ் ஸ்வதந்த்ரோ ஜகதோபபூவ" (உலகிற்கு ஒரே ஸ்வதந்தரஸ்வாமியாயிருப்பவன் நாராயணன்) என்றும், ஏக : சாஸ்தாநத்விதீயோ அஸ்திகச்சித்" (நாராயணன் ஒருவனே நியமிப்பவன் : நியமிப்பவர் வேறு இல்லை என்றும், 'மத்த:பரதரம்நாந்யத்கிஞ்சிதஸ்தி தநஞ்சய' (அர்சுனா என்னைக்காட்டிலும் ஈஷத்தும் உயர்வானது கிடையாது) என்றும், "யஸ்ய ஆத்மா சரீரம்" (யாதொரு பரமாத்மா எல்லா ஆத்மாக்களையும் உடலாகவும் தான் உயிராகவும் கொண்டிருக்கிறானோ) என்கிறபடியே ஸகல ஜீவர்களையும் சரீரமாகக் கொண்டிருப்பதாலே அவனே நியந்தாவாகிறான். அதனால் பிரானுக்குச் சரீரமான பிராட்டியும் எம்பெருமானாலே தரிக்கப்படுபவளாய், வியாபிக்கப் படுபவளாய், அவனாலே ஏவப்படுபவளாயிருப்பதாலே, எப்படிஎம்பெருமானோடு ஸமமானவளாவாள்? இப்படியிருப் பதாலே பிராட்டிக்கு அவனைப்போலே ஸ்வரூபவ்யாப்தி கிடையாது விக்ரஹவ்யாப்தியேயுள்ளது.

மேலும், எம்பெருமான் தன் சோதிவாய்திறந்து ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் அருளிச் செய்த ப்ரமாணம் காணீர். "மச்சேஷபூதாஸர்வேஷாம் ஈச்வரீமமவல்லபா" (ஸ்ரீதேவி) (எனக்கு சேஷபூதையாயிருப்பவள்; மற்ற எல்லோருக்கும் ஈச்வரியாயிருப்பவள் எனக்கு பிரியையா யிருப்பவள்). இதற்குமேல் மற்றப்ரமாணங்களில் பிராட்டிக்கு பெருமானைக்காட்டிலும் ஏற்றமாகச் சொல்லியிருந்தாலும் அல்லது ஸமமாக சொல்லியிருந்தாலும், "மச்சேஷபூதா" இத்யாதிப்ரமாணத்தின் படியோஜித்து அர்த்தம் கொள்ள வேண்டும் இல்லையென்றால் விசிஷ்டாத்வைத தரிசனத்திலிருந்து கொண்டே அபார்த்தம் கல்பித்தால் பிறமதத்தவரைப்போல் ஆகக்கூடுவார்கள் என்று சாஸ்த்தரம் சொல்லும், "வேத சாஸ்த்ரவிருத்தேந குதர்க்கேணஸ்வ வாக் பலாத், வைஷ்ணவம் ப்ரதிஷேதந்தே தே லோகாயாதிகா : ஸ்ம்ருதா : ப்ரபந்த நிந்தகா : க்ரூரா : பகவச் சாஸ்த்ர தூஷகா: சண்டாள ஸத்ருசா ஏதே ஸர்வகர்மஸு ஸர்வதா" - ஹாரீதம்.

வேத சாஸ்த்ரவிருத்தமாக தன்னுடைய வாக்பலத்தால் விரோதமானஅர்த்தம் சொல்லுபவர்கள்; லோகாயதிக ராகவும், (நாஸ்திகராகவும்), பகவச்சாஸ்த்ர தூஷகராகவும், ப்ரபந்நர்களைத் தூஷிப்பவர்கள் ஆகவும், சண்டாளருக்கு ஸமமாகவும் இப்படி ஹாரிதஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட ரீதியிலே ஆவார்கள். ஆகையால், ப்ரமாணங்களில் அர்த்தம் கொள்ளும்போது மேலெழஅர்த்தம் கொள்ளாமல் ஸ்வ அபிமானத்தைவிட்டு எல்லாப்ரமாணங்களையும் மத்யஸ்த த்ருஷ்டியாக (நடுநிலை) நின்று ஆராய்ந்து, ப்ராமாணிக அர்த்தம் கொள்ளுவதே ஸாராஸார விவேகிகளுக்கு சாதுர்யமான செயல். ஆதலால், எம்பெருமானுக்கு இயற்கையான ஸ்வதந்த்ரத்வமும், எம்பெருமானிடத்தில் பிராட்டிக்கு சேஷத்வமும் (அடிமையும்) பத்நீத்வ ப்ரயுக்தமான அத்யந்த பாரதந்தர்யமுமிருப்பதாலே அவனை அன்பாலேயும் இங்கிதத்தாலேயும் தான் அவள் நியமிக்க முடியுமே தவிர ஸ்வதந்த்ரமாக நியமிக்க முடியாது. ஏன் என்றால்? எம்பெ-ருமானைக் குறித்து அவளுக்கு ஸ்வாதந்தர்யமே கிடையாத ல்லவா? "அஸ்யேசாநா ஜகத: விஷ்ணுபத்நீ" (விஷ்ணுவுக்குப் பத்தினியாய், இவ்வுலகிற்கு தலைவியாயிருக்கிறாள்) என்பதால் அவனுக்கு பிராட்டி பத்னியாகவும், நமக்கெல்லாம் தாயாகவுமிருக்கிறாள் என்று இந்த பிரமாணத்திற்கு அர்த்தம் கொள்ளவேணும். ஆக எப்படிப்பார்த்தாலும் எம்பெருமானையிட்டுப் பார்க்கும்போது அவனேப்ரதாநன், அவள் அப்ரதானையாவாள். மேலும், நம் ஸம்ப்ரதாயத்தில் தத்வம் மூன்றே. அதாவது, சித்து, அசித்து, ஈச்வரன். இந்த மூன்று தத்வத்தில் ஏதாகிலும் ஒன்றில்தான் பிராட்டியை சேர்க்க முடியும். ஈச்வரதத்வத்தில் சேர்ப்போம் என்றால் ஈச்வரனாவான், பும்ஸ்த்வ ப்ரயுக்தமான (ஆண்தன்மையால் வந்த தன்மையும்) நிரங்குச ஸ்வாதந்தர்யமும், (தடுப்பாரில்லாத ஸ்வதந்த்ரமும்) தனக்குத்தானே ஸ்வாமியாகவும், தனக்கொப்பாரில்லாதவனாய், ஸஹாயாந்த்ர நிரபேக்ஷனா கவும், (இன்னொருவரை துணைக்குக்கூட்டிக்கொள்ள விரும்பாதவனாய்) ஸர்வ சேஷியாகவுமிருப்பதால், அவளை ஈச்வரகோடியில் சேர்க்க முடியாது. அசித்து - அறிவற்ற தாகையால் அதோடும் சேர்க்கமுடியாது. இனி, சித்தான

ஜீவதத்வத்தில்தான் சேர்க்க முடியும். ஆனால், ஜீவகோடியில் சேர்த்தால் இவளுக்கு வைபவம் குன்றுமே யென்னில்? வைபவம் குன்றாது. எங்கனேயென்னில்? அதாவது நமக்கு மாதா வாகவும், (தாயாகவும்) ஸ்வாமிநியாகவும், புருஷகார பூதையாகவும், ப்ராப்யையாகவும், (நம்மைக்கொண்டு அடிமை கொள்பவளாகவுமிருப்பதால்) கைங்கர்யவர்த் தகையாகவும் இருப்பதால் ஜீவர்களைக் காட்டிலும், அதிசயித்த வைபவமுடையவளாகிறாள். அதனால், அவளுடைய ஏற்றத்திற்கு ஒரு குறையும் வாராது. ஆகையால், பிராட்டி அணு ஸ்வரூபையே என்பது ஸாராஸார விவேகிகளாய் ப்ரமாணங்களை நடுநிலைநின்று ஆராய்பவர் களாய் சுத்த ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவுள்ளமாகும் என்பதை அறிவித்து இந்த சுத்த ஸம்ப்ரதாய ஸாரத்தை நிறைவு செய்கிறேன்.

**ஆழ்வார்எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.**

ஸுபமஸ்து

ஸ்ரீ:

## கோயில் கந்தாடை அண்ணன் அருளிச்செய்த
## மணவாளமாமுனிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு

### தனியன்

எக்குணத்தோர் எக்குலத்தோர் எவ்வியல்போர் ஆயிடினும்
அக்கணத்தே நம் இறைவராவாரே-மிக்க புகழ்க்
காரார் பொழில் கோயில் கந்தாடை அண்ணனெனும்
பேராளனை அடைந்தபேர்.

### நூல்

சீருற்ற செஞ்சொல் திருவாய்மொழிப்பிள்ளை செம்முகமும்
தாருற்ற மார்பும் தளிரேய் பதங்களும் தன்மனத்துப்
பூரித்து வாழும் மணவாளமாமுனி பொன்னடிகள்
பாரில் தனித்த அடியேன் சரணென்று பற்றினனே: 1

பற்றினன் செம்மைத்திருவாய்
மொழிப்பிள்ளை பாதங்களே
உற்றனன் செம்மறை
யுள்ளதெல்லாம் இவை உண்மையென்றே
கற்றனன் கோயில்
மணவாளமாமுனிக் கார்முகிலைப்
பெற்றனன் இங்கு அடியேன்
இனிமேல் பிறவாமலுக்கே. 2

பிறவாமல் வாழ்விக்கும் பேரருளாளர் பெருமையென்றும்
துறவாத சிந்தை எதிராசன் துய்யபதங்கள் நெஞ்சில்
மறவாத சீலன் மணவாளமாமுனி மாமலர்த்தாள்
பறையாத வாசகர் யாரவர் பஞ்சமா பாதகரே. 3

பாதகமுள்ளவை தாமே ஒழித்துப் பரிந்தவர்க்குச்
சாதகமானதும் ஈதென்று கொண்டு சரண்கொடுக்கும்
மாதகவோன் மணவாளமாமுனிப்பரன் மாமலர்த்தாள்
பாதுகையைச் சரணாய் முடிமேல் கொண்டு பற்றினர்க்கே 4

நற்கேசவன் தமர்
நற்றவத்தோர் நயனங்களுக்குப்
பொற்கோல மேனியன்
பூதலத்தோர் செய்த புண்ணியமாம்
முக்கோல் தரித்த
மணவாளமாமுனி மூர்த்திதனை
எக்கோடி காலமும் சிந்தை
செய்வார் தமக்கீடில்லையே. 5

இல்லை என்றே எண்ணி
என் பவக்காட்டை எரியிலிட்டு
நல்லருள் மாரிபெய்து என்னைத்
தளிர்ப்பித்து நன்கு தன்பால்
தொல்லருள் ஞானம் விளைத்து
ஆழ்ந்த போகத்தைத் துய்ப்பிக்கவே
வல்லவன் கோயில்
மணவாளயோகியை வாழ்த்துவெனே 6

வாழ்த்துவேன் எந்தை
மணவாளமாமுனி மாமலர்த்தாள்
தாழ்த்துவேன் யானவன்
தாளிணைக்கீழ்ச் சிரந்தாரணியில்
காழ்த்திடும் செல்வமுதல்
முக்குறும்பும் கரிசறவே
பாழ்த்திடும் என்றனன்
அதிகோர பாவங்கள் பற்றறவே. 7

பாவங்கள் பற்றறும்
பாசங்கள் பற்றறும் பற்றிவைகும்
கோவங்கள் பற்றறும்
குற்றங்கள் பற்றறும் கோடிசன்மத்
தாவங்கள் பற்றறும்
தண்ணரங்கன் புகழ் சாந்த குண
தீவன் கருணை
மணவாளயோகியைச் சிந்திக்கவே. 8

சிந்தித்து அரங்கரைச் சிந்தை
பயங்கெடச் சென்னிதன்னால்
வந்தித்து நிச்சலும் வாயார
வாழ்த்துமெய்ம் மாமறையோர்
புந்திக்குள் மேவும் வரயோகி
தம்மைப் புகைந்துசிலர்
சிந்திக்கினுமே விடார் இது
காண் அவர் நீர்மை நெஞ்சே. 9

நெஞ்சே அனைய அடியார் நிறங்கொண்ட நிச்சயமாம்
மஞ்சேறு சோலை அரங்கப்பதி தனில் வாதியர்க்கு
நஞ்சேயனைய மணவாளயோகி இந்நாளளிக்கும்
தம்சேவை தன்னை இகழ்வார்க்கல்லால் அவர்தாமிட்டரே 10

இட்டர்கள் வாழ எதிராசர் வாழ இருநிலத்தே
சிட்டர்கள் வாழ நம் தேசிகர் வாழச் செகத்திலுள்ள
துட்டர்கள் மாள மணவாளமாமுனி தோன்றினனே
எட்டு மிரண்டும் அறியாரிங்கு ஏசினும் யாவருமே. 11

யாவருமுய்ய மணவாளயோகி தயாளுவென்னப்
பூமகள் மண்மகள் புண்ணியமாய் இந்தப் பூதலத்தே
தாம் அவதாரம் செயாதிருந்தால் சடகோபர் திரு
வாய்மொழியோடு கடலோசையோடு என்னவாசி
யுண்டே? 12

வாசியறிந்த வதரியில் நாரணனார் மனங்கொள்
தேசுடை எந்தை மணவாளமாமுனி சீர் தழைப்பச்
சீசயிலேச தயாபாத்திரமெனும் சீர்மந்திரம்
தேசிகனாய்க் கண்டு உரைத்தார் இவ்வையகம் சீருறவே. 13

சேற்றுக்கமல வயல் சூழரங்கர் தம் சீர் தழைப்பப்
போற்றித்தொழும் நல்ல அந்தணர் வாழவிப் பூதலத்தே
மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல்
ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே.

----சம்பிரதாய சந்திரிகை

ஜீயர் திருவடிகளே சரணம்: